மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

பொது சுகாதாரம் மற்றும்
நோய் தடுப்பு மருத்துவத்துறை

# நூற்றாண்டு சிறப்பு மலர்

# 2022



# DPHICON 2022



# DPHICON 2022

**Tamil Nadu's Reminiscence on Public Health - an International Conference**

Conference : 6th - 8th Dec 2022
Pre - Conference Workshop : 5th Dec 2022

THEME

**"EXCELLENCE IN PUBLIC HEALTH"**

Radisson Blu,
ECR, Chennai, Tamil Nadu, India.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

பொது சுகாதாரம் மற்றும்
நோய் தடுப்பு மருத்துவத்துறை

# நூற்றாண்டு சிறப்பு மலர்

# 2022

## DPHICON 2022

# கதை
# கட்டுரை
# கவிதை



**மரு.தி.சி.செல்வவிநாயகம் M.D., D.P.H., D.N.B.**
இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும்
நோய் தடுப்பு மருத்துவத்துறை
சென்னை–6.

## முன்னுரை

தமிழகத்தில் பொது சுகாதாரத்துறை 1922 – ல் நிறுவப்பட்டு இந்த 2022 ஆம் ஆண்டுடன் நூறு ஆண்டுகள் நிறைவடைகிறது. ஆரோக்கியத்தை மேம்படுத்துதல் மற்றும் நோய்களை தடுத்தல் என்ற கொள்கையுடன் இந்த 100 ஆண்டுகளில் இத்துறை மக்கள் சேவையில் பல்வேறு சாதனைகளை புரிந்துள்ளது.

பெரியம்மை, போலியோ போன்ற நோய்களை ஒழித்தல். புயல், வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்கள் முதலியவற்றில் சுகாதாரச் சேவைகளை செயல்படுத்துதல் மற்றும் சமீபத்தில் ஏற்பட்ட கொரோனா பெருந்தொற்றினை கட்டுப்படுத்துதல் ஆகியவற்றில் ஆற்றிய சேவை மகத்தானது.

நூற்றாண்டு விழாவை ஒட்டி வெளியிடப்படும் இந்த மலரில் பல்வேறு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தங்களுடைய கருத்துக்களை கட்டுரை, கவிதை மற்றும் கதை வடிவமாக படைத்துள்ளனர். அவர்களை பாராட்டி அவர்களுடைய படைப்புகளை தொகுப்பாக இங்கே கொடுத்திருக்கிறோம்.

இம் மலரினை வெளியிடுவதற்கான கருத்துக்களை பொது சுகாதாரத் துறையில் பணிபுரியும் அனைத்துநிலை ஊழியர்களின் படைப்புகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இவற்றில் சில மாறுதல்களை செய்து குறிப்பாக படைப்புகள் ஒன்று முதல் இரண்டு பக்கங்களாக குறைக்கப்பட்டுள்ளது. அனைத்து கருத்துக்களையும் இம்மலரில் வெளியிட்டுள்ளோம். இதில் இலக்கண பிழைகளை பொருட்படுத்தாது அவர்களின் கருத்துகளுக்கும், ஈடுபாட்டிற்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டு இம்மலர் வெளியிடப்படுகிறது.

(மரு.தி.சி.செல்வவிநாயகம்)

## நூற்றாண்டு பொது சுகாதாரம் நம்மோடு பேசிய வரிகள்

என் அகவை நூறாயிற்று,
நான் உன்னில் ஒருவனா?
இல்லை நீ என்னில் ஒருவனா?

எதற்கு இந்த பாகுபாடு...?

நாம் இருவரும் ஒன்றாகச் சேர்ந்தே
இருக்கிறோம்.

நாள்தோறும் நான் மாண்புடனும்,
அன்புடனும்,
மனித நேயத்துடனும்
குழந்தையோ...? முதியோரோ...?
பண்பாக அணுகுவதும் நான்தானே
(பொது சுகாதாரம்)...!

ஆன்றோரோ...? சான்றோரோ...?
அனைவரையும் சமமாக
சிகிச்சை செய்வதுவும்
நான்தானே (பொ.சு)....!

விபத்தில் திக்கிழந்து தவிப்பவர்க்கு
ஓடோடி வந்து 108 வழியாக இதமான
மருத்துவம் புரிபவனும் நான் தானே
(பொ.சு)...!

குழந்தையோ?மகளிரோ?
ஆடவரோ?
என்று தனித்தனி பிரிவில் எந்த
வகை சிகிச்சையில் இருந்தாலும்
சத்தான உணவும் உயிர் காக்கும்
மருந்துகளையும்
தருவதும் நான் தானே( பொ.சு)...!

உள் நோயாளியோ...?
புறநோயாளியோ.....?
மரங்களால் மாசு துடைத்து,
தூய்மையான காற்றோட்டமும்,
ஆரோக்கியமான சுற்றுச்சூழலும்,
சுகாதாரமான கழிவறையும்,
என உயர்ந்த வசதிகளோடு உமக்கு
அளிப்பதும்
நான் தானே(பொ.சு)...!

மதிப்பு மிகுந்த
உயிர் காக்க,
ஒவாப் பிணிகாக்க—

மருத்துவர்கள், செவிலியர்கள்,
மருந்தாளுநர்கள்,
ஆய்வக நுட்புணர்கள்,
இவர்களோடு சிறப்பாக
செயல்பட்டு வருவதும் நான் தானே
(பொ.சு)...!

சிறுநீரகமோ ? இதயமோ ?
மூளையோ ?
கல்லீரலோ ?
குடலோ ?
மண்ணீரலோ ?
இரைப்பையோ ?
கருப்பையோ ?
கண்களோ ?
காதுகளோ ?
இராஜ உறுப்புக்களைப் பற்றி
ஆயிரம் ஆயிரம்
விழிப்புணர்வு இந்நூற்றாண்டில்

வழங்கியதும்
நான் தானே ( பொ.சு)...!

தொற்றும் நோயோ..?
தொற்றா நோயோ...?
எது வந்த போதும்
அல்லும் பகலும் அயராது சேவை
புரிந்தவனும் நான் தானே (பொ.சு)...!

மகப்பேறு காலத்தில் ஊட்டச்சத்து
பெட்டகமாகவும்,
குழந்தை பெற்ற பின்பு
குழந்தை பராமரிப்பு
பெட்டகமாகவும்,
தாய்க்கும் –சேய்க்கும்
புதிய தலைமுறைக்கும்
முற்போக்கான தடுப்பூசிகளோடு
அரண் போல் காப்பதும் நான் தானே
(பொ.சு)...!

குருதி கொடை விழிப்புணர்வு
எட்டுத்திக்கும் பரப்பி
பல கோடான கோடி
உயிர்களை காத்துதவும்
நான் தானே ( பொ.சு)...!

பேதம் கடந்து பிணியை நீக்கி
பேருண்மை பெரு வெள்ளத்தில்
பரந்து, விரிந்து, பீனிக்ஸ் பறவையை
போல் உயர்ந்து நின்று
நூற்றாண்டை கடந்து செல்வதும்
நாம் தானே...!!!

இறுதியாக

பொது சுகாதாரமே வியந்து
சொன்னது மக்கள் தான் மருத்துவம்
தேடி வந்தீர்கள் ஆனால் கடந்த ஓர்
ஆண்டுக்கும் மேலாக ,
எனது நூற்றாண்டு பரிசாக,
மக்களைத் தேடி மருத்துவத்தையே
கொண்டு சேர்த்துவிட்டார்கள்
உங்களிடத்தில் ...!!!

என சொல்லி நூற்றாண்டை கடந்து
பயணிக்க தொடங்கிவிட்டது புது
அத்தியாயம் படைக்க பொது
சுகாதாரம் சிகரம் நோக்கி பறக்க
தொடங்கிவிட்டது....!!!
வாருங்கள் நாமும் சேர்ந்தே
பறப்போம்
புது யுகம் படைப்போம்...!!!


இப்படிக்கு
இவண்
**க.அப்துல் சமது,**
வட்டார சுகாதார புள்ளியியலாளர்,
அ.ஆ.சு.நிலையம்,
கணியூர்,
மடத்துக்குளம் வட்டாரம்,
திருப்பூர் மாவட்டம்.
Mobile: 9976758575, 9489211786

# சுகாதாரத் துறை–நூற்றாண்டு விழா கவிதை

நூற்றாண்டு காணும் துறைவாழி
நூறாண்டு காலம் வாழ–நோய்
நொடிகள் இல்லாமல் மிளிர
நூறாண்டு சேவை புரிந்தே–இன்று
நூற்றாண்டு காணும் துறையே (நூறாண்டு)

தடுப்பூசி போட்டு முறையாக
தடுக்கின்ற நோயைத் தடுப்போமே
கொடுக்கின்ற சொட்டு மருந்தாலே–ஊனம்
குறையின்றி நாளும் தடுப்போமே (நூறாண்டு)

உருக்குத்தி சேவை செய்தோமே
பெரியம்மை நோயைத் தடுத்தோமே
வருவோமே மக்கள் தமைத்தேடி–நோய்
வருமுன்னர் காக்க வருவோமே (நூறாண்டு)

இளம்பெண்கள் பாது காப்பாக
இளம்பெண்கள் நட்பு நலச்சேவை
இளம்பெண்கள் நாட்டின் கண்ணம்மா
இவர்க்கான திட்டம் கண்ணம்மா

தாய்சேயைக் காக்கும் வழிசொல்லி– செவிலித்
தாய்மாரும் அன்பைப் பொழிவாரே
தாய்சேயை ஈன்ற பின்னாலும்–
தன்சுத்தம் பேணச் செய்வாரே (நூறாண்டு)

நலக்கல்வி சொல்லிக் கொடுப்போமே–குடும்ப
நலத்திட்டம் பேணச் செய்தோமே
அளவோடு பெற்று வளம்காணும்
அழகான வழிகள் சொன்னோமே (நூறாண்டு)

குளிர்காய்ச்சல் சிக்கன் குனியாவும்
கொசுவாலே டெங்கு கடும்காய்ச்சல்
சளிநுண்மி கொரோனா பிணியோட
சலிக்காமல் உழைக்கும் துறைவாழி (நூறாண்டு)

**சு. அய்யப்பன்**
109 திருவள்ளுவர் நகர், கோவில்பட்டி–628501
அலைபேசி–9843849133(புலன வசதி இல்லை)

# சுத்தம் சுகாதாரம்

**குறிப்பு சட்டகம்:**

1) முன்னுரை
2) சுத்தத்தின் அவசியம்
3) சுத்தம் சுகாதாரத்தின் நன்மைகள்
4) நல வாழ்வும் சுகாதாரம்
5) முடிவுரை

**முன்னுரை:**

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்று சொல்வார்கள் மனித வாழ்க்கை என்பது நிலையற்ற நீர்க்குமிழி போன்றது.

நாம் வாழும் நாளில் ஆரோக்கியமான வாழ்வை வாழ வேண்டுமாயின் சுத்தமாகவும் சுகாதார வழி முறைகளை பின்பற்றி சுத்தமான உணவு தூய குடிநீர் பாதுகாப்பான தங்குமிடம் சிறந்த நலச் சேவைகள் போன்றவற்றை ஒரு மனிதன் பெற்று கொள்கின்ற போது தான் ஒரு மனிதன் ஆரோக்கியமாக வாழ முடியும்.

ஒரு மனிதன் எவ்வளவு பெரிய அறிவாளியாக இருந்தாலும் செல்வந்தராய் இருந்தாலும் அவர் நோய்வாய்ப்பட்டவராயினும் அவர் இடம் இருக்கும் அனைத்தும் வீணாகும்.

அதாவது ஒரு மனிதனுடைய நலமான வாழ்வு என்பது ஆரோக்கியம் தான் இந்த கட்டுரையில் சுத்தம் சுகாதாரம் பற்றி பார்க்கலாம்.

**சுத்தத்தின் அவசியம்:**

நமது வாழ்வின் சுத்தம் மற்றும் சுகாதாரம் அவசியமானது ஆகும் . நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று கூறுவார்.

நாம் சுத்தமாக இல்லாவிடில் இலகுவாக நோயாளியாகி விடுவோம். நல்ல ஆரோக்கியம் என்பது மிக பெரிய வரமாகும் இதுவே மகிழ்ச்சிக்கும் காரணமாக அமையும் ஆரோக்கியமே ஒவ்வொரு சந்தோசமான மனிதனின் வெற்றி ரகசியமாகும்.

சுத்தமான காற்று, உணவு கட்டுப்பாடு, தினமும் உடற்பயிற்சி செய்தல் மற்றும் ஒழுக்கமான ஓய்வு போன்றவற்றினை நாம் கடைபிடித்தால் மட்டுமே எம்மால் ஆரோக்கியமான வாழ்வை வாழ முடியும் சுத்தமில்லா வாழ்க்கை நோய்களை இலகுவில் உண்டாக்கி நம் வாழ்வை இருளாக்கி விடும்.

**சுத்தம் சுகாதாரத்தின் நன்மைகள்:**

நாம் சுத்தமாக இருப்பதனால் நம்மை சுற்றி இருப்பவர்களும் நன்மை அடைவார்கள் சுத்தமாக இருப்பதனால் எம்மால் ஆரோக்கியமான மனிதனாக வாழ முடியும்.

ஒரு குடும்பத்தில் ஒருவர் நோயாளியாக இருந்தால் அது அக்குடும்பத்தையே பாதிக்கும் ஆகவே நாம் ஆரோக்கியமாக இருந்தால் நம்மை நம்பி இருக்கின்ற குடும்பம், பிள்ளைகள் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் போன்றவர்களும் சந்தோசமாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பார்கள்

எமது வீட்டை சுத்தமாக வைத்திருந்தால் எமக்கு உளரீதியாக மகிழ்ச்சி ஏற்படும். சுத்தமான வீடுகள் அமைதியான மனநிலையை உருவாகும் என விஞ்ஞானிகள் கண்டறிதுள்ளனர்.

நாம் வாழுமிடத்தை சுத்தமாக வைத்திருப்பதனால் நாமும் நலமாக வாழலாம் இக்காலத்தில் மக்கள் நாகரீக போதைக்கு அடிமையாகி மதுபானம் அருந்துதல், புகைத்தல் போதைப் பழக்கம் போன்றவற்றால் தமது வாழ்வை தாமே சீரழித்து கொள்கிறார்கள்.

ஒரு மனிதன் தினமும் உடற்பயிற்சி செய்தல், நடத்தல் ஓடுதல் போன்றவற்றை செய்வதோடு ஆரோக்கியமான ஊட்டச்சத்து மிக்க உணவுகளை உண்பதால் நோயற்ற வாழ்வை வாழ முடியும்.

**நலவாழ்வும் சுகாதாரமும்:**

ஒவ்வொரு மனிதர்களும் இருக்க கூடிய பொதுவான எதிர்பார்ப்பே தாம் நலமாக வாழ வேண்டும் என்பது தான். நலவாழ்வு என்ற அடிப்படையான எண்ணக்கருவையே வளர்ச்சியடைந்த நாடுகள் அடிப்படையாக கொண்டு தமது நாட்டை வளர்ச்சியடைய செய்கின்றன.

சுகாதாரம் என்பது மனிதனுடைய உடல் சார்ந்த ஆரோக்கியம் மற்றும் மனம் சார்ந்த ஆரோக்கியம் என்பன தொடர்பானதாகும். ஊட்டச்சத்துள்ள உணவுகளை உண்ணல் நிம்மதியாக உறங்குதல் ,மகிழ்ச்சியான குடும்பம்,போதுமான வருவாயை தருகின்ற வேலை தரமான சுகாதார சேவைகளை வழங்கும் வைத்தியசாலைகள் இவை அனைத்தும் கிடைக்க பெறுவதே சிறந்த நலவாழ்வாகும்.

நாம் நம்மால் முடிந்தளவிற்கு சுத்தமாகவும் சுகாதாரமாகவும் இருக்க வேண்டும்.

**முடிவுரை:**

மனித வாழ்க்கையே சவாலாகி வரும் இக்கால கட்டத்தில் நாம் விழிப்படைய வேண்டியது அவசியமாகும்.

மனிதனுடைய சராசரி ஆயுட்காலம் குறைவடைந்து வருகிறது. இளம் வயதிலேயே கொடூரமான நோய்கள் வந்து இறக்கவும் நரிடுகிறது. இதற்கு காரணம் நாம் தவறான சுகாதார நடைமுறைகளை பின் பற்றுவதும் சூழலை மாசடைய செய்வதும் ஆகும்.

**அனிதா.அ.ஆஷா**
துணை சுகாதார நிலையம், ஜெயந்திநகர்,
அருவங்காடு அரசு ஆரம்ப சுகாதார நிலையம்.
குன்னூர் வட்டம். நீலகிரி மாவட்டம்.

## பொது சுகாதாரத்துறையின் நூற்றாண்டு நிறைவு விழா கவிதை

கண் கெட்டவன் கூட நம்
கடமையால் சூரிய வணக்கம்
செலுத்தும் காலம் இது
காற்றும் நோய் பரப்புது
நீரும் நோய் பரப்புது
பூச்சியும் நோய் பரப்புது
புழுக்களும் நோய் பரப்புது
அதனைப் பாங்காய் கண்டறிந்து
பலமாய் அடக்குகின்றோம்.

ஊர்கூடி வடம் பிடித்தால்
நகரும் தேர் கண்ணுக்கழகு
நாம் கூடி பணி செய்வது
நமது துறைக்கழகு
அயராத உழைப்பால்
அடியெடுத்துள்ளோம் நூறாமாண்டில்
கண்ணீர் விட்டோர் முகத்தில்
புன்னகை தவழ விட்டது
நமது துறை என்பது நமக்கு
பெருமையன்றோ !

நூற்றாண்டுப் பெருமைகளை
எண்ணற்ற சாதனைகளை
பறைசாற்ற பாங்காய்
புறப்பட்ட சுடரோட்டம்
அன்னைத் தமிழகத்தை
அழகாய் வலம் வருதய்யா.
மக்கள் பணியில் என்றும்
நமது துறை என்பதை உறுதி செய்ய
துறையின் நூற்றாண்டில்
பிறரையும் மகிழ்விப்போம்
நாமும் மகிழ்வோம்...

நன்றி

**திரு. இளங்கோவன்**
வட்டார சுகாதார மேற்பார்வையாளர்
வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையம்
இனுங்கூர், கரூர் மாவட்டம்

## சுகாதார துறையே முதன்மையான துறை

ஓ சுகாதார துறையே
நீயே முதன்மையான துறை !
நீ மக்கள் உயிர் காக்கும் துறை
நீ நோய் அண்டாமல் தடுக்கும் துறை !
நீ சிவந்தி புழு நோயை ஒழித்தாய்
சிலந்தி கூடு போல் மக்களோடு இணைந்தாய் !
நீ யானைக்கால் நோயை தடுத்தாய்
நீ இன்று யானை பலம் கொண்டு நிற்கிறாய் !
இந்தியாவில் போலியோ நோயை ஒழிக்க உழைத்தாய்
உலக சுகாதார நிறுவனத்திடமிருந்து அதற்கான சான்று
பெற்றாய் !
ஓ சுகாதார துறையே நீயே முதன்மையான துறை !
தொழு நோயாளிகளை ஒதுக்கி வைத்த காலங்களில்
அவர்களை தொட்டு சிகிச்சை அளித்து குணம்
ஆக்கினாய் !
காசநோயை கண்டு மக்கள் காண தூரம் ஓடிய காலத்தில்
இந்நோயை ஒழிக்க பாடுபட்டது சுகாதார துறையே !
கொரானா நோய்க்கு வல்லரசு நாடுகளே தடுமாறும் போது
அதை அறிவார்ந்து கையாண்டது சுகாதார துறையே !
ஓ சுகாதார துறையே
நீயே முதன்மையான துறை !
நீ ஒழித்த நோய்களின் பட்டியல் ஏராளம்
அதன் கர்வம் உனக்கு இல்லாதது உன் சிந்தையின்
தாராளம் !
விடுமுறை என்பது உனக்கு இல்லை
நோய்த் தடுப்பு பணிகளில் ஈடுபடும் உனக்கு ஏது எல்லை !
பம்பரமாய் சுழலும் உயர் அதிகாரிகளும்,
இவர்களால் இத்துறைக்கு பெருமை
எப்போதும் இல்லை இத்துறைக்கு சிறுமை !
ஓ சுகாதார துறையே
நீயே முதன்மையான துறை !
100வது ஆண்டு கொண்டாடும் சுகாதார துறையே
நீ 1000வது ஆண்டு கொண்டாடப்படுவது திண்ணமே !
மக்கள் நலனுக்காக பாடுபடும் சுகாதார துறையே
என்றென்றும் மக்கள் ஆசி இருக்கும் உனக்கு முறையே !
ஓ சுகாதாரத் துறையே
நீயே முதன்மையான துறை !

நன்றி

க. இஸ்மாயில், சிறப்பு நிலை ஓட்டுநர்
துணை இயக்குநர் சுகாதார பணிகள்
அலுவலகம், தருமபுரி

# பொது சுகாதாரத்துறையில் நான்

என் பெயர் க. இஸ்மாயில் நான் 1995 ஆம் ஆண்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஊர்தி ஓட்டுனராக பணியில் சேர்ந்து 9 ஆண்டுகள் பணிபுரிந்து பிறகு 2004 ஆம் ஆண்டு முதல் இன்று வரை 18 ஆண்டுகளாக தருமபுரி மாவட்டத்திலும் ஆக மொத்தம் 27 ஆண்டுகளாக பொது சுகாதாரத்துறையில் பணிபுரிந்து வருகிறேன்.

இத்துறையில் நான் என் அனுபவங்களை கூறுவதற்கு முன்பாக நான் பணியில் சேர்ந்தபோது, இத்துறையை பற்றி நமது முன்னோர்கள் கூறியதை நினைவு கூர்வது சிறப்பு என கருதுகிறேன்.

அன்றைய காலத்தில் போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்புகள் இல்லாத காலங்களில் நமது முன்னோர்கள் களப்பணியாற்ற எவ்வளவோ சிரமங்கள் மேற்கொண்டுள்ளனர். அப்போதெல்லாம் பிரிக்கப்படாத மாவட்டங்கள், ஒவ்வொரு மாவட்டமும் பெரியது மாவட்டத்தின் ஒரு பகுதிக்கு முகாம் பணிக்கு சென்று வரவே 3 நாட்கள் ஆங்காங்கே தங்கி பணி முடித்து திரும்புவார்களாம் அப்படி முகாம் பணிக்கு செல்லும் மாவட்ட அதிகாரிகளின் ஜீப் வாகனத்தில் இணைப்பாக ஒரு டிரைவர் இணைக்கப்பட்டு அதில் மருந்து மாத்திரைகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை ஏற்றி சென்று வழங்குவார்களாம்.

அன்றைய காலங்களில் நோய்வாய் பட்டு மக்கள் கொத்து கொத்தாக இறப்பார்களாம். பிளேக், காலரா, பெரியம்மை, சின்னம்மை, கக்குவான், ரனஜன்னி கழுத்து கழலை, சிலந்திப்புழு, காச நோய், தொழு நோய், யானைக்கால் போன்று இன்னும் பல நோய்களால் மக்கள் இன்னல் பட்டு வந்தனர். பொது சுகாதாரத்துறையின் உயர் அதிகாரிகள் முதல் களப்பணியாளர்கள் வரை உள்ள அனைவரது உழைப்பால் இந்நோய்கள் இன்று இல்லாமல் செய்துள்ளனர் என முன்னோர்கள் கூற கேட்டிருக்கிறேன்.

தற்போது மேற்கண்ட நோய்கள் மீண்டும் வராமல் தடுக்கும் பணியிலும் டெங்கு, மலேரியா போன்று, இன்னும் பிற நோய்கள் உருவாகாமல் தடுக்கும் பணியிலும் பொது சுகாதாரத்துறை ஈடுபட்டு வருகிறது. இதில் யானைக்கால் நோய் கண்டறிய கிராமங்களில், இரவு நேரங்களில் தூங்கும் மனிதர்களை எழுப்பி இரத்த மாதிரிகளை சேகரிப்போம். அப்போதுதான் அந்த கிருமியை கண்டறிய இயலும். இதன் காரணமாக கிராமங்களில் சிலர் நம்மை அடிக்க வருவார்கள். சில குடிமகன்களின் பேச்சிற்கும் நாம் ஆளாவோம். இவை அனைத்தும் நமது பணி என்று செய்வதற்கு அப்பாற்பட்டு இதை பொது சுகாதாரத்துறையினர் ஒரு சமூக பணியாகவே செய்து வருகின்றனர்.

நமது காலத்தில் போலியோ நோய் இல்லாமல் செய்தது நமக்கெல்லாம் பெருமை. சமீபத்தில் உலகயே அச்சுறுத்திய கோவிட்–19 நோய்க்கு அஞ்சி மக்கள் வீட்டை விட்டு வெளியே வர பயந்த காலங்களில் தனது உயிரை துச்சமென நினைத்து, மக்கள் உயிர் காக்க வீதியில் இறங்கி பணியாற்றியதும், தொற்று உள்ளவர்களுக்கு சிகிச்சை

அளித்ததும், அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தியதும் பொது சுகாதாரத் துறையே இப்பணியில் நாம் நமது பணியாளர்கள் பலரை இழந்தோம். இந்நேரத்தில் நாம் அவர்களை நினைவு கூறுவோம்.

மேலும் தற்போது கர்ப்ப கால கவனிப்பு, பிரசவங்கள் பார்ப்பது, பிறந்த குழந்தைகளுக்கு தடுப்பூசிகள் செலுத்துவது, ஆரம்ப நிலை நோய்களுக்கு சிகிச்சையளிப்பது, மக்களிதைத் தேடி சென்று மருத்துவம் பார்ப்பது வருமுன் காப்போம் திட்டத்தில் நோய் வரும் முன் மக்களைக் காப்பது, தொற்றா நோய்களுக்கு சிகிச்சை அளிப்பது. நாய் கடிக்கு சிகிச்சை, பாம்புக் கடிக்கு சிகிச்சை, கொசு ஒழிப்பு பணி, கொசுப்புழு ஒழிப்பு பணி, பள்ளி சிறார்களுக்கு பள்ளிக்கே சென்று பரிசோதனைகள் மேற்கொண்டு சிகிச்சையளிப்பது தொழு நோய் சிகிச்சை, காச நோய் சிகிச்சை, ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை, வளர் இளம் பெண்களுக்கு நாப்கின் பணி என பொது சுகாதாரத்துறையின் மக்கள் நலப்பணிகளின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.

மேற்கண்ட அனைத்து பணிகளிலும் நாம் வெற்றியடைய காரணம் நமது உயர் அதிகாரிகளின் சரியான சிறப்பான திட்டமிடலும், அதை களப்பணியாளர்கள் களத்தில் சரியாக செயல்படுத்துவதும் இதர பிரிவினர் இப்பணிக்கு பக்க பலமாக இருப்பதுதான்.

நமது சகோதரத்துறைகள், மக்களுக்கு நோய் வந்த பிறகு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கும். ஆனால் பொது சுகாதாரத்துறை என்பது நோய்கள் உருவாகாமல் தடுப்பதும், நோய்களுடன் போராடுவதும், மக்கள் நலனை காத்து அவர்களுக்கு எந்த நோயும் அண்டாமல் பாதுகாக்கும் பொது சுகாதாரத்துறையில், நானும் ஒரு அங்கம் என நினைக்கும்போது பெருமையாக உள்ளது.

தற்போது நமது துறை உருவாகி 100 ஆவது ஆண்டு விழாவை நமது தலைமுறையில் கொண்டாடுவது நம் தலைமுறைக்கே பெருமை. இந்த கொண்டாட்டங்களில் இத்துறைக்காக பாடுபட்ட நமது முன்னோர்களை நினைவு கூர்ந்து அவர்களுக்கும் நாம் பெருமை சேர்க்க வேண்டும். நமது துறை இன்னும் பல சாதனைகள் படைக்கும் என்ற உறுதியான நம்பிக்கையுடன்.....

வாழ்க பொது சுகாதாரத்துறை !

வளர்க அதன் மக்கள் பணி !

சிறக்க அதன் 100வது ஆண்டு விழா !

இவன்

**க. இஸ்மாயில்,** சிறப்பு நிலை ஓட்டுனர்,
துணை இயக்குனர், சுகாதாரப்பணிகள் அலுவலகம்,
தருமபுரி மாவட்டம்

# மனிதனின் எதிரி கொசு

ஆதிகாலம் உயிரினம் நீயே !
அழியாமல் இருப்பவனும் நீயே !
உருவத்திலே இளைத்தவனும் நீயே !
உண்மையிலே வலுத்தவனும் நீயே !

எலும்பு சதை இல்லாதவனும் நீயே !
நன்னீரில் பிறப்பவனும் நீயே !
சாக்கடையிலும் உற்பத்தியாமனும் நீயே !
அன்றாடம் பல்கிபெருகுபவனும் நீயே !

ஏராளமான நோய் உண்டாக்குபவனும் நீயே !
அதன்மூலம் உயிரை எடுப்பவனும் நீயே !
ஆனந்தமாய் இரத்தத்தை குடிப்பவனும் நீயே !
ஆபத்தை மனிதர்களுக்கு விளைவிப்பவனும் நீயே !

அச்சத்தை உண்டாக்குபவனும் நீயே !
அனைத்து பகுதியிலும் வியாபிப்பவனும் நீயே !
மனித சந்தோசத்தை கொடுப்பவனும் நீயே !
கடும் காய்ச்சலை வரவழைப்பவனும் நீயே !

மலேரியா நோய் பரப்புவனும் நீயே !
சிக்குன்குனியா நோய் வர காரணமும் நீயே !
டெங்கு காய்ச்சல் உண்டாக்குபவனும் நீயே !
யானைக்கால் நோயை வரவழைப்பவனும் நீயே !

அனைத்து நாடுகளிலும் இருப்பவனும் நீயே !
ஆயிரக்கணக்கான மக்களை அழிப்பவனும் நீயே !
ஆதிகால உயிரினத்தை அழித்தவனும் நீயே !
ஆற்றல் மிகுந்த கொலைக்காரனும் நீயே !....

**ஆக்கம்**
**க.இராசசேகர், எம்.ஏ.,**
எம்.எஸ்ஸி.,பிஎட்., பி.ஜிடிபிஎச்இ., எம்பில்., பிஎட்.,
மாவட்ட மலேரியா அலுவலர்,
நாகப்பட்டினம் மாவட்டம். கைபேசி எண். 8148688543

## புதிய பார்வை ! புதிய பயணம் !

ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது (19/09/2022). வழக்கமான தொலைபேசி அழைப்பு என்று தான் எடுத்தேன். பேசுபவர் "நான் திருமால் பேசுகிறேன்" என்று கூறினார். எந்த திருமால் என்று யோசித்து கொண்டு இருக்கும் பொழுது "நான் பீமாராபட்டு கிராமத்தில் இருந்து பேசுகிறேன்" என்று சொன்னார்.

"பீமராபட்டு கிராமம், திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், பழங்குடியினர் வாழும் பகுதி சார், நீங்கள் தான் என்னை கண் பரிசோதனை செய்து கண் புரை அறுவை சிகிச்சை செய்தால் முழு பார்வை கிடைக்கும் என்று தர்மபுரி தர்மாஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று 6 வருடம் முன்பு எனக்கு வலது கண் புரை அறுவை சிகிச்சை செய்து அனுப்பினீர்கள். கடந்த ஜூலை 2022 மாதம் எனக்கு இடது கண் புரை அறுவை சிகிச்சை அங்கு தர்மபுரியில் தீர்த்தமலை முகாம் மூலம் செய்து கொண்டேன். இப்பொழுது முழுமையான பார்வை பெற்று இயல்பான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

போன் செய்து அழைத்த காரணம் எனது உறவினர் இருவருக்கு மிகவும் பார்வை குறைபாடு ஏற்பட்டு நடப்பதற்கு சிரமப்படுகிறார்கள். எனக்கு முழுமையான பார்வை கிடைத்த திருப்தியினால் என்னை போலவே அவர்களுக்கும் கண் புரை அறுவை சிகிச்சை செய்து முழு பார்வை கிடைக்கும் என்று நம்பிக்கையினாலும் தங்களிடம் அழைத்து வருகிறேன் என்று கூறினார். "அவர்கள் எங்கே இருக்கிறார்கள்" என்று கேட்டேன்.

அக்கரைப்பேட்டை கீழ்வலசை (சேராப்பட்டு) பழங்குடியினர் மக்கள் மளிகை (சந்தை) வாங்க தர்மபுரி மாவட்டம் கோட்டப்பட்டி வருவது வழக்கம். அரசு நிர்வாகப் பணிகளுக்கு தண்டராம்பட்டு வட்டம் போவார்கள். திருமால் அவர்கள் பழங்குடி மக்கள் ஊர் தலைவர் சேவை மனப்பான்மை உடையவர். 20 நபர்களுக்கு கடந்த 5 வருடங்களாக பழங்குடி கிராமத்தை சேர்ந்தவர்கள் தீர்த்தமலையில் நடைபெற்ற கண் சிகிச்சை முகாமில் கலந்து கொண்டு கண்புரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டு முழுமையான பார்வை கிடைக்கப் பெற உதவி புரிந்துள்ளார்.

20/09/2022 செவ்வாய்க்கிழமை அன்று காலை 7 மணிக்கு கீழ்வலசை கிராமத்தில் இருந்து காலை 7 மணிக்கு புறப்பட்டு பேருந்து செல்ல முடியாத (No Transport Forest Village) கிராமத்திலிருந்து ராஜ் (66), தீர்த்தி (66) அவருடன் துணைக்கு அவரது சகோதரி சுமார் 15 கிலோமீட்டர் தூரம் 7 மணி நேரமாக நடந்து பீமாரா பட்டியில் உள்ள தனது உறவினர் வீட்டில் ஒரு இரவு ஓய்வெடுத்து, மறுநாள் புதன்கிழமை 21/09/22 அன்று நமக்கு தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்த திருமால் மற்றும் அவரது துணைவியார் உடன் மொத்தம் ஆறு நபர்கள் சேர்ந்து பீமாராபட்டியிலிருந்து மோத்தாகல்லுக்கு பேருந்து மூலம் வந்து, பின்பு வேறு பேருந்து

மூலம் தீர்த்தமலை அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் வந்து, கண் சிகிச்சை முகாமில் கலந்து கொண்டனர். பயணம் தூரம் 122 கிலோமீட்டர். அனைவருக்கும் கண் புரை இருப்பது கண்டறியப்பட்டது. அவர்கள் அனைவருக்கும் இரத்த அழுத்தம், சர்க்கரை அளவு, கண் அழுத்தம் போன்ற அத்தியாவசியமான பரிசோதனை செய்யப்பட்டது.

தர்மபுரி மாவட்ட சுகாதாரப் பணிகள் துணை இயக்குனர் மருத்துவர் எஸ். சவுண்டம்மாள் அவர்களின் ஆணைக்கிணங்க அரசு தர்மபுரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பேருந்து மூலம் அழைத்துச் சென்று கண் மருத்துவ பிரிவில் அனுமதிக்கப்பட்டு 22/09/2022 அன்றைய தினம் அனைவருக்கும் கண் புரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

அனைவருக்கும் ஐஓஎல் (IOL) லென்ஸ் பொருத்தப்பட்டது. (IP.no 116511) தீர்த்தி வலது கண் புரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. 23/09/2022 அன்று அனைவரும் மருத்துவமனையில் இருந்து முழுமையான பார்வை திறன் கிடைக்கப்பெற்று விடுவிக்கப்பட்டனர். தீர்த்தி (கண்புரை அறுவை சிகிச்சை செய்வதற்கு முன் ஒருவர் துணையுடன் மட்டுமே வெளியே செல்ல முடிந்தது அவரால்) மூன்று ஆண்டுகள் முழுமையாக கண்பார்வை இல்லாமல் இருந்த தீர்த்தி முழு பார்வை திறன் கிடைக்கப் பெற்ற மகிழ்ச்சியில் யாருடைய துணை இல்லாமல் 15 கிலோமீட்டர் தூரம் தன்னந்தனியாகவே நடந்து தான் வாழும் மலை கிராமத்திற்கு 24/09/2022 பார்வையுடன் நடந்து சென்றார். தீர்த்திக்கு பார்வை வந்தாலும் கூட 15 நாட்கள் ஓய்வில் இருக்கும் படி அறிவுரை கூறப்பட்டது. கணவன் இழந்த கைப்பெண் குழந்தைகள் யாரும் இல்லாத தீர்த்திக்கு மூன்று வருடங்கள் கழித்து மீண்டும் பார்வை கிடைத்தது சுற்றியுள்ள கிராம மக்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். இதனை அறிந்து அவரது உறவினர் முக்கியமா 80 வயது அவர்கள் கண் புரை அறுவை சிகிச்சைக்கு தாமாக (IP No 116658) முன்வந்து 23.09.2022 அன்றைய தினம் அரசு தர்மபுரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கண் புரை அறுவை சிகிச்சை செய்து கொண்டார். இந்தியா சுதந்திரம் அடைந்து பொன் விழா நிகழ்வும், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையின் 100 ஆம் ஆண்டு நிகழ்வும், இந்த தருணத்தில் பழங்குடி மக்களும் பார்வை கிடைக்க அரசு கண்ணொளி திட்டம் பயன்பட்டதை நினைக்கும் போது பெருமிதம் ஏற்படுகிறது.

பழைய பார்வையில் சகோதரி துணையுடன் 15 கிலோமீட்டர் 7 மணி நேரம் பார்வைக்கான நடைபயணம், புதிய பார்வையில் 15 கிலோமீட்டர் 4 மணி நேரம் புதியபார்வை, புதியநடைபயணம், மீண்டும் இடது கண் புரை அறுவை சிகிச்சைக்கு தீர்த்தமலை வருகின்ற தீர்த்தியைப் போன்ற பழங்குடி இன மக்களுக்கும் முழு பார்வை திறன் பெற்றிடவும், தேவையான மருத்துவ வசதி செய்து முடித்திட எதிர்பார்க்கும் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை தர்மபுரி மாவட்டம்


கட்டுரை ஆக்கம் :

**கு . கலையரசன்,**

கண் மருத்துவ உதவியாளர்,

மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம்,

தீர்த்தமலை , தருமபுரி மாவட்டம்.

கை பேசி எண் : 9443193640 / 7867080192

மின்னஞ்சல் : modernkalai@gmail.com <mailto:modernkalai@gmail.com>

## நூற்றாண்டு கண்ட எம் பொது சுகாதாரத் துறையினருக்கு
## வாழ்த்துக்களுடன் வணக்கங்களும் அமையப் பெறட்டும் !

சோதனைகள் பல வென்றோம் சாதனைகள் பல கண்டோம் !
வென்றவையும் கண்டவையும்....
அம்மையொழித்தோம், தடுப்பூசி கொண்டே
தொடுப்பாகி வந்த தொழுநோய் வென்றோம் !
மகப்பேறுகளில் மகாபேறு பெற்றிட்டோம் !!
மகத்தான பேருழைப்பு மாண்புறு சல்லியரே !!
வெள்ளம் புரட்டி எடுப்பினும்,
கொள்ளை பிறழ்வு வந்தே குவியினும் கள்ள மின்றி கண் விழிப்போம் !!
ஆலம் உண்டானுக்கே ஆலாய் பறந்தோம் !
வேளம் போலே வெப்புபிணி கொன்றோம் !
கயல்களைக் கனிவு கொண்டு உன்னித்தோம்
கையறு நிலைதனிலும் கலங்காதே பணி செய்தோம் !!
குழலை மொழி பேசும் மழலையர் தம்மை பிறழ்வேதும் வாராமல் தடுப்பூசித் திட்டம்
போற்றுகின்றோம் !!
நாட இயலாதார்க்கு நடமாடும் ஆதாரம் (MMU) தேடித் தெளிவிக்கும் தேறிய வித்தகம் !!
பள்ளிச் சிறார்க்கே பக்குவமாய் பண்டிதம் (RBSK)
விந்தை உலகந்தனில் பெண்மை (MRMBS) போற்றியே,
சிந்தை தனை செழுமை செய்தோம் !
மனந்தனை அகழ்வே செய்து மாண்பே கண்டோம் (Psychological Management) தொற்றார்
நோய் தொலைந்தே ஓட,
பற்றினோம் நாம் மக்களைத் தேடி மருத்துவத்தை !!
உதிரம் சோதிப்பர் உளமார எம்மக்கள்,
கதிரோன் காயாபொழுதிலும் குருதி எடுப்பார் (யானைக்கால் வியாதி) !!
வெய்யோன் தன் வெம்மை பாரோம் !
தன்மையன் தன் செம்மையும் காணோம் ! டெங்கு, கொரோனா, பிணிகளைத்
தெளிவோடு விரட்டினோம் !
அறம் வழுவா அற்புதம் எங்கள் பொது சுகாதாரத்துறை
தரம் தாழா பாண்டித்தியம் எம் பொது சுகாதாரத் துறை
திக்கெட்டும் எட்டட்டும் நம் பொது ஆதாரம்
விக்கித்து நிற்கட்டும் வெளி மாந்தர் உதிரம் !

**மரு. ரா. கண்ணகி**
அரசு மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையம்
மறவமங்களம்
சிவகங்கை மாவட்டம்

## நூறு கண்டோம் பேறுபெற்றோம்

அண்டமெல்லாம் ஆயிரம் ஆச்சரியங்கள் அலைந்தாலும்
உண்டதனால் உயிர்வாழும் உயிர்க்கோள்தான் இப்பூமியம்மா.
உலக உருண்டை உருண்டோட ஒன்பது கோள்கள் சுற்றினாலும்
உயிர்வாழும் உன்னதத்தை பெற்றவளே இப்பூமியம்மா.

உயிர்க்கோளம் உதித்திட்ட உண்மைக்காலம் யாமறியோம்.
நிகழ்கால நிதர்சனங்கள் நித்தமும் நிழலாடுதிங்கே ...அதில்
மானிடப்பிறவி ...
விந்தனுவும் கருமுட்டையும் வினையாகி இங்கே.
விந்தையாக பிறந்ததுவே மானுடப்பிறவிதானே.
பூமித்தாய் பெற்றெடுத்த மக்கட்பேறு மகத்துவத்தை
பொது சுகாதாரத்தாய் பொறுப்பேற்று வளர்ப்புத்தாய் ஆனாளே.
தலைமுதலாய் கால் கடைசியாய் தாயுறுப்பு தள்ளியநிலையில்
தலைகோதி தான்ஏற்று தலைநிமிர செய்ததுதான் யாரம்மா
அது பொது சுகாதாரத்தாய்தானே வேறுயாரம்மா
குற்றச்செயல் புரிந்தோர்க்கு கூட இங்கே
குறிப்பிட்ட காலம்தருவாய் தன்னிலை விளக்க – ஆனால்
ஜனவாசம் கண்ட மழலை கண்திறக்க கணநேரம் இருக்கையில்
நோய் நேசக்கரம் நீட்ட நோகாமல் நொங்கு தின்ன நினைக்கையில்
நூறாண்டு காலமாய் நோயினை நொறுக்கி தள்ளும் வேலையை
பொது சுகாதாரத்தாயே பொறுக்காது செய்தாளே.
1931–ஆம் ஆண்டு ...
சர்வதேச பொதுசுகாதார சேய் பிறந்தாள்
ஒன்பது வருடத்திலேயே தமிழ்த்தாய்க்கும் சேயானாள்.
கர்ப்பகால சேவைகள் கடும்தடுப்பூசிப்பணிகள்
உதிரம் சொட்டும் உன்னத நோய்க்கு உடன்சேர்க்கும் உயர்சிகிச்சைகள்
செவ்வாயன்று கர்ப்பிணித்தாய்க்கு சரிவிகித உணவுகள்
அறுவை சிகிச்சை தாய்மார்க்கு மூன்றுவேளை உணவுகள்
உள்வசதியின்மையில் உயர்சிகிச்சை பரிந்துரைகள்
மாதர் மாதக்கழிவுகள் நீக்க மங்கையர் தூய்மை காக்க
சிறப்பான திட்டம் சீரியமுறையில் செய்தாளே.

அவசரகால ஊர்திகள் அனுதினமும் சேவைகள்
செவ்வனே செய்திட்டாள் மனுகுலம் காத்திட்டாள்
போலியோ நோயினை போனஇடம் தெரியாமல் செய்திட்டாள்.
மலேரியாவினை மட்டப்படுத்தி டெங்குவை நொங்கெடுத்து
சிக்குன்குனியாவை சிதறடித்து சீரியபணி செய்தாளே.
தட்டம்மை பெரியம்மை நாய்க்கடி பாம்புக்கடி என
விஷக்கடி நீக்கி விடியல் தேடி தந்தாளே.
பிறவிக்குறைபாடு வளர்ச்சிகுறைபாடு சத்துக்குறைபாடு
நீரழிவுக்குறைபாடு என வரிசைகட்டி நின்ற நோய்க்கு
வரையறை வகுத்தாளே வரும்முன் தடுத்தாளே.
தாய் என்ற பட்டமும் தரமான மருந்துப் பெட்டகமும்
தரும் திட்டம் வகுத்தாளே. தாய்மார் நலம் காத்தாளே.
பிறப்பேதும் பெறும்போதும் பதினெட்டாயிரம் தந்து
பரிவுதனை தந்தாளே பார்போற்ற செய்தாளே.
மகப்பேறு அடைய மாதவம் செய்திடல் வேண்டும்–அம்
மகப்பேறும் தமிழ்மாநிலத்தில் பெற்றிடவேண்டும்
சர்வதேசமும் நூற்றாண்டினைக் கொண்டாடவேண்டும்
இன்னும் பலநூறு காணவேண்டும்.
பொது சுகாதாரம் பேண வேண்டும்
வாழ்த்துக்கள் வழங்குகின்றேன்.
பொது சுகாதாரத்துறையினை வணங்குகின்றேன்

நன்றி.

**சு.கதிரேசன்**
உதவியாளா;
அரசு ஆரம்ப சுகாதார நிலையம்,
திரு.உத்திரகோசமங்கை
திருப்புல்லாணி வட்டாரம்
இராமநாதபுரம் சுகாதார மாவட்டம்

# விடியலை நோக்கி

வளர்ந்து வரும் நாடுகளின் பெருகி வரும் நோயே !
நீரிழிவு, இரத்த அழுத்தமே !
உன்னை விரைவில் ஒட ஒட விரட்ட பொது சுகாதாரத்துறை
கொண்டு வந்த திட்டமே மக்களைத் தேடிய மருத்துவம்
இன்று மக்களின் சுமை நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தமே !
உன்னிடம் இருந்து எங்களைக் காப்பதே
பொது சுகாதாரத் துறையின் முதல் வெற்றிப்படியே !
நானா என்னென்ன சுமைகளோ, ஓம் அறிவிற்கு
எட்டிய புற்றுநோய், காசநோய், தொழுநோய், ஆஸ்துமா
மற்றும் மனநோய்களே !
உன்னிடம் இருந்து எம்மக்களைக் காத்திட தயாராக உள்ளது
பொது சுகாதாரத் துறையே !
அனைவரின் நெஞ்சினிலே ஆனந்தம் நின்றால் தான்
நாம் எனும் நதி தேனாக ஆகும் அதற்கு
காரணம் நம் பொது சுகாதாரத் துறையே !
உரக்க சொல்லுவோம் சமுதாய நலமே நம் நலம்
பொது சுகாதாரத் துறையின் இணையற்ற திட்டமே !
மக்களைத் தேடி மருத்துவம்
எம்மக்களை நோய்களில் இருந்து காத்திட பொது சுகாதாரத்துறையின்
மூலம் வந்த மக்களைத் தேடி மருத்துவம் என்னும் சூரியனே !
இனி உன்னால் மக்களுக்கு எப்போதும் நல் விடியலே !
விடியலை நோக்கிய பயணம்.....

த. கலைச்செல்வி (HLMD)
நடுவார்பட்டி (HWC) கீழ ஈரால்
கோவில்பட்டி

## ஒரு அனாதையின் குமுறல்

உயிர் களைத்து நோய் வதைக்க,
உடல் தளரும் நிலையில்,
ஓடி வந்து உதவுவதே
உயர் கடமை என்றே
தமிழ் உரைத்த அறநெறிகள் தழுவி வந்த துறையே,
தகைசான்ற பொது சுகாதாரம் மற்றும் நோய்
தடுப்பு மருத்துவத் துறை அன்றோ
வந்த நோய் வாட்டத்தால்
வலுவழிந்த மக்கள்
எந்த நிலையில் இருந்தாலும்
இருக்குமிடம் தேடி
சென்றதங்கே
முகம் மலர்ந்து அகம் கனிந்து முகிழ்த்ததொரு திட்டம்,
முன்னேற்றப் பாதையில் மக்களைத் தேடி மருத்துவம் என்ற திட்டம்

**A. KALAIVANI**
Data Manager, IDSP
O/o. DDHS, Thanjavur
Mobile : 9944104898

## புதுக்கவிதை

விரும்பு, பகி, பதிவு செய் களுக்காய்
மக்களைத் தேடும் உலகில்
நல்வாழ்வினுக்காய்
மக்களைத் தேடி மருத்துவம் தந்த
தமிழ் மனங்களின்
பொது சுகாதாரத் துறையே வாழ்க !

# நூற்றாண்டை காணும் பொது சுகாதாரத்துறை

### நூற்றாண்டை காணும் பொது சுகாதாரத்துறை

பொது சுகாதாரத்துறை மனித ஆரோக்கியத்தை காக்கும் பொருட்டு பல வெற்றிகளை கடந்து முன்னேற்ற பாதையில் நூற்றாண்டுகளை கடந்து பயணித்து வருகிறது பல படிநிலைகளைக் கடந்து முன்னோக்கி வந்துள்ளது இதில் களப்பணியாளர்கள் பங்கு அளப்பரியது என்றால் அது மிகையல்ல

### ஆயுளை அதிகரித்த பொது சுகாதாரத்துறை

மனிதர்களுக்கு நோய் வரும் பட்சத்தில் "கடவுளின் சாபம்" என்று மூடநம்பிக்கையின் பிடியில் இருந்தனர் பொதுமக்கள். அத் தருணங்களில் பொதுமக்களுக்கு சரியான விழிப்புணர்வு ஏற்படுத்தி தடுப்பூசிகளை செலுத்தி மனித உயிர்களை காத்தபெருமை தமிழக பொது சுகாதாரத்துறையை சாரும் பல மாநிலங்களுக்கு தமிழக பொது சுகாதாரத்துறை முன்னுதாரணமாக விளங்குகிறது பெரியம்மை, இளம்பிள்ளைவாதம், காலரா போன்ற பல நோய்களுக்கு தடுப்பூசிகளை செலுத்தி தமிழக மக்களின் ஆயுளை அதிகரித்ததில் பொது சுகாதார துறையின் பங்கு அளப்பரியது ஆகும்.

### தொழுநோயை வெகுவாக குறைத்தல்

தொழுநோய் தாக்கப்பட்டால் வாழ்நாள் முழுவதும் மருந்து எடுக்க வேண்டிய சூழ்நிலை இருந்ததுவந்தது ;ஆனால் 1988 பிறகு பொது சுகாதாரதுறையின் தீவிர முயற்சியின் காரணமாக கூட்டு மருந்து சிகிச்சை மூலமாக தொழு நோய்க்கு இரண்டு வருடமாக குறைக்கப்பட்டது. தற்போது தொழுநோய் இல்லாத இந்தியாவாக உருவெடுத்தது வருகிறது

கிராமம் கிராமமாக காலை 6 மணிக்கு எல்லாம் சென்று ஒவ்வொரு வீட்டிலும் தொழுநோய் அறிகுறிகள் உள்ளனவா என்று பரிசோதனை செய்வார்கள் அதன் காரணமாக இன்று தொழுநோய் இல்லாத இந்தியாவாக இந்தியா உருவெடுத்து வருகிறது இவையெல்லாம் பொது சுகாதார துறையின் தீவிர நடவடிக்கையின் காரணமாக நிகழ்ந்தது என்பதை பெருமிதத்துடன் கூறலாம்

### போலியோ இல்லாத இந்தியா

இளம்பிள்ளை வாதம் இந்தியாவிற்கு மிகப் பெரும் சவாலாக அமைந்தது இதை பொதுசுகாரத்துறை மிக அருமையாக கையாண்டது "போலியோ திருவிழா" என்று கூறும் அளவிற்கு அனைத்துக் கிராமங்களிலும் சென்று போலியோ சொட்டு மருந்துகளை அனைத்து குழந்தைகளுக்கும் அளித்ததில் களப்பணியாளர்களின் பங்கு மிக மகத்தானது பேருந்து நிலையம்,ரயில் நிலையம், விமான நிலையம், சுங்கச்சாவடிகள், என பொதுமக்கள் கூடும் அனைத்து இடங்களிலும் போலியோ சொட்டு மருந்தை அளித்து போலியோ இல்லாத இந்தியாவை உருவாக்கியதில் பொது சுகாதாரத்துறை புதிய மைல்கலை அடைந்தது

உலக சுகாதார நிறுவனம் 2011 ஆம் ஆண்டு பிப்ரவரி 11ஆம் தேதி போலியோ இல்லாத இந்தியா என்ற அறிவிப்பை இந்திய நாட்டிற்கு சான்றிதழாக அளித்தது.

### விரைந்து வந்து காக்கும் 108

முன்பெல்லாம் உடல்நிலை சரியில்லை என்றாலும் அவசர தேவைகளுக்கு மாட்டுவண்டி மூலமாகவோ அல்லது தனியார் வாகனங்கள் மூலமாக மருத்துவமனையை நாட வேண்டிய

சூழ்நிலை இருந்து வந்தது. ஆனால் 108 வாகன சேவைக்கு பின்னர் பல்வேறு உயிரிழப்புகளை தடுக்க முடிந்துள்ளது!! பொது சுகாதார துறையின் மிகப்பெரும் வெற்றி படிகட்டாக 108 சேவையை நாம் இந்த தருணத்தில் பொது சுகாதாரத்துறைக்கு நன்றி கூற கடமைபட்டுள்ளோம்

**வீடுதேடி வரும் காசநோய் மாத்திரை**

40 வருடங்களுக்கு முன்பு ஒருவருக்கு காசநோய் வந்துவிட்டால் தென்பகுதியை சேர்ந்தவர் எனில் கண்ணியாகுமரி அருகில் உள்ள ஆசாரிபள்ளம் மற்றும் மதுரை அருகில் தோப்பூர் போன்ற இடங்களில் தங்கவைத்து சிகிச்சை எடுப்பார்கள் பொது சுகாதார துறையின் தீவிர நடவடிக்கையின் காரணமாக காசநோய்க்கான மாத்திரைகளை அனைத்து மருத்துவமனை மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் என காசநோயாளியை தேடி வீட்டிற்கே சென்று காசநோய் பணியாளர்களின் நேரடி பார்வையில் உண்டு தற்போது காசநோய் இல்லாத தமிழகத்தை உருவாக்கிவருகிறது

**மக்களை தேடி மருத்துவர்கள்**

தமிழக பொது சுகாதார துறையின் தொலைநோக்கு பார்வையால் மக்களை தேடி மருத்துவர்கள் குக் கிராமங்களுக்கும் சென்று நடமாடும் வாகனங்கள் மூலமாக சிகிச்சை அளித்து வருகின்றனர் இந்தியாவிற்கே முன்னோடியாக தமிழக சுகாதார துறை இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

**ஓயாது உழைத்த பொது சுகாதாரத் துறை (போர்வீரர்கள்)**

உலகையே புரட்டி எடுத்த கொரோனா பெருந்தொற்று காலத்தில் தனியார் மருத்துவமனைகள் பின் வாங்கியது அந்த நாட்களில் மிகுந்த மன உறுதியுடன் செயல்பட்டனர் போர்வீரர்கள் போன்று ஆம் கொரோனா பேராபாத்தில் நம் நம் சுகாதார துறை ஊழியர்கள் வீரமரணம் எய்தினார்!!! என்று கூறுவதுதான் பொருத்தமாக இருக்கும் தமிழக சுகாதாரத்துறை போர்க்கால அடிப்படையில் ஓய்வின்றி உழைத்து கொரோனா தடுப்பூசியை பொதுமக்களுக்கு அளித்து மேலும் நோய் பரவலை கட்டுபடுத்தியது தமிழக பொது சுகாதாரத்துறைக்கு மக்கள் பின்னர் பொது சுகாதார துறைக்கு மலர்மாலையால் பாராட்டி மகிழ்ந்தனர்.

**வளமான தமிழகம்**

"விதைத்தவன் தூங்கினாலும் விதைகள் தூங்குவதில்லை"என்பார்கள் அதுபோல நூற்றாண்டை கடந்து செல்கிறது பொது சுகாதாரத் துறை. இத்துறையில் பணியாற்றிய பணியாளர்கள், தன்னார்வலர்கள், ஆட்சியாளர்கள் என அனைவருக்கும் நன்றி கூறுவோம் தமிழக பொது சுகாதாரத்துறை மேலும் பல நூற்றாண்டுகள் பயனித்து நோய் நொடியில்லாத தமிழகத்தை உருவாக்கும் என்பது உறுதி; தமிழக மக்கள் போதிய ஒத்துழைப்பு அளிப்பார்கள் என்ற நம்பிக்கை தற்போது மலர்ந்துள்ளது.

நன்றி!

**கு.காசி விஸ்வநாதன்**
(முதுநிலை சிகிச்சை மேற்பார்வையாளர்
அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கயத்தார்)த/பெ குமாரசாமி
11B/1 விவேகானந்தர் தெரு, கயத்தார் –628952
தூத்துக்குடி மாவட்டம் அலைபேசி:9566804442
Email id–kasi2869@gmail.com

## பேயும்பிசாசும் பிரமிக்கும் நூற்றாண்டு.

ஒரேஆண்டில்
சிலபல நிகழ்வுகள்;
அந்தஆண்டின்
அதிசய உறவுகள்.
ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தி இரண்டு
நினைக்க நினைக்க
இனிக்குது இன்று.

வங்கக்கடலில்
செந்நிறக் கதிரவன்,
வானத்தில் நகர்வாய்
வலம்வரக்கண்டு,
"வா!வா! இளம் சூரியனே!
தமிழ்நாட்டைக் காத்திடு
குணசேகரனே!"
என ,
அசைவாய் அசைத்து வரவேற்ற
சென்னையில் செங்கொடி
முதன்முதல் பறந்த ஆண்டு;
மே தினக்கொண்டாட்டம்
உதித்த ஆண்டு.

நூறு என்பது
மூன்றிலக்கத்தின் பிறப்பு.
நூறாண்டுகள் என்பது
மிகவும் சிறப்பு .
அதன் தொடர்ச்சியில் வளர்வது
பொதுசுகாதாரத்துறையின் பிரம்மிப்பு.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்தி இரண்டு
பொதுசுகாதாரத்துறையை ஈன்று,
அனைத்துத்துறைக்கும்
அரணைப்போன்று,
ஆர்ப்பரிக்கும் கடல் அலைபோல்
வாழ்க!பொதுசுகாதாரத்துறை!
வளர்க!

என்சொல்லிப் புகழ்வது!
எது எதை நினைப்பது?
தொட்டதெல்லாம் பொன்னாகும்;
பொதுசுகாதாரத்துறை கை
பட்டதெல்லாம் சொத்தாகும்.

முத்துமுத்தாய்
யோசனைகள்.
முக்கனிபோல் இனிக்கும்
சாசனங்கள்.
அழகுமயிலின் தோகைபோல்
தாய்சேய்நல சேவைகள்.
தாய்க்கும் சேய்க்கும் முதல்உதவி
முத்துலட்சுமி மகப்பேறு நிதியுதவி.
குழந்தைவளர்ப்பின் சட்டகம்
குழந்தைகள் நலப்பெட்டகம்.
அட்டவணைத் தடுப்பூசித் திட்டம்
பொதுசுகாதாரத்துறைக்கே வட்டம்.

இன்னும் சொன்னால்,
குழந்தைகள் நலன்கள்
குடற்புழுநீக்கம்
மாணவர் நலன்கள்
வளரிளம்பெண்கள்
இரும்புச்சத்துமாத்திரை
சுகாதாரத்துணிமடிப்புகள்

அன்றே பிறப்புச்சான்று
அனைத்தும்கொடுக்கும்
அலாவுதீனின்
அற்புதவிளக்கு.
அப்பப்பா!
அடேங்கப்பா!!

தொற்றுநோய்களுக்குத்
தொடர்கண்காணிப்பு,
களப்பணியாளர்களின்
காத்திரமான அணிவகுப்பு.

முன்பு,
நோய்வருமுன் காப்போம் திட்டம்,
வந்தால்,
முதலமைச்சரின் காப்பீட்டுத்திட்டம்.
இன்று,
"மக்களைத்தேடி மருத்துவம்" திட்டம்
மாநிலம்போற்றும் மகத்தான திட்டம்.
இதற்காக,
வாரிவழங்கலாம்
பொதுசுகாதாரத்துறைக்குப் பட்டம்.

ஆரம்பசுகாதார நிலையத்தில்
கர்ப்பிணித்தாய்மார்களுக்கு
சத்துணவால்
செவ்வாய் மலரும் பூவாய்!
பொதுசுகாதாரத்துறை ஊழியர்கள்
தமிழ்த்தாய் வென்றெடுத்த
காவலர்கள்.
மொத்தத்தில்,
அரசு ஊழியர்கள் மக்களின்
சேவகர்கள்.
தன்நலம்நீக்கி
பிறர்நலம்காக்கும்
அரியதுறையே!
பொதுசுகாதாரத்துறையே!
வாழ்க நீ!நூறாயிரம் ஆண்டு!
வளர்க உம் மக்கள்தொண்டு!

**ஆ.கிருஷ்ணன்;**
இளநிலைப் பூச்சியியல் வல்லுநர்,
NFCU–வேலூர்.

# பொது சுகாதாரம்

சுகாதாரம் என்ற ஒற்றை வரி எனக்கு
வார்த்தையாகத் தெரியவில்லை
கவிதையாக உணர்கிறேன்
மனிதர்களுக்கு மறுவாழ்வு தருவது மருத்துவம்
அலை கடல் ஓய்ந்தாலும் மருத்துவச் சேவை ஓய்வதில்லை
புயலுக்கு பின் அமைதி... ஆனால் மருத்துவப் புயலுக்கு பின் சேவை
ஆம் அதிவேகக் காற்றில் சிக்கிய மனிதர்கள்
நிலநடுக்கம், சூறாவளி அடை மழை இவைகளால்
பாதிப்பில் சிக்கிய மனிதர்கள்....
சிக்கிய மனிதர்களின் நலன் காத்திட
மருத்துவ துறையினராகிய நாங்கள்
இயற்கை சீண்டலாக இருக்கட்டும்,
புதுவகை வியாதிகளாக இருக்கட்டும்
எதற்கும் துணிந்தவர்கள் நாங்கள்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப
தில்லையே உச்சிமீது வானிடிந்து
வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே!!!

என்ற பாரதியாரின் வரிகளுக்கேற்ப எங்களுக்கு எதைப் பற்றியும் அச்சம் இல்லை என்றும் பொது மக்கள் சேவகர்களாக "பொது சுகாதாரத் துறையினர்கள்"

**M.K.கீர்த்தனா, ம.கி.** (MLHP)
Koovagam (HSC)
Thirunavalur BPAC

## நூற்றாண்டு காணும் பொது சுகாதார சாரதிகள்
## பொது மக்களின் உயிரைக் காக்கும்
## பொது சுகாதார துறையின் வாகன சாரதிகள் நாங்கள் !

இன்னல் பல வரினும் இன்னும் நம்பிக்கை
வைத்து
இருள் கிழித்து வெளிச்சத்தை நோக்கி
பயணிக்கும்
சுகாதார சாரதிகள் நாங்கள்..... !

வாகனங்களோடு எங்கள் வாழ்வு!
பிறர் வாழ உழைப்பதே எங்கள் நேர்வு !

காலராவோ, போலியோவோ எங்கள் கால் மிதித்து
வாகனங்கள் பறக்கும் அப்படியே வந்த
நோய்களும் பறக்கும் !

மருந்துகளையும், தடுப்பூசிகளையும்
குறித்த நேரத்தில் கொண்டு சேர்க்கும்
துறையின் சாரதிகள் நாங்கள் !

ஆற்றுச் சமவெளியோ, உப்பு நிலமோ, வளைந்து
கிடக்கும் மலையோ
எங்கள் சக்கரங்களில் நகரும் துறை சார்
பொருட்கள்
நோய் உடைத்து நாளும் தரும் நல வாழ்வு...... !

கிராமங்கள் தோறும், பொது சுகாதாரம் காக்க
ஆராய்ச்சி மற்றும் செயல்திட்ட கழிப்பறைகள்
கட்ட சிட்டாய் பறந்தோம்.
நாட்டிற்கே முன்னோடியான திட்டங்களின்
தூதுவர்கள் ஆனோம் ..... !

கர்ப்பிணிகள் நலம்  பெற சுகாதார நிலையம்
அழைத்து வருவோம் !
சுகப்பிரசவம் நிகழ்ந்து வீட்டிற்கு அழைத்துச்
செல்லும்....
தாய்சேய் நல திட்டத்தின் தூதுவர்கள் நாங்கள்.

பள்ளி குழந்தைகளின் முகத்தை மலர செய்யும்
பள்ளி நலவாழ்வு திட்ட தூதுவர்கள் நாங்கள் ..... !

இல்லாத பட்டவர்களுக்கு இல்லம் தேடி வரும்
மக்களை தேடி மருத்துவ திட்டத்தின் தூதுவர்கள்
நாங்கள் ..... !

பெரு வெள்ளமோ, வர்தாவோ, தானேவோ
நீரிலும், காற்றிலும் சுழன்றன எங்கள் வாகன
சக்கரங்கள் ..... !

கொரோனா காலக் கட்டத்தில் உயிரை துச்சமாக கருதி
பாதிக்கப்பட்டவர்களை தனிமைப்படுத்த
உதவினோம் ..... !

விரைவாக பரிசோதனை செய்யவும், நோயை
கட்டுப்படுத்தவும்
துறை அலுவலர்களை பாசமாய் சுமந்தோம் !
பாசமாய் பெருந்தொற்றை இணைந்து  வென்றோம்.

இப்போதும், எப்போதும் துறையின் மக்கள் நலத்
திட்டங்கள்
மக்களை சேர சுமந்து திரியும் சாரதிகள் நாங்கள் !

பணியிலிருந்து விடை பெறும் போதும்
பாரதி விடை பெறும் போதும்
மக்களுக்கும், துறைக்கும் சேவை செய்த
நிறைவோடு வாகனத்தை அணைக்கும் சுகாதார
சாரதிகள் நாங்கள் !

வேராக, விழுதாக நம்மை காக்கும்
நூறாண்டு காணும், பொன்னான
பொது சுகாதாரத் துறை
நீடுழி வாழ மனதார வாழ்த்தும்
சாரதிகள் நாங்கள் !

**ப. குணசேகரன்,**
ஓட்டுநா; (சிறப்பு நிலை)
பொது சுகாதார நிறுவனம், பூவிருந்தவல்லி

# பொது சுகாதாரம் மக்களின் தன்னிகரற்ற தோழன்

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்"* பொருள் : நோய் என்ன? நோய்க்கான காரணம் என்ன? நோய் தீர்க்கும் வழி என்ன? இவற்றை முறையாக ஆராய்ந்து சிகிச்சை செய்ய வேண்டும்.

*கலைஞர் உரை*

அடித்தட்டு கிராமப்புற மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது மட்டுமல்லாமல் அவர்களின் ஆரோக்கியத்திற்கு மிகப் பெரிய அளவில் சேவை செய்து வரும் பொது சுகாதாரத்துக்கு நூற்றாண்டு விழா என்பது ஒரு

ஆதரவான
உன்னதமான
தனித்துவமான
நம்பிக்கையான
நிறைவான
ஆரோக்கியமான

விடிவெள்ளியாக நூற்றாண்டு காலமாக அமைகிறது.

போலியோ,
காலரா
தொழு நோய்
தட்டம்மை
எய்ட்ஸ்
காச நோய்
கொரோனா

போன்ற கொடிய நோயிலிருந்து மக்களை பாதுகாத்த ஒரு மிகப்பெரிய அரண் என்று சொன்னால் அதை மிகை ஆகாது

ஆரோக்கியம் என்ற வார்த்தையை கர்ப்பிணி தாய்மார்கள் பச்சிளம் குழந்தைகள் வளர் இளம் பெண்கள்

பெரியவர்கள் 60 வயதிற்கு மேற்பட்டோர் என அனைவருக்கும் திட்டங்களை வகுத்து அதை செயலாற்றி மக்களின் உற்ற தோழனாக விளங்கி வரும் பொது சுகாதாரத்துக்கு நூற்றாண்டு விழா !

பொது சுகாதாரம் கண்டெடுத்த நூற்றாண்டுத் திட்டங்களில்

சிறப்பான ஒரு திட்டம்
மக்கள் விரும்பிய ஒரு திட்டம்
மக்கள் எதிர்பார்த்த ஒரு திட்டம்
மக்கள் பயன் அடைந்து கொண்டிருக்கும் ஒரு திட்டம்
மக்கள் உளதார மனதார நன்றி தெரிவிக்கும் ஒரு திட்டம்

"மக்களைத் தேடி மருத்துவம்"* என்ற மகத்தான திட்டம்.

பொது சுகாதாரத்தின் நூற்றாண்டு விழாவில் இத்திட்டம் இடம் பெறுவது சிறப்புக்கு சிறப்பு அளிப்பதாகும்

கொள்ளை நோய்களுக்கு எதிரானதாக
ஆரோக்கியத்துக்கு உற்ற தோழனாக

என்றும் எதையும் மக்களுக்காக செயலாற்றி வரும் பொது சுகாதாரப் பணியாளர்கள் அனைவருக்கும் பொது சுகாதார நூற்றாண்டு வாழ்த்துக்கள்

தெளிவான
நிறைவான
ஆரோக்கியமான

தன்னிகரற்று செயலாற்றி வரும் பொது சுகாதாரத்துக்கு நூற்றாண்டு விழா ஒரு மகத்தான, சிறப்பான விழா !!!

இவண்

**மரு. கு. சசிகுமார்**
இயன்முறை மருத்துவர்
கம்மாபுரம் மேம்படுத்தப்பட்ட
அரசு ஆரம்ப சுகாதார நிலையம்,
கடலூர் மாவட்டம், செல்.6381387520

## பொது சுகாதார துறையின் நூற்றாண்டு சாதனைகள்

- இத்துறை பொதுவாக பொது சுகாதாரத்துறை என்றாலும், இது ஒரு பெரிய சேவைக்கான துறை ஆகும்.
- இத்துறை நூற்றாண்டினை கடந்தும் 100% முழுமையான சேவைக்கான துறை
- இதில் முதன்மையானது, மருத்துவர்கள் பார்க்கும் மருத்துவம்
- இவற்றில் புனிதமானது செவிலியர்கள் பார்க்கும் பிரசவம்.
- எத்தனை எத்தனையோ, நோய்கள் கண்டோம், அத்துணைக்கும் மருந்தும் கண்டோம், மருத்துவமும் தந்தோம்.
- வெயிலிலும், மழையிலும் கண்கலங்க வைக்கும் எங்களது களப்பணியாளர்களின் களப்பணியும், அதிர வைக்கும் அதிகாரிகளின் ஆய்வு பணியும் சிறப்பு வாய்ந்தது.
- அரசின் திட்டங்களும் ஏராளம். அத்திட்டங்களை முழுமையாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பதால்தான், இதனை மக்கள் நல்வாழ்வு துறை என்றார்களோ?
- மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா அனைத்து பணிகளும், அப்பணியினை சிறப்பிக்கும் பணியாளர்களும் இத்துறைக்கு கிடைத்த மணிமகுடங்கள்.
- முத்தாய்ப்பாய் மிகவும் முக்கியமாக இவ்வுலகத்தையே புரட்டி எடுத்த கொரோனா என்னும் பெருந்தொற்றை, நம் துறை மட்டுமே, முழுமையாக எதிர்கொண்டு, மக்களை காத்து வெற்றி கண்டது.
- இங்கு வந்த நோய்க்கு மருந்து கொடுப்பது எளிது. வரவிருக்கும் கொரோனா நோய்க்கு, தடுப்பூசி திட்டத்தை அறிமுகப்படுத்தி, செம்மையாக மக்களை காப்பாற்றி வருகிறது.
- கொரோனா நோய் பெருந்தொற்றின்போது, அனைவரும் இந்நோயை கண்டு பயந்தபோது, நம் துறை சொந்தங்கள் மட்டுமே நோயையும், நோயாளிகளையும் நேரடியாக எதிர்கொண்டு சேவை புரிந்தோம்.
- நானோ இத்துறையில்; அமைச்சுப்பணியாளர் இத்துறையில் மருத்துவ சேவை ஆற்றிவரும் அனைத்து பணியாளர்களுக்கும் என்னால் இயன்றவரையிலான எனது பணியினை மக்களுக்காகவும் எமது துறை பணியாளர்களுக்காகவும் சேவையாற்ற நான் கடமைப்பட்டுள்ளேன்.

இத்துறையின் சேவகன்
**வி.சந்தானகிருஷ்ணன்,** உதவியாளர்
அரசு ஆரம்ப சுகாதார நிலையம், சின்னாளபட்டி
திண்டுக்கல் மாவட்டம்

## வெற்றி பெறுவோம் ! !

**தன்னிலை சோதனை :**

துறையில் நுழைந்ததும்.. தூக்கியெறியப்பட்டோம்
துக்கமும் வேதனையும் தொடர...
துவண்டு விட மாட்டோம் என தொடர்ந்து போராடி வென்றோம்....
வெற்றி கண்டோம்.
கண்டபின்

**வேதனை :**

ஏழுகடல் தீவினில்... வாழ்வுமின்றி
வகையறியாது இவன் வருந்தட்டும் எனவும்...
மாலைமீது பணியமர்த்தி நிலையின்றி வேறுவழியின்றி
விழிபிதுங்கட்டும் எனவும் உறவுகள் நினைத்தாலும்

**சாதனை :**

உயிர் என்பது அனைத்திற்கும் பொது ஏழை பணக்காரன்
பாகுபாடு கிடையாது. நோயும் நோய்வந்தபின் பாயும்.
"ஆண்டவனுக்கும்" – அன்றாட ஏழைக்கும் பொது உணர்த்தியது" –
பொது சுகாதாரத்துறை.
"வருமுன் காப்போம் – வழிகாட்டியாய் நிற்போம்""

**போதனை :**

"அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்
தன் நோய்போல் போற்றாக் கடை– குறள்
வள்ளுவப் பெருந்தகையின் வாய்மொழியைப்
போதனையாய்க் கொண்டேன்.

உறுபசியும் ஓவாப்பிணியும் சேராதிருக்க உழைத்தேன்... உழைக்கிறேன்.... உயர்த்துவேன் செறுபகை சேரா நாட்டை..... தமிழ்நாட்டை உருவாக்க பார்போற்றும், பேர் சொல்லும் சாதனை இதுவரை இல்லை உறவுகள் போற்றும், யார் போற்றும் பட்டைய விருதுகளும், காகிதச் சான்றிதகளும் இல்லை பணிபுரிந்து பிணிநீக்கியதால் விழிவிரிந்து ஆயினும் கரம் குவித்து கனிவோடு இதயம் போற்றும் இனிய வாழ்த்துக்களை என் சேவைகள் என்னால் ஆனவரை செய்துள்ளேன் என்பதற்கு சான்றுகள்... சாதனை

- காசநோய் கண்ட "கன்னிப்பெண் அய்யம்மாள்: பேரன் பேத்தி கண்டு வாழ்வது...
- மலேரியாக் கண்ட மருத்துவரின் மகளைக் மருந்துத்துறைக்கே... மறுபடியும் காண்பது.
- கர்ப்பிணிக்கு உதவிட உதிரம் கொடுத்து உயிரைக் காத்தது.
- "யானை மிதித்து நெஞ்செலும்பு உடைந்த " பந்தையன்" எனும் பழங்குடியினத்தவரை எக்ஸ்ரே இன்று வாழ்க்கைப் பந்தயத்தில் ஓடச் செய்தது....
- கொள்ளிவைக்க யாரும் வராமல் தள்ளிவைத்த<br>கொரோனா சடலத்தினைத் தனியொருவனாய்<br>தகனம் செய்தது.....
- கடல்சூழ் மாவட்டத்திலும்....<br>மலைமேல் மக்களுடனும்...<br>உடல் சுரம் வெயில் மண் பகுதியிலும்...<br>தண்ணீரில்லா தீவுகளிலும்... கனிவுடன் என்னுடன்<br>பணிபுரிந்தோர் காலம் கடந்தும் என் தொடர்பிலிருப்பது....
- "மகராசன் நல்லாயிருக்கணும்" என என் தாய் தந்தை காலத்தவரும்...<br>எனை வாழ்த்தி வருடிக் கொடுப்பதுதான்...<br>இத்துறை மூலம் நான் கண்ட மாபெரும் விருது....<br>என் வாழ்நாளின் மகத்தான சாதனை....

என மன நிறைவுடன்

**வெ. சிவக்குமார்**
சுகாதார ஆய்வாளர்
அரசு ஆரம்ப சுகாதார நிலையம்
கள்ளிப்பட்டி – 638505
ஈரோடு மாவட்டம்

# என் துறையே வணக்கம்

என் துறையே வணக்கம்
தொற்று நோய்களின் கூடாரமாக இருந்த
என் தேசத்தை – தனது திட்டத்தால்
சுகாதாரத்தின் சொர்க்கபுரியாக்கும்
என் துறையே வணக்கம்
திட்டங்களை பல இதோ அவற்றில் சில
இருமிக் குறைந்த உடலைத் தடுத்து
இரும்பான உடல் கொடுத்த திட்டம் – அது
காசநோய் ஒழிப்புத் திட்டம்

இவர்களின் விரலோ முடம்
வீட்டில் இருக்க இல்லை ஒரு இடம்
இவர்கள் வாழ்வதெல்லாம் வெளியிடம்
என் வாழ்ந்தோர்
மகிழ் ஒரு திட்டம் – அதுவே
தொழுநோய் ஒழிப்புத் திட்டம்
கட்டைக் கானுடனும் கோலுடனும்
நடந்த நிலைமாற்றி சொந்தக்காலில்
நிற்க வைத்த திட்டம் – அது
இளம்பிள்ளை வாதம் ஒழிப்பு திட்டம்
அழகு முத்துடன் வாழ வைத்த திட்டம் – அது
பெரிய அம்மை நீக்கிய திட்டம்
மலைவாழ் மக்களைக் காக்கும் திட்டம் – அது
பாரங்கிப்புண் ஒழிப்புத் திட்டம்
மாபெரும் மாத்திரை
உட்கொள்ளும் திட்டம் – அது
யானைக்கால் நோய்யினை
வேரறுக்கும் திட்டம்
அவ்வளவுதானா? இல்லை
பச்சிளம் குழந்தைக்கொரு திட்டம்,
பள்ளி செல்லும் குழந்தைக்கொரு திட்டம்,
கர்ப்பிணிப் பெண்களுக்கொரு திட்டம்
கண்ணொளி காப்போமென ஒரு திட்டம்
தாய் சேய் நலமுடன் குடும்ப நலத்திட்டமும்
முடிந்ததா இல்லையே.
தொற்றும் நோய் குறைத்து – தற்போது
தொற்றா நோய் தடுக்கும் திட்டங்கள்
என் துறையே வணக்கம்...
துறைப்பணியை இறைப்பணியாக்கிய
கனவான்களால்
இதுதான் இந்தியா என்றிருந்ததை
இதுவா – இந்தியா என வியக்க
வைத்த துறையோ வணக்கம்...
எனது தேசத்தின் வளர்ச்சியென்பது
அங்குள்ள உயர்ந்தோங்கிய
கட்டிடத்திலில்லை – அது
கடைக்கோடிக் கிராமத்தின்
குடிநீரின் சுத்தத்திலுள்ளது
என உலகுக்கு உணர்த்தும்
என் துறையே வணக்கம்....
உன்னை விதைத்தவர் எவரோ
வளர்த்தவர் எவரோ – உன்னில்
வாழ்பவர் பலர் – அதில்
எனக்கும் உயிர்கொடுத்த துறையே வணக்கம்

பஞ்ச பூதத்திலும் பணியாற்றும் துறையே,
நாளைய உலகுக்கு நலம் கொடுக்கும்
துறையே, உன்னை வணங்குகிறேன்...
என் துறையே வணக்கம்...

**மரு.த.சிவக்குமார்**
வட்டார மருத்துவ அலுவலர்
வட்டார ஆரம்ப சுகாதார நிலையம்
இனுங்கூர்
கரூர் மாவட்டம்

# கொசுக்களிடம் இருந்து விடுதலை

'டேய் நாராயணா இந்த கொசு தொல்லை தாங்க முடியலடா' என நடிகர் கவுண்டமணி பேசிய வசனம் அத்தனை பிரபலம்.

'ஆமா.... உங்களுடைய காதுகிட்ட வந்து அந்த கொசு பாடுகிற பாட்டு அத்தனை நன்றாகவா உள்ளது, ஓயாமல் கைய தட்டுறீங்க?!' இப்படி கொசுக்களை பற்றிய நகைச்சுவைகளும் ஏராளம்.

மழை பெய்யும் நேரத்தில் விழும் மழைத் துளிகளுக்கு இடையிலான இடைவெளியில் சாமர்த்தியமாக பறக்கும் வல்லமை கொண்டவை கொசுக்கள்.

ஆம், இப்போது இந்த கட்டுரையில் கொசுக்களை பற்றிய சில தகவல்களை அறிய போகிறோம்.

கட்டுரைக்குள் செல்வதற்கு முன்பாக சில கேள்விகள்–பதில்கள்.

கேள்வி : உலகின் அதிகமான உயிரிழப்புகளை தரும் உயிரினம் எது?

பதில் : கொசு.

கேள்வி : மனிதர்களை, விலங்குகளை கடிப்பது ஆண் கொசுக்களா, பெண் கொசுக்களா?

பதில் : பெண் கொசுக்களே.

இந்த உலகிலுள்ள பலரிடமும் கேட்க பட வேண்டிய ஒரு கேள்வி, உயிர் வாழ எது அவசியம்?! என்ற கேள்வியை கேட்டால் பதில்கள் வந்து விழும், உணவு, உடை, உறைவிடம் என வரிசையாக. பல கோடியில் மாளிகை கட்டி அங்கே வசி என உயிரிடம் சொன்னால் இருக்குமா?

பல லட்சம் மதிப்புள்ள உடையை எடுத்து உயிரை அதில் வசிக்க சொன்னால் இருக்குமா?

நட்சத்திர உணவு விடுதியில் உணவை தயாரித்து அதில் உயிரை வசிக்க சொன்னால் இருக்குமா?

சரி, உயிர் வாழ எது அவசியம் என்ற கேள்விக்கான விடை. உடல்! உடல் வளர்த்தேனே.. உயிர் வளர்த்தேனே..! என திருமூலர் பாடியதுதான். நமது உயிர் வாழ, நமது உடலை விட வசதியான, அழகான இடம் ஏதுமில்லை, எங்குமில்லை.

இந்த உலகிலுள்ள உயிர்களுக்கு எல்லாம் ஒரு நோக்கம் உண்டு. மனிதனை தவிர்த்து, ஆம் மனிதனுக்குத்தான் மண் மீது ஆசை, பொன் மீது ஆசை, பொருள் மீது, வீடு, வாசல், கார், கப்பல், விமானம் இப்படி பட்டியல் போட்டால் பக்கமே போதாது. ஆனால், மனிதனை தவிர அனைத்து உயிர்களுக்கும் பசும் புல்லில் தொடங்கி பறவவை வரை அனைத்துலக உயிர்களுக்கும் ஒரே நோக்கம். ஒரு பசும் புல் தனது வேரினை பூமிக்குள் பரப்பி, நீட்டி நீரினை உறிஞ்சி வளர்ந்து பின் கருகி இன்னொரு பசும் புல்லை உருவாக்கி மண்ணோடு மண்ணாகி போகிறது. தன்னுடைய 'சந்ததி' இந்த புவியில் வாழ வேண்டுமென்பதே அனைத்து உயிர்களின் நோக்கமும்.

இப்படியாக நோக்கம், கொள்கை கொண்ட உயிரினங்களுள் ஒன்றுதான் கொசுவும். ஆண் கொசுக்களும், பெண் கொசுக்களும் தாவர சாறுகளை உறிஞ்சியே வாழத் தொடங்குகின்றன. பெண் கொசுக்கள், தன்னுடைய இனப் பெருக்கத்திற்காக முட்டையிடும் காலத்தில் அதற்கு தேவையான இரும்புச் சத்து ரத்தத்தில் உள்ளதால், முட்டையிடும் பெண் கொசுக்களுக்கு ரத்தம் தேவைப் படுகிறது. அதன் பொருட்டே பெண் கொசுக்கள் ரத்தத்தை உறிஞ்ச கடிக்கிறது. கொசுக்கள் கடித்து ரத்தத்தை உறிஞ்ச பற்கள் தேவை இல்லை. ஆனால், கொசுவின் கண்களுக்கு கீழே நுட்பமான இன்ஜெக்ஷன் போன்ற ஊசி வைத்திருக்கிறது. ஒரு ஊசியல்ல, ஆறு ஊசிகள். ஆறு ஊசிகளையும் ஒன்றாக இணைத்து ஒற்றை ஊசியாக ஒன்றிணைத்து தோலுக்குள் இறக்குகிறது. கடிக்கும் முன்பாக 'லோக்கல் அனஸ்தீஸியா' வகையிலான சுரப்பியை முதலில் செலுத்தும், அடுத்ததாக கடித்தவுடன் ரத்தம் உறைந்து போகாமல் இருக்க ஒரு வித வேதியியல் சாற்றினை சுரந்து செலுத்த, அந்த வேதியியல் நொதி ரத்தத்துடன் கலக்கிறது. அப்போதுதான் நம்மால் வலியை உணர முடியும். கொசு கடித்த இடத்தை அடிக்கவோ, சொறியவோ முற்படுகையில் கொசுக்கள் தமது ரத்தம் உறிஞ்சும் பணியினை முடித்து சிறகடித்து பறந்து விடுகிறது.

Local Anesthetic எனப்படும் பகுதி மயக்க மருந்தையும், ரத்தம் உறையாதிருக்க வேதி நொதியை கொசுக்கள் செலுத்தும் போதுதான் மலேரியா, டெங்கு, சிக்குன் குன்யா, JE எனப்படும் மூளைக்காய்ச்சல், ஜிகா வைரஸ்,யானைக்கால் நோய் கிருமிகள் உடலுக்குள் உட்செலுத்தப் படுகின்றன.

இப்போதைய கொரோனா ஊரடங்கு, உலகடங்கு என்ற நிலையில் டெங்கு பரவல் தலை தூக்கி உள்ளது. சுமாராக 2,700 கொசு வகைகள் உள்ளன. கொசுக்கள் ஒரு வகையிலான பறக்கும் அற்புதம். மழைப் பொழிவின் போது விழும் மழை துளிகளின் இடைவெளியில் சாமர்த்தியமாக பறக்கும் வல்லமை கொண்டவை இந்த கொசுக்கள்.

பொதுவாக ஆரம்பத்தில் ஆண்கொசுக்கள் கடிப்பதில்லை, பெண் கொசுக்களே கடிக்கும் என்பது போன்று இன்னொரு கூடுதல் தகவல், முதிர்ச்சியடைந்த ஆண் கொசுக்கள் ஏழு நாட்கள் முதல் பத்து நாட்களே வாழும். ஆனால் பெண் கொசுக்கள் 21 முதல் 27 நாட்கள் வரை வாழும். அதென்ன முதிர்ச்சியடைந்த கொசு, ஆம் கொசுக்கள் தமது வாழ்நாளில் நான்கு நிலைகளை கொண்டது.

முட்டை 1–2 நாட்கள். ஒன்று முதல் இரண்டு நாட்களில் கொசு முட்டையில் இருந்து கொசுப் புழுவாக மாறிவிடும் கொசு முட்டைகள் தனக்கு சாதகமான சூழல் வரும் வரை ஓர் ஆண்டு காலம் கூட கொசு முட்டையாகவே இருக்கும். தனக்கான சாதகமான சூழல் வந்தவுடன் கொசு முட்டைகளிலிருந்து கொசு புழுக்களாக மாறுகின்றன. கொசுக்கள் தண்ணீரில் மட்டுமல்லாது தண்ணீர் தேங்கும் ஈரப்பதமான இடம், மண் போன்ற இடங்களில் முட்டைகளை இடும். அவ்வாறான முட்டைகள் கொசுப் புழுக்களாக, கூட்டுப் புழுக்களாக மாற சாதகமான சூழல் வரும் வரை கொசு முட்டைகள் அப்படியே இருக்கும்.

கொசுப் புழு 6–8 நாட்கள்

கூட்டுப் புழு 2நாட்கள்

பக்குவமான கொசு நான்கு நிலைகளை கடந்து பக்குவமான கொசுவாக பறக்கும். 2,700 வகையிலான கொசுக்கள் உள்ளதென அறிந்தோம். இப்போது மூன்று வகையான

கொசுக்களை பற்றி மட்டும் பார்ப்போம்.

அனொபிலஸ்

க்யூலெக்ஸ்

ஏடீஸ் எஜிப்டி.

இவை மூன்றும்தான் மனித குலத்தின் சமகால சவால்கள்.

அனெபிலஸ் எனப்படும் மலேரியாவை பரப்பும் கொசுக்கள் சுத்தமான தண்ணீரால் மட்டுமே உற்பத்தியாகின்றன.

க்யூலெக்ஸ் எனப்படும் கொசு வகை யானைக் கால் நோய், ஜப்பானிய மூளைக்காய்ச்சல் எனப்படும் மூளைக் காய்ச்சலை பரப்பும் இவ்வகை கொசுக்கள் அசுத்தமான நீரில் உற்பத்தி ஆகும். ஏடீஸ் எஜிப்டி எனப்படும் கொசுக்கள்தான் டெங்கு, ஜிகா வைரஸ ,சிக்குன் குனியா வை பரப்புகின்றன.இவ்வகை கொசுக்கள் சுத்தமான , கலன்களில், தொட்டிகளில் உள்ள நீரிலே உற்பத்தி ஆகும். கொசு ஒழிப்பு பணிகளுக்காக கிராமப்புறங்களுக்கு சென்று கலன்களில் நீர் தேங்காதவாறும், தொட்டிகளை கொசுக்கள் புகா வண்ணம் மூடிக்கொள்ள அறிவுறுத்துகையில், எங்களுடைய வீட்டு நீரை மூடி வைக்க வேண்டுமென கூறும் நீங்கள் ஆறு, குளம், குட்டை, ஏரி ஆகிய நீர் நிலைகளை எதனை கொண்டு எப்படி மூடுவீர்கள் என எதிர்க்கேள்வி எழுப்புவார்கள்.

இந்த ஏடீஸ் எஜிப்டி கொசுக்கள் பொதுவாக பகல் நேரங்களில், மாலை நேரங்களில் கடிக்கும் இயல்புடையவை.

ஒரு பெண் கொசுவானது நாள் ஒன்றுக்கு 300 முட்டைகளை இடும் வல்லமை கொண்டது.

முட்டைகள் கொசு புழுக்களாக மாறுகின்றன. ஆறு, குளம், குட்டை, ஏரி ஆகிய நீர்நிலைகளில் உள்ள மீன்கள், தவளைகள் ஆகியவை கொசு முட்டைகளையும், கொசு புழுக்களையும் உணவாக சாப்பிட்டு விடுகின்றன.

கொரோனா எனும் உலகப் பெருந்தொற்றில் தடுப்பூசி உதவியோடு மக்கள் மீண்டு வரும் இந்த வேளையில் இதோ வட கிழக்கு பருவ மழை தொடங்கி விட்டது. டெங்கு, சிக்குன்–குனியா,ஜிகா வைரஸ் என பரவலாக காணப்படும் இந்த வேளையில் மலேரியாவை பரப்பும் அனொபிலஸ் கொசுக்களை விட, யானைக்கால் நோய் பரப்பிடும் கியூலெக்ஸ் கொசுக்களை விட டெங்கு, சிக்குன்குனியா, ஜிகா வைரஸ் பரவும் இந்த வேளையில் நம் வீட்டை சுற்றியுள்ள நல்ல நீரில் உற்பத்தி ஆகும் ஏடீஸ்எஜிப்டி வகை கொசுக்கள், கொசுப் புழுக்கள் தேங்கி உள்ளதா என்பதை கவனமாக கண்காணிப்போம், நீர் சேமித்து வைக்கும் தொட்டிகளை, பாத்திரங்களை கொசு புகாத வண்ணம் மூடி வைப்போம், தொட்டிகளில் மீன்களை வளர்ப்போம். கொசுப் பரவலை தடுப்போம். மழைக்கால கொசுக்களின் நோய்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வோம்.

**வீ.சுரேஷ்,**
சுகாதார ஆய்வாளர்,
அரசு ஆரம்ப சுகாதார நிலையம்,
செம்மாணிச் செட்டிபாளையம்,
கோயம்புத்தூர்–641 107.

# புதுயுகம் 100

(அந்த மூன்று நாட்கள் மூலையில் கிட என்ற மூளையற்ற 100 ஆண்டு காலத்தை மூலையில் ஒதுக்கி புதுயுகம் கண்ட  பொது சுகாதாரம் 100.)

பொதுச் சுகாதாரம 100
பொன் வாழ்விற்கான ஆதாரம்....

முப்பெரும் தேவியென முத்தடுப்பூசி
ஐந்திணைகள் என ஐந்தடுப்பூசி
முடக்கி போட்ட சமூகத்தை
போலியோ சொட்டு மருந்தால்
முடக்கின்றி செயல்பட
இது என்னவாக இருக்குமென்ற
சிந்தனையில் கழிந்த சமூகத்தை
வரும் முன் காப்போமென
உயர் மருத்துவமும் ஊர் தேடி
வரச் செய்து
நடமாட இயலாத சூழலில் கூட
நடமாடும் மருத்துவ மனையென
தொட்டாலே ஒட்டிக் கொள்ளுமோ
என ஒதுங்கிய தொழுநோயை
தொய்வின்றி விரட்டிட
மக்கள் தொகை கட்டுப்பாடு கொண்ட
சமூகமே
மாண்புடன் வாழுமென
நாளும் பொழுதும் நலமே அவசியமென
நலக்கல்வி தேடி வழங்கிட
கண்ணொளி காப்போமென
கண்களை காத்திட
மகப்பேறு கால மாதர்கள் நலமே
வருங்கால மனித குல நலமென
மருத்துவர் முத்துலெட்சுமி
அம்மையார் நலத்திட்டமென
மாறி விட்ட வாழ்வியலில்
தொற்றா நோய்களை
தொடர்ந்து கண்டறிந்து
கட்டுக்குள் வைப்போமென
அன்றாட குடிநீர் கிருமிநாசினி
கொண்டு சுத்தமே சுகாதாரமென
மருத்துவம் தேடி மக்கள் எதற்கு
மக்களைத் தேடி மருத்துவமென
மகத்தான நூற்றாண்டு
பொது சுகாதாரம்
பொன்னான நல் வாழ்விற்கு ஆதாரம்.!

**வீ.சுரேஷ்,**
சுகாதார ஆய்வாளர் நிலை–1,
அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ,
SMC .பாளையம், அன்னூர் வட்டாரம்,
கோவை சுகாதார மாவட்டம் – 641 107.
தொடர்புக்கு :– 9677448300.

# ஆனைப்பள்ளம் அனுபவம்

தமிழ்நாடு பொது சுகாதாரத் துறை நூற்றாண்டு காணும் இந்த வேளையில், இந்தியாவின் ஏனைய மாநிலங்களை விட தமிழ்நாடு சுகாதார செயல்பாடுகளில் முன் மாதிரியான மாநிலமாக திகழ்வதை மிகுந்த மகிழ்ச்சியாக உணரும் இந்த வேளையில், 2008 முதல் 2010 வரை நீலகிரி மாவட்டம் கேத்தி வட்டார சுகாதார ஆய்வாளராக பணியாற்றிய, நமது பொது சுகாதார துறையின் ஆழமான அக்கறையான செயல்பாட்டினை இந்த கட்டுரையின் மூலமாக அறிவோம்.

நூற்றாண்டு விழா காணும் நமது பொது சுகாதார துறை ஆங்கிலேயர்கள் காலத்திலேயே வேரூன்றிய ஒன்று. மிகுந்த குளிர்ந்த பிரதேசத்தில் இருந்து வந்த ஆங்கிலேயர்கள் இங்கிருந்த வெப்ப சூழலை சமாளிக்க இயலாத சூழலில் அவர்கள் அவ்வப்போது தங்கிச் செல்ல வசதியாக கண்டுபிடிக்கப்பட்டதே மலைகளின் அரசியெனும் உதக மண்டலம். நீலகிரி சுகாதார மாவட்டம் என தனி சுகாதார மாவட்டமாக உள்ள நீலகிரி மாவட்டம், குன்னூர் அருகேவுள்ள கேத்தி வட்டாரத்திற்குட்பட்ட கொலக்கம்பை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உட்பட்ட ஆனைப்பள்ளம் எனும் துணை சுகாதார நிலையத்திற்கு உட்பட்ட மக்களுக்கான சுகாதார சேவை அனுபவத்தை இககட்டுரையில் காண்போம் . குன்னூரில் இருந்து தேயிலைத் தோட்டங்கள் நிறைந்த மலைப்பாங்கான கேரள மாநில எல்லை அருகேவுள்ள ஒரு அழகிய சூழலில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையம் கொலக்கம்பை அரசு ஆரம்ப சுகாதார நிலையம். குறைந்த பட்சமாக ஐந்து கிலோ மீட்டர் தாண்டினால் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம், ஐம்பதாயிரம் மக்கள் மருத்துவ வசதி பெறும் வகையிலான ஒரு ஆரம்ப சுகாதார நிலையம், ஐந்தாயிரம் மக்கள் தொகை கொண்ட பகுதிகளை உள்ளடக்கிய ஒரு துணை சுகாதார நிலையம் என்ற கட்டமைப்பில் இயங்கி வருகிறது நமது பொது சுகாதாரத் துறை.

இப்படியாக ஐம்பதாயிரம் மக்கள் வசிக்கும் மலைப்பாங்கான சூழலில் உள்ளதே இந்த கொலக்கம்பை அரசு ஆரம்ப சுகாதார நிலையம். ஐந்தாயிரம் மக்கள் தொகை கொண்ட மக்களுக்கான மருத்துவ சேவைகளை வழங்கிடும் துணை சுகாதார நிலையம் என்ற நிலையில்,

இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உட்பட்ட ஒரு துணை சுகாதார நிலையம்தான் ஆனைப்பள்ளம் எனும் துணை சுகாதார நிலையம். நான்சச் எஸ்டேட், பார்க்சைடு எஸ்டேட் ஆகிய தேயிலைத் தோட்டங்களை கடந்து மலை உச்சியை அடைந்தால் அங்கிருந்து மலையின் கீழ் சுமாராக பத்து கிலோ மீட்டர் தூரம் பயணித்தால் ஆனைப்பள்ளம் என்ற இடத்தினை அடையலாம். பெயருக்கு ஏற்றது போல் யானைகள் நிறைந்த இடம். அது மட்டுமல்லாமல் புலிகள், கரடிகள், குரங்குகள், பாம்புகள் என விலங்குகள் வாழும் அடர்ந்த வனப் பகுதிதான் இந்த ஆனைப்பள்ளம்.

வழக்கமாக ஐந்தாயிரம் மக்களுக்கான ஒரு துணை சுகாதார நிலையம் என்பது இந்த அடர்ந்த வனப்பகுதியில் ஐநூறு மலை வாழ் மக்களுக்கானதே இந்த ஆனைப்பள்ளம் துணை சுகாதார நிலையம். இப்படியான மக்கள் ஐநூறு நபர்களும் ஒரே இடத்தில் கூட்டமாக வசிக்காமல் பத்து முதல் இருபது பேர் வரையிலான மக்கள் தனித்தனியாக வசிப்பார்கள். உச்சி மலை மேலிருந்து பத்து கிலோ மீட்டர் நீளமுள்ள இம்மக்கள் வசிக்கும் இடத்தினை அடைய வேண்டுமானால் எந்த விதமான சாலை வசதியோ, எந்த விதமான போக்கு வரத்து வசதியோ இல்லை. அடர்ந்த வனத்தின் ஊடாக செல்லும் ஒற்றையடி பாதையில்தான் செல்ல வேண்டும். மலை உச்சியின் மீதுள்ள இடத்தில் வசிக்கும் சிலர் சில கழுதைகளை வைத்திருப்பார்கள்.

ஆனைப்பள்ளம் பகுதியில் இருளர்கள் எனும் பழங்குடியின மக்களில் சிலர் மட்டும் அந்த ஒற்றையடிப் பாதையின் வழியாக மேலே வந்து அங்கிருந்து குன்னூர் நகரை வந்தடைந்து தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டு மூட்டைகளாக கட்டியெடுத்து கொண்டு வந்து,

மலை உச்சியினை அடைந்து அங்குள்ள கழுதைகளின் மேலாக பாரம் கட்டி சுமக்க வைக்க அந்த கழுதைகளுடன் நடந்து வருவர். கல்வியும், சுகாதாரமும் அவசியமானவை என்பதை உணர்ந்த தமிழ்நாடு அரசு அடர்ந்த வனங்களுக்குள் வசிக்கும் பழங்குடியின மக்களுடைய குழந்தைகளுக்கான ஒரு உண்டு உறைவிடப் பள்ளியை அங்கே அமைத்துள்ளது.

ஒவ்வொரு திங்கள் கிழமை காலையில் மலை உச்சியில் வந்து இருக்கும் பழங்குடியின இளைஞர்கள் சிலருடன் உண்டு உறைவிட பள்ளிக்கூடத்திற்கான ஆசிரியர்கள், கிராம சுகாதார செவிலியர், சுகாதார ஆய்வாளர் என அனைவருமே மாணவர்களுக்கான புத்தகங்கள், எழுது பொருட்கள், மருத்துவ தேவையான மருந்து, மாத்திரைகளை மூட்டைகளாக கட்டி கழுதைகள் மீது ஏற்றிக் கொண்டு செல்வோம். உண்டு உறைவிட பள்ளியில் மாணவர்களுடன் தங்கி அவர்களுடன் உணவுண்டு அவர்களுக்கான பாடம் நடத்தும் ஆசிரியர்கள் வெள்ளிக் கிழமை மதியப் பொழுதில் பழங்குடியின இளைஞர்களுடன் ஒற்றையடிப் பாதை வழியாக மலை உச்சியை அடைந்து மீண்டும் திங்கள் கிழமை காலையில் வருவார்கள்.

பொது சுகாதாரத் துறையின் கிராம சுகாதார செவிலியரும், சுகாதார ஆய்வாளரும் துணை சுகாதார நிலையமாக உள்ள பழங்குடியின மக்கள் அமைத்து தந்த கட்டிடத்தில் தங்கி உண்டு உறைவிட பள்ளியில் தயாரிக்கப் படும் உணவை உண்டு, அடர்ந்த வனப்பகுதியில் ஆங்காங்கே வசிக்கும் பழங்குடியின மக்களுடைய மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்தல், கர்ப்பிணியாக உள்ள பெண்களுக்கான மருத்துவ பரி சோதனைகள், மருத்துவ சேவைகள் ஆகிவற்றை வழக்குவோம் . அங்குள்ள உண்டு உறைவிட பள்ளியில் உள்ள மாணவச் செல்வங்களுக்கு நலக் கல்வி வழங்குதல் ஆகியவற்றை பெரும் சவாலான முயற்சி. அவ்வப்போது குன்னூர் நகர பகுதிக்கு சென்று, மலை வாழ் மக்களுக்கான தேவைகளை வாங்கி வரும் இளைஞர்களே அடர்ந்த வனப்பகுதிக்குள் வாழும் பழங்குடியின மக்களுக்கான தகவல் பறிமாற்றம் செய்யும் கருவிகள். குன்னூர் நகரத்திற்கு வரும் அவர்கள்தான் நாட்டு நடப்புகளை மக்களுக்கு எடுத்து உரைப்பார்கள். ஆவலுடன் அவர்கள் கூறுவதை அங்குள்ள மலைவாழ் பழங்குடியின மக்கள் கேட்பார்கள். பேருந்து, சைக்கிள், இரு சக்கர வாகனம், அலை பேசிகள், செய்தி தாள்கள், நாளிதழ்கள், வார இதழ்கள் என எதுவுமே எட்டாத தூரத்தில் வசிக்கும் அந்த பழங்குடியின மாணவச் செல்வங்களுக்கும், மக்களுக்கும் நலக் கல்வியை வழங்கி அவர்களுடைய கவனத்திற்காக கொண்டு செல்லுதல் சவாலான செயலே . அங்குள்ள வீடுகளின் எதிரே உள்ள செடிகள் இங்குள்ள நகர்ப்புற பகுதிகளில் பிரியாணி இலை என கிடைக்கும் இலைகள். அங்குள்ள மரங்களில் இயல்பாக மிளகு கொடிகள் படர்ந்து கிடக்கும் . அந்த கொடிகளில் உள்ள மிளகுகளை சேகரித்து வீடுகளின் முன்பாக காயப்போட்டு வைத்திருப்பார்கள். மின்சார வசதி போன்ற எதுவுமில்லாத தனி உலகமென இருக்கும் அந்த ஆனைப்பள்ளம் துணை சுகாதார நிலையத்திற்குட்பட்ட பகுதி மக்களுக்கான மருத்துவ சேவைகளை வழங்கியதும், கழுதைகள் மீது பாரமேற்றி அங்குள்ள மக்களுக்கான ஒரு வரும் முன் காப்போம் மருத்துவ முகாமினை மருத்துவ குழுவினருடன் சென்று நடத்தியதும் இந்தியாவின் மருத்துவக் கட்டமைப்பில் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு பொது சுகாதாரத் துறையின் கீழாக சுகாதார ஆய்வாளராக பணி புரிவாத பெருமிதமாக உணர்ந்த நாட்கள் அவை .

நன்றி .

**வீ.சுரேஷ்,**
சுகாதார ஆய்வாளர் நிலை–1,
அரசு ஆரம்ப சுகாதார நிலையம்,
செம்மாணிச் செட்டிபாளையம்,
பொகலூர் வட்டாரம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.
அ.கு.எண்:– 641107.

## பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை – நூற்றாண்டு விழா
## பாரதியின் கவிதை வடிவில் – பொது சுகாதாரத் துறை பற்றிய ஓர் படைப்பு

அச்சமில்லை அச்சமில்லை
பொது சுகாதாரத்துறை இருக்கும் வரை
மானுடருக்கு – அச்சமென்ப தில்லையே!
புதுப் புது நோய்கள்யெல்லாம் நம்மீது
போர் தொடுத்த போதிலும்
தன் உயிரை துச்சமாக எண்ணி பணியாற்றும்
பொது சுகாதாரத்துறை உடன் இருக்கும் வரை
அச்சமில்லை அச்சமில்லை
மானிடருக்கு – அச்சமென்ப தில்லையே!
இரவு பகல் பாராமல்
இயற்கை சீற்றங்களை பொருட்படுத்தாமல் பணிபுரியும்
பொது சுகாதாரத்துறை ஊழியர்கள் உள்ளவரை
அச்சமில்லை அச்சமில்லை
மானிடருக்கு – அச்சமென்ப தில்லையே!
கொள்ளை நோய்கள் மானுடரை
கொத்து கொத்தாக கொன்றபோதும்
கொண்ட கொள்கை மாறாமல்
மக்களைக் காக்கும் பொது சுகாதாரத்துறை உள்ளவரை
அச்சமில்லை அச்சமில்லை
மானிடருக்கு – அச்சமென்ப தில்லையே!
தன்னுயிரை துய்த்து மண்ணுலகை காக்கும்
பொது சுகாதாரத்துறை வாழ்க! வளர்க!
பல்லாண்டு! பல்லாண்டு! பல நூற்றாண்டு!

**ச. அருண் கார்த்திக்,**
தட்டச்சர்,
பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு
மருந்துத் துறை, சென்னை –06.

# தாய் சேய் நலம் காப்போம்...

ஓர் உதிரத்தில் உருவான உன்னை சுமக்க
ஓர் உயிராய் போராட துணிந்தாள் உன் தாய்...
ஆருயிராய் உங்கள் இருவரையும் காக்க
பல்லாயிரம் கரங்களை கொடுக்கின்றோம்
எம் பொது சுகாதார துறை சேவகர்கள்
சேவையை தொடங்கினோம்...உம்
தொப்புள் கொடி உருவான நாளில் இருந்து
உம் பருவக் கொடி மலர்ந்து உதிரும் நாள் வரை
பச்சிளம் குழந்தைக்கு தாய்பால்தான் தங்கபுஷ்பம் என்றோம்
தடுக்க முடியாத நோயையும் தடுப்பூசி போட்டு தகர்த்தோம்
இரத்த சோகையை தடுத்தோம் தவழும் வயதிலேயே
இரும்புச்சத்தை புகட்டினோம்...
தீராத தொற்றினையும் தீர்க்க துணிந்தோம்
துயில் வோடு இணைந்தோம் துவண்டு போகமாட்டோம்
தாய்மையின் தாகத்தை தணிக்கும்
நீர் ஊற்றாய் எழுந்தோம்
கடல் அலையாய் எழுவோமே – தவிர
கரைந்து போக மாட்டோம்...
ஆரோக்கியமான தாய் சேயை உருவாக்குவோம்
ஓர் தாய் சேய் உயிரை கூட உதிர அனுமதிக்கமாட்டோம்
அற்பனமாய் சேவையை புரிய
உங்களுள் ஒருவராய் பயணிக்கின்றோம்.

ரா. ஞானசௌந்தரியா
E–Pudur நகர்புற செவிலியர்,
திருச்சிராப்பள்ளி.

# பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை

**முன்னுரை:**

பொது சுகாதாரத்துறை 1922 ஆம் ஆண்டு தமிழத்தில் தொடங்கப்பட்டது. கிராமப்புற மற்றும் நகர்புற மக்களுக்கு தாய், சேய் நல சேவைகள் மற்றும் தொற்றுநோய்களின் அபாயங்களிலிருந்து மக்களைப் பாதுகாத்து பொது சுகாதாரம் மற்றும் மக்களின் நல்வாழ்வைப் பேணுதல் இதன் முக்கிய அம்சமாகும்.

**பொருளுரை**

1. **இத்திட்டத்தின் சேவைகள்**

- தாய், சேய் நல சேவைகளான, கர்ப்பகால சேவைகள், மகப்பேறு ஸ்கேன் பரிசோதனை, சர்க்கரை அளவு மற்றும் உப்பின் அளவு பரிசோதனை இரும்புச்சத்து குறைபாடு கண்டறிதல், தாய் சேய் இருவருக்குமான தடுப்பூசி பணிகள், 24x 7 மணிநேர கர்ப்ப கால சேவைகள், இரத்தம் ஏற்றுதல், உயர் சிகிச்சைக்கான பரிந்துரைகள் போன்ற அடிப்படை சேவைகள் இலவசமாக அளிக்கப்படுகின்றன.
- வெளி நோயாளிகளுக்கான சிகிச்சை, உள் நோயாளிகளுக்கான சிகிச்சை அதிக கவனம் தேவைப்படும் கர்ப்பிணிகளுக்கு சிகிச்சை மற்றும் உயர் மருத்துவ நிலையங்களுக்கு பரிந்துரை.
- அவசர கால ஊர்தி மற்றும் 108, 104 போன்ற சேவைகள் 24 மணிநேரமும் வழங்கப்படுகின்றன.
- தொற்றும் நோய்களுக்கான சிகிச்சைகள்
- டெங்கு, சிக்கன்குனியா, கோவிட்–19 போன்ற தொற்று நோய்கள் மற்றும் வயிற்றுப்போக்கு, தட்டம்மை, அம்மை, நாய்கடி, பாம்புகடி உள்ளிட்ட விஷகடிகளுக்கான சிகிச்சைகள் மற்றும் நோய் பரவலைக் கட்டுப்படுத்தும் நடிவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- தொற்றா நோய்களுக்கான சிகிச்சைகள்

  30 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கம், நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் வியாதிகளுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. 30 வயதிற்கு மேம்பட்ட அனைத்து மகளிர்க்கும் கருப்பை வாய் புற்றுநோய் மற்றும் மார்பக புற்றுநோய்களுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தேவைப்படுபவர்களுக்கு உயர் மருத்துவ நிலையங்களுக்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

- இவை அனைத்தும் ஏழை, எளிய மக்களுக்கு அவரவர்களின் வாழிடங்களிலேயே வழங்கப்படுகிறது.

சிறப்புத் திட்டங்கள்

- டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம் அரசாணை எண் : 118 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை நாள் : 02.04.2018 –ன் படி நிதியுதவி தொகை ரூ. 12,000 லிருந்து ரூ. 18,000 மாக உயர்த்தப்பட்டுள்ளது.
- தாய் குழந்தைகள் நலப்பெட்டகம்
- தாய் ஊட்டச்சத்து பெட்டகம்
- பிக்மி இணையதள சேவைகள்
- மகப்பேறு காலத்தில் கர்ப்பிணிகளுக்கு உணவு வழங்கும் திட்டம்
- பள்ளியில் பயிலும், பயிலா வளரிளம் பெண்கள் மற்றும் பிரசவித்த தாய்மார்களுக்கு சானிட்டரி நாப்கின்கள் வழங்கும் திட்டம்.
- பிறப்பு – இறப்பு பதிவுகள்
- தேசிய போலியோ சொட்டு மருந்து முகாம்கள்
- ராஷ்ட்ரிய பால் ஸ்வஸ்த்ய கார்யகரம் (RBSK)
- கொசுக்கள் பரவும் நோய்களுக்கான ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்
- டெங்கு காய்ச்சல், மலேரியா காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள்
- புற்றுநோய், நீரிழிவு, இதய நோய்கள் மற்றும் பக்கவாதம் கட்டுப்பாடு தேசியதிட்டம்.
- வாராந்திர இரும்புச் சத்து மாத்திரை வழங்கும் திட்டம்
- தேசிய குடற்புழு நீக்கம்
- வைட்டமின் A திரவம் வழங்குதல்
- தேசிய தடுப்பூசி திட்டம்
- வளர்இளம் பருவத்தினர் நலத்திட்டமையம்
- நலக்கல்வி

உஷாராணி

## இயன்முறை மருத்துவம் ( பிசியோதெரபி )

இத்தனை நாளாய் எங்கிருந்தாய் ?

பொது சுகாதார துறைக்குள் இடம்
பிடிக்க எத்தனை ஆண்டுகளாய்
காத்து கிடந்தாயோ?

தாமதமாக வந்தாலும் தனித்துவம்
பெறவே தவம் கிடந்தாயோ ?

ஒருவேளை ,

மகத்தான இடம் வேண்டி
மக்களைத் தேடி மருத்துவம்
திட்டத்திற்காக மறைந்து கிடந்தாயோ?

இயங்காத உறுப்புகளை இயக்க
வைக்கும் இயன்முறை மருத்துவமே !

நீ இங்கு வந்ததால் ,

பக்கவாதம், தண்டு வடத்தால்
பாதிக்கப்பட்டோர் இடம் விட்டு இடம்
நகர்கின்றார்கள் .

மின்னியல் சிகிச்சையையும்,
இயக்க பயிற்சியையும் இரு
கண்களாய் கொண்ட இயன்முறை
மருத்துவமே !

நீ இங்கு வந்ததால் ,

மூளை முடக்கு வாதத்தால்
முடங்கி கிடந்த குழந்தைகளும்
முன்னேற்றம் காண்கிறார்கள் .

பிறவி ஊனத்தையும்
உடைத்தெறியும் இயன்முறை
மருத்துவமே !

நீ இங்கு வந்ததால் ,

நடுக்கு வாதத்தால் சமநிலை
இழந்தவர்கள் நல் நிலை கண்டார்கள்.

தீராத மூட்டு வலிகளையும் தீர்க்க
வந்த இயன்முறை மருத்துவமே !

நீ இங்கு வந்ததால் ,

தசைச்சிதைவு நோயாளிகளும்
தன்னம்பிக்கை பெறுகிறார்கள் .

எலும்பு முறிவு சிகிச்சைக்கு பின்
எழும்பி நடக்க வைக்கும் இயன்முறை
மருத்துவமே !

நீ இங்கு வந்ததால் ,

நோயாளர்களும் இயக்கம்
காண்கிறார்கள்.

பொது சுகாதாரத் துறையில்

இயன்முறை மருத்துவமும்

இன்றியமையாத மருத்துவமாய் ,

இயன்முறை மருத்துவர்களும்

நம்பிக்கை நாயகர்களாய் மிளிரும்
நாள் வெகுவிரைவில் வரும் .

இயன்முறை மருத்துவர்
**சுரேஷ் சுப்பையா**
செல்லம்பட்டி வட்டார
ஆரம்ப சுகாதார நிலையம்
மதுரை மாவட்டம்

# டெங்கு ஆத்திச்சூடி

அகற்றிடு அகற்றிடு மழைப் பெய்தவுடன் உன் வீட்டின் வெளிப்புறத்தில் தேங்கியுள்ள தண்ணீரை அகற்றிடு.
ஆய்வுசெய் ஆய்வுசெய் ! வாரம் இருமுறை குளிர்சாதனப் பெட்டியின் பின்புறம் உள்ள தண்ணீர் தட்டை ஆய்வு செய்.
இயம்பிடு ! இயம்பிடு ! டெங்கு காய்ச்சல் பற்றிய சுகாதார விழிப்புணர்வை அனைவரிடமும் இயம்பிடு.
ஈவு இரக்கம் பார்க்காது ஈவு இரக்கம் பார்க்காது இந்த டெங்கு கொசு மிக கவனமாக சுத்தமாக வைத்திரு உன் சுற்றுப்புறத்தை
உஷாராயிரு உஷாராயிரு உரல், ஆட்டுக்கல், தேங்காய் ஓடு, டயரில் தண்ணீர் தேங்கா வண்ணம் உஷாராயிரு !
ஊரை எல்லாம் தண்ணீர் தேங்கா வண்ணம் சுத்தமாக வைத்திரு
எதிர்த்திடு எதிர்த்திடு ஒருமுறை பயன்படுத்தி எரியக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களை எதிர்த்திடு
ஏமாற்றிவிடும் ஏமாற்றிவிடும் சற்று அலட்சியமாக இருந்தால் நம் உயிரையும் டெங்கு வைரஸ் பாதிப்பு.
ஐயம்கொள் ஐயம்கொள் டெங்கு வைரஸ் காய்ச்சல் பற்றி ஐயம்கொள்.
ஒழித்திடு ஒழித்திடு டெங்கு காய்ச்சலை ஒழித்திடு.
ஓடிவிடும் ஓடிவிடும் டெங்கு கொசு நம் நாட்டை விட்டே சுகாதார விழிப்புணர்வு ஒவ்வொரு மனிதனின் மனதில் பிறக்குமாயின்
ஔடதம் இல்லை டெங்கு காய்ச்சலுக்கு
அஃது தான் டெங்கு இல்லா நம் இந்தியத் தாய்த் திரு நாடு.

வந்தே மாதரம் ஜெய்ஹிந்த்

**கு.சுரேஷ்குமார்**
சுகாதார ஆய்வாளர்
மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப
சுகாதார நிலையம், வடலூர்

# "அகவை நூறு"

அகிலத்து மக்களுக்கு "தன்சுத்தம்" "புறத்தூய்மை" " வருமுன் காப்போம்"
பேணுவதன் அவசியத்தை முன்மொழியும் முதன்மைத் துறை

ஆழி பேரலைப் போல அவதரித்து ஆர்ப்பரித்த "கொரோனா"
அசுரனை வென்ற ஆளுமைத் துறைகளின் முத்தாய்ப்புத் துறை

இடர்பாடுகளையும் இன்னல்களையும் இயல்பாக கடந்து
இன்முகத்துடன் "இன்னுயிர் காக்கும்" மகத்துவம் புரியும் மகத்தான துறை

ஈகை உள்ளத்தோடு ஈன்றெடுத்த "தாய்க்கும் சேய்க்கும் "
நிதியுதவி, ஊழியங்கள் புரிந்து உயிர்காக்கும் உன்னதத் துறை

உலகத்தில் உருவாகும் தொற்றா (ம) தொற்று நோய்களின்
வேர்களை வேரறுத்து " நோய் வரும் முன் காக்கும் "விந்தை துறை

ஊரடங்கு! தனித்திரு ! விழித்திரு ! உன்னதத்தினை உலகிற்கு
உணர்த்திய ஓய்வறியா தொடர் "ஓட்டப்பந்தய வீரர்களின் துறை"

எழுச்சி மிகு திட்டங்கள் நோயற்ற வாழ்வு, மாணாக்கர்களுக்கு
"கண்ணொளி சேவைகளை" தாயன்போடு வழங்கும் தனித்துவமான துறை

ஏற்றமிகு வாழ்க்கையில் "போலியோ","மலேரியா ", "மகப்பேறு மரணங்கள்"
நிகழாவண்ணம் தடுக்கும் நோய்த் தடுப்பு மருந்து துறை

ஐயமின்றி பாகுபாடின்றி புவிசார் புரிதல்களுடன் மக்களை "பேரிடர் காலங்களில்"
பேணிக்காக்கும் பேராற்றல் கொண்ட புதுமைத்துறை

"ஒழுக்கம்", "அறவழி வாழ்க்கை" குடும்ப கட்டுப்பாடு, அயோடின் குறைபாடு,
குறித்த நலக்கல்வியை நயமுடன் போதிக்கும் துறை

ஓசையின்றி "வளரிளம் பெண்களை" கரைசேர்க்கும் ஓடங்களாகவும்
தடுப்பூசிகளை பேராயுதங்களாகவும் கொண்ட மக்கள் நல்வாழ்வுத்துறை

ஔடதம் தவிர்த்து ஔதாரியமாய் " மக்களைத் தேடி மருத்துவம் "
ஔடதங்கள், மருத்துவம், மனித நேயம் மீட்டெடுக்கும் துறை

இஃதே இனிதே "அகவை நூறு கடக்கும் துறையின்" தியாகிகளின்
தொடர் தியாகங்களால் சுவாசிக்கிறது அகிலமே !,..... அகிலமே !!,.......

**கோ.செந்தில்குமார்,**
துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலகம், தருமபுரி.

# நூற்றாண்டு விழா

நூற்றாண்டு விழா...
இது நூற்றாண்டு விழா...
பொது சுகாதார துறையின்...
நூற்றாண்டு விழா...
மனநோயோ...
உடல்நோயோ...
உதிரம் கொட்டி...
உணர்வுகள் மறித்து...
உயிர் பிரியும்...
வேலையிலும்...
உயிரை உடலிடம்...
மீண்டும்...
கொடுக்கும்...
மருத்துவர் தம்...
நூற்றாண்டு விழா...
தன்னை மறந்து...
பிறர் நலம்காக்க...
நேரம் மறந்து...
புன்னகையில்...
சிரமங்கள் மறைத்து...
உயிரைகாக்கும் உன்னத பணியில்...
உழைக்கும் மருத்துவர்கள், செவிலியர்கள்,
சுகாதாரதுறை பணியாளர்களின்...
நூற்றாண்டு விழா...

**V. SARMILA KASI**
Ist year student, ANM பயிற்சி பள்ளி
சமயநல்லூர், மதுரை.

## காலங்கள் கடந்து போகுதே
## இத்துறையில் பணிகள் மட்டும் கூடிப் போகுதே

தடுப்பூசி போடுவதும்
தாய் சேய் காப்பதும்
தேசிய திட்டங்கள்
செயல்படுத்தி முடிப்பதும்
சுகாதார ஊழியர்கள் தான்
இத்துறையின் அஸ்திவாரம்
என்று முழங்குவோம்!

சிக்கன் குனியா வந்தபோதும்
சுனாமி வந்த போதும்
கொரோனா வந்த போதும்
உழைத்த எங்கள் ஊழியர்கள்
சொத்து என்று முழங்கிடுவோமே!
இத்துறைக்கு ஜீவன் என்று
முழங்கிடுவோமே!

கரு முதல் காப்பதும்
கல்லறை வரை சேர்ப்பதும்
காலநேரம் பார்ப்பதில்லை
தன்னலம் பேணுவதில்லை
ஓடி ஓடி உழைக்கிறோமே!
கொள்ளை நோய்களை
ஓட ஓட விரட்டினோமே!

உயிர்காக்கும் துறையிலே
உழைக்கும் எங்கள் ஊழியர்கள்
உப்பைப் போல் மாறியே
மனு குலத்தைக் காப்பதால்
சுகாதாரத்துறை வாழ்கவே!
வாழ்க வாழ்க சுகாதாரத் துறை வாழ்கவே!
நூற்றாண்டு காணும் சுகாதாரத் துறை வாழ்கவே!

ஆட்சியின் சிறப்பு ஒன்று
மக்களைத் தேடி மருத்துவம்
மாவட்ட சிறப்பு ஒன்று
தங்கத் தந்தைத் திட்டமே
வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே!
நூற்றாண்டு காணும்
சுகாதாரத் துறை வாழ்கவே
மாவட்ட சுகாதாரத் துறை வாழ்கவே!

**வே. சாந்தி**
ப.சு.செ PHC – ஓலப்பாளையம்

# "மக்களை காக்கும் சுகாதாரத்துறை"

"படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழிலின் அதிபதியே"

**படைத்தல்:**

நான் கருவில் உதித்தபோது பொதுசுகாதார துறை என்னும் என் உருவின் நிழல் நான் வளர வளர என்னுடனே பயணித்து நான் கருவில் இருக்கும்பொழுதும் சரி நான் பிறந்த பின்பும் சரி எனக்கு தேவையான ஊட்டசத்துக்கள் முதல் தடுப்பு மருந்து மற்றும் இன்னும் பிற வடிவில் எனக்கு தெரியாமலேயே என் பின்னே சுற்றி இன்று என்னை இப்புவியிலே நோய்தொற்று இல்லா ஊட்டசத்து மிகுந்த மானிடனாக வளர்த்தாய்.

**காத்தல்:**

நான் நோயுற்றால் என்னை நீ மருத்துவராய் வந்து காத்தாய்.
அன்னையின் மடி போல் செவிலியராய் வந்து என்னை இளைப்பாற்றினாய்.
எனக்கு தேவையான பரிசோதனைகள் அனைத்தும்
சிறந்த நுட்புநராய் வந்து கண்டறிந்தாய்.
வேண்டிய மருந்துகள் அனைத்தும் நல்ல மருந்தாளுநராய் வந்து தந்தாய்.
வான் கூட மழைப்பொழிவை மறக்கலாம் ஆனால் நீ மழையில் நிலவேம்பாய் வந்தாய்.
காற்று கூட தென்றலடிக்க மறக்கலாம் ஆனால நீ என் சுவாச உயிமூச்சு காற்று (O2) கொடுத்தாய்.
செந்தனல் கூட தன் தன்மையை மறக்கலாம் ஆனால் நீ வெயிலில் ஊட்டசத்து நீராக வந்து என் சோர்வை போக்கினாய்.
காலநிலை கூட மாறலாம் ஆனால் நீ ஒவ்வொரு காலநிலைக்கும் முன்கூட்டியே எனக்கு காவலாய் நின்றாய்.
தாய்க்கு தாயாகவும் சேய்க்கு சேயாகவும் வந்து தாய்சேய் நலம் காத்தாய்.;
முதலுதவிக்கு 108 ஆக வந்தாய்.
நோயை முதல் நிலையிலேயே கண்டறிய சிறந்த ஆய்வகங்களை உருவாக்கினாய்.;

**அழித்தல்:**

மலேரியா பைலேரியா கொசுவை அழிக்க கம்பூசியாவாக வந்தாய்.
டெங்கு கொசுக்களை அழிக்க அபைட்டாக வந்தாய.;
கொரோனாவை விரட்ட முக கவசமாய் வந்தாய்.
ரேபிஸ் அழிக்க ARV ஆக வந்தாய்.
ஆனைத்துவிதமான நோய்களுக்கும் நீ சிறந்த மருந்தாக வந்து மக்களை காத்துநின்றாய்.
100 ஆண்டுகள் அல்ல இன்னும் பலநூறு ஆண்டுகள் சுகாதார துறை சேவைகள் மக்களுக்கு கிடைக்க வாழ்த்துக்கள்.

இப்படிக்கு

**தெ.நாராயணன்,** BSc, CMLT,
ஆய்வுக்கூட நுட்புநர் நிலை – III,
அரசு ஆரம்ப சுகாதார நிலையம்,
மாப்பிள்ளையுரணி, தூத்துக்குடி – மாவட்டம்.
9994878449

## சுகாதார ஆய்வாளர் ஆக இருப்பதில் பெருமையே:

நான் ஒரு சுகாதார ஆய்வாளராக நம்முடைய பொது சுகாதார துறையில் பணிபுரிவதில் பெருமை கொள்கிறேன். அதுவும் நூற்றாண்டு கொண்டாடும் இவ்வேளையில் என்னுடைய பங்கும் இருப்பதில் தன்னிகரற்ற மகிழ்ச்சியே .

ஒரு மருத்துவர் செவிலியர் ஆக இருந்தால் மட்டும் மக்களுக்கு சேவை செய்ய முடியும் அவர்களின் உயிரை காப்பாற்ற முடியும் என்றில்லாமல் ஒரு சுகாதார ஆய்வாளராக நோய்கள் வரும் முன் காக்கவும் வந்தால் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எங்களின் தீவிர நடவடிக்கை எடுப்பதின் மூலமாகவும் அயராது இரவு பகலாக பணி செய்து மக்களின் உயிரை காப்பாற்றி அவர்களுக்கு நோய்கள் வரும் முன் காப்பதற்கு விழிப்புணர்வு கொடுக்கவும் இரவு பகலாக வேலை செய்து வருகிறோம் இந்த நூற்றாண்டு கொண்டாடும் வேளையில் நமது பொது சுகாதாரத் துறையில் இருந்து மக்களுக்கு சேவை செய்வதில் மிகப் பெருமை கொள்கிறோம்.

" வாழ்க பொது சுகாதாரம் !

**வளர்க பொது சுகாதாரத்துறை சேவை"**

நன்றி,

இப்படிக்கு,
**ஜா. நித்யானந்த சுந்தரி,**
சுகாதார ஆய்வாளர்,
அரசு ஆரம்ப சுகாதார நிலையம்,
அலமாதி, சோழவரம் வட்டாரம்

# கிராமங்களும் , கண் நோய்களும்

கண் நோய்களில் சில கண் நோய்களால் அன்றாட வாழ்க்கையை பாதிக்கும் நிலை இருந்தால் மட்டுமே மருத்துவ மனையை நாடுகிறார்கள். குறிப்பாக கிராமங்களில் நோய் ஆபத்தான நிலையை எட்டிய பிறகே மருத்துவமனையை நாடி வருகின்றனர் . கண் நோய்களை பொருத்தவரை கண் சிவந்து விட்டால் போதும் கோழிக்கால் இரத்தம், எண்ணெய், சீரகம், நந்தியாவட்ட பூவை அரைத்து போடுதல், நாமக்கட்டி போடுதல் இப்படி அவர்கள் மருத்துவம் நீள்வதோடு நில்லாமல் கண்ணில் கல் விழுந்ததாக கருதி கிராமங்களில் கண் வைத்தியர், சாமியார்கள் தலைக்குமேல் கையை வைத்து லிங்கமும், தங்கச்செயினும், தாயத்தும், எடுப்பது போல் கண்களில் நாக்கை விட்டு சுழற்றி விரல் நகக்கண்களில் கடுகு, மிளகு அமாவு கல்லை ஏற்கனவே வைத்துக்கொண்டு கண்ணில் இருந்து எடுத்தது போல் காண்பிப்பார்கள். அவ்வாறு எடுத்த சரியாக ஒரு வாரத்தில் கண் வலியுடன் புண்ணாகிய நிலையில் மருத்துவமனையை நாடி வருகின்றனர். இந்நிகழ்வுகள் கிராமபுறத்தில் கல்லிப்பாலும், நெல்மணியும், பெண் சிசு மரணத்திற்கு பயன்படுத்தியதை பாரதிராஜாவின் "கருத்தம்மா" திரைகாவிய நிகழ்வு சுட்டுவது போல் இவ்விஞ்ஞான உலகில் கண் நோய்களிலும் மூடப்பழக்கம் வீறு நடைபோடுவதற்கு "போதிய மருந்துவ விழிப்புணர்வு இல்லாமையும், மனித வளத்திற்கேற்ற மருத்துவ வசதி கிட்ட முடியாமையே! குறிப்பாக 1972 ஆண்டுகளில் கண்பார்வை குறைபாடு மற்றும் பார்வை இழப்பின் தன்மையை அறிந்த இந்திய அரசு கிராமப்புற கண்நோய்கள் மற்றும் கண் தொடர்பான பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் அளித்து """"தேசிய பார்வை இழப்பு தடுப்பு திட்டத்தை இந்திய பாராளுமன்றத்தில் நிறைவேற்றி கிராமப்புற பார்வை பாதுகாப்பிற்கு முக்கிய அரணாக திகழ்கிறது.

1988ம் ஆண்டு ஆண்டுகளில் கிராமங்களில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் ஊட்டசத்து மையத்திற்கு குழந்தைகளின் கண்களை பரிசோதிக்க சென்ற போது உயிர்சத்து "ஏ" பற்றாக்குறை கண் நோய்கள் பாதித்து இருந்ததை அரசின் சீரிய முயற்சியால் தற்போது முற்றிலும் முறியடிக்கப்பட்டதை நாம் அறிவோம். இதற்கு மக்களின் வாழ்க்கை முறையின் மாற்றத்தினால் ஏற்பட்ட உணவுமுறை மாற்றமும் பிரசவ கால தாய்மார்களுக்கு கிடைக்கும் ஊட்டச்சத்து மாத்திரைகளும், வைட்டமின் ஏ திரவம் வழங்குவதும், தட்டம்மை தடுப்பூசி போடுவதும் தகுந்த விழிப்புணர்வு ஆலோசனைகளை அளிப்பது தான் முக்கிய காரணம்.

கண் புரை அறுவை சிகிச்சைக்கு பின் கண்ணில் பொருத்தப்படும் இண்ட்ரா ஆக்குலர் லென்ஸ் 1949ம் ஆண்டு இரண்டாவது உலகபோருக்கு பயன்படுத்திய விமானத்தின் உடைந்த பகுதியின் சிறு துகள் விமானியின் கண்ணில் புகுந்து நீண்ட நாட்களாகியும் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என ஆய்வு முடிவுகள் வெளிவந்த பிறகு அதே வகை ""பாலிமீத்தைல் மீத்தாகிரிலேட்"" எனும் மூலப்பொருளால் லென்ஸ் தயாரிக்கப்பட்டு முதல் முதலில் லண்டன் மூர்பீல்டு மருத்துவமனையில் 45 வயது பெண்மணிக்கு 1049 நவம்பர் 29ல் பொருத்தப்பட்ட பிறகு, 1991ல் பிரபலம் அடைந்த இந்த அறுவை சிகிச்சை 1992, 93 ல் பரவலாகப்பட்டாலும் 2003–2005ம் ஆண்டுகளில் தான் சாமான்ய மக்களை சென்று அடைந்தது. அதே போல் 1980ம் ஆண்டுகளில் பயன்பாட்டிற்கு வந்த "லேசிக் லேசர்" சிகிச்சை. தூரப்பார்வை குறைவுக்கு தீர்வாக வந்துள்ளது.

கண்நோய்களும், பார்வை இழப்பும் கிராமங்களில்தான் அதிக அளவு ஏற்படுகிறது. நகர் புறத்தில் விபத்து போன்றவற்றாலும் பார்வையை இழக்கிறார்கள். கிராம மக்களின் நிலை எதிர்மறையாக உள்ளது. கண்களில் ஏதேனும் நோய்கள் வந்தால், கண் மருத்துவரை அனுகும் எண்ணம் முதலில் வருவதில்லை. வீட்டு வைத்தியம். நாட்டு வைத்தியமும் தோற்றுப்போய் முற்றிய நிலையில் நகர்புற அரசு மருத்துவமனையை குணப்படுத்த முடியாத நிலையில் நாடி

வருகிறார்கள். தற்போது சற்று ஆறுதலாக கண் சிவந்து போதல், கண் வலி தூசி விழுதல், தெளிவற்ற பார்வை,அடிபடுதல், குச்சி குத்துதல், ரசாயன விபத்து, வெடி விபத்து போன்ற அவசர தேவைக்கும், முதலுதவிக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள கண் மருத்துவ உதவியாளர்களை நாடி வருகின்றனர்.

ஒருவர் இரு கண்களும் குணப்படுத்த முடியாத முற்றிலும் பார்வை இழப்பு நபராக இருப்பாரேயானால் அவர்களை "குருடன்" என ஒதுக்கப்படுகிறார்கள் என்பதனை அப்துல்கலாம் அய்யா கோவையில் ஒரு தனியார் கண் மருத்துவமனைக்கு சென்றபோது தடுமாற்றத்துடன் நடந்து வந்த ஒரு முதியவரை பார்த்து அய்யா உங்களுக்கு என்ன உதவி வேண்டும் என கேட்டவுடன் அய்யா என் மகன் என்னைப்பார்த்து "டே" "குருட்டுப்பயலே" என ஒருமையில் அழைக்கும்போது மனசு நொறுங்கிப்போகிறது. அப்படி அழைக்காமலிருக்க எனக்கு கண் பார்வை கிடைக்க வழி செய்வீர்களானால் பார்வை தெரிந்தவுடன் முதலில் உங்கள் முகத்தில் முழிப்பேன் என கூறியதை கேட்ட கலாம் அய்யா வேதனையோடு இந்தியா 2020 படைப்பில் பதித்துள்ளார். இதே போல் என் பணி நேரத்தில் ஒரு கிராமத்தில் இரண்டு கண்களும் புரை முற்றி நடமாட வழியின்றி முடங்கி கிடந்த முதியவருக்கு அறுவை சிகிச்சைக்கு ஆலோசனை அளிக்கும்போது, தன் மகன் குறுக்கிட்டு இந்த "குருட்டுப்பயலுக்கு" கண் தெரிந்து என்ன செய்யப்போகிறான்? என என்னிடம் கேட்சு இப்படி தாங்களுக்கு நேர்ந்தால் என்ன செய்வீர்? என நான் கேட்டவுடன் வரும்போது பார்க்கலாம். உன் வேலையைப் பார் என கொக்கரித்தார்.

இன்றைய நிலையில் கிராமங்களின் ஒருவர் கூலி வேலைக்கு சென்றால் சுமார் 1 நாளுக்கு ரூ.300/– கூலி எனில் விடுமுறையை தவிர்ந்து மாதம் ரூ.7500/–ம் ஆண்டுக்கு கணக்கிடும்போது ரூ.90,000/–மாகவும். இவ்வாறே ஒருவர் சுமார் 40 ஆண்டுகள் வேலை செய்தால் ரூ.36 லட்சமாகவும், ஒருவர் பார்வை இழப்பதால் வருவாய் இழக்கிறார்கள். இது இப்படி இருக்க பார்வையற்றோரின் வாழ்வாதார அரசு உதவி தொகையும், பார்வையற்றவரின் உதவியாளரின் கணிசமான வருவாய் இழப்பும் கணக்கிடும் போது சுமார் 40 லட்சம் ரூபாய் தனிநபர் ஆயுள்கால இழப்பாக ஏற்படுகிறது. இவ்விகிதம் இந்திய நாட்டில் முற்றிலும் பார்வையற்றவர்கள் சுமார் 1 1/2 கோடி பேரின் வருமானத்தை கணக்கிடும்போது சராசரியாக 60 லட்சம் கோடி வருவாய் பெற முடியாமல் போகிறது. இதனால் அரசுக்கு கிடைக்கும் மறைமுக வருவாய் சுமார் 20 லட்சம் கோடி இழப்பாகிறது.

தற்போது விழிப்புணர்வு இன்மையால் கிராமங்களில் பார்வை பரிபோவதை தடுக்கவும். மேம்படுத்தவும், மனித வளத்திற்கேற்றவாறு கிராமப்புறங்களில் கண் மருத்துவ கட்டமைப்புகளை மேம்படுத்தி கண் நோய்களுக்கு தீவிர விழிப்புணர்வு அளித்து கிராமங்களில் கண்டுகொள்ளாத கண் இமை புண்கள், கண் இமை முடிகள், கண்ணில் குத்துதல், ஒழுங்கற்ற சுண்பட்டைகள், கண் இமைகட்டிகள். கண்ணீர்பை அடைப்பால் கண்ணில் நீர் வழிதல், கண்ணில் சதைவளர்தல், கண் ஒவ்வாமை நோய்கள், மாறுகண், கண் கண்ணாடியால் தீர்க்கப்படும் பார்வை குறைவு, கண் நீர் அழுத்த நோய், சர்க்கரை நோய் மற்றும் உயர் இரத்த அழுத்த நோய்களால் ஏற்படும் விழித்திரை பாதிப்பு போன்ற நோய்களாலும், கண் புரை அறுவை சிகிச்சைக்கு முற்றிய நிலைக்கு காதிருந்தலுக்கு பல மாற்றாக சொட்டு மருந்து மூலமாக தீர்வு காணும் சில நாடுகளின் ஆராய்ச்சிகளுக்கு ஊக்குவிப்பதன் மூலமும் பார்வை பறிபோவதை தடுப்பதன் மூலமும், கிராமங்களில் சிகிச்சைக்கு வழியின்றி பார்வை குறைவுடன் வாழும் சுமார் 5 கோடி இந்திய மக்களிடம் சென்று இந்திய அரசின் பார்வை 2020 (ஏஐ) ன் திட்டப்படி அனைவருக்கும் பார்வை கதவை திறப்போம்.

**இரா. தங்கராஜ்** M.Sc, DOA., COLL,
அரசு கண் மருத்துவ உதவியாளர்,
அரசு ஆரம்ப சுகாதார நிலையம், கேளம்பாக்கம்.

## தாய் சேய் நலப்பணியில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியதில் கிராம சுகாதார செவிலியரின் பங்கு

## கிராம சுகாதார செவிலியரின் சாதனைகளும் எதிர்கொண்ட சவால்களும்!

**கிராம சுகாதார செவிலியரின் சாதனைகளும் எதிர்கொண்ட சவால்களும்!**

முற்காலத்தில் கிராமப்புறங்களில் உரிய போக்குவரத்து வசதி கிடையாது. சமூக, பொருளாதார, கல்வி மற்றும் பழக்க வழக்கங்களில் மிகவும் பின்தங்கிய மூடநம்பிக்கைகளும் தவறான சுகாதார நடைமுறைகளும் நிரம்பி இருந்த சூழல், தட்டம்மை, காலரா, வயிற்றுப்போக்கு, அம்மை அதிகம் இருந்த காலம், போக்குவரத்து வசதியோடு தகவல் தொடர்புக்கு லேண்ட்லைன், ஃபோன் வசதி கூட ஆரம்ப சுகாதார நிலையத்திலோ கிராமங்களிலோ இல்லாத சூழல். பல கிலோமீட்டர் தூரம் ஒரு நாளைக்கு மூன்று முதல் நான்கு ஐந்து கிராமங்கள் நடந்து சென்று பணியாற்றும் நிலை. இந்த சூழலில் அதிக குழந்தைகள் பயிற்சி பெறாத தாதிகள் வீடுகளில் பிரசவம் பார்த்தல், பெண் சிசுக்கொலை, விட்டமின் ஏ குறைபாடு உள்ளக் குழந்தைகள், எடை குறைவான மராஸ்மஸ் குழந்தைகள் நிறைந்த கிராமங்களாக இருந்தது.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மட்டுமே டிடி தடுப்பூசி. குழந்தைகளுக்கான தடுப்பூசி 1985 ஆம் ஆண்டு தான் நாடு தழுவிய தடுப்பூசி திட்டமாக யுனிவர்சல் இம்யூனைசேஷன் ப்ரோக்ராம் நடைமுறைப்படுத்தப்பட்டது எனவே தெருக்கள்தோறும் போலியாவால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் இருந்தனர்.

கிராம சுகாதார செவிலியர்கள் எதிர்கொண்ட சவால்கள் போக்குவரத்து வசதி இல்லாத தகவல் தொடர்பு சாதனங்கள் இல்லாத நிலையில் பல குக் கிராமங்களுக்கும் பல கிலோமீட்டர் நடந்து செல்ல வேண்டிய நிலை. மக்களின் மூடநம்பிக்கையை போக்குவதிலும் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதிலும் கடும் சவாலாக இருந்தது. குறிப்பாக பயிற்சி பெறாத்த தாதியர் பிரசவத்தினை ஒழிப்பதிலும், குடும்ப நலக் கட்டுப்பாடுத் திட்டம், தடுப்பூசித் திட்டத்தை அமுல்படுத்துவதிலும் குழந்தைகளுக்கு எடை எடுத்தல் ஆகியவற்றில் வெற்றி பெறக்கடுமையான எதிர்ப்புகள், போராட்டம், அச்சுறுத்தல்களை சந்திக்க வேண்டி இருந்தது. அனைத்தையும் மன உறுதியுடனும் அர்ப்பணிப்பு உணர்வுடனும் எதிர்கொண்டு வெற்றி பெற்றோம் என்பதில் பெருமிதம் கொள்கின்றோம்.

**குடும்ப நலத்திட்டம் மாபெரும் வெற்றி**

குடும்ப நலப்பணியில் குறியீட்டு முறையினை ரத்து செய்துவிட்டு கிராம சுகாதார செவிலியர்கள் மட்டுமே இப்பணியில் ஈடுபடுத்தி மபெரும் வெற்றி பெற்று பிறப்பு சதவிகிதம் குறைந்த்து,

**தடுப்பூசி திட்டம் மாபெரும் வெற்றி**

1984–ம் ஆண்டில் டி பி டி யில் ஆரம்பித்து 1985 ஆம் ஆண்டு நாடு தழுவிய தடுப்பூசி

திட்டம் யுனிவர்சல் இம்யூனைசேஷன் ப்ரோக்ராம் (Immunization Programme) அமல்படுத்திய பின்பு மக்களிடம் கொண்டு சேர்ப்பது மிகவும் சவாலாக இருந்தது. தடுப்பூசி போடுவதில் இடைநிற்றலை (Drop outs) குறைத்து Fully Immunization ஆக மாற்றுவதில் வெற்றி பெற்றோம். புதன்கிழமை தோறும் தடுப்பூசி என்ற நடைமுறை மக்களிடம் நன்கு போய் சேர்ந்தது. கிராம சுகாதார செவிலியரின் மீது தாய்மார்களுக்கு ஏற்பட்ட நம்பகத்தன்மை காரணமாகவும் அவர்களின் அர்ப்பணிப்பினாலும் இந்தியாவிலேயே தமிழகம் தடுப்பூசி திட்டத்தில் முதன்மையான மாநிலமாக திகழ்ந்தது.

**தாய் சேய் மரண விகிதம் மற்றும் பெண் சிசு கருக்கொலை குறைப்பில் கிராம சுகாதார செவிலியரின் பங்கு.**

கர்ப்பிணி தாய் கவனிப்பு, பிரசவம் பார்த்தல், தடுப்பூசி மருந்துகள் வழங்குதல், சத்து மாத்திரைகள் வழங்குதல், சுகாதார மற்றும் சத்துணவு கல்வி வழங்குவதன் மூலம் கிராம சுகாதார செவிலியருக்கும் தாய்மார்களுக்கும் நெருங்கிய பிணைப்பு ஏற்பட்டது. கிராம சுகாதார செவிலியரின் மீதான நம்பிக்கையால் MR Vaccine கொரோனா தடுப்பூசி மற்றும் அனைத்து சுகாதார திட்டங்களையும் கிராம சுகாதார செவிலியர் மூலமாக அளிக்கும்போது மக்கள் தாமாக முன்வந்து எவ்வித எதிர்ப்பும் தயக்கமும் இன்றி மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கின்றனர்.

**சுனாமியில் கிராம சுகாதார செவிலியரின் பங்கு.**

2004 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமியில் மக்கள் அனைவரும் மிகவும் பாதிப்படைந்தனர். கிராம சுகாதார செவிலியர்கள் தாமாக முன்வந்து சுனாமி பாதித்த நாகப்பட்டினம் கன்னியாகுமரி போன்ற மாவட்டத்திற்கு சென்று அரும் பணியாற்றி மக்களின் மனதில் இடம் பெற்றனர். முகாம்களில் தங்கியிருந்த இளம்பெண்களுக்கு நாப்கின் வழங்கப்பட்டது. குறிப்பாக குழந்தையை இழந்தவர்களுக்கு மீண்டும் குழந்தை பிறப்பதற்கு Recanalization ஆபரேஷன் என்ற ஆலோசனையும், வழங்கப்பட்டது. இதற்கென தனியார் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்து கொள்வோருக்கு ரூ.25,000 தமிழக அரசா,ல் வழங்கப்பட்டது. இத்திட்டம் உலகளவில் கவனத்தை ஈர்த்தது.

சுனாமியின் போது பிரதிநிதிகள் குழு மருத்துவ விடுப்பில் கன்னியாகுமரி, நாகை மாவட்டங்களுக்கு சென்று பணியாற்றினோம். ஆற்றுப்படுத்துதல் தடுப்பூசி மருந்து வழங்குதல் உள்ளிட்ட சேவைகளை தன்னார்வலராக செய்தோம் அப்போது குழந்தைகளை முழுவதும் இழந்த தாய்மார்களுக்கு மீண்டும் அறுவை சிகிச்சை மூலம் குழந்தை பிறப்பதற்கு உதவ வேண்டும் என்று அரசிற்கு கோரிக்கை வைத்தோம். மாண்புமிகு முதல்வர் ஏற்றுக்கொண்டு ஆணை பிறப்பித்தார். தனியார் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்வோருக்கு ரூபாய் 25 ஆயிரம் அரசால் வழங்கப்பட்டது. இத்திட்டம் உலக அளவில் கவனத்தை ஈர்த்தது.

**வர்தா புயல்**

வர்தா புயல் சென்னையை தாக்கி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட போது கிராம சுகாதார செவிலியர்கள் தமிழக முழுவதிலிருந்தும் சென்னைக்கு வந்து வெள்ள பாதிப்பில் உள்ள மக்களுக்கு மிகவும் சிறப்பாக சேவையாற்றினர்.

## பள்ளி சுகாதார திட்டம் (SCHOOL IMMUNIZATION)

பள்ளி சுகாதார திட்டம் பள்ளியில் தடுப்பூசி பணி, இரும்பு சத்து மாத்திரை மற்றும் குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்குதல் சக வயது பயிற்றுநர்களுக்கு குழு அமைத்து அவர்களுக்கு பயிற்சி அளித்தல், மருத்துவர்களின் பரிந்துரையை பின் கவனிப்பு அளித்தல் பள்ளி கல்லூரி வீடுகளில் உள்ள வளர் இளம் பெண்களுக்கு நாப்கின் வழங்குவது போன்ற மிக மிக பயனுள்ள புரட்சிகரமான அரசின் திட்டத்தை கிராம சுகாதார செவிலியர்கள் செயல்படுத்தி வருகின்றனர்.

## கர்ப்பிணி தாய்மார்களுக்கான சிறப்பு சேவை.

24 மணி நேரமும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்குவதாலும், ஒவ்வொரு செவ்வாய்கிழமை அனைத்து கர்ப்பிணி தாய்மார்களையும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பரிசோதனை செய்வதாலும் கர்ப்பிணி தாயின் கவனிப்பு பணி மிகவும் மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு துறையின் மூலம் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் கிராமங்களில் உள்ள திருமண மண்டபங்களில் வளைகாப்பு நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகிறது, கர்ப்பிணி தாய்மார்கள் விடுதலின்றி பதிவு செய்யவும் கர்ப்பகால பிரசவ பிந்தைய கவனிப்பு சத்துள்ள உணவு உட்கொள்ளவும் டாக்டர் முத்துலெட்சுமி ட்டி மகப்பேறு உதவித்திட்டம் கிராம சுகாதார செவிலியர் மூலம் செயல்படுத்தப்படுகிறது,

## கொரோனா காலத்தில் கிராம சுகாதார செவிலியர்களின் மகத்தான சேவை

கடும் சவாலான கொரோனா லாக்டவுன் காலக்கட்டத்தில் கூட கர்ப்பகால கவனிப்பு பிரசவ பிந்தைய கால கவனிப்பு பிரசவபணி உள்ளிட்ட அனைத்து சேவைகளிலும் கிராம சுகாதார செவிலியர்கள் தொடந்து பணியாற்றினர், கொரோனா தடுப்பூசிகளை கிராமங்களில் சென்று சேர்ப்பது கடும் சவாலாக இருந்தது. எனினும் கிராம செவிலியர் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை அடிப்படையாக வைத்து கொரோனா தடுப்பூசி திட்டத்திலும் மாபெரும் வெற்றி அடைந்தனர்,

இந்த கொரோனா காலக்கட்டத்தில் களப்பணியாளகள் மற்றும் உயர் அதிகாரிகள் பலர் கொரோனா பாதிப்பால் உயிரிழ்ந்தனர். எனினும் தங்களது அர்ப்ணிப்பான சேவையால் கொரோனா பெருந்தொற்றையும் கட்டுக்குள் கொண்டுவந்தனர்,

சுகாதாரத் திட்டத்தில் தமிழகம் இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாக திகழ்கிறது. இதற்கு உயர் அதிகாரிகளின் திட்டமிடல் வழிகாட்டும் நடைமுறைப்படுத்தும் முறை, யுக்திகள் (Strategy) கிராம சுகாதார செவிலியர் சுகாதார ஆய்வாளர்கள் உள்ளிட்ட களப்பணியாளர்களின் குழு பணி (Team Work) ஆகியவைகளே காரணமாகும்.

**நிர்மலா பால்சாமி**
மூத்த கிராம சுகாதார செவிலியர் (ஓய்வு)
அரசு அங்கீகாரம் பெற்ற தமிழ்நாடு அரசு கிராம சுகாதார
செவிலியர் அமைப்பின் தலைமைப் பிரதிநிதி

# தாய் சேய் நலத்தினை மேம்படுத்தவும் வலுப்படுத்தவும் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள்

தற்போதைய காலகட்டத்தில் புதிய தொற்று நோய்களும் தொற்றா நோய்களும் அதிகரித்துள்ளன. கிராம சுகாதார செவிலியர்கள் தாய் சேய் மரண விகிதத்தை குறைக்கவும் பிரசவ பிந்தைய கவனிப்பு, 1–28 நாட்கள் சிசு கவனிப்பில் முழு கவனம் செலுத்தி வருகின்றனர்.

❖ துணை சுகாதார மையங்களை வலுப்படுத்த வேண்டும் இதற்காக துணை சுகாதார மையத்திற்கு இரண்டு கிராம சுகாதார செவிலியர்கள் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

❖ ஐயாயிரம் மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் மத்திய அரசு அறிவிக்கப் பட்டுள்ளது,

❖ துணை சுகாதார நிலைய கட்டிடங்கள் புதிதாக கட்டவும் கட்டியவற்றை மேம்படுத்தபட உள்ளது.

**குடும்ப நலம்**

இத்திட்டம் கிராம சுகாதார செவிலியரிடம் மட்டும் ஒப்படைக்கப்பட்ட பிறகு சிறப்பான முறையில் பணியாற்றி பிறப்பு சதவீதத்தை குறைத்தனர்.

இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும் கிராம சுகாதார செவிலியர்களுக்கான நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சிறப்பு திட்டங்கள்.

1) இரண்டு சக்கர வாகனம் / இரண்டு சக்கர வாகனம் ஓட்டுவதற்கான பயிற்சி வழங்கப்படுகிறது.
2) அலைபேசி, மடிக்கணினி, டேப் ஆகியவை வழங்கப்படுகிறது.
3) தியானம் யோகா பயிற்சி அளிக்கப்படுகிறது.
4) சித்தா ஆயுர்வேத மருந்துகள் வழங்க பயிற்சி அளிக்கப்படுகிறது.
5) துணை சுகாதார நிலையங்களுக்கு நிபந்தனையற்ற நிதியில் கேஸ் சிலிண்டர் ஸ்டவ் வழங்கப்படுகிறது.
6) சில்லறை செலவினத்திற்கு ஆண்டிற்கு ரூபாய் 2000 வழங்கப்படுகிறது.
7) பயிற்சி இன்றி பணி மூப்பின் அடிப்படையில் பகுதி சுகாதார செவிலியர்கள், சமுதாய சுகாதார செவிலியர்கள் பதவி உயர்வுகள் வழங்கப்படுகிறது.
8) தமிழகத்திலேயே பொது சுகாதாரத் துறையில் தான் முதன் முதலாக Sexual Harassment பாலியல் துன்புறுத்துலுக்கு அமைப்பு ஏற்படுத்தப்பட்டு சிறப்பாக கமிட்டி அமைக்கப்பட்டு சிறப்பாகவும் செயல்பட்டு வருகிறது.

**நிர்மலா பால்சாமி**
மூத்த கிராம சுகாதார செவிலியர் (ஓய்வு)
அரசு அங்கீகாரம் பெற்ற தமிழ்நாடு அரசு கிராம சுகாதார
செவிலியர் அமைப்பின் தலைமைப் பிரதிநிதி

## பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை நூற்றாண்டு சாதனைகள்

இதுவெல்லாம் 1922 வரை தான் , நம் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறை அந்த ஆண்டு தான் ஜனனம் கொண்டது கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்கு, தாய், சேய் நலச் சேவைகளை வழங்குதல் மற்றும் தொற்று நோய்களின் அபாயங்களிலிருந்து மக்களைப் பாதுகாத்து பொதுச் சுகாதாரம் பேணுதல் ஆகியவை இத்துறையின் முக்கிய குறிக்கோள்களாகும்.

### 'ஆரம்ப சுகாதார நிலையம் ஓர் விதை'

ஆரம்ப சுகாதார நிலையம் ஓர் விதையாக விதைக்கப்பட்டு இன்று திருசுவை கனி தரும் மரமாக வளர்ந்து நிற்கிறது. மருத்துவ அலுவலர்கள், மற்றும் களப்பணியாளர்கள் அந்தந்த பகுதியின் பொதுச் சுகாதாரத்தினை மேம்படுத்துவதிலும், பொதுமக்களின் ஆரோக்கிய வாழ்வினை உறுதி செய்வதிலும் பெரும்பங்காற்றுகின்றனர். ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் வெளி நோயாளிகள், உள் நோயாளிகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சேவைகள் 24 மணி நேரமும் வழங்கப் படுகின்றன.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் வழங்கப்படும் அடிப்படை மருத்துவ சேவைகள்

**தாய் சேய் நல சேவைகள் :**

கர்ப்ப கால சேவைகள், ஸ்கேன் பரிசோதனை, கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சர்க்கரை அளவு பரிசோதனை, இருப்புச் சத்து குறைபாடு கண்டறிதல், தாய் சேய் இருவருக்குமான தடுப்பூசிப் பணிகள், உ சX எ மணி நேர கர்ப்ப கால சேவைகள், இரத்தம் தேவைப்படும் கர்ப்பிணிகளுக்கு இரத்தம் ஏற்றுதல், உயர் சிகிச்சைக்கான பரிந்துரைகள் போன்ற அடிப்படை சேவைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

**தொற்று நோய்களுக்கான சிகிச்சைகள் :**

டெங்கு, சிக்குன்குன்யா போன்ற காய்ச்சல் நோய்கள் மற்றும் வயிற்றுப்போக்கு, நாய்கடி, பாம்புகடி உள்ளிட்ட விஷகடிகளுக்கான சிகிச்சைகள் மற்றும் நோய் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**தொற்றா நோய்களுக்கான சிகிச்சைகள்:**

30 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும், நீரிழிவு மற்றும் உயர் ரத்த அழுத்த வியாதிகளுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை அளிக்கப் படுகிறது. 30 வயதிற்கு மேற்பட்ட அனைத்து மகளிர்க்கும் கருப்பை வாய் புற்றுநோய் மற்றும் மார்பக புற்றுநோய்களுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தேவைப்படுபவர்களுக்கு உயர் மருத்துவ நிலையங்களுக்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

**டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்:**

நிதியுதவி தொகை ரூ.1 8 , 0 0 0 மாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்துடன்

கர்ப்பிணித் தாய்மார்களுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் மருந்துகள் அடங்கிய பெட்டகமும் ஒவ்வொரு பிரசவத்திற்கு ஒன்று வீதம் இலவசமாக வழங்கப்படுகிறது.

**பள்ளியில் பயிலும், பயிலா வளரிளம் பெண்கள் மற்றும் பிரசவித்த தாய்மார்களுக்கு சானிட்டரி நாப்கின்கள் வழங்கும் திட்டம்:**

'சானிட்டரி நாப்கின் 'அங்கன்வாடிகள் மற்றும் பள்ளிகள் வாயிலாக இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவிக்கும் தாய்மார்களுக்கும் சானிட்டரி நாப்கின்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

**பிறப்பு இறப்பு பதிவுகள்**

அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் மற்றும் கிராம ஊராட்சிப் பகுதிகளில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் அனைத்திலும் கூடுதல் பிறப்பு இறப்பு பதிவு அலுவலகங்கள் அமைக்கப்பட்டு பிறப்பு இறப்பு பதிவுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**தேசிய போலியோ சொட்டு மருந்து முகாம்கள்:**

தொடர்ந்து நடத்தப்படும் போலியோ சொட்டு மருந்து முகாம்களின் பயனாக, போலியோ நோய் அறவே ஒழிக்கப்பட்ட நிலையினைத் தமிழகம் எய்தியுள்ளது.

**ராஷ்ட்ரிய பால் ஸ்வஸ்த்ய கார்யகரம் (RBSK):**

அரசு மருத்துவ நிலையங்கள், அங்கன்வாடி மையங்கள் மற்றும் பள்ளிகளில் பயிலும் பிறந்த குழந்தை முதல் கஅ வயதுடைய அனைத்து குழந்தைகளும் பிறவி & வளர்ச்சி குறைபாடுகள் மற்றும் அனைத்து குழந்தைப் பருவ நோய்களும் இளம்பருவத்திலேயே இனம் கண்டறியப்பட்டு, அறுவை சிகிச்சைகள் மற்றும் மருத்துவச் சிகிச்சைகள் மூலம் குறைபாடுகளை நீக்கிடத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**கொரோன தொற்று கட்டுப்பாட்டில் அளப்பரிய சாதனை :**

தமிழகத்தில் இதுவரை சுமார் 35.9 லட்சம் மக்கள் கொரோனாவில் இருந்து மீண்டு மறுவாழ்வு பெற்றுள்ளனர், 74.4% மக்கள் தடுப்பூசி செலுத்தி கொண்டுள்ளனர். வாராந்திர தடுப்பூசி மையங்கள் அமைத்து 100 % அளவை எட்டும் பணிகள் இன்றளவும் செம்மையாக செய்ய பட்டு வருகிறது.

**மக்களை தேடி மருத்துவம் :**

இத்திட்டத்தின் மூலம் சர்க்கரை வியாதி, உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு, முடக்குவாதம், பெண்களை கருப்பைவாய் மற்றும் மார்பக புற்றுநோய் கண்டறிவதற்காக ஆய்வுக்கு பரிந்துரைத்தல் மற்றும் நீண்ட நாள் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளுக்கு சென்று பரிசோதனை மேற்கொண்டு அதற்குரிய மருத்துவ ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகிறது.

**எனது கரூர்!**

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறையின் முன்னெடுப்பாக நெசவு

நகரம் கரூர் இல் – கர்ப்பிணி தாய்மார்களுக்கான பொக்கிஷம் திட்டம் , ஆண்களுக்கான NSV பயனாளிகளுக்கான தங்க தந்தை திட்டம் போன்ற பல சேவைகள் வழங்க படுவதல்லாமல், பயனாளிகளுக்கு அது எந்த வகையில் உதவி செய்கிறது என்று கண்காணிக்கப்பட்டு திட்டங்கள் மேம்படுத்தப்படுகின்றன .

நூற்றாண்டுகளை கடந்து மக்கள் பிணியை போக்க சேவையாற்றும் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறை இன்னும் 1000 ஆண்டுகள் மக்கள் துயர் துடைக்க வேண்டுகிறோம். ஒரு செவிலியராக இந்த நூற்றாண்டு மரத்தின் விழுதாகி மக்கள் சேவை செய்வதில் நானும், எங்கள் குரும்பப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையமும் பெருமை கொள்கிறோம்.

பா. நசீமா தஹசீன், RN ., BSN., MLHP
பள்ளப்பட்டி 1 , அரசு துணை சுகாதார நிலையம் ,
குரும்பப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ,
மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம்,
மலைக்கோவிலூர் வட்டாரம்., கரூர் மாவட்டம் .

## டெங்கு ஒழிப்பு பணியில் எனது கள அனுபவங்கள் – கட்டுரை

திண்டுக்கல் மாவட்டம், சாணார்பட்டி வட்டாரம், கோபால்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கோ. அய்யாபட்டி துணை சுகாதார நிலைய பகுதியான கோ.அய்யாபட்டி கிராமத்தில் நடைபெற்ற டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் சம்பந்தமான எனது கள அனுபவத்தை கட்டுரையாக சமர்ப்பிக்கிறேன்.

நான் கோபால்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பொறுப்பேற்று, மூன்று மாதங்கள் தான ஆகியிருந்தது. ஐம்பது கிராமங்களை உள்ளடக்கிய ஆறு துணை சுகாதார நிலையங்கள் கொண்டது. இவற்றில் பாதிக்கு மேல் மலை சார்ந்த அல்லது மலைச் சாரலில் அமைந்துள்ள கிராமங்களாகும்.

இவற்றில் அவ்வப்போது பரவலாக காய்ச்சல், டெங்கு அல்லது இன்னபிற நோய் தொற்றால் பாதிக்கப்பட்டவரின் எண்ணிக்கை அங்கொன்றும் இங்கொன்றுமாக பரவலாக வரும். இப்படியானதொரு சூழ்நிலையில் தான் மலைச்சாரலில் அமைந்துள்ள கோ. அய்யாபட்டி எனும் கிராமத்தில் ஒருநாள் கேரளா மாநிலத்திலிருந்து காய்ச்சலுடன் மதுரையில் உள்ள ஒரு தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த அவருக்கு இரண்டு நாட்களில் DENGUE IGM POSITIVE உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல் கிடைக்கப்பெற்றது.

அந்த நேரத்தில் கேரள மாநிலத்தில் டெங்கு நோய்தொற்று கடுமையாக பரவிக் கொண்டிருந்த நேரம். அங்கிருந்து காய்ச்சலால் பாதிக்கப்பட்டு ஒருவர் வந்துள்ளார் என்பதை அறிந்ததுமே எங்களது களப்பணியை துவக்கவிட்டோம். இரண்டு

நாட்களில் அவருக்கு டெங்கு இருப்பது உறுதி செய்யப்பட்டவுடன் எங்களது களப்பணி இன்னும் தீவிரமடைந்தது.

அக்கிராமத்தைச் சேர்ந்த 6 வயது சிறுமி ஒருவரும் காய்ச்சலால் உள் நோயாளியாக அனுமதிக்கப்படுகிறார். அடுத்த இரண்டு நாட்களில் அவருக்கும் DENGUE IGM POSITIVE என்று உறுதி செய்யப்பட்ட தகவல் வருகிறது.420–க்கும் மேற்பட்ட வீடுகளைக் கொண்ட அக்கிராமம் ஆறு வார்டுகளை உள்ளடக்கிய ஒரு பெரும் கிராமம். அக்கிராமத்தில் இருவரது வீடுகளும் ஒரே தெருவில் அமைந்துள்ளதால் அக்கிராமம் நோய் பெருந்தொற்று பரவல் பகுதியாக (EPIDEMIC) உறுதி செய்யப்பட்டு நோய் தடுப்புப் பணிகள் மேலும் கடுமையாக்கப்பட்டது.

அனுதினமும், காய்ச்சல் கண்காணிப்புப் பணி, கொசுப்புழு ஒழிப்புக் களப்பணி, முறையாக மேல்நிலைத் தொட்டிகளை சுத்தம் செய்து பராமரித்தல், தினசரி குளோரினேசன் செய்யப்பட்ட குடிநீர் விநியோகித்தல், கொசுப்புழு வளரும் ஆதாரங்களை அழித்தல், டயர்களை அப்புறபடுத்துதல், புகையடித்தல் (பைரித்ரம்), கிராமபுற தூய்மையை மேம்படுத்துதல், மக்கள் விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்துதல், மருத்துவ முகாம் நடத்துதல், தினசரி நிலவேம்பு மற்றும் ORS கரைசல் வழங்குதல், கொசுப்புழு வளரும் ஆதாரங்களை அறிந்து கொள்ளுதல் மற்றும் அழித்தல் சம்பந்தமான கண்காட்சி அமைத்தல், காய்ச்சல் கண்டவர்களின் சிகிச்சை கண்காணிப்பு மற்றும் மேல் சிகிச்சைக்கான பரிந்துரை, குணமடைந்து வந்தவர்களின் தொடர் கண்காணிப்பு என நாங்கள் நோய்தடுப்பு களப்பணியில் துரித செயலாற்றி வந்த நிலையில் நோய் பரவல் குறைவதற்கு பதிலாக மேலும் அதிகமாகிக்கொண்டே சென்றது.

இச்சமயத்தில் அக்கிராமத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேரடிகள ஆய்வு நடைபெற்றது. கிராமத்தை அடிக்கடி நேரில் ஆய்வு செய்து ஆலோசனைகள் வழங்கினர். வட்டார அளவிலான அனைத்து சுகாதார ஆய்வாளர்களின் நேரடி கண்காணிப்பிலும், ஊராட்சி செயலாளர் அவர்களின் மேற்பார்வையிலும் ஏழு உப குழுக்கள் அமைக்கப்பட்டு அக்கிராமத்தில் தினமும் நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. நாங்கள் செய்த கடுமையான களப்பணிகளின் பயனாக அக்கிராமத்தில் பாதிப்பு பதினைந்து நாட்களுக்குள் கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்க வேண்டும். ஆனால் ஒரு மாதத்தை தாண்டியும் நோயின் தாக்கம் குறைந்த பாடில்லை. அவ்வாண்டு எங்கள் மாவட்டத்திலேயே அதிகம் டெங்கு பாதித்த கிராமமாக அக்கிராமம் மாறியது. பதினைந்து பேருக்கு டெங்கு இருப்பது உறுதி செய்யப்பட்டது. அதுவரை கொசுபுழுக்கள் மற்றும் முதிர் கொசுக்கள் ஆகியவற்றை திட்டமிட்டு அழித்து வந்த நாங்கள் மண்டல பூச்சியியல் வல்லுநர் அவர்களின் அறிவுறுத்தலின்படி நீர் கலன்கள் மீது படிந்துள்ள கொசு

முட்டைகளை கண்டறிந்து அழிக்கத் தொடங்கினோம். கடுமையான மன உளைச்சலோடு இரவு தூக்கத்தை இழந்து விடுமுறை ஓய்வின்றி தவித்த எங்களுக்குள் நம்பிக்கை கீற்று முளைத்தது.

கேரளாவில் ஊரை ஒட்டிய ரப்பர் மரத் தோட்டங்களில் உள்ள மரப்பொந்துகளும் இரப்பர் பால் சேகரிப்பு கலன்களும் தான் டெங்கு நோய் பரப்பு காரணிகளில் முக்கிய பங்கு வகித்ததாக அறிந்திருக்கிறோம். அய்யாபட்டி கிராமமானது மா, மற்றும் தென்னை மரங்களால் அடர்த்தியாக சூழப்பட்ட பசுமைசூழ் பகுதியாகும் மாவட்ட பூச்சியியல் வல்லுநர், இளநிலை பூச்சியில் வல்லுநர், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் ஊராட்சி செயலர், களப்பணியாளர்களின் துணையோடு ஏணியோடு வனங்களுக்குள் புகுந்தோம். களிமண் கொண்டு மரப் பொந்துகள் அடைக்கப்பட்டன. ஒரு நாளைக்கு இரண்டு முறை குடியிருப்பை ஒட்டியுள்ள தோப்புகளுக்குள் சென்று புகை மருந்து அடிக்கப்பட்டது தினமும் கொசுப்புழு ஒழிப்புப் பணி வனங்களுக்குள்ளும் நீண்டது. இப்பணியானது எதிர்பார்த்த வெற்றியை தந்தது. அதிரடியாக டெங்கு நோயின் தாக்கம் குறைந்தது.

கிட்டத்தட்ட நாற்பது நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற எங்களின் தொற்றுநோய் கட்டுப்பாட்டுப் களப்பணிகளால் டெங்கு முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டது. 5 வயது குழந்தை முதல் பலர் டெங்குவால் பாதிக்கப்பட்ட அக்கிராமத்தில் உயிரிழப்பின்றி அனைவரும் குணம் பெற்றார்கள் என்பதுதான் அக் கடும் பணியில் எங்களுக்கு மனநிறைவை தந்த விசயம். இந் நிகழ்வு நடந்து மூன்றாண்டுகள் ஓடிவிட்டது. ஆனால் அதற்கு பிறகு இன்றளவும் டெங்கு நோயால் அக்கிராமத்தவர் எவரும் பாதிக்கவில்லை என்பது கூடுதல் விசயம். மேலும், அந்த நிகழ்வில் சிறப்பாக பணியாற்றியமைக்காக அவ்வாண்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் பாராட்டு பத்திரமும் பதக்கமும் பெற்றது மறக்க முடியாத அனுபவம். இந்த அனுபவக் கட்டுரை இன்றைய சூழலில் புதிதாக பணிக்கு வந்துள்ள இளம் சுகாதார ஆய்வாளர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறேன். நன்றி

தங்கள் உண்மையுள்ள

**சு. நல்லேந்திரன்**
சுகாதார ஆய்வாளர் – நிலை 1
அரசு ஆரம்ப சுகாதார நிலையம்,
கோபால்பட்டி, சாணார்பட்டி வட்டாரம்,
திண்டுக்கல் சுகாதார மாவட்டம்

## ஒரு அனாதையின் குமுறல்

அம்மா என் அம்மா நீ யார் அம்மா
உன் அன்பு முகம் காண வேண்டும் நான் அம்மா
கள்ளிப்பால் ஊற்றி  என்னைக் கண் மூட வைக்காமல்
நெல்மணிகளை போட்டு என் கழுத்தை நெறிக்காமல்
குப்பை தொட்டிக்குள் கொடையாக தந்தவளே
தொப்புள்கொடி உறவை துண்டித்து விட்டுப் போனவளே
அவசரத்தில் நான் உன்னில் ஜனித்தேனோ
இல்லை அடையாளம் தெரியாமல் பிறந்தேனோ
பாவத்தின் சுமையென்று நினைத்தாயோ
உன் பரிதாப கதையென்று ஆனேனோ
பெண்ணாகப் பிறந்ததினால் எறிந்தாயோ
இல்லை வாழ்வின் பின் துயரை எண்ணி என்னைத் துறந்தாயோ
கல்யாண வாழ்வை எண்ணி பயந்தாயோ
அந்தக் கவலையினால் வைவிட்டு போனாயா
அனாதை என்னும் பெயரில் நான் வாழ்கின்றேன்
உன்னை அடையாளம் தெரியாமல் தேடுகின்றேன்
என் மனச்சுமையின் ஏக்கத்தை அறிவாயா
என்றாவது என்னைத் தேடி வருவாயா
என் அம்மா

**M.PARAMESWARI,**
I Year ANM Student
ANM Training School,
Poovanthi

## மக்கள் நலனில் பொது சுகாதாரத்துறை...

நூறாண்டு காலங்களின்
பொது சுகாதாரம்,
மக்கள் வாழ்வுதனை
மேம்படுத்திய
புது சுகாதாரம்....

வந்தபின் வாடுவதே
மானிடரின் வாழ்க்கை,
வருமுன் காத்திடுவாய்
அதுவே நின் வாடிக்கை...

தாய் சேய் நலமும்
நல் தண்ணீரும் உணவும்,
நோய்த் தடுப்பும் மருந்தும்
உன் தலையாயக்
கனவாம்...

ஜனனம் முதல் மரணம் வரை
தொடர்ந்திடும் உதவும் கரம்,
சேவைகளால் சிறந்த நீ
நிலைத்திடுவாய்
நிரந்தரம்.....

ஊசி என்றால்
ஓடி ஒளியும் காலங்களில் கூட,
தடுப்பூசியென
வரம் தந்தாய்
மழலை உயிர்த்தோட....

அன்று கொத்து கொத்தாய்
உயிர் பறித்தது
பிளேக்–காலரா,
கேடயமாய் தடுப்பைத் தந்து
நீ நின்றாய் காவலாய்....

தாய்–சேய்க்கு நீ தந்த
திட்டங்கள் எண்ணிலடங்காது
இறப்பு விகிதம்
குறைத்திட்ட
உன் பணிக்கு ஈடேது....?
(கர்ப்பப்) பதிவு முதல் சான்று வரை
வழிகாட்டும்
கலங்கரை விளக்கம்,
விலையில்லாச் சேவைகளால்
மனச்சுமையும் விலக்கும்...

மகப்பேறு நிதியுடன்
மருத்துவமனைப் பிரசவம்,
பாதுகாப்பாய் வீடுசேர்த்தும்
தொடருமுன்
கவனிப்புத் தவம்....

இரும்புச்சத்து உன்மடியென
நீ தரும் ஊட்டம்,
வளர்இளம் உடல்நலத்தால்
பல தலைமுறைகள்
உயர்ந்து காட்டும்....

பள்ளி நலத் திட்டங்களால்
மழலைகளுக்கு பரவசம்,
பல்லுயிரைக் காத்த
நின் பெருமை
அள்ள இயலா பாதரசம்....

எட்ட இயலா ஊர்களிலும்
உன் சேவை நடமாடும்,
குக்கிராமம் கூட இங்கு
வாழும்
முழு நலமோடு....
காசநோய் மலேரியா
கொரோனாவென நீளும்,
தொற்று
எது வந்தபோதும்
உடன் வருமுன் தோளும்...

தொற்றா நோய்
தடுப்பிற்கான விழி நீயே,
மக்களைத் தேடி
மருத்துவமென
துயரங்கள் துடைத்தாயே....

மக்கள் தொகைபெருக்கமெனும்
மாபெருங்கேடு,
கட்டுப்பாட்டு திட்டங்களால்
காத்தவன் நீயே என்பது
கண்கூடு....

பெரியம்மை
போலியோவுக்கு
தந்திட்டாய் கல்லறை,
தமிழகத்தை தாயாகி
தாங்கிடும் கருவறை
பல், கண், சித்தமென
பரந்து நிற்கும் ஆலம்,
உன் சேவைகளைப்
பட்டியலிட்டால் இன்னும்
போகும் வெகு நீளம்...

களப்பணியில் பலப்பிரிவில்
கண்டதில்லை
உன் மாதிரி,
கட்டமைப்பில் உலகுக்கு
நீயே முன்மாதிரி....

நலத் தேடல்கள் யாவைக்கும்
நிழல் தரும் மரமே
தமிழகம் நலன் காக்க
பிறப்பெடுத்த
நீயுமோர் வரமே.....

முதன்மை மாநிலமாய்
கடந்திட்டாய் நூறாண்டு,
பார் போற்றும்
புகழுடன் இன்னும்
வாழ்க நீ பல்லாண்டு !!


மரு.பெ. **பார்த்தீபன்** MBBS.,
மருத்துவ அலுவலர்
அரசு ஆரம்ப சுகாதார நிலையம்
வடக்குப்பாளையம்
தான்தோணி வட்டாரம், கரூர்.


## சிசுக்கொலை

பெற முடியாத பிள்ளைக்காக
பெயர் மட்டும் கிடைக்கப்பெறும் பெண்களுக்கு சமர்ப்பணம்
தன் தோட்டத்தில் காதல் என்னும்
விளைவித்த காமப் பயிரினில் அறுவடை என்னும்
கருக்கலைப்பு செய்யப்படும்
பெண்களுக்கு தெரியப்படுவதில்லை –அருகில் உள்ள
தோட்டத்தில் தன் அறுவடையைக் காண ஈரைந்து
காத்திருந்து வேண்டாத தெய்வத்திடம் கோரிக்கையிட்டு
காத்திருக்கும் பெண்களின் கண்ணீர்த்துளிகள்...


**R. பாத்திமா**
பகுதி சுகாதார செவிலியர்
PHC–சிறுங்குன்றம்
BLOCK –கேளம்பாக்கம்

## சதம் – கண்ட சாதனைகள்

ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து – இரண்டிலே
கிராம நகரங்களில் மக்களின் நலம் காக்க
பிரிட்டிஷாரின் பிரளயத்தால் – பிறந்து
**"பொது சுகாதாரம்"** – என்று பெயர் பெற்ற – நீ
நாளமில்லா சுரப்பி – போன
நாற்புறமும் கலந்து
**தாய், சேய் நலம்** – காத்தாய்
பதினேழு ஆண்டு கடந்து பருவம் அடைந்ததால்
காரி உமிழ்தல் முதல் கருவறை காவல் வரை
**பொது சுகாதாரச் சட்டம் (1959)** – எனும்
பட்டம் பெற்றாய் – நீ
அம்மை நோயை அறவே – ஒழித்து
மலேரியாவை மலையேற – வைத்து
காலராவை கடலில் கரைத்து
தொழுநோயை தொலை தூரம் – விரட்டி
போலியோவை புறமுதுகிடச் செய்து
காசநோயை கரை கடக்கச் – செய்தாய்
உன் வளர்ச்சி – கண்டு
தொற்றும் நோய் துவண்டு போனது
தொற்ற நோய் மிரண்டு போனது
அரை சதம் கண்ட – நீ
பிறவி பயன் அறிய
**பிறப்பு, இறப்பு, பதிவு சட்டம் (1969)** – எனும்
கூடுதல் பட்டம் வென்றாய்
கொலையும் செய்வாள் பத்தினி – என்று
**"கொரானாவை"** ஒழிக்க
முப்பத்து எட்டு முறை குத்தி– அதன்
மூலாதாரத்தையே அழித்தாய்
கடுக்கா, கருப்பட்டி, சுண்ணாம்பு
கலந்த கவர் போன்ற உன் கட்டமைப்பு
மரணத்தையே மரிக்கச் செய்தது – இன்று
சதம் காணும் – நீ
காசே இல்லாமல் கடமை செய்யும்
நூதானம் பல கண்டு நூறாயிரம் ஆண்டு
வாழ்க ! வளர்க ! வெல்க !

**மா.வே.பழனிச்சாமி,** சுகாதார ஆய்வாளர் நிலை–I
மண்டல பொது சுகாதார நீர் பகுப்பாய்வகம்
திருநெல்வேலி–11

# எனக்கு தெரிந்த ஓர் சிரிய படைப்பு

நாங்கள் பொது சுகாதார துறையில் பணியாற்றுவதற்கு கடமைப்பட்டு இருக்க வேண்டும். சுகாதார துறையில் சுகாதார ஆய்வாளர் பணி என்பது நற்பணியாகும்.

எங்களுக்கு பயிற்சியின் போதே சுகாதார ஆயவ்hளரின் முழு பணி பொறுப்புகளை பற்றி பயிற்சி அளிக்கபட்டது. கொரோனா காலகட்டத்தில் பணியாற்றியது பயன் உள்ளதாக இருந்தது.

தற்போது பொது சுகாதார துறையில் சுகாதார ஆய்வாளராக பணியாற்றி வருகிறோம்.

1. ஈ.பிரப் – சுகாதார ஆய்வாளர் நிலை – II
   வருசநாடு PHC, தேனி
2. நா.சஞ்சய் பாபி – சுகாதார ஆய்வாளர் நிலை – II
   எரிகனம்பட்டி PHC, திருப்பூர்

பொது சுகாதார துறையின் 100வது ஆண்டு விழாவில் எங்களுடைய பங்களிப்பு இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் எங்களது பயிற்சி காலத்தில் நாங்கள் தெரிந்து கொண்டதனையும், சுகாதார துறையின் திட்டங்கள் மற்றும் சேவைகளையும் சேர்த்து "எனக்கு தெரிந்த ஓர் சிரிய படைப்பு" என்ற தலைப்பில் எங்களுக்கு தெரிந்த அளவு எழுதியுள்ளோம்.

## படைப்புகள்

## எனக்கு தெரிந்த ஓர் சிரிய படைப்பு :

தமிழ்நாடு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துதுறையைப் பற்றி எனக்கு தெரிந்த ஓர் சிரிய படைப்பு.

தமிழ்நாடு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை 1923 ஆம் ஆண்டு தமிழகத்தில் தொடங்கப்பட்டது.

"பொது சுகாதாரம்" என்பது பொது மக்களின் ஆரோக்கியத்தைத் தீர்மானித்து பாதுகாப்பது பற்றிய அறிவியல் என்று வரையறுக்கப்படுகிறது. "வருமுன் காப்போம்" என்பதே பொது சுகாதார துறையின் நோக்கம் ஆகும்.

மருத்துவ பணிகள் துறை, மருத்துவ கல்வி இயக்கம், பொது சுகாதார துறை ஆகிய துறைகளில் சுகாதார திட்டங்கள், நோய்கட்டுப்பாடு போன்ற களப்பணிகளை செயல்படுத்துவது கிராமப்புற மற்றும் நகர்ப்புற சுகாதார சேவையை மேம்படுத்துவது மற்றும் தாய் சேய் நல சேவைகளை வழங்குதல், தொற்று நோய்களின் அபாயங்களிலிருந்து மக்களைப் பாதுகாத்து ஆரோக்கியத்தை பெறுதல் ஆகியவை இத்துறையின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

இது மட்டுமின்றி மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையில் சுகாதாரத்துறை திட்டத்தை வெற்றி பெற செய்வது பொது சுகாதார துறைதான்.

நமது சுகாதாரத்துறை வெற்றி பெற்று 100 ஆண்டுகள் நிறைவு பெற்று சரித்திர சாதனை படைத்துள்ளது. இந்திய ஒன்றிய அளவில் சுகாதார துறையில் அதிக தரக் குறியீடுகளுடன் தமிழ்நாடு சிறந்த மாநிலமாக விளங்கி வருகிறது.

**பொது சுகாதார சட்டம் – 1939**

தமிழ்நாடு பொது சுகாதார சட்டம் – 1939" (Tamilnadu Public Health Act 1939) சுகாதார வாழ்வினைப் பாதுகாத்திடவும், இத்துறை களப்பணி அலுவலர்களுக்கும், அலுவலர்களுக்கும் உறுதுணையாக இருந்து வருகிறது.

**மதராஸ் பொது சுகாதாரச்சட்டம் – 1939**

சமுதாயத்தில் துப்புரவு சீர்திருத்தங்களை ஏறப்டுத்துவதன் மூலம் மக்களின் ஆரோக்கியத்தினை மேம்படுத்துவது, குப்கைகளை அகற்றுவது, சுத்தமான குடிதண்ணீர் வழங்குவது மற்றும் கழிவுநீர் வடிகால்களை மேம்படுத்துவது போன்ற சுகாதார சேவகைளை செய்கிறது.

நமது பொது சுகாதார துறை 100வது ஆண்டு நிறைவு விழா மகிழ்ச்சியுடன் இந்த 101வது ஆண்டு தொடக்கத்தில் ஒரு புதிய மாற்றத்தை ஆரமித்தும் இதனை நடைமுறை திட வேண்டுமாறு நமது துறை உயர்திரு இயக்குனர் அவர்களுக்கு இதன் மூலம் கோரிக்கை வைக்கிறோம்.

## தாய்சேய் நலத்திற்கு அரசு ஏற்படுத்திய திட்டங்கள்

1. இலவச தடுப்பூசி திட்டம்
2. JSY திட்டம்
3. டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நலத்திட்டம்
4. இரும்பு சத்து மாத்திரை வழங்குதல்
5. இலவச பிரசவம் பார்க்கும் திட்டம்
6. 102 தாய்சேய் நல ஊர்தி
7. 108 பிரசவ நேரங்களில் மருத்துவமனைக்கு அழைத்து செல்லுதல்.

**1. இலவச தடுப்பூசி திட்டம் :**

நோய் தடுப்பு மருந்தானது அனைத்து தரப்பு மக்களுக்கும் சேர்ந்தடைய வேண்டுமென "உலக சுகாதார நிறுவனம்" படி தேசிய தடுப்பூசி அட்டவணையில் உள்ள படி தடுப்பு மருந்துகள் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் போலியோ, அம்மை நோய்கள், காசநோய், கக்குவான் இருமல், இரனஜன்னி, மூளைக்காய்ச்சல், தொண்டை அடைப்பான், மஞ்சள் காமாலை போன்ற நோய்களை தடுப்பூசி மூலம் நோய்களை கட்டுக்குள் வைத்தும் ஒருசில நோய்களை ஒழிக்கப்பட்டு வருகிறது.

**2. JSY திட்டம்**

ஜனனி சுரக்ச யோஜனா ஏப்ரல் – 2005 ஆம் அண்டு பிரசவத்தின் போது ஏற்படும் தாய் மரணங்களை குறைப்பதற்கும் தாய் மரண விதத்தை குறைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது.

3. இரும்பு சத்து மாத்திரை வழங்கும் திட்டம்

பிரசவத்தின் போது ஏற்படும் இரத்த போக்கை ஈடு செய்வதற்கும் இரத்தசோகை ஏற்படாமல் இருக்கவும் இந்த திட்டம் உதவுகிறது.

4. டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நலத்திட்டம் :

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நலத்திட்டம் – 1987 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் பிரசவத்தின் போது ஏற்படும் சேய் மரணங்களை குறைக்கப்பட்டுள்ளது. இதில் மூன்று தவணையாக உதவிதொகையும் ஊட்டச்சத்து பொருட்களும் வழங்கப்படுகிறது.

5. இலவச பிரசவம் திட்டம் :

தமிழகத்தில் பிரசவத்தின் போது ஏற்படும் தாய்சேய் மரணங்களையும் குழந்தைகளுக்கு ஏற்படும் குறைபாடுகளையும் தவிர்ப்பதற்கும் அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் 24 மணி நேரம் பிரசவம் பார்க்கப்படுகிறது.

நடமாடும் மருத்துவமனை :

மலைபகுதி, பேருந்து வசதி இல்லாத பகுதி, தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மருத்துவ குழு கிராமத்திற்கும் சென்று சேவை வழங்கப்படுகிறது. இந்த குழுவில் மருத்துவர், செவிலியர், உதவியாளர், ஓட்டுனர் ஆகியோர் பணிபுரிவார்கள்.

RBSK :

18 வயதிற்கு உட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் மருத்துவ பரிசோதனை செய்தல் ஆகும்.

❖ சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளை பரிந்துரை செய்தல்

❖ இருதய பரிசோதனை ❖ சுகாதார நலக்கல்வி

❖ பிறவி குறைபாடு ❖ ஊட்டச்சத்து குறைபாடு கண்டறிதல்

வளர் இனம் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் போன்றவற்றை பள்ளிகளுக்கே சென்று குழந்தைகளின் உடல்நிலை ஆராய்ந்து சிகிச்சை தேவைபடும் குழந்தைகளை மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தல் இத்திட்டத்தின் நோக்கம் ஆகும்.

நாப்கின் வழங்கும் திட்டம் :

10–19 வயதில் உள்ள வளர் இளம் பெண்களுக்கு விலையில்லா சானிடரி நாப்கின் வழங்கப்படுகிறது.

WIFS :

வாரந்தோறும் வியாழக்கிழமை தோறும் 10–19 வயது உள்ள மாணவ,மாணவியருக்கு இரும்பு சத்து மாத்திரை வழங்கப்படுகிறது.

IFA :

1 முதல் 3 வயது குழந்தைகளுக்கு திங்கள் மற்றும் வியாழன் கிழமைகளில் இரும்புச் சத்து திரவம் வழங்கப்படுகிறது.

**குடும்ப நல சேவை :**

திருமணம் ஆன தம்பதியர்களுக்கு இரு குழந்தைகளை போதுமானது. இரு குழந்தைகள் பெற்ற பின் ஆண், பெண் ஆகியோரை சுகாதார துறை களப்பணியாளர்கள் தற்காலிக மற்றும் நிரந்தர கருத்தடை முறை பற்றி ஊக்குவித்தும் நலக்கல்வி அளித்தும் குடும்ப நலம் செய்யப்படுகிறது.

**பிறப்பு இறப்பு பதிவு :**

மத்திய அரசின் பிறப்பு இறப்பு பதிவுச்சட்டம்–1969 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

01.04.1976 முதல் தமிழக அரசு பிறப் இறப்பை பதிவு செய்வதனை கட்டாயமாக்கப்பட்டது.

பிறப்பு இறப்பு சட்டத்தின் படி பிறப்பு இறப்பு நிகழ்ந்த இடத்தின் பிறப்பு இறப்பு பதிவாளரிடம் 21 நாட்களுக்குள் பதிவுசெய்வது அவசியம்.

மேலே குறிப்பிட்டுள்ள பல திட்டங்கள், பல சேவைகள் ஆகிய அனைத்து பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையின் கீழ் நடைபெற்று வருகிறது. தண்ணீர் குளோரினேசன் பரிசோதனை, சுற்றுப்புற சுகாதாரத்தை ஆய்வு செய்தல், கடைகளில் சுகாதாரத்தை ஆய்வு செய்தல் போன்ற பணியும் பார்க்கப்படுகிறது.

**Health Inspector Grade – I**

Will prepare and maintain the list of dangerous and offensive trades in his area provide the list tot he licensing authority. இதுவும் சுகாதார ஆய்வாளர் நிலை – 1 பணியில் ஒன்றாகும்.

Dangerous and offensive trades licence. அபாய மற்றும் அறுவருக்க தொழில் சான்று. தற்போது பொது சுகாதார துறையில் நடைமுறையில் இல்லை.

நமது பொது சுகாதார துறை 100வது ஆண்டு நிறைவு விழா மகிழ்ச்சியுடன் இந்த 101வது ஆண்டு தொடக்கத்தில் ஒரு புதிய மாற்றத்தை ஆரமித்தும் இதனை நடைமுறை திட வேண்டுமாறு நமது துறை உயர்திரு இயக்குனர் அவர்களுக்கு இதன் மூலம் கோரிக்கை வைக்கிறோம்.

**ஈ.பிரப் – சுகாதார ஆய்வாளர் நிலை – II**
வருசநாடு PHC, தேனி
**நா.சஞ்சய் பாபி – சுகாதார ஆய்வாளர் நிலை – II**
எரிகனம்பட்டி PHC, திருப்பூர்

# பொது சுகாதாரத்துறை வளர்ச்சி

வளர்ந்து விட்டது ! வளர்ந்து விட்டது !
நமது பொது சுகாதார துறையுங்க –
வளர்ந்து விட்டது ! வளர்ந்து விட்டது !
நமது பொது சுகாதார துறையுங்க –
நூற்றாண்டு கொண்டாட்டத்துக்கு
ஏற்ற துறையுங்க
எங்கே போச்சு – எங்கே போச்சு
இந்த நோயெல்லாம் – இது
பொது சுகாதார துறையின் வளர்ச்சி
தானுங்க
வளர்ந்து விட்டது ! வளர்ந்து விட்டது !
நமது பொது சுகாதார துறையுங்க –
கர்ப்பிணிங்க இறப்பு
இறங்குமுகம் ஆச்சு ! – இது
ஆரம்ப சுகாதார நிலையத்தின்
சிறப்பு தானங்க !
குழந்தைகள் இறப்பு
குறைந்து கொண்டே போச்சு !
எம் மருத்துவர்கள் செய்யும்
பணியின் மகத்துவம் தானுங்க !
வளர்ந்து விட்டது ! வளர்ந்து விட்டது !
நமது பொது சுகாதார துறையுங்க ! –
இளம்பிள்ளை வாதத்தால்
ஏற்பட்ட ஊனத்தையே காணோம் ?
நம்துறையில் உள்ள OPV மற்றும் IPV
மருந்தினாலேயே
வளர்ந்து விட்டது ! வளர்ந்து விட்டது !
நமது பொது சுகாதார துறையுங்க ! –
அம்மை நோய்களை
அதிகமாக கானோம் ?
நம் பொது சுகாதார துறையின்
MR தடுப்பு மருந்தின் இரகசியங்க
வளர்ந்து விட்டது ! வளர்ந்து விட்டது !
நமது பொது சுகாதார துறையுங்க ! –
உயிர்கொல்லி நோய்கள் எல்லாம்
குறைந்து கொண்டே போச்சேங்க !

மருத்துவதுறை கண்டுபிடித்த
பெண்டா தடுப்பு மருந்தினாலுங்க !
வளர்ந்து விட்டது ! வளர்ந்து விட்டது !
நமது பொது சுகாதார துறையுங்க ! –

வயிற்றுபோக்கால் இறப்பு
இல்லாமலேயே போச்சு !
பொது சுகாதார துறையின் சிறப்பு
ரோட்டா சொட்டு மருந்தினாலுங்க
வளர்ந்து விட்டது ! வளர்ந்து விட்டது !
நமது பொது சுகாதார துறையுங்க –
காசநோயும் குறைச்சுங்க !
தொழுநோயும் குறைச்சுங்க !
மருத்துவ துறையின் வளர்ச்சி
இது காரணம் தானுங்க !
BCG மற்றும் கூட்டு மருந்தின் சிகிச்சை
பயனுங்க
வளர்ந்து விட்டது ! வளர்ந்து விட்டது !
நமது பொது சுகாதார துறையுங்க ! –
பேய்பிடித்து ஆடும் – கூட்டம்
இப்ப இல்லையே !
மருத்துவ துறையின்
மனநல சிகிச்சையினாலே !
வளர்ந்து விட்டது ! வளர்ந்து விட்டது !
நமது மருத்துவ துறையுங்க ! –
விசக்கடியினாலும் , ரேபிஸ்
வைரஸினாலும்

ஏற்படும் இறப்பு குறைந்ததே !
மருத்துவ துறையின் – விஞ்ஞானம்
வளர்ந்து விட்டதுனாலுங்க
வளர்ந்து விட்டது ! வளர்ந்து விட்டது !
நமது பொது சுகாதார துறையுங்க ! –
கொரோனோவின் பாதிப்பு
கொத்து கொத்தாய் இறப்பு
எம் மருத்துவத்துறையின்

மாபெரும் முயர்ச்சியினாலே
தடுப்பு மருந்து கோவிட்சீல்டு
கோவாக்சினை கொண்டு
என் மக்களின் உயிரை
காப்பாற்றினாரேங்க !!
வளர்ந்து விட்டது ! வளர்ந்து விட்டது !
நமது பொது சுகாதார துறையுங்க ! –
தொற்று நோயுக்கும் – சிகிச்சை
தொற்றா நோயுக்கும் – சிகிச்சை
வயதான பெரியவர்களுக்கு
வந்ததே வீட்டிலேயே சிகிச்சை !
மக்களின் நலனின் அக்கறை

எம் மருத்துவதுறை
மக்களை தேடி சிகிச்சை !
பள்ளி குழந்தைகளின் மீது
அக்கறை கொண்ட
எம்மருத்துவதுறையினால்
பள்ளிகளிலேயே சிகிச்சை ! –

கூடுதல் கவனம் தேவைப்
படுவோருக்கு
எம்மருத்துவ துறையினால்
வீடுகள் பார்வைமூலம் சிகிச்சை !
வளர்ந்து விட்டது ! வளர்ந்து
விட்டது !
நமது பொது சுகாதார துறையுங்க ! –
நூற்றாண்டு கொண்டாட்டத்துக்கு
ஏற்ற துறைங்க !வளர்ந்து விட்டது !
வளர்ந்து விட்டது !
நமது பொது சுகாதார துறையுங்க ! –
நூற்றாண்டு கொண்டாட்டத்துக்கு
ஏற்ற துறைங்க !


**கா.பார்வதி**
முதலாம் ஆண்டு மாணவி
சுகாதார மேம்பாட்டு கல்வி மையம்
பூவந்தி


## ஒரு தாயின் அழுகை குரல் (ஒப்பாரி)

"அம்மா சோறு வேண்டும் என்று சொன்ன உடனே
நான் ஊதினேன் அடுப்பின் புகையை நீ அல்லவோ!
சிகரெட் என்னும் நெருப்பின் புகையை
உள்ளே இழுத்துக் கொண்டாயே!
நிறுத்துடா! நிறுத்துடா! என்று சொன்னபோதெல்லாம்
நிறுத்தாமல் இப்பொழுது என் உயிரான மூச்சையே நிறுத்திவிட்டாயே!
இரண்டு விரல்களுக்கு நடுவில் வைத்துக் கொண்டு
இழுத்ததினால் என்னவோ உன் உயிர்
இரண்டு நொடியில் மடிந்து போனது – அன்று
சிவந்த உதடுகளால் முதலில் கூறிய வார்த்தை அம்மா – இன்று
கருகிய உதடுகளால் கடைசியில் கூறிய வார்த்தை அம்மா
புகை, புகையிலையை நிறுத்திவிடுங்கள் – இல்லையென்றால்
புன்னகையை இழந்து புற்றுநோயால் அவதிப்படுவீர்கள்
"புற்றுநோய் இல்லா உலகம் படைப்போம்"

நன்றி!!!!


இப்படிக்கு
**சி.பார்வதி**
பல்மருத்துவ உதவியாளர்
கருங்குளம் அரசு ஆரம்ப சுகாதர நிலையம்
தூத்துக்குடி மாவட்டம்

# சுகாதார பணியாளர்களின் சேவைகளுக்கு பாராட்டுக் கவிதை

மனிதகுல சேவையில் மகத்தான சேவை
எம் மருத்துவ சேவையே !
வந்தோரை வாழ வைக்கும் நாடு நம் தமிழ்நாடு
"வரும்முன் காப்போம் திட்டம்" கொண்டு வந்த நாடு நம் தமிழ்நாடு
அன்று
மருத்துவத்தைத் தேடி மக்கள் அலைக்களிந்தார்கள்
இன்று
"மக்களை தேடி மருத்துவம்" அலங்கரிக்கப்படுகிறது
மரங்களை வளர்த்து மழையை பெறுவோம்
மனித உடல் உறுப்புதானம் செய்து பல உயிர்களைக் காப்போம்
மனிதனுக்கு தேவை நிதானம்!
மனதார செய்வோம் இரத்ததானம்!
விசித்திர நோய் வந்தாலும் விழித்திடுவார்கள்
விழிப்புணர்வு முகாம் நடத்தி விரட்டுயடிப்பார்கள்
மனிதனுக்கு வந்த நோய் சர்க்கரை
மருத்துவம் எடுத்தது அதன் மீது அக்கறை
குழந்தை பிறந்த பிறகு கொடுப்பார்கள் லட்டு
அவசரத்திற்கு என்றுமே நூற்று எட்டு (108)
மல்லிகை பூவின் மணமும் மாறாது
எம் மருத்துவபணியாளர்களின் குணமும் மாறாது
மழை பெய்தால் தான் மண்வாசனை வீசும்
சுகாதார பணியாளர்கள் கிராமத்திற்குச் சென்றால்தான்
மக்களின் நலம் பேசும்
வெண்மை நிறம் உடை அணிந்த தேவதைகள் இவர்கள்
வெள்ளந்தி மனம் கொண்ட தமிழர்களும் இவர்கள்
பணியில் பறக்கும் பட்டாம்பூச்சிகளும் இவர்களே

கணினியில் கணக்கு போடும் சிறந்த தட்டச்சுயாளர்களும் இவர்களே
தாய் சேய் நலம் காப்பதில் சிறந்த அன்னையாக மாறிடுவார்கள்
நோய் நொடியின்றி வாழ சிறந்த வழிமுறைகளும் கூறிடுவார்கள்
தலை நிமிர்ந்து வந்தாயே கொரோனாவே!
இன்று
எங்கள் தடுப்பு ஊசி பணியால் நிலைகுழைந்து போனாயே!
வறட்சி நிலத்தை வளமாக்க வந்த தண்ணீரை போல
கிராமத்தில் மக்களின் நோய் என்னும் தளர்ச்சியை
நீக்கி தன்னம்பிக்கை கொடுத்த துறை எம் மருத்துவ துறையே
மலடி என்று மாற்றுப் பெயர் சூட்டும் முன்பு உன் மடியில்
குழந்தை தவழ வைத்த மகத்துவமான மருத்துவம் எம் மருத்துவம்
வாடா மல்லி மலர் போல் பணி செய்வார்கள்
நோயாளிகள் முகம் வாடாமல் சிகிச்சை அளிப்பார்கள்
அனைத்து துறையிலும் மனிதன் பணியாற்றுவார்கள்
ஆனால்
எமது மருத்துவதுறையில் மட்டும் மனிதன் பெரும்பங்காற்றுவான்
தமிழ் மண்ணின் அருமையும்
தமிழ்நாட்டின் மருத்துவத்தின் பெருமையும் எவராலும் கூறிட இயலாது.

நன்றி!!!

இப்படிக்கு
**சி.பார்வதி**
பல் மருத்துவ உதவியாளர்
கருங்குளம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம்
தூத்துக்குடி மாவட்டம்

தன் பெயரிலேயே பொது நலனை உள்ளடக்கிய

பொது சுகாதாரத் துறையே, உனது

சாதனைகள் எண்ணிலடங்காதது,

கருவில் தோன்றி கல்லறை வரை மக்களின் பாதுகாப்பை உள்ளடக்கிய பொது சுகாதாரத்தின் சேவைகள் இதோ,

கர்ப்பிணித் தாயினை பரிசோதனையிட்டு, மாதந்தோறும் பார்வையிட்டு, குறைகளை கண்டறிந்து மேல் சிகிச்சைக்கு அனுப்புவதோடு நில்லாமல் "டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் மகப்பேறு நிதியுதவித் திட்டத்தினை" மக்களுக்கு கொண்டு செல்லும் துணை சுகாதார நிலையங்களே

உயிர்கொல்லி நோய்களை தடுப்பூசி மூலம் ஒழித்து, உயிர் கொல்லி நோயில்லா தமிழகமாக உருவாக்கிட்ட பொது சுகாதாரமே!

காசநோய் ஒழிப்பு திட்டம் தொழுநோய் ஒழிப்பு திட்டம் முன்கழுத்துக் கழலை திட்டம் கொண்டு வந்த பொது சுகாதாரமே!!

நாம் இருவர் நமக்கு இருவர் என்ற பழமொழிக்கேற்ப குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை செவ்வனே செயல்படுத்தி வரும் நமது பொது சுகாதாரமே

அவசர உதவிக்கு ஆம்புலன்சை அனுப்பும் பொது சுகாதாரமே.

நலமான குழந்தையே நமது நாட்டின் வளமான எதிர்காலம் என்பதற்கேற்ப சிறார்களுக்கு ஏற்படும் குறைகளைக் கண்டறிந்து, மேற்சிகிச்சை அளிப்பதில் 100% வெற்றி நமது பொது சுகாதாரத்தையே சேரும்.

குடற்புழுவை நீக்கி குறையில்லாமல் சத்துகள் கிடைத்திட குடற்புழு நீக்க திட்டம்

வாரந்தோறும் இரும்புச் சத்து மாத்திரைகள் குழந்தைகள் முதல் வளர் இளம் பெண்கள் வரை கிடைத்திட உதவிடும் பொது சுகாதார துறையே!!

புதுயுகம் திட்டத்தின் மூலம் சுகாதாரமான பாரதத்தை உருவாக்கிய பொது சுகாதாரமே!

இலவச கண்பரிசோதனை செய்வதோடு நில்லாமல், இலவச கண் அறுவை சிகிச்சை மற்றும் கண் கண்ணாடிகள் வழங்கிய பொது சுகாதாரமே!!

உலகளவில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி கொரோனாவில் தன்னுயிரினைப் பெரியதாக கருதாமல், மக்களின் இன்னுயிர் காத்திட்ட மருத்துவ மற்றும் செவிலியர்கள் அனைவருமே கடவுளே!

கொரோனோ தடுப்பூசியை கண்டறிந்து மக்களுக்கு இலவசமாக அளித்து மக்களுயிர் காப்பாற்றிய பொது சுகாதாரமே!!

மக்களே நீங்கள் மருத்துவமனையைத் தேடிப் போக முடியவில்லையா, உங்களைத் தேடி நாங்கள் வருகிறோம் என ஏழை எளிய மக்களுக்கான முதலமைச்சரின் "மக்களைத் தேடி மருத்துவத் திட்டம்" மகத்தானது.

ஒன்றா! இரண்டா!! உமது பெருமைகளைச் சொல்ல வார்த்தைகளே இல்லை!!!

பொது சுகாதாரமே! உன்னால் மக்களுக்கு இல்லை எந்த பயமுமே!!!


**வே.பிரியா,**
இடைநிலை சுகாதாரப் பணியாளர்
வட்டம்: மலைக்கோவிலூர்
அரசு ஆரம்ப சுகாதார நிலையம்,
குரும்பபட்டி. கரூர் மாவட்டம்


## பொது சுகாதாரத் துறையின் நூற்றாண்டு சாதனைகள்
## புகையிலை விழிப்புணர்வு கவிதை

### சிகரெட்

என்னால் வீழ்ந்தவர் ஆயிரம்
நான் வீழ்த்தியவர் பல்லாயிரம்
எனை தொட்டால் நீ கெட்டாய்
புகை அது நமக்கு பகை
முழித்துக்கொள் ! விழித்துக்கொள் !
இல்லை உனை நீயே அழித்துக்கொள்வாய் !!
"நீ என்னை தீண்ட தீண்ட
உனக்கு மரணம் என்பதை மறந்து
தீண்டிக் கொண்டே இருக்கிறாய்
உன் உதட்டினால்"

புகைத்து வாழ்வது உடலுக்கு கேடு
பகைத்து வாழ்வது உறவுக்கு கேடு


**K. பால்மாணிக்கம்**
முரத்துவமில்லா மேற்பார்வையாளர்
அரசு ஆரம்ப சுகாதார நிலையம்
பஞ்சப்பட்டி, கரூர் மாவட்டம்

பொது சுகாதார நூற்றாண்டு விழா. உன் வயதின் ஆண்டுகள் நூறு,
ஆனால் நீர் செய்த தொண்டுகள் எண்ணிலடங்காதது பாரு.

நீர் உன் பணியால் பெற்ற பிள்ளைகள் ஏராளம்,
அதன் அன்னையர்களுக்கு செய்த உதவிகளும் தாராளம்.. !

கருவறை முதல் கல்லறை வரை உள்ள தேவைகளை திட்டம் தீட்டி,
இந்த வட்ட உலகினில் எட்டாத பாமர மக்களுக்கும் எட்டும்படி சட்டங்கள்
அமைத்தாயே அது உன் சாதனை...!

பணம் இல்லா பாமர மக்களுக்கும், பிணி நீங்கா பெரியோர்,
சிறியோரையும் நீர் அரவணைத்து நலமுடன் குணமடைய செய்து செழிப்படைய
வைத்த தாயே.....

என்றுமே உன் சேவையை தொடர்க நீயே.....
படித்தவன், படிக்காதவன், இருப்பவன், இல்லாதவன்
உயர்ந்தவன், தாழ்ந்தவன் என எதையும் பார்க்காமல் அனைவருக்கும்
பொதுவாய் சுகாதாரம் நல்கும் நல்ல மனமே.. !

எம் மக்கள் இனம் இம் மண்ணில் இருக்கும் வரை உம் சேவை என்றுமே
அணையா விளக்காய் ஒளிவீசட்டும்... !

இந்த நூறாம் ஆண்டு சிறப்பு, நூறாயிரம் ஆண்டாக மாறினாலும்
மாறாது உம் பொது சுகாதாரத்தின் தரம்... !

அதனால் தான் மக்களின் மனதில் நீர் என்றுமே நிரந்தரம்.... !
வாழ்க...! வளர்க...! ஜெய்கிந்...!

**வே. பிரின்சியா.**
கிராம சுகாதார செவிலியர், மேலக்குப்பம் (HSC),
இருப்பு (PHC), கம்மாபுரம் (block ),
கடலூர் (D. T). 9445130799.

# வாழிய நூற்றாண்டு ! வளர்க பல்லாண்டு !

"மனிதனைக் காக்கும்
மகத்தான மணி முடியே ...!,

"மனிதனை மட்டுமா !, உலக உயிர்களை
காக்கும் உன்னதமான உயிர் நாடியே ...!,

"தொற்றுக்களை தடுத்திட ஓடி ஓடி
உழைத்திடும் ...!, வருமுன் காக்கும் துறையே"

"நோய்களைத் தடுத்திடும் பொது சுகாதாரம்
முனைந்திடும் .... !, வந்ததை விரட்டிட"

"மருந்துகள் வழங்கிடும் மகத்தான துறையாம் நம்
பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையாம்"

"காக்கும் தொழில் கடவுளுக்கு மட்டுமல்ல
பொது சுகாதாரத் துறையும் கடவுள் தான்...!"

"கடவுள் களைப்பால் கொஞ்சம்
இளைப்பாறட்டும்"

"அக்கடவுளின் கரங்களாகிய பொது சுகாதார துறையே
உயிர்களை காக்கட்டும் ...!,"

"மருத்துவத்தின் நூற்றாண்டு
சேவைகள் அரும்புகள் போல் தொடங்கட்டும்..."

"இன்னும் பல நூற்றாண்டு சேவைகள்
மலர்கள் போல் மலரட்டும் ...!"

"வாழிய நூற்றாண்டு ! வளர்க பல்லாண்டு"
வாழிய ! வாழிய ! ! வாழியவே...!,!!..

**பூ.பூபதி,** இளநிலை உதவியாளர்
துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள்
அலுவலகம், தருமபுரி.

# பொது சுகாதாரம்

## முன்னுரை

மனித வாழ்வில், மனித வளர்ச்சியில் சுகாதாரத்தின் முக்கிய பங்கை இக்கட்டுரையில் சுருக்கமாக காண்போம்.

## பொருளுரை :

அன்றாட வாழ்வில் மனிதன் மேற்கொள்ளும் அறியாமையின் விளைவாக ஏற்ப்படுத்திக்கொள்ளும் பழக்க வழக்கங்கள்தான் மனிதன் நோயின் பிடியில் சிக்கி அவதிக்கு ஆளாகிறான். இயற்கை வகுத்த எல்லையை மீறுவதால்தான்.

காரணம்....

"அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு"" என்ற அனுபவ அறிவு ஜீவிகளின் வேத வாக்கை காற்றில் விடுவதால்தான் இதிலிருந்து விடுபட ஒரே வழி.... போதுமென்ற மனமே பொன் செய்யும் மாமருந்து என்ற உயர் வாக்குக்கு உயிர் கொடுப்பதே.

எவ்வளவுதான் அறிவியல் அறிஞர்கள் விஞ்ஞானிகள் மருத்துவ வல்லுனர்கள் தங்கள் அறிவைக் கொண்டு மனித உயிர்களை காக்க போராடினாலும்... ஒட்டு மொத்த சமூகம் ஒத்துழைத்தால் மட்டுமே சுகாதாரத்தை பேணி நோயின்றி வாழ வழிவகை செய்ய முடியும் நிலையில் உள்ளது. மக்கள் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டு நோயின் பிடியில் சிக்கி மருத்துவர்களையும் நோயாளியாக்கும் நிலைக்கு தள்ளப்பட்ட அவல நிலைக்கு காரணம்

1. போதுமான பொது அறிவு இன்மை..

## சுகாதார சீர்கேடும், மனித உடலுக்கு நேரிடும் பேராபத்தும்

1. ரசாயனங்கள், பவுடர்கள், கிரீம்
2. பாலிதீன் கவர்கள்
3. வாகன எரிப்பொருள்கள்
4. துரித உணவுகள்
5. பொது வெளியில் கொட்டப்படும் குப்பைகள்
6. பிளாஸ்டிக் டப்பாக்கள்
7. மினரல் வாட்டர்கள்
8. கலப்பட உணவுப்பண்டங்கள்
9. விவசாயிகள் பயன்படுத்தும் உரம், பூச்சி மருந்துகள்
10. மேல் நாட்டு மோகத்தில் மக்கள் உண்ணும் வித வித உணவுகள் மூலக்கூறுகள்

இன்னும் எவ்வளவோ....

இதையெல்லாம் வேரோட வேறாக சாய்க்க அறிவாளிகளா... நுட்ப வித்தகர்களாலோ, நிபுணர்களா மட்டும் முடியாத நிலை மேலோங்கி உள்ளது.

ஒட்டுமொத்த உலக மக்களும் தம் மீதும் நம் சந்ததியினர் மீதும் அக்கறைக் கொண்டு ஏற்றத்தாழ்வு அற்று, செயல்பட்டால் மட்டுமே சாத்தியம்.

எல்லாவித நோய்களுக்கும்,

மனிதனின் ஆசை, சுயநலம் அறியாமையே முதலாக இருக்கிறது. "எதுவும் சில காலம்" என உணர வேண்டும்.

இந்த அறியாமைக்கு மேற் பூச்சு பூசி அழகு காட்டுவதால் பயனில்லை.

உண்மையான காரணத்தை கண்டறிந்து அதை விலக்க முயற்சிப்பதே விவேகமான செயலாகும்.

என்றும் மகிழ்வுடன் வாழ் அறிஞர்கள் கூறிய அமுத மொழிகள்...

இயற்கை வழி

- ❖ உடற்பயிற்சி
- ❖ தியானம்
- ❖ யோகா
- ❖ சுய கட்டுப்பாடு
- ❖ போதுமென்ற மனம்

**முடிவுரை**

எல்லோரும் ஒன்றுபட்டு, இயற்கையை பின்பற்றி அறிவாளிகள், அறிஞர்கள் சொன்னதை கேட்டு நம் நடைமுறை வாழ்க்கை + சூழ்நிலைக்கு ஏற்ப நம் கடமைகளை தேசப்பற்றுடன் செய்தால் மட்டுமே இனி வரும் சுகாதாரம் உயிர் பெறும்.

**சி.பெருமாள் MPHN**
அ.ஆ.சு.நிலையம்
ஈய்யனார்

## பொது சுகாதார துறையின் 100 ஆண்டு சாதனைகள்

தாயும் சேயும் நலமுடன் வாழ
தந்தாயே தாய்சேய் வாகனம் !
பள்ளி சிறார் சிறப்புடன் வாழ
தந்தாயே RBSK வாகனம் !
காய்ச்சலில் இருந்து காப்பாற்ற
தந்தாயே MMU வாகனம் !
மக்களை காக்க தந்தாயே
மக்களை தேடி மருத்துவ வாகனம் !
கர்ப்பிணிகளை கவலையிலிருந்து
காப்பாற்ற
தந்தாயே SBGF வாகனம் !
சேயை போல தாயையும் பேணிக்
காத்திட
தந்தாயே JSSK வாகனம் !
உடனே அழைத்தால் என் உயிரையே
காப்பாற்றி
தந்திட வருவாய் 108 வாகனம் !
இவை அனைத்தையும் சிறப்புடன்
நடத்திட
தந்தாயே சுகாதாரத் துறையையே !
இதுவே உனது 100 ஆண்டு
சாதனையாகும்.

**பூர்ணிமா நௌரோஜி,**
கணக்கு உதவியாளர்,
அரவக்குறிச்சி வட்டாரம்,
கரூர் மாவட்டம்.

# பொது சுகாதாரத்துறை நூற்றாண்டு விழா சாதனைகள்

தாயின் கருவிலேயே குழந்தையை கண்டுபிடிப்பதும் சாதனை,
கருவிலே குறைகளை கலைந்து எரிவதும் சாதனை,
தாயிடமிருந்து குழந்தையை பிரசவிக்க வைப்பதும் சாதனை,
தடுப்பூசி போட்டு தக்க வைப்பதும் சாதனை,
தாய் சேய் நலனை காப்பதும் சாதனை,
தமிழகத்தில் மருத்துவம் முதல் இடமாய் இருப்பதும் சாதனை.
நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை எடுப்பதும் சாதனை.
நோயற்ற வாழ்வு வாழ வைப்பதும் சாதனை.
பெரியம்மை பெயர் தெரியாமல் அளித்ததும் சாதனை.
போலியோவை போரிட்டு ஒலித்ததும் சாதனை.
டிப்தீரியா வை திசை தெரியாமல் ஒலித்ததும் சாதனை.
வெறிநாய்க்கடியை வேரோடு அழித்து வருவதும் சாதனை.
காசநோயை காற்றோடு அழித்த காலம் குறித்ததும் சாதனை.
காச நோயாளிக்கு காசு கொடுத்து காப்பதும் சாதனை.
ஏழை எளிய மக்களுக்கு இலவசமாய் மருத்துவம் செய்வதும் சாதனை
தொழுநோயின் உயர்வைத் தோற்கடித்ததும் சாதனை.
தோல் நோயாளிக்கு தோல் கொடுத்து சுகம் கொடுப்பதும் சாதனை.
மக்களை தேடி மருத்துவத்தில் மக்களை மகிழசெய்வதும் சாதனை.
மனநல நோயாளிகளுக்கு மறுவாழ்வு கொடுப்பதும் சாதனை.
வளர் இளம் பருவத்தினருக்கு வாழ்க்கை முறையை வழிகாட்டுவதும் சாதனை.
வந்த வியாதியை வராமல் தடுப்பதும் சாதனை.
கொரோனா ஒன்றாம் இரண்டாம் அலையில் இருந்து காப்பாற்றியதும் சாதனை.
மூன்றாம் நான்காம் அலையை காணாமல் செய்ததும் சாதனை.
செயற்கை பாகத்தை இயற்கைப் பாகத்தோடு ஒட்டியதும் சாதனை.
செந்தமிழ் நாட்டினிலே சிறப்பாய் செயல்படுவதும் சாதனை.
குற்றுயிராய் குருதி இன்றி வாழும் மனிதனுக்கு குருதி கொடை கொடுத்து வாழ வைப்பதும் சாதனை.
தொற்று நோயை தொடராமல் செய்வதும் சானை.
குற்றுயிராய் குருதி இன்றி வாழும் மனிதனுக்கு குருதி கொடை கொடுத்து வாழ வைப்பதும் சாதனை.
தொற்று நோயை தொடராமல் செய்வதும் சாதனை.
தொற்றா நோய் தொடர்ந்து கண்பாணிப்பதும் சாதனை.
அறுவை சிகிச்சையில் அநேகரை காப்பதும் சாதனை.
ஆனந்தமாய் மனிதர்களை வாழ வைப்பதும் சாதனை.
நம் நூறாண்டு சாதனையில் தான் 130 கோடி ஜனமும் வாழ்கின்றனர்.
வாழ்க சுகாதாரத்துறை வளர்க் மனித இனம் நன்றி.

**ஆ. பானுமதி நாச்சியார்**
ஐ.சி.டி.சி. கவுன்சிலர்
அரசு ஆரம்ப சுகாதார நிலையம்
புதுக்கோட்டை, தூத்துக்குடி மாவட்டம்

## பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்புத்துறை நூற்றாண்டு சாதனை

நூற்றாண்டு சாதனை – நான்கு வரிக்கவிதையில் முடிப்பதா
முடியாத காரியம் இருந்தும் என்னால்
முடிந்ததை இயம்புகிறேன்.
கருவறை தொடங்கி கல்லறை வரை
பிறப்பு முதல் இறப்பு வரை – உலகில் உதித்த
ஒவ்வொரு மனிதனுக்கும் ஓர் திட்டம்
அதுவும் நலத்திட்டம் இங்கே உள்ளது.
சுதந்திரக்காற்றை சுவாசிக்கும் முன்னே (1922)
தோன்றிய துறை நமது சுகாதாரத்துறை – இங்கே
பண்முகப் பணிகளுக்காக ஊழியர்கள்.
ஒரு முகமாக செயல்பட வரம்பு மீரா பணியில்
வாழ்வதற்கேற்ற ஆரோக்கிய திட்டம் பல உண்டு
தாய்சேய் நலத்திட்டத்திலே தன்னிகரற்ற சேவை
தரமான சேவை என்றால் தாய் சேய் இறப்பை
குறைத்து தலைமுறை காத்த பெருமை நம்
சுகாதாரத்துறையையே சாரும்
தொற்று நோய்களும் இங்கே பல உண்டு (DSP)
தொற்றா நோய்களும் இங்கே பல உண்டு (MTM)
இருந்து இரண்டிற்குமே ஈடு இணையற்ற சேவை
அளிக்கும் நமது துறையின் பொறுப்பான
சேவையைப் போற்றிப் பாடிட வரிகள் இல்லை
போலியோவாக இருந்தாலும் கொரானோவாக இருந்தாலும்
இங்கே அடுத்த நொடி கொடுத்துவிடுவார்கள்
தடுப்பு மருந்தை – தடுத்துவிடலாம் அத்துணை
கொடிய உயிர்க் கொல்லி நோய்களையும் (Six Killer Diseases)
உயிரின் அருமை இங்கே கட்டமைக்கப்படுகிறது
உயிரே மற்றதற்கனைத்தையும் விடச் சிறந்தது
அடுத்து ஆரோக்கியம்,
அதற்கான சுகாதாரம் கலையாகவே (ART)

கனிவாகவே நம் ஆயுளை அதிகரிக்க
அரும்பாடு படுவது நம் சுகாதாரத்துறையே
மூடப் பழக்கங்களை ஒழித்து திட்டங்களை
முன்னெடுத்துச் செல்ல பயிற்சி பட்டறைகள்
பல அமைத்து பயிற்சி கொடுத்து பணியாளர்களை
உருவாக்கி பணிகளை பலவாக்கி
உணவும் பாணமும் தகுந்த அளவு எடுப்பதில் பயிற்சி (LSM)
சுத்தமான உணவும் காற்றும் சூரிய ஒளியும் தருவதிலும்
(Enviroment Education Oxygen)
உடம்பின் கழிவுகளை வெளியேற்றும் முறையும் அகற்றும் முறையும் (Waste Management)
உஷ்ணமும் குளிரும் ஒருங்கே முறைப்படுத்தவும் (Warmer குளிர் ஒத்தடம்)
தேவையான ஓய்வும் உடற்பயிற்சியும் அளிப்பதிலும் (An Mother Exercise MTM Physiotherapy)
விடங்களினால் விளையும் ஊறுபோக்கும் மருந்துகளும் (ARV, ASV)
நோய்க்கிருமிகளினின்று பாதுகாக்க நோய் எதிர்ப்பு (Vaccone)
நோய்முறி (Antibiotics) மருந்துகளும் முறைப்படுத்தி
ஆரோக்கிய வரையறைகளை வரைப்படுத்தி (பொது சுகாதாரச் சட்டம் 1939)
மக்கள் வாழ வழி வகுக்கும் துறை நம் சுகாதாரத்துறை
மத்திய அரசின் திட்டங்களையும் மதித்துப் போற்றி RCH பணிகள் RBSK, JSSK, JSY, RKSK, AMB
நூறு சதவிகிதம் சதம் அடித்துள்ள (99.8 Health Model)
நம் துறையின் சாதனைகள் எண்ணிலடங்கா
சாதனைகள் தொடரும் – மக்கள் வேதனைகள் மாறும்
நம்துறை வாழிய பல்லாண்டு சேவை செய்க ! பல நூறாண்டு
நூற்றாண்டு கொண்டாட்டம் மீண்டும் வரவேண்டும்
வண்ணப் பந்தாட்டம் வானில் பறக்க வேண்டும்.
ஒளிதரும் நிலவாட்டம் என் முடிவுரை முடித்துச்
செல்கிறேன் சிட்டாட்டம்

நன்றி வணக்கம்.

திருமதி. **பொ.பொன்னுசிறும்பாயி**
பகுதி சுகாதார செவிலியர்,
அரசு ஆரம்ப சுகாதார நிலையம்,
வெள்ளியணை, தாந்தோணி வட்டாரம்
கரூர் மாவட்டம்

# செவிலியர்களுக்கு சமர்ப்பணம்

வெண்ணிற ஆடை உடுத்தி பொறுமையாக மட்டுமல்ல
பொறுப்பாகவும் இன்முகத்துடன்
ஒவ்வொரு நோயாளியையும் பார்க்கவும் அன்னை தெரசாதான்.
உன் உடை மட்டும் வெள்ளை அல்ல.
உன் உள்ளமும் தான்
நீ செவிலியரே அல்ல,
ஒவ்வொரு நோயாளியின் மனதிலும்
வாழும் குல சாமியும் நீயே
தொட்டால் ஒட்டிக்கொள்ளும் என்று
துரத்திவிடும் தொழு நோயாளியை கூட
தொட்டு குணம் பார்த்தவர்கள் நீங்களே
கோரன்டைன் செய்த கொரோனா நோயாளியைக் கூட
குணம் பார்த்து தன் உயிர் துச்சம் என்றவர்கள்
பெற்ற குழந்தையை தாய் பார்க்கும் முன்
தன் கரங்களால் தாங்கி மனித குல தெய்வமும் நீயே.
இரவும், பகலும் சேவை செய்யும் உன் முகத்தில்
கோபத்தால் சுட்டெரிக்கும் சூரியனைக் கண்டதில்லை
கவலையால் வாடும் அமாவாசையையும் கண்டதில்லை
எப்பொழுதும் உன் முகம் பளிச்சிடும் பௌர்ணமி தான்
உன் சேவை நூற்றாண்டு கடந்தும் வாழ்க

**திருமதி. எஸ். மகேஸ்வரி**
கிராம சுகாதார செவிலியர்
அரசு ஆரம்ப சுகாதார நிலையம், அய்யன்கொல்லி
நெலாக்கோட்டை வட்டாரம்
நீலகிரி மாவட்டம்

# கருக் கலைப்பு

இறைவனால் படைக்கப்பட்ட இந்த புண்ணிய உலகத்தில்
தாயின் அன்பிற்கு இணையின்றி ஏதுமில்லை
என்று எண்ணினேன்
அதனால் தான் உன் வயிற்றில் பிறக்க கடும் தவம்
இருக்க ஆசைப்பட்டேன்.
உன் அன்புக்குச் சமமாக இந்த உலகில் எதுவும் இல்லை
என்று நினைத்தேன்.
தேடி பார்த்தேன் இதை விட அழகான உலகம்
எனக்கு தெரியவில்லை
சின்ன கூட்டுக்குள்ளே சொர்க்கம் இருக்கின்றது
என்று நினைத்தேன்
என் இரு கண்கள் இந்த பூமியை பார்க்க ஆசைப்படுகின்றது.
நான் பூமியை தொடும் முன்பே வேரோடு என்னைப்
பிடுங்கி எரிந்து விட்டாயே
என் மீது என்ன உனக்கு அவ்வளவு கடும் கோபம்
அத்தனை குழந்தைகளைப் போலவே நானும்
மழலை குழந்தையின் சிறப்பாக சிரிக்கவும்
பள்ளிக்கு பறந்து செல்லும் கிளியாகவும்
கல்லூரிக்கு கவி பாடி கொண்டு செல்லும் குயிலாகவும்
விண்ணுலகத்தை ஆட்சி செய்யும் ராணியாகவும்
இத்தனை கனவுகளுடன் பூமியைத் தொட்டு
முத்தமிடுவதற்கு ஆசைப்பட்டேன்
கண்ணுக்கு தென்படும் திசை வரை அகன்ற
பாலைவனமாக தெரிகின்றது.
நிழல் என்னும் நிழற்குடையாக நீ எனக்குத்
தாயாக வருவாய் என்று
இந்தப் பேதை மனது கற்பனையாக பல
சித்திரங்களை வரைகின்றது.

**பு. மஞ்சுளா தேவி**
கிராம சுகாதார செவிலியர்
துணை சுகாதார நிலையம், தேவாலா.
நேலாக்கோட்டை வட்டாரம்.

## சேவையே தேவை எனும் பொது சுகாதாரத்துறையின் நூற்றாண்டு பயணம்

நூற்றாண்டில் நடைபோடும் பொது சுகாதாரத்துறை....
நூறாண்டு வரலாறும் சொல்லுமே சேவை ஒன்றே தேவை என்று ....
துவங்கிய காலம் முதல் மருத்துவச் சேவை ஒன்றே குறிக்கோளாய் ...
தேங்கிய நோய்களெல்லாம் சுவடு தெரியாதே வந்த வழியில் ....
வழிநோக்கி ஓடச்செய்த துறை பொது சுகாதாரத்துறை என்றே பறைசாற்றுவோம் ...
மருத்துவர்கள் செவிலியர்கள் ஆய்வக நுட்புநர்கள் மருந்தாளுநர்கள்
மருத்துவனைப் பணியாளர்கள் எனக் ... குழுவாய் ....
பொதுமக்கள் நலம் காக்க புறப்பட்டத் துறை பொது சுகாதாரத்துறை ...
ஊர்தோறும் பேர் சொல்லும் வண்ணமாய் மருத்துவமனைகள் ....
கிராமம் கிராமமாய் மக்கள் நலம் காக்கப் புறப்பட்ட சுகாதார ஆய்வாளர்கள் ...
கிராம சுகாதார செவிலியர்கள் பகுதி சுகாதார செவிலியர்கள் சமுதாய
நல செவிலியர்கள் ...
அவசர காலத்தில் ஊர்தியோடு வரும் ஊர்தி ஓட்டுநர்கள் ...
அனைவரையும் அரவணைத்துச்செல்லும் அமைகப் பணியாளர்கள்
ஆக்கமான வழிகள் சொல்லி ஆணையிடும் அதிகாரிகள் என ...
நம் அனைவரின் நன்னலம் கருதாத சேவை உள்ளவரை ....
மருத்துவச் சேவையில் யாதொரு தொய்வும் இல்லை என்றே எடுத்துரைப்போம் ....
அதிகாரிகள் மாறினும் அதிகாரங்கள் மாறினும் ...
அதி தீவிரமாய் உருவெடுத்தே மருத்துவச் சேவையில் மாறா நிலையில்
பொது சுகாதாரத்துறை ....
மகப்பேறு முதல் வாழும் காலம் வரை மக்களோடு மக்களாய் மருத்துவச் சேவை
செய்யும்
பொது சுகாதாரத்துறையைப் போற்றுவோம்.
நூற்றாண்டோடு மட்டுமல்ல வரும் ஆயிரமாயிரம் ஆண்டுகளும் ....
பொது சுகாதாரத் துறை நடைபோட்டு சேவை செய்ய ...
அனைவரும் அர்ப்பணிப்பாய் செயல்படுவோமென உறுதியேற்போம் ...

ஆக்கம் :
**ரா.மணிகண்டன்,** உதவியாளர்,
அரசு ஆரம்ப சுகாதார நிலையம்,
தேவதானப்பட்டி
தேனி சுகாதார மாவட்டம்,
அலைபேசி எண். 96553 54712

# "நூற்றாண்டு விழா காணும் மக்களின் துறை"

"நோய் வருமுன் காப்போம் என்னும்
மந்திர சொல்லை மனதினுள்
நிறுத்திய துறை"
"விழிப்புணர்வு விதைமூலம்
மக்களையெல்லாம் மருத்துவராக்க
நினைக்கும் துறை"
"ஏழை மக்களுக்கு என்றுமே
எட்டும் தூரத்தில்
இருக்கும் துறை"
"மூலை முடுக்கெல்லாம் சுகாதார
நிலையங்களை அமைத்து
சுறுசுறுப்பாய் இயங்கும் துறை"
"பிரசவம் என்றதும் தாய்மார்களுக்கு
தோன்றும் பிறவி பயத்தை
நீக்கிய துறை"
"100 வருடங்களாக எளிய
மக்களின் இதயத்தில்
நிற்கும் துறை"
"பல்வேறு திட்டங்களை
பதறாமல் மக்களிடம் சென்று
சேர்க்கும் துறை"
"கர்ப்பிணி தாய்மார்களின் கலக்கங்களை
நீக்க மரு.முத்துலட்சுமி ரெட்டி
நிதியுதவி திட்டம்"
"உலகமே வியந்து போற்றும்
மக்களைத் தேடி
மருத்துவத் திட்டம்"
"தொடக்க நிலையிலேயே
நோய்களைத் தடுக்க கலைஞரின்
வருமுன் காப்போம் திட்டம்"
"தொலைதூர கிராமங்களுக்கும்
தொடர்சிகிச்சை அளிக்க நடமாடும்
மருத்துவக் குழு திட்டம்"
"கல்வி கற்கும் மாணவர்களின்
கண்குறை நீக்க கண்ணொளி
காப்போம் திட்டம்"
"ஆரம்ப நிலையிலேயே பெருங்குறை
நீக்க தேசிய சிறார் நலத்திட்டம்"
"பிரசவித்த தாய்மார்களுடன் பிறந்த
குழந்தையின் நலன் காக்க
குழந்தைகள் நலபரிசு பெட்டகம்"
"பல்வேறு நோய்களை பயப்படாமல்
எதிர்கொள்ள விலையில்லா
தடுப்பூசி திட்டம்"
"என பற்பல திட்டங்களை மனதில்
ஏற்று நடக்கும் துறை"
"மக்களின் நலன் காக்கும் துறைகளுள்
முதன்மையான துறை"
"சமீபத்தில் , கொரோனா என்னும்
கொடிய அரக்கன்
ஊருக்குள் நுழைந்திட"
"மக்கள் எல்லாம் மரண பயத்தில்
உறைந்திட "மற்ற துறைகள் எல்லாம்
சுழற்சி முறையில் சுழன்றிட"
கொலைகார கொரோனாவை எதிர்த்து
முன்கள வரிசையில் நின்ற துறை"
பல இன்னுயிரையும் இழந்து
மக்களை காத்து நின்ற துறை "
கொலை குண கொரோனாவையே
வென்ற துறை "
நம் துறை,
" பொது சுகாதாரம் மற்றும் நோய்
தடுப்பு மருந்துத் துறை"
இது "நூற்றாண்டு விழா காணும்
மக்களின் துறை"
....... வாழ்க! வளர்க!......

**வே.முத்து,** இளநிலை உதவியாளர்
துணை இயக்குநர்
சுகாதாரப் பணிகள் அலுவலகம், தருமபுரி.

## "சுத்தம் சுகம் தரும்"

நம் சுற்றுபுறத் தூய்மை ஆரோக்கியத்தை
மேம்படுத்தும்""
கண்ட இடங்களில் குப்பையை போடாதே!
பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்தாதே!
முகத்தில் முகக்கவசம் அணிந்து செல்லு
முன்பின் இருப்போருக்கு தெளிவாக
எடுத்துச்செல்லு
ஒழிப்போம் நாமே! ஒழிப்போம் நாமே!
கொரோனாவை தானே !
கைகளில் கிருமி நாசினி பூசி !
கவனமாய் இருந்து உயிர்காத்து சுவாசி
இடைவெளி விட்டு இருப்போம்
ஒளிமயமாய்
பரவாமல் கொரோனாவை ஒழிப்பது நம்
பொறுப்பு
ஆறடி இடைவெளியில் இருப்போம் !
ஆண்டவனே வந்தாலும் கைகுலுக்க
மறுப்போம் !
நெடுந் தூர பயணத்தை தவிர்ப்போம் !
நெருங்கி வரும்
கொரோனாவை விரட்டுவோம் !
அடிக்கடி கைகளை கழுவிடுவோம் !
நோய்த் தொற்று
அண்டாமல் நம் மாநிலத்தை
காத்திடுவோம்
கிருமி நாசினி தெளித்து !
கொரானோவை வரவிடாமல் விரட்டு !
தடுப்பு ஊசி மருந்துகளை எடுத்து
கொள்வோம்
தாக்க வரும் கொரோனாவை தடுத்து
வெல்வோம் !

**இரா.மரகதம்**
சமுதாய சுகாதார மேற்பார்வையாளர்
பஞ்சப்பட்டி அரசு ஆரம்ப
சுகாதார நிலையம்
கிருஷ்ணராயபுரம் வட்டாரம்
கரூர் மாவட்டம்

## பொது சுகாதாரத்துறையின் நூற்றாண்டு நிறைவு விழா பாட்டு

சுத்தம் சுகாதாரம் சூதானமாக இருக்கனுங்க !
இன்ன ஒரு கிருமி வரும் நெருங்கு முன்னே அழிக்கனுங்க !
சுற்று புறம் தூய்மையாக இருக்க வேணுங்க !
மக்கள் சுகாதாரமாக வாழ கத்துகோனுங்க !
கை, கால் முகத்தை எல்லாம் சோப்பு போட்டு கழுவிடுங்க !
கெட்ட கெட்ட கிருமி எல்லாம் கிட்ட வரும் விலகி இருங்க !
மழை நீர் தேங்கிச்சின்னா கொசுக்கள் எல்லாம் கூடி விடும் !
மலேரியா, டெங்கு காய்ச்சல் வந்து மக்களை தான் வாட்டி விடும் !
தொழிற்சாலை கழிவுகளை தூர செல்ல வழி விடுங்க !
தூர செல்ல வழி இல்லன்னா தோட்டத்தில குழி எடுங்க !
'உர மாகும் கழிவுகளை உருப்படிய சேகரிங்க
உழவர்கள் நலனுக்காக உரங்கொடுத்து ஆதரிங்க"

**இரா. மரகதம்**
சமுதாய சுகாதார மேற்பார்வையாளர்
பஞ்சப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையம்
கிருஷ்ணராயபுரம் வட்டாரம், கரூர் மாவட்டம்

# சுகமான சுகாதாரம்

பிறப்பும் இறப்பும் இறைவன் படைப்பு

இவ்விரண்டையும் பதிவது சுகாதாரத்துறையின் பொறுப்பு

நுண்ணுயிரும் நோயும் இயற்கையின் செய்கை.

இவ்விரண்டையும் தடுப்பது சுகாதாரத்துறையின் கடமை !

அம்மை நோயை அருள்மிகு அம்மன் என்றோம்., அதனையும் தடுத்தோம் அறிவியல் முறையில் !

கொள்ளை நோயை காலரா என்கிறோம். கூண்டோடு ஒழித்தோம் குடிநீரை காய்ச்சி குடித்தே!

தொழுநோயை துர்பயன் என்றோம். துரத்தியடித்தோம் கூட்டு மருந்தாய் !

மாலைக்கண் நோயை மழலையிடம் கண்டோம். ஊட்டச்சத்தும் உயிர் திரவமும் தந்து தடுத்தோம் !

முடிநரை போலே முதுமை நோயாம் கண்புரை கண்டோம் !

உள் விழி அடியால் ஒளி பெறச் செய்தோம் !

இளம்பிள்ளை வாதம் இயற்கை என்றோம். இல்லை இல்லை இருக்கிறது தடுப்பு மருந்து என்று தடுத்தோம்.

தாய் சேய் மரணம் தரணியில் கண்டோம். தடுத்து நிறுத்தினோம் தடுப்பு முறைகளால் !

ஹெச்ஐவி என்னும் உயிர்க்கொல்லி நோயும் டிபி என்னும் எலும்புருக்கி நோயும் இணைந்தே சவாலாய் இருந்திட்ட போதும் கூட்டு மருந்தால் குணம் பெறச்செய்வோம்.

இளமை காக்க இயன்முறை மருத்துவம், முதுமை காக்க மூலிகை மருத்துவம் !

வளமான வாழ்விற்கு வருமன் காப்போம் திட்டம் !

மங்கள வாழ்விற்கு மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் !

இந்நூற்றாண்டில் இவைகள் அனைத்தும் இன்னும் உள்ளன எதிர்வரும் காலம் !

எதையும் தடுப்போம் இனிவரும் காலம்.

இருக்கவே இருக்கு இளையதலைமுறை !

ச. மல்லகவுண்டன்
கண் மருத்துவ உதவியாளர்
அரசு ஆரம்ப சுகாதார நிலையம்
பஞ்சப்பட்டி

# பொது சுகாதாரம்

முன்னுரை

நாம் வாழும் நாட்களில் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி சுத்தமான உணவு, தூய குடிநீர், பாதுகாப்பான உறைவிடம், சிறந்த நல சேவைகள் போன்றவற்றை பெற்றுக் கொள்கிற போது தான், ஒரு மனிதன் ஆரோக்கியமாக வாழ முடியும்.

அதாவது ஒரு மனிதனுடைய நலமான வாழ்வு என்பது ஆரோக்கியம் தான் இந்த கட்டுரையில் பொது சுகாதாரம் பற்றி பார்க்கலாம்.

சுகாதாரத்தில் அவசியமும், நன்மையும்

சுத்தமற்ற வாழ்வு நோய் உண்டாவதற்கு எளிய வழியாகிறது. குடும்பத்தில் ஒருவர் நோய்வாய்ப்பட்டால், அது அந்த குடும்பத்தை உடல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பாதிக்கிறது. இந்த நோயைத் தாக்கம் நமது வாழ்வை இருளுக்கு கொண்டு செலுத்துகிறது. மேலும் சுகாதாரத்தை பேணாமல், நாகரீக போதைக்கு அடிமையாகி, வாழ்வு சீரழியும் சூழ்நிலையும் உண்டாகிறது.

எனவே சுகாதாரமான வாழ்வு அவசியமாகிறது. சுகாதாரமாக இருப்பது நமக்கு ஆரோக்கியத்தைக் கொடுப்பதுடன், சுற்றத்தாரும் நன்மை அடைவார்கள். இதனால் நமது அகம் மகிழும், அமைதி நீள்கிறது. மேலும் நமது ஆயுளையும் நீடிக்கிறது.

பொது சுகாதாரமும், தடைகளும்

"சமுதாயத்தை பாதுகாப்பதும் ஆரோக்கியமாக வைத்திருப்பதும்" பொது சுகாதாரத்தின் அடிப்படை நோக்கமாகும்.

பொது சுகாதாரம் என்பது "நோய் தடுக்கும் அறிவியல் மற்றும் கலை" என வரையறுக்கப்படுகிறது.

ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு கீழ்க்கண்ட காரணிகள் பெரும் சவால்களாக உள்ளன.

- தொற்று நோய்கள் உலகின் மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருக்கின்றன. (எ.கா: கொரோனா, எய்ட்ஸ், காசநோய், மலேரியா)
- பருவகால காய்ச்சல்களும் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.
- உலக சுகாதார அறிக்கையின்படி இறப்பில் 25% உலக மக்கள் தொகை இறப்பில் தொற்று நோயால் ஏற்படுகிறது.
- ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் வறுமை.

திட்டங்களும், நெறிமுறைகளும்

- மக்கள் தொகையின் ஆரோக்கியத்தை நிர்ணயித்தல்
- தடுப்பூசி வழங்குதல்
- ஊட்டச்சத்து வழங்குதல் மற்றும் வறுமையை போக்குதல்
- வாழ்வின் தரத்தை உயர்த்துதல்

போன்ற நோக்கங்கள் கொண்ட திட்டங்களை செயல்படுத்துவதன் மூலமே சுகாதாரமான, ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க முடியும்.

உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, "ஆரோக்கியம் என்பது முழுமையான, உடல், மன மற்றும் வாழ்வின் நிலை, நோய் அல்லது உடல் நலக்குறைவு இல்லாதது மட்டுமல்ல".

பொது சுகாதாரம் பயன்பாட்டின் பொருட்டு கருத்துக்களால் நியாயப் படுத்தப்படுகிறது. ஆனால் தாராளவாதக் கொள்கைகளாலும், தத்துவங்களாலும் விமர்சிக்கப்படுகிறது.

பொதுமக்கள் அனைவரும் நோய் உண்டாவதை கட்டுப்படுத்த ஒத்துழைத்தலும், மருத்துவ வழிகாட்டுதல்கள் மற்றும் நெறிமுறைகளை பின்பற்றுவதுமே சுகாதாரமான, ஆரோக்கியமான வாழ்வை வாழவைக்கும்.

முடிவுரை

ஆரோக்கியமான சமுதாயத்தை அமைத்திட அரசின், பொது சுகாதாரத்துறை அர்ப்பணிப்புடன் பொதுமக்களின் ஒத்துழைப்பும் இருந்தால் மட்டுமே முடியும், நாளை இனிதாய் விடியும்!

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
முழுதாய் மெய்ப்பிக்க இணைந்து செல்வோம், வெல்வோம்!

**த. மதன்**
காசநோய் சிகிச்சை மேற்பார்வையாளர்,
கடவூர் வட்டாரம்

## பொது சுகாதாரம்

நோய் தடுக்கும் அறிவியலே பொது சுகாதாரம்
நலமான வாழ்வுக்கு விதை சுகாதாரம்
ஆரோக்கிய வாழ்வென்பதே மனித ஆதாரம் – இதை
புத்தியிலேற்றிக் கொள்ளாவிட்டால் வாழ்வு சேதாரம்!

வாழ்வை வளப்படுத்த அரசு தருவது,
நல்ல பல அவசியமான சட்டம்!
அதை வீடு வரையில் கொண்டு வருவது,
நம்ம சுகாதாரத் துறை திட்டம்!

மக்களைத் தேடி வருவதால
எண்ணாதிங்க மட்டம்!
பயன்படுத்தாமல் விட்டுவிட்டால்,
மக்களுக்கே நட்டம்!

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்,
நோக்கம் நிறைவேற்ற ஒன்றிணைந்து செல்வோம்,
சுகாதாரம் பேண வீடுதோறும் சொல்வோம்,
நாட்டின் சுகாதாரக் கேடினை வெல்வோம்.!

**த. மதன்**
காசநோய் சிகிச்சை மேற்பார்வையாளர்,
கடவூர் வட்டாரம்

# வரலாற்றில் தொற்றுநோய்களும், பொது சுகாதாரத் துறையின் ஆளுமையும்

**வரலாற்றில் சுகாதாரம்:**

மனிதகுல வரலாற்றில் நீண்ட நெடுங்காலமாக மனித சமுதாயத்திற்கு தீங்கு விளைவிக்கும் நுண்ணுயிரிகளின் உருமாற்றம் மற்றும் புதிய நுண்ணுயிர்களால் தொற்று நோய்களின் பெருந்தாக்கம் ஏற்படுவதும் அதனால் மக்கள் வாழ்வியல், கலாச்சாரம் ஆகியவற்றின் மீதான தாக்கமும் பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வருகிறது.. அப்படியான நோய்களை உருவாக்கும் நுண் கிருமிகளின் ஆதிக்கத்தில் இருந்து அந்தந்த கால சூழ்நிலையில் உள்ள விஞ்ஞான வளர்ச்சியின் துணையோடு மனிதர்களை பாதுகாப்பதற்கு கிருமிகளுக்கு எதிரான போராட்டத்தில் அறிவியல் சார்ந்த அனுகுமுறையோடு அவற்றிலிருந்து பொது சுகாதாரத் துறை மக்களை மீட்டெடுத்துள்ளது..

பதின் மூன்றாம் நூற்றாண்டில் மத்திய கிழக்கு நாடுகளின் மக்களையும், மங்கோலிய படை வீரர்களையும் கோடிக்கணக்கில் கொன்று குவித்தது "ப்ளாக் டெத்" என்று அறியப்பட்ட "ப்ளேக் நோய்". அது மக்களின் கலாச்சாரம், மொழி, இனம் ஆகிய அனைத்தின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

இந்த சம்பவம்தான் உலகம் முழுவதும் பொது சுகாதாரத்தின் மீது ஒரு புதிய பார்வையை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியது.

"பிளாக் டெத்" நிகழ்வு அரசியல் மற்றும் சமூக மாற்றத்திற்கான காரணமாகவும் அமைந்தது.

"ப்ளேக் நோய்" தொடங்கிய காலங்களில், இந்நோய் பூனைகளாலும் நாய்களாலும் வந்தது எனக் கருதப்பட்டு பூனைகளையும், நாய்களையும் கொன்று குவித்தனர். அதே நேரத்தில் நோய் பரவக் காரணமான எலிகள் பத்திரமாக உலாவின. கையை வெட்டி இரத்தத்தை வெளியேற்றுவதன் மூலம் நோயை விரட்ட முயன்றனர். தங்களைத் தாங்களே பிரம்புகளால் அடித்துக் கொண்டால் கடவுளின் கோபம் தீரும் என்று நம்பினர். இந்த நோய் கடவுளால் அனுப்பப்பட்டது என்று நம்பிய மக்கள் கடவுளின் தண்டனை என்றும் ஏற்றுக்கொள்ளத் தொடங்கினர்.

இந்தக் காலகட்டமான 1894–ல் பிரெஞ்சு விஞ்ஞானிகள் அலெக்ஸாண்ட்ரி எர்சின் மற்றும் பால் லூயி ஆகியோர் பிளேக் நோய் பரவுவதற்கு எலிகள் தான் காரணம் என்பதையும் நோயிற்கு மருந்தையும் கண்டறிந்தனர். இதுதான் சுகாதாரப் புரட்சியின் முதல் விதையாகும்.

**தொற்றுநோய் – எதிர்காலம்**

மருத்துவ விஞ்ஞானிகள் ஜேக்குலின் மற்றும் அன்ரி ஆகியோர் "ஏன் இந்த

கொள்ளை நோய்?" என்ற ஆய்வுநூலின் மூலமாக கொள்ளை நோய் என்பது இடைக்காலத்தில் வந்த நோய் மட்டுமல்ல. எதிர்காலத்திலும் வரக்கூடிய ஒரு நோய். அதனை எதிர்கொள்ள மனித சமுதாயத்திற்கு அறிவியல் அணுகுமுறையே தேவை என்று வழிகாட்டினர்.

**பொது சுகாதாரத் துறையின் ஆளுமை**

மனித வரலாறு அறியப்பட்ட காலத்திலிருந்து இன்றளவும் காலரா, பன்றிக் காய்ச்சல், பறவைக் காய்ச்சல், எபோலா வைரஸ் காய்ச்சல் போன்ற கொள்ளை நோய்கள் அவ்வப்போது மனித சமுதாயத்தை அச்சுறுத்திய போதெல்லாம் நமது பொது சுகாதாரத் துறையின் வீரியமிக்க தடுப்பு நடவடிக்கைகளால் ஒவ்வொரு முறையும் மனித உயிர்களை நோய்களுக்கு பலியாகாமல் தக்கவைத்துக் கொண்டுதான் இருக்கின்றன.

அதனைத் தொடர்ந்து கடந்த சில ஆண்டுகளாக உலக நாடுகளையும், மனித சமுதாயத்தையும் மிகப்பெரிய அளவில் அச்சுறுத்தி வரும் கொரோனா என்ற கொடிய வைரஸ் நோயின் தாக்குதலால் கோடிக்கணக்கான மனித உயிர்களைப் பறிகொடுத்துள்ளோம்.

உலகெங்கும் வாழ்வியல், பொருளாதாரம் மற்றும் கலாச்சாரத்தையே கொரோனா வைரஸ் புரட்டிப் போட்டுவிட்டது. எந்த வடிவத்தில் நுண்கிருமிகள் வடிவம் எடுத்தாலும் நமது பொது சுகாதாரத் துறையின் ஆளுமையால் பொது மக்களின் வாழ்வையும் இருப்பையும் உத்திரவாதப்படுத்திக் கொண்டே வந்துள்ளது.

**பொது சுகாதாரத்துறை முன்களப் பணியாளர்களின் தியாகம்..**

2020 முதல் கொரோனா வைரஸ் உலக அளவில் பரவி வந்த வேளையில், இந்தியாவில் மட்டும் கொரோனா பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டு 1,45,000–க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். இந்த பட்டியலில் கொரோனா பெருந்தொற்றுக்கு எதிராக முன்களத்தில் பணியாற்றி உயிரைப் பறிகொடுத்த எண்ணற்ற மக்களில் பொது சுகாதாரத் துறை யின் முன்களப் பணியாளர்களும், மருத்துவர்களும், செவிலியர்களும் அடக்கம். இதில் இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் அதிகமான மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட முன்களப்பணியாளர்கள் உயிர்த்தியாகம் செய்துள்ளனர்.

அதேபோல் கொரோனா இரண்டாவது அலையில் முன் களப்பணியாளர்களுக்கு பொது சுகாதாரத் துறையின் மூலமாக வழங்கிய தடுப்பூசி, தற்காப்பு மருந்துகள், உயிர்காக்கும்கவசங்கள் உதவியது என்றாலும், இரண்டாவது கொரோனா அலை வீச்சிலும் முன்களப் பணியாளர்கள் ஏராளமாக உயிர்த் தியாகம் செய்திருக்கிறார்கள்.

**அறிவியல் அணுகுமுறையை முன்னெடுப்போம்**

கொரோனா வைரஸ் தொற்று குறித்து உலக சுகாதார நிறுவனம் (WHO)

கொரோனா வைரஸின் பாதிப்பு நீண்டகாலம் தொடரக்கூடியது. அதில் இருந்து தற்காத்துக் கொள்ள அனைவரும் அறிவியல் ரீதியான பரிந்துரைகளை முன்னெடுக்க வலியுறுத்தியுள்ளது. அதன் அடிப்படையில் தடுப்பூசியின் அவசியம், முகக்கவசம், சுய மற்றும் சமூக சுகாதாரம் போன்றவற்றின் மீதான புரிதலில் முன்களப்பணியாளர்கள் மேம்பட்டு அதனை மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும்.

உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசனையின்படியும், மத்திய மற்றும் மாநில அரசின் வாயிலாக தமிழக பொது சுகாதாரத் துறை வழங்கும் வழிகாட்டுதலின்படியும், முன்களப் பணியாளர்கள் தங்களுக்கான ஒற்றுமையுடனும், மனித சமுதாயத்திற்கு தீங்கு விளைவிக்கும் தீநுண்மிகள் பற்றிய புரிதலுடனும் அறிவியல் பூர்வமான அணுகுமுறையை கையாள்வதால் மட்டுமே இதுபோன்ற பெரும் தொற்றுகளில் இருந்து மக்களை வென்றெடுக்க முடியும் என்பது நிச்சயம்

நன்றி


**சு. மாரிமுத்து ,**
வட்டார சுகாதார மேற்பார்வையாளர்,
அரசு ஆரம்ப சுகாதார நிலையம்,
கடம்பூர் – 628 714,


## காப்பர் T கவிதை

காப்பர் T என்னும் சாதனம் நான் –
பெண்களை
கருக் கலைப்பில் இருந்து காக்கும்
காவலன் நான்
அரசால் அனுப்பப்பட்ட ஒரு சாதனம் நான்
அதுவே பெண்களுக்கு ஒரு சீதனம் நான்
என் பெயர் 380A – என்னை
ஏற்றுக் கொண்டால் கருத்தரித்ததிலிருந்து
நிம்மதி
இலவசமாக என்னை போட்டுக் கொள்
இன்பம் உனக்கு உண்டு இதை ஏற்றுக்
கொள்
ஒரு குழந்தைக்கும் மறு குழந்தைக்கும்
ஐந்து வருடம் இடைவெளி வேண்டும்
என்னை போட்டுக்கொண்டால்
கரு தரித்ததிலிருந்து தலைவலி நீங்கும்
உனக்குள்ளே நான் இருப்பேன்
உன் உயிரை நான் காப்பேன்
என்னைக் கடவுளாக நீ நினைத்தால்
உன்னை காலம் முழுதும் நான் காப்பேன்
என்னை வேண்டும் என்றால்
மாட்டிக் கொள்
வேண்டாம் என்றால்
மாற்றிக் கொள்.

இப்படிக்கு
**பெண்களைக் கருத்தரித்தல்,**
**கருவுதலிலிருந்து காப்பாற்ற**
**காத்துக் கொண்டிருக்கும்**
**காப்பர்** T 380 A


**P. மாரியம்மாள்**
VHW
AHAPPAH – HSC

# பொது சுகாதாரத்துறை நூற்றாண்டு விழா

நோய்நாடி நோய் முதல் நாடி அதுதணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல் என்ற வையகம்
புகழும் திருவள்ளுவன் வாக்கிற்கிணங்க

நோய்க் கிருமி, வைரஸ் என
தொற்று தொற்றா நோய்கள் என்ற
காரிருள் சூழ்ந்து நின்றபோது ஆயிரம்
கதிர்கள் கொண்ட சூரியனாய்
காரிருள் நீக்கவந்த கதிரவனாய்
1922–ல் தோன்றினாயே!

அம்மை நோயால் அல்லல்பட்டபோது
அம்மைத் தடுப்பு மருந்தை செலுத்த
அல்லல்பட்டு அம்மை நோயிலிருந்து
காத்தாயே!

காலரா கொத்துக் கொத்தாய் மக்களை
கொண்டு சென்றபோது காலராவை
ஒழித்து
மக்களின் உயிரைக் காத்தாயே!

குடும்பக் கட்டுப்பாடு
முறையை செயல்படுத்தி,
"நாம் இருவர் நமக்கு ஒருவர்"
என்ற தாரக மந்திரத்தை
ஜெபிக்கச் செய்தாயே!

கக்குவான் நோய், கத்தி முனையில்
நிறுத்தியபோதும் குழந்தைகளை
கக்குவானிலிருந்து காத்தாயே!

எய்ட்ஸ் விழிப்புணர்வு ஏற்படுத்தி
எய்ட்ஸ் நோயிலிருந்து காத்தாயே!

போலியோ நோய் தடுப்பு மருந்தை
தீவிரமாக கொடுத்து
போலியோ இல்லாத தமிழகத்தினை
உருவாக்கி குழந்தைகளைத்
துள்ளி விளையாடச் செய்தாயே!

கொசு எனும் கொடிய அரக்கன்
விளைவிக்கும் கொள்ளை நோய்களைக்
கொன்று வீழ்த்தினாயே!

டிஇசி என்ற சின்ன குத்தூசிக்கொண்டு
யானைக்கால் நோயை ஒழித்தாயே!

தொழுநோய் மக்களின்
தேகத்தை அழித்தபோது
உணர்ச்சியற்ற தேமலைக் கண்டறிந்து,
நோய் முதிர்ச்சி
அடையாமல் தடுத்தாயே!

காச நோய் மக்களை
கதற விட்டபோது தடுத்து
மக்களை காத்தாயே!

" உண்டி கொடுத்தோர் உயிர்
கொடுத்தோரே"
என்ற வாழ்வாதாரத்தின் அடிப்படையாம்
உணவில் கலப்படம் செய்யும் கயவர்களை
ஒழிக்க உணவுப் பாதுகாப்பு துறை
அமைத்தாயே!

விபத்தில் சிக்கி தவிக்கும் மக்களுக்கு
108 ஆக வந்து உதவிக்கரம் நீட்டினாயே!

ஏழை கர்ப்பிணிகளின் நலம் காக்க
முத்து லெட்சுமி ரெட்டி
மகப்பேறு உதவி
திட்டம் வழங்கினாயே!

நிமோனியா வந்து நீங்காமல்
நுரையீரலைத் தாக்கியபோது
நிமோனியாவிலிருந்து குழந்தைகளைக்
காத்தாயே!

கர்ப்பிணிகளுக்கும் குழந்தைகளுக்கும்
தேசிய தடுப்பூசி அட்டவணை
ஏற்படுத்தி காத்து நின்றாயே!

இலவச மருத்துவ உதவிக்கு
104– ஏற்படுத்தினாயே!

புகையிலையினால்
ஏற்படும் தீமைகளை
எடுத்துரைத்து சமுதாயத்தை
சீர்படுத்த புகையிலை தடுப்புப் பிரிவு
ஏற்படுத்தினாயே!

டெங்கு வந்து தீராத
வேதனை தந்தபோதும்
விடாமல் உழைத்து வீழ்த்தினாயே!

புற்று நோயிலிருந்து பாதுகாத்திட
தொற்றா நோய் பிரிவு ஏற்படுத்தி
சிதைய செய்தாயே!

குக்கிராம மக்களுக்கும்
மருத்துவ உதவி செய்திட நடமாடும்
மருத்துவக் குழு மூலம் சிகிச்சை
செய்தாயே!

ஏழை கர்ப்பிணிகள் குழந்தை பெற்று வீடு
வரை நலமுடன் செல்ல
JSSK திட்டம் வகுத்தாயே!

கருவிலிருக்கும் குழந்தை
ஆரோக்கியமாக பிறக்க
ஆரோக்கிய தாய்சேய்
நலப்பெட்டகம் வழங்கினாயே !

**தேசிய நலவாழ்வு சங்கம் அமைத்து**
**பலநலம் காக்கும் திட்டங்களை**
**செயல்படுத்தினாயே!**

முகாம் நடத்தி ஏழைக் குழந்தைகளுக்கு
இருதய அறுவை சிகிச்சை
செய்து காத்தாயே!

கொரோனா உயிர்களை
கொள்ளை கொண்டு போகாமல்
அசுரவேகத்தில்
தடுப்பூசி செலுத்தி அதிகம்
பரவாமல் அசர வைத்தாயே!

புன்னகையினால் புத்துயிர் அளிக்கும்
குழந்தைகளுக்கு உதடு பிளவால் ஏற்பட்ட
அவலட்சணத்தினை –பிளாஸ்டிக் சர்ஜரி
செய்து புன்னகை பூக்க செய்தாயே!

நான் உன்னைத் தேடி வருகிறேன் என
மக்களை தேடி மருத்துவம் எனும்
அனைவருக்கும் மகத்தான திட்டம்
வகுத்தாயே!

தீய நோய்களை அழிக்க,
ஆயிரம் கரங்களுடன்
காத்திருக்கும்
நூற்றாண்டு காணும்
எங்கள் பொது சுகாதாரத் துறையே!

அனைவரும் நலமுடன் வாழ
நலவாழ்வு இயக்கம் ஏற்படுத்தினாயே!

கருவிலிருந்து காத்து  எங்களை
கல்லறைக்குஅனுப்பாமல் இருக்க
கடைசி வரைஎங்களுக்காக
போராடும் போராளியே!

உன்னுடைய அயராத உழைப்பும்,
தன்னலமில்லா சேவையும்,
மக்களை காக்க, நீ மேற்கொள்ளும்
விடமுயற்சிகளும்
உன்னை பல்லாண்டு,
பல நூறு ஆண்டுகள்
நிலைக்கும் பல நூறு ஆண்டு
சிரஞ்சீவியாய் வாழ வைத்திடும்.

**M. மாலதி**
உதவியாளர்
துணை இயக்குநர்
சுகாதாரப்பணிகள் அலுவலகம்,
புதுக்கோட்டை.

# பொது சுகாதாரத் துறை

அனைத்து மக்களின் நலனையும்
பேணிக்காக்கும் துறை !
நமது பொதுசுகாதாரத் துறை !
ஆரோக்கிய வாழ்வின் அடிப்படை
சேவைகளை
செய்யும் துறை நமது
பொதுசுகாதாரத் துறை !
இனிய வாழ்வுக்கு நல திட்டங்களை
வழங்கும் துறை !
நமது பொதுசுகாதாரத் துறை !
ஈடில்லா சேவைகளை
மக்களுக்குக் கிடைக்கச் செய்யும் துறை
பல திட்டங்களை செயல்படுத்தும் துறை
நமது பொதுசுகாதாரத் துறை !
உயிர்களின்  ஆரோக்கியத்திற்கும்
வாழ்வுக்கும்
உழைக்கும் துறை
நமது பொதுசுகாதாரத் துறை !
ஊர் போற்றும் உன்னத
சுகாதார மக்கள் நலத் திட்டங்களை
செயல்படுத்தும் துறை
நமது பொதுசுகாதாரத் துறை !

எண்ணிலடங்காத திட்டங்களை
செயல்படுத்தும் துறை
நமது பொதுசுகாதாரத் துறை !
ஏழை மக்களின் வாழ்வு ஏற்றம் பெற
செயல்படும் துறை
நமது பொதுசுகாதாரத் துறை !
**ஐயம் ஏதும் இன்றி மக்களால்**
**போற்றப்படும் ஒரே துறை**
**நமது பொதுசுகாதாரத் துறை !**
நாம் இத்துறை செவிலியர்களாக
ஒற்றுமையாக ஒரு மனதாக மக்கள்
நலனுக்காக பணிபுரியும் துறை
நமது பொதுசுகாதாரத் துறை !
ஓங்கட்டும் பொது சுகாதாரத்
துறையின் பணிகள்
ஔடதம் கொடுத்து மக்களின்
பிணியினை தீர்த்து
மக்கள் நலவாழ்வுக்காக
இரவு பகல் பாராது
அயராது உழைக்கும் ஒரே துறை
அஃது நமது பொதுசுகாதாரத் துறை !

**மா.முத்துமாரி**
முதலாம் ஆண்டு மாணவி
சுகாதார மேம்பாட்டு கல்வி மையம்
பூவந்தி

## புவிபோற்றும் செவிலியர்...

தாயாய் மகளாய்
உடன் பிறப்பாய்.
தாங்கிப் பிடிக்கும்
*உயர் பிறப்பே*...

நோயில் நாங்கள்
படுத்த போது
கூடவே இருக்கும்
*உயிர்த் துடிப்பே*..

சேயாய் நாங்கள்
ஆகிடுவோம்
*உங்கள் சேவை*
*கரங்கள் தொடும்
போது*..

செவிலித் தாயை
மகளாய்ப்
பார்க்கின்றோம்
சிகிச்சை முடித்து
வரும் போது..

ஏழை எளிய
மக்களுக்கு
*நர்ஸம்மா தான்*
*டாக்டரம்மா*....

கலெக்டர் கூட
கனிவோடு அழைப்பார்
*உங்களைத்* *தானே*
*ஸிஸ்டரம்மா*...

கொட்டும் உதிரம்
புண் பட்ட சதிரம்
தொட்டுச் சிகிச்சை
செய்திடுவீர்..

அருவருப்பெனவரும்
சிறுவெறுப்பை
அன்புப்
பெருநெருப்பால்
புடம் போட்டிடுவீர்...

தூய காற்று
தூய நீர்
தூய வானம்
தூரிகை தீட்டிய
*வெண் சீருடை
மேகங்கள்*...

வெம்பிய நோயாளிக்கு
நம்பிக்கை வான்மழை
தீர்த்திடும் தாகங்கள...

வானவில் வண்ண
மாத்திரை வழங்கும்
வலி நிவாரண
சோலைகள்...

உயர்வோ தாழ்வோ
ஆணோ பெண்ணோ
சேவை ஒன்றாய்
சமத்துவ சேனைகள்...

கூடவோ குறைவோ
குடும்பம் குழப்பம்
சம்பளம் நொம்பளம்
இம்மியும் காட்டா
இன்முக தேவதைகள்..

மதிப்போம் உணர்வுகள்
இவர்கள் உரிமைகள்
தீரணும் தேவைகள்...

உயிர் வரும் போதும்
விடைபெறும் போதும்
கூடவே இருப்பது
தாதியம்மா...

மருத்துவம்
உணர்த்தும்..
சமத்துவ
சாதியம்மா....


(கவிஞர்.
காசாவயல் குமார்)..
**சு.முத்துகுமாரசாமி**
*மருத்துவ மல்லா*
*மேற்பார்வையாளர்*
சமுதாய சுகாதார நிலையம்..
பச்சூர்...70948 99101
திருப்பத்தூர் மாவட்டம்

## நூற்றாண்டு கண்ட பொது சுகாதாரத் துறையை வாழ்த்துவோம்!

நோய்களும் இன்றி மக்கள்
நூறினைத் தொட்டு வாழ
சாய்ந்துமே வீழ்ந்திடாமல்
சாதனை பலவும் செய்து
ஆய்ந்துமே நோயை நீக்க
அரும்பணி ஆற்று கின்றார்
மாயுமுன் உயிரை எல்லாம்
மருத்துவம் செய்து காப்பார்!

பொதுமக்களின் நலனைக் காக்கும்
பொது சுகாதாரத் துறையின் பங்கு
முக்கியம் வாய்ந்த தாகும்
முயற்சியைப் போற்ற வேண்டும்!
திக்கெல்லாம் பரவிக் கொன்ற
தீயநுண் கிருமி யோடு
சிக்கியே தவித்தோர் தம்மை
சிகிச்சையும் செய்து காத்தார்!

இறப்பினைத் தடுத்துக் காக்க
இன்பத்தை மறந்து விட்டு
உறக்கமும் இன்றி நாளும்
உயிரையும் பணயம் வைத்தே
அறப்பணி ஆற்று கின்ற
அரும்பெரும் மருத்து வத்தின்
திறத்தினை நாமும் போற்றித்
தீந்தமிழ் வாழ்த்துச் சொல்வோம்!

**ச.முத்துராமன்**
சுகாதாரஆய்வாளர்

## சுகாதாரமே பொது சுகாதாரமே!!

நூற்றாண்டு கண்ட தமிழகப் பொது சுகாதாரமே!!

பெரியம்மை, சின்னம்மை ஒழிப்புப் பணியில் முதலிடம் கண்ட தமிழகமே!!

சுகாதாரமே தமிழக பொது சுகாதாரமே!!

NMCP, NMEP நிவர்த்தி செய்த தமிழகமே

தொழுநோய் ஒழிப்பில் முதலிடம் கண்ட தமிழக பொது சுகாதாரமே.

**' காலரா"** வை ஒழித்து கட்டிய தமிழக பொது சுகாதாரமே

**'போலியோ"** ஒழிப்பில் சதம் அடித்து முதலிடம் கண்ட தமிழக பொது சுகாதாரமே.

**டெங்கு, சிக்கன்குனியா** குறைப்பு கண்ட தமிழக பொது சுகாதாரமே.

தாய், சேய் பிரிவில் தன்னிறைவடைந்த பொது சுகாதாரமே தமிழக பொது சுகாதாரமே

MRMBS எனும் திட்டமும் பிறப்பு இறப்பு பதிவினிலும் நூறு சதம் வெற்றி கண்ட தமிழக பொது சுகாதாரமே ஊட்டச்சத்து குறைபாட்டினை நிவர்த்தி செய்த தமிழக பொதுச் சுகாதாரமே 108 சேவையிலே 104 சேவையிலே

100 சதம் வெற்றி கண்ட தமிழக பொத சுகாதாரமே . கொரோனா ஒழிப்பின் தடுப்பூசி பணியில் 100 சதம் வெற்றி கண்ட 'நீலகிரி" மலை மாவட்டமே.

மக்களை தேடி மருத்துவம் தந்த தமிழக முதல்வரே! உன்னத முதல்வரே

அரசு ஆரம்ப சுகாதார மருத்துவ அலுவலர்களாலும், களப்பணியாளர்கள், உள்பணியாளர்கள் மற்றும் பொது சுகாதாரத் துறையின் அனைத்து அலுவலகப் பணியாளர்களின் சீரிய செயல்பாடுகளாலும், ' ஒன்றுபடுவோம் செயல்படுவோம் அனைத்திலும் வெற்றி பெறுவோம்" என்பதனை நமது துறையின் வேத மந்திரமாகக் கொண்டு நமது பணியினை தொடர்ந்து மேற்கொள்வோம் . ஜெய் ஹிந்த்

**கே.டி.மூர்த்தி**
சுகாதார ஆய்வாளர் நிலை –1
அரசு ஆரம்ப சுகாதார நிலையம், சோலூர்.
உதகமண்டலம் வட்டாரம். நீலகிரி மாவட்டம்.

# பொன்விழா கண்டு பொலிவு பெரும்
# பொது சுகாதார(ம்)துறை

**பொது வாழ்வில் தன்னை அர்ப்பணித்து கொண்ட பொது சுகாதார(ம்) துறை**

இறையுள்ளமுள்ள இயக்குனர்கள்,
தூய்மைமிக்க துணை
இயக்குனர்கள்,
அன்புள்ளம் கொண்ட உயர்
அதிகாரிகள்,
மனிதநேயமுள்ள மருத்துவர்கள்,
மகத்துவம் கொண்ட மருந்தாளர்கள்,
நிறைவான நுண் கதிர்வீச்சாளர்கள்,
ஆற்றலான சுகாதார ஆய்வாளர்கள்,
தாய் குணம் கொண்ட
கிராம சுகாதார செவிலியர்கள்,
சேய் முகம்மாறா
செவிலியர்கள்,
ஓய்வறியா ஓட்டுனர்கள்,
அய்யமில்லா ஆய்வக நுட்புனர்கள்,
அஞ்சா நெஞ்சம் படைத்த அமைச்சு
பணியாளர்கள்,
இன்னும் பற்பல
ஊழியர்களையும்
சேவகர்களாக செதுக்கி வைத்த
சுகாதார(ம்)துறை,

மழை வெள்ளம்,
புயல் சீற்றம்,
பெருந்தொற்று
பேரிடர் என்று எந்நிலையிலும்
தன்னலம் அறியா பயம் மறந்து குடும்பம்
மறந்து சுக துக்கம் மறந்து களத்தில்
சேவைக்காக சேர்ந்திருக்கும்
சுகாதார(ம்)துறை...

எத்துறை காட்டிலும்
பொதுமக்களுக்காக தன்
பொற்கரங்களால்
பொதுசேவை செய்திட போர்க்கால
சூழலில் சுழண்டு கொண்டிருக்கும்
இத்துறை என்றும் சிறப்பே,

பொது சுகாதார(ம்)துறை
பொன்விழா கண்டு
பொலிவு பெரும்
பொது சுகாதார(ம்)துறை ...

**அ. முபாரக்,**
ஓட்டுநர்,
9944441435
அரசு சமுதாய சுகாதார நிலையம்,
மீனசுருட்டி,
ஜெயங்கொண்டம் வட்டாரம்,
அரியலூர் மாவட்டம்.

# நோய் நாடி நோய் முதல் நாடி

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

ஒருவரின் உடலில் நோயைக் குணப்படுத்த வேண்டுமாயின், அது என்ன நோய் என்பதை அறிந்து, நோய் உடலில் எங்கு எப்படி உருவானது என்பதை ஆராய்ந்து அந்த நோயைக் குணப்படுத்தக் கூடிய மருத்துவத்தை அறிந்து, அந்த மருத்துவத்தை பிழையில்லாமல் முறையாக செய்ய வேண்டும் என்ற வள்ளுவரின் கூற்றுக்கு ஏற்ப நோய் எங்கு, எப்படி உருவானது என்பதை கண்டறிந்து, அந்த நோய் வருவதற்கான மூலாதாரத்தை அறிந்து, அதை தடுத்து பொது சுகாதாரத்துறை பல கொள்ளை நோய்களை தடுத்து வருகிறது.

**மக்களைத் தேடி மருத்துவம்**

"மக்களைத் தேடி மருத்துவம்
தமிழகத்துக்கு கிடைத்த மகத்துவம்"

பொது மக்களின் நலன் கருதி, அவர்களின் இல்லத்திற்கே சென்று தொற்றா நோய்களான "உயர் ரத்த அழுத்தம்" மற்றும் "நீரிழிவு நோய்"களுக்கு பரிசோதனைகள் செய்து மருந்துகள் வழங்குவதற்காக தமிழக அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறையின் "மக்களைத் தேடி மருத்துவம்" என்ற மகத்தான திட்டம் ஆகஸ்ட் 5–ம் தேதி 2021 இல் துவங்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம்

❖ நோயாளிகளுக்குத் தேவையான பிசியோதெரபி (இயன்முறை சிகிச்சை) மற்றும் வலி நிவாரணம், ஆதரவு சிகிச்சை பல்வேறு பரிசோதனைகள் ஆகியவை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

❖ பயனாளிகளின் வீட்டிற்கு சென்று தொற்றா நோய்களுக்கான " மருந்து பெட்டகம்" வழங்கப்படுகிறது.

❖ வயதானவர்கள் மற்றும் நடமாட முடியாமல் வீட்டிலேயே இருக்கும் நோயாளிகளுக்கு "ஆதரவு சிகிச்சை" வழங்கப்பட்டு வருகிறது.

முடிவுரை:–

" மக்களுக்கான சுகாதாரத் திட்டங்களை வழங்குவதில் தமிழ்நாடு உலகுக்கே முன்னுதாரணம்" ஆக திகழ்கிறது.

– உலக சுகாதார நிறுவனத்தின் இந்திய
பிரதிநிதி "டாக்டர். நடாமேனாப்டே"

தொற்று மற்றும் தொற்றா நோய்களை தடுப்பதிலும், கட்டுப்படுத்துவதிலும், சிகிச்சை அளிப்பதிலும் நம் மாநிலம் முன் மாதிரியாக திகழ்வதே நம் துறையின் " நூற்றாண்டு சாதனை" ஆகும்.

**ச. முத்துராமன்**
சுகாதார ஆய்வாளர்
கடவூர் வட்டாரம்

## பொது சுகாதாரத்துறை நூற்றாண்டு விழாவிற்கு தமிழ் அகர வரிசையில் – கவிதை

அன்னையர்களை காத்து ஊக்கம் அளிக்கும் (MRMBS) திட்டம்!
ஆன்மாவை காத்திடும் மக்களைத் தேடி மருத்துவம் முதல்,
இன்பமாக எல்லோரும் வாழ்ந்திட (PHC) சேவைகள் வரை!
ஈடு இணை இல்லாமல் சேவை செய்யும் சுகாதாரத் துறை பணியாளர்கள்!

உயிர் காக்கும் தோழனாக இன்னுயிர் காக்கும் சுகாதாரத் துறையின்
–மருத்துவர்களின் சேவையாக!!
ஊர்தோறும் அனைத்து இடங்களிலும் நோய்த் தடுப்பு பணிகளை
–மேற்கொள்ளும் மஸ்தூர் பணியாளர்கள் (DBC–WORKERS)
–சேவையாக விளங்கும் சுகாதாரத் துறை
எல்லோருக்கும் பிறப்பு முதல் இறப்பு வரை அடையாளச் சின்னமாக
–திகழும் (பிறப்பு – இறப்பு பதிவுகள்)!
ஏழை எளியவர்களுக்கு 24 மணி நேரமும் மருத்துவ சேவை கிடைக்க
–கிராமம் தோறும் பணியாற்றும் செவிலியர்கள்!!
ஐயம் கொடுக்கும் புதுப் புது நோய்கள் (100 ஆண்டுகளில்) அந்த
–நோய்களுக்கு தடுப்பு ஊசி கொடுத்து விரட்டி அடித்து சாதனை
–படைத்த சுகாதாரத் துறையை போற்றுவோம்!
ஒன்று பட்டால் உண்டு வாழ்வுக்கு எடுத்துக்காட்டாக ஒன்று கூடி
–விரட்டியடித்து சாதனை புரிந்த (COVID 19)!
ஓட்டம் ஓட்டமாக களப்பணியில் இறங்கிப் பாடுபட்ட நமது பணியாளர்களின்
–தியாகம் "சுகாதாரத் துறையின் கிரீடம்"
ஔடதம்(மருந்து) கொடுத்து உயிர் காக்கும் நமது சுகாதாரத் துறை
–வாழிய!
–வாழியவே!!

"100 ஆண்டுகளில் மருத்துவத் துறையில் பணியாற்றிய
அனைத்து நல் உள்ளங்களுக்கும் சமர்ப்பணம்"

தங்கள் உண்மையுள்ள,
D. மைதிலி, தட்டச்சர்
துணை இயக்குநர்
சுகாதாரப் பணிகள் அலுவலகம்.
பெரம்பலூர் மாவட்டம்

# பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின் நூற்றாண்டு விழா 1922 – 2022

## கரூர் மாவட்டத்தின் நூற்றாண்டு விழா – கவிதைப்போட்டி

### சுகாதாரத் தாய்

சுகாதாரத்தாயே காலங்களுக்கு
ஏற்பபுதுமை படைப்பாயே !
குழந்தைக்கு பரிசு பெட்டகம்
கொடுத்து வளர்த்தாயே !
இளம்பெண் பெற்ற தாயாய்மாறி
நலக்கல்வி வழங்கினாயே !
அழகான குடும்பம் உருவாக்கிட
தங்கத்தந்தையாய் மாறினாயே !
உற்ற தோழனாய் மாறி உயிர்
காக்க முன்வந்தாயே !
பலநூறாண்டு வளர்ந்து புதுமை
படைப்பாய் சுகாதாரத்துறையே !!
நன்றி

திருமதி. ப.. லோகாம்பாள்
(இளநிலை உதவியாளர்)
துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள்
அலுவலகம், கரூர் மாவட்டம்,
அலைபேசி எண், 9442822718

நாட்டின் எல்லையை காப்பது
இராணுவம்

நாட்டு மக்களின் உயிரைக் காப்பது
மருத்துவம்

இவை இரண்டையும் நாம் தலை
வணங்கி போற்றுவோம்

தோல்வி என்பது முடிவல்ல

சாதனை என்பது எளிதல்ல

மருத்துவ சேவை எங்களது
இலட்சியம்

மருத்துவ பயிற்சி என்பது முக்கியம்

தொடர் மருத்துவச் சேவை செய்து

மக்களின் உயிரை காப்பது நிச்சயம்

காரணங்கள் சொன்னவர்கள்
சாதனைகள் படைத்ததில்லை

சாதனைகள் படைத்தவர்கள்
காரணங்கள் சொன்னதில்லை என்ற
உதாரணத்திற்கேற்ப நூற்றாண்டு
சாதனை படைத்த நம் பொது
சுகாதாரத்துறையைப் பாராட்டுவோம்
சிரம் தாழ்த்தி வணங்குவோம்.

நன்றி வணக்கம்

ரா.ராஜலட்,சுமி, தட்டச்சர்
துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள்
அலுவலகம், கரூர்
அலைபேசி எண் : 9025907019

## பொது சுகாதாரம் எனும் பொதுவுடமையே

துறைக்குள் இருக்கும் துறையே
மனிதனின் பிறப்பையும் இறப்பையும்
தனக்குள் கொண்டுள்ள எங்களின்
பொது சுகாதாரத் துறையே
மக்களுக்கு சுகாதாரத்தை எடுத்துச் சொல்ல
உன்னை விட்டால் யாருமில்லை,
மக்களோடு மக்களாக உறவாடுவதில்
உன்னை மிஞ்ச யாருமில்லை.
நீ சந்திக்காத பேரிடர் இல்லை.
நீ சந்திக்காத பெருந்தொற்று இல்லை.
இதை எதை கண்டும் நீ அஞ்சியதில்லை.
வதந்திகளை பரப்பும் வல்லுநர்களை
வெல்வதில் உனக்கு நிகர் யாருமில்லை.
இயல்பாய் மக்களைச் சந்திக்கும்
இயக்குநரையும்,
மகத்துவம் வாய்ந்த மருத்துவம் மற்றும்
மருத்துவம் சாராப் பணியாளர்களையும்
உனக்குள் வைத்துக் கொண்டு
உன்னுடைய சோதனைக் காலங்களை
சாதனைக் காலங்களாக மாற்றி
மக்களைக் காத்து நிற்கிறாய்.
உன்பெயரில் உள்ள பொது சுகாதாரம்
என்ற பொதுவுடமையே உந்தன்
பெருமை சொல்லும்.
100 வயதுகள் உனக்கு ஆனது என யார்
சொன்னாலும் எங்களை பொருத்த
வரையில் என்றும் உனக்கு வயது
இளமை 16 தான்.
உன்னோடு பயணிப்பதில் நாங்கள்
என்றும் பெருமை கொள்கிறோம்.

**ந.ராஜதுரை,** B.A., MSW,
புள்ளி விபரப் பதிவாளர் (NHM)
சுகாதாரப் பணிகள் அலுவலகம்,
தேனி மாவட்டம்

## 100 YEARS DPH CELEBRATION

உச்சி  முதல் பாதம் வரை
உள்ளமும் உடலும்
வளம் பெற்று வாழ
வையம் உள்ளவரை நம்மிடம்
உலா வருவது நமது பொது சுகாதாரத் துறை
நானிலத்தில் உள்ள நாற்பது கோடிகளையும்
நலம் பெற வாழச் செய்வது இத்துறை
கருவிலிருந்து கல்லறை வரை
கவனத்துடன் பராமரிப்பது இந்த பொது
சுகாதாரத் துறை
காரண காரணி கண்டறிந்து
கவனமுடனும் கனிவுடனும் செயல்பட்டது
இந்த பொது சுகாதாரத் துறை
கால் சட்டை அணிந்து பள்ளிக்கு செல்வதில்
இருந்து
கல்லூரிக்குச் சென்ற பின்பு கவனிப்பது
இத்துறை
பள்ளி நாட்களில் கண்டறிந்த பல
நோய்களையும்
துச்சமெனத் தாண்டிவிட்டு பார் புகழும்
மனிதனாய் உருவாக்கியது இத்துறை
ஒருவனுக்கு ஒருத்தி என  உன்னதமான
வாழ்க்கைக்கு வழிக்காட்டியது இத்துறை
ஒன்றோடு ஒன்று பெற்று ஒளிமயமான
வாழ்க்கைக்கு வழிகாட்டியது
இத்துறை
வாழவைத்த இத்துறைக்கு  நன்றியுடன்.

**ச.ரேவதி**
சமுதாய நல செவிலியர்
முனைஞ்சிப்பட்டி.

## கள பணியாளர் அனுபவம்

என்வாழ்வின் பொற்கலம் பொதுசுகாதார துறை பணி செய்த காலம். நாற்பது ஆண்டுகால பணி நான் செய்த பாக்கியம் .நாற்பது ஆண்டுகளில் என் கைகளில் தவழ்ந்த மழலை செல்வங்கள் மனதினில் நீங்காத பன்னீரபுஷ்பங்கள் ஈன்றெடுத்த செல்வங்ககளின் செல்வங்கள் என் எதிரே வந்து நிற்கும்போது எண்ணிலடங்கா சந்தோஷம். சென்ற வாரம் கூட எட்டி பார்த்த என் நினைவு நிஜமாக நேரில் வந்தது நான் செய்த பாக்கியம் ( இருபது வயது இளைங்கனாக ) ஆயிரத்தி தொள்ளாயிரத்தி எண்பத்தி மூன்றில் வந்த கனவு என்னவென்று அறியாத எதிர்பார்பான இன்பமயமானது இரண்டாயிரத்து இருபத்தி மூன்றில் வர போகிற கனவு ஏக்கமான இன்பமயமான கனவு வாழ்ந்த வாழ்கை வருமா என ஏங்கவைக்கும் கனவு பொது சுகாதார துறையில் நாற்பது படி தாண்டிவிட்டேன் என்ற நினைவு நெஞ்சம் நெகிழ செய்கிறது படித்த பாடங்கள் பல பெற்ற அனுபவங்கள் பல பல சாகும் வரை சரித்திரம் படைக்க ஆசை யாசிக்கிறேன் என்னை படைத்த இறைவனிடம் மீண்டும் ஒரு பிறவி இருந்தால் நான் இதுபோல் பிறப்பதற்கு இருபதில் உயிர்தந்த உறவு இன்று அறுபதில் ஒய்வு தருகிறது ஒய்வு உடலுக்கு மட்டும் தான் மனதிற்கு அல்ல.

**ச.ரேவதி**
சமுதாய நல செவிலியர்
முனைஞ்சிப்பட்டி.

## பொது சுகாதாரத் துறை

இது
பூமியோடு சுழலும்
பூமத்திய ரேகை !
சுகாதாரத்தின்
அட்சரேகை ;
ஆயுசு ரேகையைத்
தீர்க்கமாக்க
வாசல் வரும்
தீர்க்க ரேகை ;

சமுத்திரத்தை
விரித்து படிக்கும்
கதிரின்
கரம் போல
சமூகத்தில்
விரவும்
இத்துறையின்
பணிகள்
அரிதாரம்
பூசாமலேயே
அழகானவை !
தாய் சேய் நலம்
தொடங்கி ,
வளர் இளம்
பருவம் தாங்கி ,
குடும்ப நலம்
காத்து ,
முதுமையில்
தோள் தந்து ,
முடிவு வரை
தொடரும்
முற்றாத சேவை !

தூறல் சுமக்கும்
மண் வாசமாய்
சுவாசத்தின்
சுகம் கேட்போம் !
தடுப்பு முறை
கைக்கொள்ள
தவறாமல்

பரிந்துரைப்போம் !
கொசு பிடிப்போம்
கும்மி அடிப்போம்
ஆடிப் பாடி
நலக் கல்வி
நயம்படச்
சொல்வோம் !

நலவாழ்வு
தர வேண்டி
ஆசுவாசப்படுத்தி
ஆற்றுப்படுத்தி
அறியா சனங்களுக்கு
அரியாசனம் தந்து
அழகு பார்ப்பதே
எழுதப்படாத
புரிந்துணர்
ஒப்பந்தத்தின்
புவிசார் சாசனம்
பேரிடர் மற்றும்
கொள்ளை நோய்
பரவும் காலம் ,
சந்திக்கும்
சவால்களை
எதிர் நீச்சல்
போட்டு
முறியடிக்க
சிந்திக்கும்
பயிலரங்கம்;

போரை நினைவு
படுத்தும்
பூர்வாங்கப் பணிகள்;
காற்றோடு
கட்டப்படும்
புரவி போன்று
கால்கள் !

பீரங்கியை
முன்னிறுத்தும்
புகையடிக்கும்
எந்திரங்கள் !
மருத்துவ
தளவாடங்கள் ,
ரத்த மாதிரிகள் ,
வீதியில் கேட்கும்
விசும்பல்கள் ,
யாவும்
யுத்த காட்சியின்
ஒத்த அணிவகுப்பு !
காட்சிகள்
விரியும் வேளை
கந்தையாய்
கிழியும் உணர்வு ;
சந்தையாய்
இரையும் அறிவு ;
ஆந்தையாய்
விழிக்கும் கண்கள் ;
விந்தையாய்
கரையும் நேரம் .

ஆழிப் பேரலையாய்
ஆடும் மனசு ,
தூளிக் குழந்தையாய்
தூங்கும் _
காட்டுத் தீயாய்
பரவும் நோய்
கட்டுக்குள்
வரும் பொழுது !

ஒரு வழிப்
பாதையில்
ஒன்றாத பயணம் !
அடுத்த நகர்வு
தெரியாத நிலையில் ,
உதவும் மகிழ்வோடு
வாழுங்கள்;
சுனாமியும் கோவிடும்
பதித்துச் சென்ற ,
சுவடுகளின்
ஒற்றைச் செய்தி !

அரசுப் பணிகள்
அநேகம் உண்டு;
கருவறை முதல்
கல்லறை வரை ,
உடன் பயணித்து
வலிமை தந்து ,
வாழ்வியலை
வளமாக்கும்
இப்பணி!
இதற்கு நிகர்
எப்பணி?!!
தவமிருந்து
பெற்றாலன்றி
வாய்க்குமோ
இத் திருப்பணி !

முளைத்து நிற்கும்
வார்த்தைகள் ,
தளைத்து எழும்
ஓசையில் ,
பறையடித்து
சொல்லட்டும் ,
அன்னைத் தமிழாக
எம் துறை
அகிலத்தில்
வெல்லட்டும் !.

எழுத்தாக்கம்
**லதா ப்ரீடா ஜோன். ம**
மண்டல பூச்சியியல்
வல்லுனர்
மண்டல பூச்சியியல்
குழுமம், திருச்சி

# தமிழகத்தை முன்னேற்றும் உந்து சக்தியாக பொது சுகாதாரத்துறை நேற்று இன்று நாளை ஒரு பன்முகப் பார்வை

பொன். வந்தியத்தேவன்,எம்.ஏ

1) பின்னணி

ஒவ்வொரு ஆண்டும் அரசு மக்கள் நல்வாழ்வுத்துறையின் கொள்கை விளக்கக்குறிப்பு புத்தகம் தயாரிக்கப்படும்போதும் அதில் முன்னுரை பகுதியில், சுகாதாரம் சார்ந்த ஒரு திருக்குறளை மேற்கோள் காட்டி கொள்கை விளக்கக் குறிப்பு அத்தியாயம் தொடங்கும். அந்த சுகாதார குறட்பாக்கள் இன்றளவிற்கும் பொருந்துவதாக அமையும். மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை கொள்கை விளக்கக் குறிப்புகளில் வெளியிடப்பட்ட குறப்பாக்களும் அதன் பொருளும் பின்வருமாறு...

**பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்**

**அணியென்ப நாட்டிவ் வைந்து** (குறள்–738)

இதன் பொருள், நோயில்லாதிருத்தல், செல்வம், விளைபொருள், வளம், இன்பவாழ்வு, நல்ல காவல் இந்த ஐந்தும் நாட்டிற்கு அழகு என்று கூறுவர். ஒரு நாட்டிற்கு நோயில்லாதிருத்தல் என்பதையே வள்ளுவப்பேராசான் முதன்மைப்படுத்தியிருப்பதை பாருங்கள். மற்றொரு குறளில்,

**உற்றான் அளவும் பிணியளவும் காலமும்**

**கற்றான் கருதிச் செயல்** (குறள் –949)

பொருள் – மருத்துவ நூலை கற்ற மருத்துவர், நோயாளியின் நோயை போக்க முயலும் போது, நோயாளியின் வயது, அந்நோய் வந்திருக்கும் காலம், நோயைப் போக்க தனக்கு தேவையாகும் காலம் ஆகியவற்றை எண்ணிச் செயல்பட வேண்டும்.

**இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்**

**கழிபேர் இரையான்கண் நோய்** (குறள் – 946)

இதன் பொருள் அளவோடு உண்பவர் உடல் நலமுடன் வாழ்வதும் அதிகம் உண்பவர் நோய்க்கு ஆளாவதும் இயற்கை என்பதாகும்.

இன்றைக்கு ஈராயிரம் ஆண்டிற்கு முன்பே தெய்வப்புலவர் திருவள்ளுவரால் சுகாதார விழிப்புணர்வு சிந்தனைகள் நமது மண்ணில் வேரூன்றி விட்டன என அறிய வரும்போது நமது முன்னோர்களை எண்ணி எண்ணி நாம் பெருமைப்பட வேண்டி உள்ளது.

நீண்ட நெடிய பாரம்பரியமிக்க தமிழக பொது சுகாதாரத்துறை இந்தியத் திருநாட்டிற்கே பொது சுகாதார சேவைகளில் முன்னோடியாகவும் வழிகாட்டியகாகவும் பல நேர்வுகளில் அமைந்துள்ளது என்பதையே இந்த ஆய்வுக்கட்டுரை உரைக்க முயல்கிறது. மேலும் தமிழ்ச்சமுதாயத்தை மாற்றி உயர்த்தும் ஆக்கப்பூர்வ சக்தியாக பொது சுகாதாரத்துறை முக்காலத்திலும் திகழ்வதை வெளிப்படுத்தவும் இந்த ஆய்வுக்கட்டுரை முயல்கிறது.

2 ) முன்னேற்ற செயல்பாடுகள் / உள்கட்டமைப்புகள், நோயணுகா திறம் வளர்த்தல், மருத்துவ விஞ்ஞான பார்வையினை மக்களிடையே உருவாக்குதல், மக்களை பொது சுகாதார இயக்கமாக்குதல், மக்களோடு மக்களாக சேர்ந்து நுண்கிருமிகளை எதிர்த்து போராடுதல், வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் உயிர்ப்புடன் வாழக் கற்றுத்தருதல், சுகாதார விழிப்புணர்வு, எதிர்கால வாழ்வை ஒளிமயமாக்கல் போன்ற முன்னேற்ற செயல்பாடுகளை பொது சுகாதாரத்துறை உறுதி செய்கிறது.

3 ) பலன்களும் பயன்களும் – பொது சுகாதாரத்துறை உலகை மாற்றும் சக்தியின் ஊர்வலத்தில் ஒரு முன்னணி வீரனாக இருக்கிறது. தமிழ்ச்சமுதாயத்தில் ஆழ வேரூன்றி உள்ளது. அளப்பறிய சாதனைகளை புரிந்துள்ளதால் பொது மக்கள் அடைந்த பன்முகத்தன்மை வாய்ந்த பொது சுகாதாரத் திட்டங்களாகும். ஆட்சியாளர்களின் உயர்ந்த நோக்கமும், அரசியல் அழுத்தமும் பொது சுகாதாரத்திட்டங்களை மென்மேலும் செழுமைப்படுத்தி வருகிறது.

4) சவால்கள்– பொது சுகாதாரத்துறை முற்றிலும் மனித சக்தி நம்பி இயக்கப்படும் துறை ஆதலால் ஆட்குறைப்பு திட்டங்களை அமுல்படுத்தினால் பல்வேறு சுகாதார திட்டங்கள் முடங்கிட வாய்ப்பு ஏற்படுகிறது. பொருளாதார சீர்திருத்தங்கள் என்ற பெயரில் பல்வேறு துறைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவது போல பொது சுகாதாரத்துறையிலும் சிக்கன நடவடிக்கைகளை செயல்படுத்தும் போது பல்வேறு எதிர்கால சந்ததியினரின் வாழ்வாதாரம் பாதிக்கப்டும் சூழல் உருவாகிறது.

5) அணுகுமுறையில் மாற்றம் தேவை – கல்வி, சுகாதாரம் இரண்டும் மனித சமுதாயத்தின் இரண்டு கண்களாக பாவிக்கப்பட வேண்டும். உலகமயமாதலின் பின்னடைவுகளால் எந்த வகையிலும் பொது சுகாதாரம் பாதிக்கப்படக்கூடாது.

6) தேவைப்படும் மாற்றங்கள் – நவீன அறிவியல் தொழிற்நுட்பம் முழு வீச்சுடன் பயன்படுத்தப்பட வேண்டும். மாற்றத்திற்கான திறவு கோல்களை இளைய தலைமுறையினரிடம் அளிக்க வேண்டும்.

7) விளைவுகள் – நேர்மறை எண்ணங்களோடு பொது சுகாதாரத்தை பேணிக் காக்கும் ஒரு உன்னத ஆரோக்கிய சமுதாயம் விரைவில் முழுமையாக மலரும்.

# கிராம சுகாதார செவிலியர்

ANM பயிற்சி பள்ளி – சமயநல்லூர் –மதுரை

உலக உயிர்களிடத்து
உன்னதமான நேர்த்தியான
அருமருந்தாய் அமுதமாய் அன்னையரென
செவிலியர் பணி மறையாத
பகலவனாய் சுடர்விடும்
குடும்பத்தில் ஓர் அங்கமாய்
நலம் விசாரிப்பில் நடுநிலைமையாய்
கண்மணி யாயிருந்து கண்ணை காப்பவர்
இல்லந்தோறும் சென்று
இணைஉணவு நலக்கல்வி அளிப்பவர்
குழந்தைக்கு நோயினை தடுக்கும் தடுப்பூசியை
தளர்வில்லாது தருவர்
சேயினை காக்கும் தாய்போல்
கிராமத்தை காக்கும் கிராம தேவதையாய்
கொரோனா கொல்லும் – தடுப்பூசியினால்
கொரோனாவினை கொன்றவர்
மாணிக்க மகுடமாயிருந்து
மாசற்று மானிடரை காப்பவர்
உப்புசர்க்கரை கரைசலால்
வயிற்றுபோக்கை களைபவர்
மருத்துவபணி தொண்டு
வானினும் உயர்ந்த்து
நிலத்தினும் பரப்பைவிட சேவை விரிவு
அன்பு கடலிலும் ஆழமானது
நைட்டிங்கேல் சேவையை
உலகறியும் நாடறியும்

வெ.வான்மதி
முதலாம் ஆண்டு நர்ஸிங் மாணவி

# செவிலியர்

இன்முகம் மாறாது
இரவு பகலாக இன்னலென பாராது
இன்னுயிரை தன்னுயிராய் போற்றுபவர்
அன்னை தெரசாவின்
அன்பு சுரக்கும் அமுதசுரபியாக
தம்மை மறந்து தன் நோயை மறந்து
பிணியாளரின் பிணி தீர்ப்பவர்
மண்வாசம் சுவாசிக்காத
மலருக்கு மறுமலர்ச்சியளிப்பவர்
விபத்தில் வீழ்ந்த உயிரை
மண்ணில் வீழாது வில்வமாய் காப்பவர்
விஸ்வரூபமாய் கர்ப்பிணிக்கும்
கருவிலிருக்கும் குழந்தைக்கும் முதியவருக்கும் உயிர்ப்
கருணை பாற்கடலாய்
காக்கும் காவலராய்
புற்று பிணிக்கும் புற்றில் வீழாது
புத்துயிர் அளிப்பவர்
தன் உணவை நினையாது
பிணியாளரின் பசி தீர்ப்பவர்
கொள்ளை நோயான கொரோனா
கற்பூரஜோதியாய் கற்பக விருட்சமாய்
கலங்கரை விளக்காயிருந்து
கடமை தவறாது காப்பவர்
கவிகளில் எழுதாத காரிகை
கண்களில் புலப்படும் தேவதை
வெண்மையை உடையிலும்
வேகம் விவேகத்தை மனதிலும்
இதய நுரையீரலுக்கு சிபிஆர் அளித்து
உயிர் தருபவர்

வெ. வான்மதி
முதலாம் ஆண்டு நர்ஸிங் மாணவி

# பொது சுகாதாரத் துறையில் நாயகர்கள்

**அது அந்த காலம் ஆம் அது அந்தக்காலம் தான்.**

'அம்மை ஊசி குத்த வராங்க ஓடுடா டேய்' என்று சுகாதாரப் பணியாளர்களை பார்த்தவுடன் மக்கள் ஓட்டமாக ஓடி ஒளிந்து கொண்டது அந்த காலத்தில் தான். சிறுவர்கள்தான் என்றில்லை, பெரியவர்களும் கூட அப்போது ஓடி ஒளியத்தான் செய்தார்கள்.

**விளம்பரமும் அபராதமும்**

1965 –66 அம்மை நோய் தாண்டவமாடிக் கொண்டிருந்த காலம். பொது சுகாதாரத்துறை, வருவாய்த்துறை, உள்ளாட்சித் துறையுடன் இணைந்து, தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அம்மை நோய் பெரும் போராட்டத்திற்குப் பின் கட்டுப்படுத்தப்பட்டது. இது இணைய (இளைய) தலைமுறையினருக்குத் தெரிய வாய்ப்பில்லை.

'பெரியம்மை நோய் கொண்டிருப்பவர்களைக் கண்டுபிடித்துத் தருபவர்களுக்குத் தக்க சன்மானம் வழங்கப்படும்' என்று விளம்பரம் ,செய்தது அம்மைத் தடுப்பூசி போட மருத்துவர்கள் நீதிமன்ற கூண்டில் ஏற்றப்பட்டார்கள் அபராதம் எல்லாம் விதிக்கப்பட்டது நீதிமன்ற படி ஏறுவது கேவலம் என்று கருதி பலரும் தடுப்பூசி போட்டுக் கொண்டார்கள் .

**நல வாழ்வு தந்த குடும்ப கட்டுப்பாடு**

1952 – ம் ஆண்டு காலகட்டத்தில், குழந்தை இறப்பு விகிதம் அதிகமாக இருந்தது. உலகிலேயே முதலாவதாகக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை இந்திய அரசு அறிமுகப்படுத்தியது.

1970 – ம் ஆண்டு இத்திட்டம் மிகத் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்ட காலகட்டம். மருத்துவ அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள், மகப்பேறு உதவியாளர்கள், குடும்ப நலப் பணியாளர்கள், வட்டார விரிவாக்க அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர்கள் என அனைவருக்கும் அறுவை சிகிச்சை இலக்கை அரசு நிர்ணயித்தது.

அறுவை சிகிச்சைக்குப் பின் தொடர் மருத்துவக் கவனிப்பையும் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்போதெல்லாம் களப்பணியாளர்களின் பாடு திண்டாட்டம் தான்.

சில நேரங்களில் அறுவை சிகிச்சைக்குப் பின் நோயாளிக்கு எதிர்பாராமல் பக்க விளைவுகள் ஏற்படலாம். ஏன் அரிதாக மரணம்கூட ஏற்படலாம். அப்போதெல்லாம் களப்பணியாளர்களும் மருத்துவர்களும் பட்ட கஷ்டம் கொஞ்சம் நஞ்சமல்ல.

குடும்ப நலம் என்பது நம் நலம். அது குடும்பத்தின் மகிழ்ச்சியோடு தொடர்புடையது என்பதை உணர்ந்துவிட்டார்கள். இன்றைய நம் மகிழ்ச்சியான வாழ்வுக்கு பின்னால் அன்று கடுமையாக உழைத்த மருத்துவர்களும், மருத்துவ பணியாளர்களும் இருக்கிறார்கள்.

**போலியோ இல்லா இந்தியா**

இன்று நம் நாட்டில். போலியோவை முற்றிலுமாக ஒழித்ததில் சுகாதாரப் பணியாளர்களின் பங்கு முக்கியமானது. பல ஆண்டுகளாக நடைபெற்று வரும் 'தீவிர போலியோ சொட்டு மருந்து இயக்கம்' மூலம் இன்று போலியோ இல்லாத நிலை உருவாகி இருக்கிறது

ஒரு வாரத்திற்கு முன்னரே தயாரிப்புப் பணிகள் தொடங்கி விடும். தேவையான தடுப்பூசி பெட்டிகளை சுத்தப்படுத்தித் தயார்படுத்தி வைக்க வேண்டும். உரிய நேரத்தில் தேவையான

தடுப்பூசி மருந்துகளை பெற்று அனைத்து தடுப்பூசி மையங்களுக்கும் அனுப்பி வைக்க வேண்டும். இதில் மருந்தாளுனர்களின் பணி முக்கியமானது.

**காய்ச்சல்கள் பலவிதம்**

சிக்கன் குனியா, டெங்கு, ஸ்வைன் புளூ போன்ற காய்ச்சல்கள் பரவும் போதெல்லாம் நோயின் தாக்கத்தில் இருந்து மக்களை காப்பாற்றுவது சுகாதார பணியாளர்கள் தான். ஊரில் எங்கேனும் தீவிர காய்ச்சல் பரவி

இருந்தால் கட்டுப்படுத்த வேண்டிய நடவடிக்கையினை உடனே மேற்கொள்ள வேண்டும்.

அண்மைக்கால புது வரவான கொரோனாவை கட்டுப்படுத்துவதற்காக நடத்திய போரில் இன்னுயிர் துறந்த மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதார ஆய்வாளர்கள் உள்ளிட்ட களப்பணியாளர்கள் போற்றுதலுக்குரியவர்கள்.

கொரோனாவைக் கட்டுப்படுத்த பொது சுகாதாரத்துறை அனைத்து துறையுடன் சேர்ந்து எடுத்த நடவடிக்கைகள் வருங்கால பாடங்கள்.

கொரோனா தடுப்பூசி போடுவதற்கு பொது சுகாதாரத் துறையினர் சிறப்பு முகாம்களில் ஓய்வின்றி செயல்பட்டனர்.

**கிராம மக்களின் உள்ளூர் கோயில்**

கிராம மக்களுக்கு கை கால் வலியாகட்டும், காய்ச்சல், வயிற்றுப்போக்காக இருக்கட்டும், அவர்களுக்கு எல்லாமே உள்ளூர் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தான் கண் கண்ட கோயில்.

பெண்கள் கருவுற்றது முதல் குழந்தை பேறுக்குப் பிறகு குழந்தைக்கு தடுப்பூசி போடுவது வரை பெண்களுக்கும் சுகாதார நிலையங்களுக்கும் இடையேயான தொடர்பு, ஒரு தொடர் நிகழ்வாக இருக்கிறது

பிரசவத்தில் தாய் சேய் நலம் காக்க வேண்டி வீட்டு பிரசவங்களுக்கு முற்று வைத்து மருத்துவமனை பிரசவங்களை மேம்படுத்தி தாய் சேய் நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருவதில் V H N என்று சுருக்கமாக அழைக்கப்படும் கிராம சுகாதார செவிலியர்கள் பங்கு மகத்தானது..

**கண்ணில் லென்ஸ் வைப்பீங்களா?**

ஒரு காலத்தில் கண்புரைக்கு அறுவை சிகிச்சை செய்து கொண்ட பின் 45 நாட்கள் ஓய்வு எடுக்க வேண்டி இருக்கும்

ஆனால் இன்று அப்படியா? கண்ணில் IOL எனப்படும் லென்ஸ் பொருத்தப்படுகிறது. மருத்துவமனையில் தங்காமலேயே புற நோயாளியாகவே சென்று ஒரே நாளில் திரும்பும் அளவுக்கு முன்னேற்றம்.

'பார்வை இழப்பு தடுப்பு திட்டத்தை' சிற்றூர் அளவிலும் சிறப்பாக செயல்படுத்தி வரும் கண் மருத்துவ உதவியாளர்கள் தான் அதற்கு காரணம்.

**எதிர்கொள்ளும் சவால்கள்**

மருந்து என்பது நோயைக் கட்டுப்படுத்தவும் குணப்படுத்தவும் தான். அதில் சந்தேகம் இல்லை. ஆனால் சில நேரம் மருந்து விபரீத விளைவுகளை ஏற்படுத்துவதும் உண்டு. மருத்துவ உலகில் இது தவிர்க்க முடியாது. பக்க விளைவு என்றோ ஒவ்வாமை என்றோ அதற்கு காரணங்கள் சொல்லப்படுவது உண்டு.

எந்த ஒரு சுகாதார திட்டமும் வெற்றி பெற வேண்டுமெனில் அதன் பணியாளர்களின் மனநிலை ஆரோக்கியமாக இருப்பதற்கு ஏற்ப பணி சூழலும் இருக்க வேண்டியது அவசியம்.

**பணியில் உள்ள பாதிப்பு**

ஆய்வக நிபுணர்கள் ,காசநோய் பணியாளர்கள், நுண்கதிர் (எக்ஸ்ரே) படம் எடுக்கும் பிரிவில் பணி செய்யும் பணியாளர்கள் என்னதான் பாதுகாப்பாக இருந்தாலும் பணியில் ஏற்படும் உடல் நலக்குறைவை எதிர்கொள்ள தான் வேண்டும்.

**முன்னோடியாக திகழும் தமிழகம்**

இதோ இந்த நூறாவது ஆண்டிலும் தாய் சேய் நலத்திட்டமோ, தொழுநோய் ஒழிப்பு திட்டமோ, காசநோய் கட்டுப்பாட்டு திட்டமோ, பார்வை இழப்பு தடுப்பு திட்டமோ எந்த திட்டமாகட்டும் தேசிய சுகாதார திட்டங்களை முழுமையாக அமல்படுத்துவதில் பொது சுகாதாரத்துறை இயக்குனரின் சீரிய தலைமையில் தமிழக பொது சுகாதாரத்துறை சிறப்பாக செயல்பட்டு பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக திகழ்கிறது.

**மு. வீராசாமி,**
சிறப்பு நிலை கண் மருத்துவ உதவியாளர்
ஆரம்ப சுகாதார நிலையம்,
கருங்காலக்குடி,
மதுரை சுகாதார மாவட்டம்.

## தாய் சேய் நலம்

வாடினேன் வருந்தினேன் என் நோயைக் கண்டு!
திகைத்தேன் வியந்தேன் உம் பணியை கண்டு!
வலியால் துடித்தேன்
பின் என் மனம் சோர்ந்தேன்!
வலியை போக்க நீயோ சிறகடித்தாய்
சிட்டாகப் பறந்தாய் என் துயர் துடைக்க
நாள்தோறும் ஓடி உழைப்பாய் மக்கள் சேவைக்காக!
நானோ உன்னை நாடிடுவேன் என் தேவைக்காக!
உலகம் உறங்கினாலும் உறங்காமல் காத்தவள் நீயே!
செவிலி தாயே!
ஒருவிதத்தில் நீயும் என் தாயே!
இன் முகத்துடன் சேவை ஆற்றிடும்
எங்கள் கிராம சுகாதார செவிலியே!
நீயும் நம் பொது சுகாதாரத் துறையில்
பல நூறு ஆண்டுகள் வாழ்க! வளர்கவே!

**வீரபாண்டி**

## வள்ளுவனின் வாக்கை வாழ்க்கையாக்கிக் கொண்ட துறை

நோய் நாடி நோய்முதல் நாடி அது வந்த வழி தேடி காக்கும் –தோழன்.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் செய்யும்– காவலன்.

மிகினும் குறையினும் நோய் செய்யும் கூறுகளின் –எதிரி.

மருந்து ஒன்றும் காணாத நோய்க்குக் கூட தூய்மை என்னும் அருமருந்தை அளிக்கும் – உயிர் காப்பான்.

உற்றான் யாராயினும் அவன் அளவும் பிணி அளவும் காலமும் அறிந்து செயல்படும் –அறிஞர்.

மன்னுயிர் ஓம்பி அருளும் தன்னுயிர் பற்றி கவலைப்படாத தன்னலமற்ற– தீரன்.

முறை செய்து காப்பாற்றும் மன்னவன் போல் இத்துறை ஓர் –இறை.


இவன்

**பொ. ஜெயகுமார்**

செவிலியர்

அ. மே. ஆ. சு. நிலையம்

பூதூர் –சோழவரம் வட்டம்

திருவள்ளூர் மாவட்டம்.


## கிடைத்தற்கரிய/சக்திமிகுந்த தாய்ப்பால் பற்றிய உண்மைக் கருத்துருக்கள்

(EXCLUSIVE BREAST FEEDING FACTS)

1. சரியான உடல் எடை + மூளை வளர்ச்சி.
2. ஊட்டுவது எளிது..
3. நோய்க்கிருமி கிடையாது.
4. எளிதில் ஜீரணமாகும்.
5. நோய் தடுப்பு (எதிர்ப்பு சக்தி).
6. வயிற்றுப்போக்கு வராது.
7. மூச்சு திணறல் ஆகாது.
8. பாசப்பிணைப்பு ஏற்படும்.
9. மீண்டும் கர்ப்பம் தரிப்பது தள்ளி போகும்.
10. மார்பக புற்றுநோய் வர வாய்ப்பு குறைவு.
11. சமச்சீர் உணவு (BALANCED FOOD).
12. ஒவ்வாமை ஏற்படாது.
13. எந்த நேரத்திலும் கிடைக்கும்.
14. விலை கொடுத்து வாங்க வேண்டியதில்லை.
15. சுத்தமானது (STERILE).
16. விலை மதிப்பற்றது.
17. விட்டமின் .A. அதிகம் உள்ளது.
18. இரும்புச்சத்து உள்ளது .
19. அதிக குளுக்கோஸ் சக்தி.
20. உயிர்ச்சத்து விட்டமின் C,D மற்றும் E.
21. சூடேற்றத் தேவையில்லை.
22. சர்க்கரை போடத்தேவையில்லை .
23. வடிகட்ட தேவையில்லை.
24. கலப்படம் இல்லாதது. . . .

இன்னும் எத்தனையோ !

(அத்துணையும் இயற்கையின் வரம்)


**D. ஜெயராமன்.** M.A.,

சிறப்புநிலை சுகாதார ஆய்வாளர் (Rtd.,)

No. 11 திரு.வி.க. தெரு.

வாலாஜாபேட்டை. – 632513.

## மனித தத்துவம் !

வேடனாகக் காட்டிலே வேட்டையாடி வாழ்ந்த நாம் விண்ணிலே
அறிவியல் விந்தையெல்லாம் காட்டினோம்,
மூடநம்பிக்கைகள் முழுவதுமாய் ஒழிந்திட
போட வேண்டும் அறிவியல் பாதையை. விழிகளில் கனலேந்தி
நெஞ்சிலே உறுதி கொண்டு கரங்களில் உழைப்பேற்ற
செயல்படுவோம். . . . . . . வாருங்கள்!
காடுகளில் விலங்கோடு விலங்காய்
வாழத் தொடங்கிய மனித இனம்
இன்று வாழும் நாகரீக வாழ்க்கைக்கு– வளர்ச்சிக்கும்
நவீனக் கண்டுபிடிப்புகளே காரணம்!
48% சதவீதம் மக்கள் இன்னும் கல்வி அறிவு பெறலே !
70% பெண்கள் சுகாதாரக் கல்வி தெரிஞ்சிக்கலே !
45% மக்களுக்கு இன்னும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க முடியல!
70% மக்கள் இன்னும் சுகாதார வசதிகள் முழுமையாக அறியல!
40% மக்கள் வறுமை கோட்டிற்கு கீழே!
30% மக்கள் இன்னும் ஒருவேளை சோற்றுடன் வாழ்கிறார்கள்!
15% இளம் பெண்கள் இன்னும் இரத்த சோகையுடன் வாழ்கிறார்கள்!
கிராமம் தோறும் சுற்றி வந்து
காலராவை ஒழித்தோம் !
சொட்டு மருந்து போட்டு
போலியோவை ஒழித்தோம்.
மலைகளில் ஏறி கினிவேர்மை (Guinea Worm) ஒழித்தோம்.
எலிகளைப் பிடித்து பிளேக்கை ஒழித்தோம்.
நீர் நிலைகளைத் திருத்தி
கொசுக்களை கட்டுப்படுத்தினோம்.
இந்தப் பாவி மனிதனின் குடிப்பழக்கத்தை எப்படி ஒழிப்போம் !
அய்யகோ ! கள்ளம் இல்லா உள்ளம் தானே கடவுள் தந்தான்
மனிதா நீயே உன்னை திருத்திக் கொள்
மீண்டுவா ! மனிதா !
சுகவாழ்வு வாழ்ந்து –
மனித தத்துவத்தை புரியவை !

(கவிதை நடை)

**D. ஜெயராமன்.** M.A.,
சிறப்புநிலை சுகாதார ஆய்வாளர் (Rtd.,)
No. 11 திரு.வி.க. தெரு.
வாலாஜாபேட்டை. – 632513.
Cell: 98948 79405.

# அம்மா என்றழைக்காத உயிரில்லையே.

( மெட்டு : அம்மா என்றழைக்காத உயிரில்லையே..)

பல்லவி

தடுப்பூசி போடாம இருக்காதீங்க...
கொரோனாவ லேசாக நெனைக்காதீங்க...
ஊரில் சென்று நாமும் சொல்வோம்...
மக்கள் நோயின்றித் தானிங்கு வாழ...

சரணம் 1

தெருவீதி கடைவீதி பெருங்கூட்டம் கூடாமல்
தனிமனித இடைவெளியை நாம் பேணுவோம்..
எங்கெங்கு சென்றாலும் மறவாமல் முகக்கவசம் முறையாக அணிந்தாலே
நலம்வாழலாம்..
அரசாங்க விதிமுறைகள் வழிகாட்டு நெறிமுறைகள் அனுதினமும் கடைபிடித்தல்
ஆரோக்கியமே...
சுகாதாரத்துறையோடு கரம்கோர்த்து வாருங்கள்
சுகமான எதிர்காலம் உருவாக்குவோம்..
புதுவாழ்வே இனி காண்போம்...

சரணம் 2

கண்ணாலே காணாத நோயென்று அறிந்தாலும்
கைகழுவும் பழக்கமதை விடவே வேண்டாம்..
வீணான வதந்திகளை கேட்டாலும் நம்பாமல்
தடுப்பூசி போடத்தான் விரைந்தே செல்வோம்..
இணைநோய்கள் பிறநோய்கள் கட்டுக்குள் இருந்தாலே தயங்காமல் தடுப்பூசி
நாம்போடலாம்..
இருதவணை மறவாமல் சரியான இடைவெளியில் தவறாமல் போட்டிடத்தான்
வழிகாட்டுவோம்...
எல்லோரும் நலம் வாழ...

பாடல் எழுதியவர் :
**ஜா.ஜோசப் சொர்ணபாண்டியன்., பி.எஸ்.ஸி.,**
சுகாதார ஆய்வாளர்
துணைஇயக்குநர் சுகாதார பணிகள் அலுவலகம்
தூத்துக்குடி.

# மறக்க முடியுமா? மறுக்க முடியுமா?

கொரோனா தொற்று பேரிடர்
காலத்திலே
தங்கள் உயிர் பொருட்படுத்தாமல்
மக்கள் சேவை
மகேசன் சேவை
என்று பணியாற்றிய
பொதுசுகாதார ஊழியரின்
சேவைகளை
மறுக்க முடியுமா?
மறக்க முடியுமா?
வல்லரசு நாடான
அமெரிக்காவே
கொரோனா தொற்றை
கட்டுப்படுத்த முடியாமல்
இலட்சகணக்கில் உயிர்
பலி ஏற்பட்ட போதும்
தமிழகத்தில் உயிர்பலி
குறைத்திட்ட
பொதுசுகாதார ஊழியரின்
சேவைகளை
மறக்க முடியுமா?
மறுக்க முடியுமா?
ஓய்வுநாள் என்றும் பாராமல்
உடல்நிலையையும்
பொருட்படுத்தாமல்
கொரோனா தடுப்பூசி முகாமிலே
நேரம் காலம் பார்க்காமல்
பணி செய்த
பொதுசுகாதார ஊழியரின்
சேவைகளை
மறக்க முடியுமா?
மறுக்க முடியுமா?
மற்ற துறைகள் பணி செய்யாமல்
முடங்கிய போதும்
போக்குவரத்து வசதி இல்லாதபோதும்
கொரோனா பேரிடர் காலத்திலே
பணி செய்த பொதுசுகாதார
ஊழியரின் சேவைகளை
மறக்க முடியுமா?
மறுக்க முடியுமா?
கொரோனா பேரிடர் காலத்திலே
உயிரை துச்சமாக மதித்து
பணிசெய்த போது
மருத்துவர் முதல் கடைநிலை
ஊழியர் வரை உயிர்பலி
ஏற்பட்டதை
மறுக்க முடியுமா?
மறுக்க முடியுமா?
கொரோனா தடுப்பூசி
செலுத்துவதிலே
தனியார் மருத்துவமனையில்
பங்களிப்பு மிகக் குறைவாக
இருந்த போது
பெரும்பான்மை பங்களிப்பு
பொது சுகாதாரத்துறை என்பதை
மறுக்க முடியுமா?
மறக்க முடியுமா?

**மருந்தாளுநர்**
அரசு ஆரம்ப சுகாதார நிலையம்,
வடக்குப்பாளையம்,
உப்பிடமங்கலம் சமுதாய நலக்கூடம்,
கரூர் மாவட்டம்

# பணி அனுபவம்

கொரோனா தன் பாதை தவறி மனிதர் வாழ்வில் பயணம் செய்ய துவங்கிய காலம், மக்கள் அனைவரையும் வீட்டில் இருக்க அறிவுறுத்திய அரசு அவர்களுக்கு துணையாய் நிற்க தேர்வு செய்த 334 சுகாதார ஆய்வாளர்களில் ஒருவனாக தேர்வு செய்யப்பட்டேன்.

விடை தெரியாத கேள்வியாய் கொரோனோ காய்ச்சல், தினம் இரண்டு குளியல், வீட்டில் தனியறை, ஓடிவரும் குழந்தைகளை தூக்கக்கூடாது என புதிய விதிகளாக சூழல் கட்டமைக்கப்பட்டது. தினம் கைபேசியின் ஒவ்வொரு சினுங்கலுக்கு பின்னும் ஒரு வலி ஒழிந்திருந்தது. நிற்கதியாய் நிற்பவர்களுக்கு துணை நிற்க, கரம் ஏந்துபவர்களுக்கு கரம் நீட்ட மனதை தயார்படுத்தி கொண்டேன்.

கொரோனா இரண்டாம் அலை வருவதற்கு முன்பான பேரமதியில் வரமாய் அரசு, அரசு பணியாளர்களுக்கு கொரோனா தடுப்பூசியை அறிமுகம் செய்தது. உண்ணமறுத்த குழந்தையிடம் கெஞ்சி நிற்கும் அன்னையாக சகப் பணியாளர்களுக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டது.

கொரோனா இரண்டாம் அலை செல்லும் வழி எங்கும் நாசத்தை வழங்கிக்கொண்டிருந்தது. அதனை அறிந்த மனம், அடைமழையின் வெள்ளம் வரும் முன் முட்டைகளை கூடு போய் சேர்க்கும் எறும்பாய் தன்னை தயார் செய்து கொண்டது.

அன்று காய்ச்சல் கண்காணிப்பு பணி. கொரோனாவால் மூன்று மாதங்களுக்கு முன்பு மூத்தவனை இழந்து மூன்று நாட்களுக்கு முன்பு தந்தையை பறிகொடுத்து மீதம் இருந்த ஐவரில் இருவருக்கு கொரோனா என்று தகவல் வந்தது. அக்குடும்பத்தைக் காண வாகனத்தை எடுத்து பயணித்தேன். மக்கள் வீட்டில் அடைபட்டு இருந்தனர். என்ன நடக்கிறது என்பதை அறியா பறவைகளும் விலங்குகளும் புதியதொரு சுதந்திரத்தோடு வீதியில் வலம் வந்து கொண்டிருந்தன. ஓரிடத்தில் வாகனத்தை நிறுத்தி அவர்களின் வீட்டு வாசலை சென்று சேர்ந்தேன். வீட்டில் இளையவன் கணேசனுக்கு கொரோனா தொற்று உடன் உறங்கும் தன் பச்சிளம் குழந்தையை கையில் ஏந்தி பாரம் தாங்கா தன் தலையை சுவற்றில் சாய்த்து எதையோ யோசித்துக் கொண்டிருந்தார்.

அமல்படுத்தப்பட்ட ஊரடங்கிலும் அமைதி அடையா மயானத்தின் அழுகுரலும் மருத்துவமனை எங்கும் படுக்கை அறை வசதியில்லா நிலையும் நிமிடம் கூட ஓய்வின்றி அலைந்து கொண்டிருக்கும் அவசர ஊர்தியும் மனதில் நிழல் ஆடியது. ஆக்சிஜன் பரிசோதித்ததில் கணேசனுக்கு 90 இருந்தது. குடும்பத்தாரை அணுகி கணேசனை மருத்துவமனை கூட்டிச் செல்ல வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்து அவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து ஆக்சிஜன் ஏற்பாடு செய்து முடிக்கையில் மாலை உணவு நேரம் கடந்திருந்தது.மறுநாள் காலையில் ஒரு அழைப்பு வந்தது பேசிய குரலில் கணேசன் நலமாக இருப்பதாகவும் இயல்பு நிலைக்கு திரும்பி இருப்பதாகவும் கூறியது.

எங்கள் வட்டாரத்தில் முதல் முதலாக கொரோனாவால் இளம் வயது இழப்பு பதிவானதால் அனைவரது மனதையும் பயம் ஆட்கொண்டது. அச்சமயம் அன்றைக்கான கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் பட்டியல் வெளியானது.

ஒவ்வொருவரையும் தொடர்பு கொண்டு பேசுகையில் ராஜா வயது 27 உடல் நலமின்மையால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக

சொன்னார் அவரது மனைவி. உடலில் ஆக்சிஜன் பற்றாக்குறை இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்ததாக சொன்னவர், ஏன் விசாரிக்கிறிர்கள் என மனதில் கலக்கதோடு வினவினார். பின் தன் கணவருக்கு கொரோனா என அறிந்ததும் விம்மி அழத்துவங்கினார். ஒவ்வொரு நொடியும் தன் கணவனை காப்பாற்ற தன்னை அர்ப்பணித்து இருந்தார் இராஜேஸ்வரி. அவர் என்ன சாப்பிட வேண்டும் அவருக்கு என்ன மருந்த கொடுக்க வேண்டும் அவரை எப்படி பார்த்துக் கொள்ள வேண்டும் என்று தினம் ஏதாவது ஒரு கேள்வியோடு வந்து நிற்பார்.

முப்பதிரு நாட்கள் முடிந்து பேசிய இராஜேஸ்வரி குரலில் உலகம் தன்வசமாகிருந்தது. புதியதாய் கொண்டாட்டம் பிறந்திருந்தது. கணவர் நலம் பெற்று வீடு திரும்பி இருந்தார் உங்களிடம் சொல்ல ஓடி வந்தேன் என்று மீண்டும் புன்னகைத்தார் முன்பின் அறிமுகம் இல்லை, ஆபத்து என்றதும் ஓடிச் சென்று உடன் நிற்கவில்லை, பணம் கொடுத்து உதவவில்லை, பரிவோடு ஆறுதலாய் சில வார்த்தைகள் அன்போடு சில கணங்கள் இவ்வளவு பெரிய உறவை சம்பாதித்து கொடுத்திருந்ததை நினைக்கையில் கண்ணீர் கசிந்தது.

தகுதி உடைய அனைவருக்கும் தடுப்பூசி இலவசமென அரசு அறிவித்தது. அடுத்த அலை வருவதற்கு முன்பு கொரோனா தடுப்பூசி பாதுகாப்பு என்று குடையில் அனைவரையும் கொண்டு வந்துவிடலாம் எண்ணத்தில் பேரிடியாய் மக்களிடத்தில் தடுப்பூசிக்கு எதிரான வதந்திகளும் அறியாமையும் பரப்பப்பட்டது.

சுதந்திரத்திற்கு பிறகு மிக பெரிய போராட்டம், கொரோனாவிற்கு எதிரான தடுப்பூசி யுத்தமாகத்தான் இருக்கும் என மனதில் எப்போதும் ஒரு ஆச்சரியம் இருந்துகொண்டே இருந்தது. சிறு இழப்புகளோடு மூன்றாம் அலையை வெற்றிகரமாக கடந்திருந்த காலம். வேட்டையால் வெற்றி பெற்ற சிங்கம் குன்றின் உச்சியில் அமர்ந்து வனத்தை வேடிக்கை பார்ப்பது போல மனதில் ஒரு தோற்றம் வெளிப்பட்டது. மக்கள் மெல்லமாய் வீதியில் வெளி வர துவங்கினர். மெல்ல பனி விலகி பாதை தெரிய தை பிறந்தது. விதிகள் தளர்த்தப்பட்டு வீதிகள் எங்கும் விழாக்கோலம் பூண்டிருந்தது. நீண்ட இடைவெளிக்கு பிறகு தைப்பொங்கல் தங்கள் வாழ்நாள் கொண்டாட்டமாக மக்கள் மனதில் புத்துணர்வு பிறந்திருந்தது.

அக்டோபர்.10.2021 (உலக மனநல தினம்) அன்று மாணவர்களை சந்திக்க தயாரானோம். பள்ளியில் அஞ்சல் பெட்டி ஒன்றை அறிமுகம் செய்திருந்தோம். அதன் மூலம் பெறப்பட்ட கடிதங்கள் யாவும்–தன் அந்தரங்கம் தெரிந்த, தன்னைப் பின் தொடராத தன் நம்பிக்கைக்குரிய ஒரு வழிகாட்டி எனக்கு தேவை என்பதை ஆழமாக வெளிப்படுத்தியது.

ஒரு நாள் எட்டாம் வகுப்பு மாணவியிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. தன்னை பாலியல் ரீதியாக ஒரு நபர் துன்புறுத்துகிறார். கடிதத்தின் வார்த்தைகளில் வலியும் வேதனையும் பயமும் ஒருமித்திருந்தது. உரிய தீர்வுகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் அம் மாணவிக்கு மனநலம் சார்ந்த வழிகாட்டுதல் வழங்கப்பட்டது. வாரத்தின் ஒவ்வொரு வியாழக்கிழமையும் மனநலம் சார்ந்த ஏதேனும் ஒரு திட்டமிடலோடு அவர்களை சந்திப்பது வழக்கமாகி பயணித்துக் கொண்டு இருக்கிறேன்.

**ஜெ. கிருஷ்ணன்,**
சுகாதார ஆய்வாளர் நிலை II,
கதிரம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம்,
திருப்பத்தூர் வட்டாரம்,
திருப்பத்தூர் மாவட்டம்.

# நமது நைட்டிங்கல் அம்மையார் கைவிளக்கேந்திய காரிகை

முன்னுரை:

" நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்

வாய்நாடி வாய்ப்பச் செயல்"" என்ற வள்ளுவரின் குறலுக்கு ஏற்ப நமக்கு கிடைத்த அம்மையார்தான் ஃப்ளோரன்ஸ் நைட்டிங்கல் இதுவரை கைவிளக்கேற்றிய காரிகை என்றும் அன்புடன் அழைப்பர் இன்று செவிலியருக்கு என்று தனி மதிப்பு மற்றும் மரியாதை இருக்க காரணம் நமது நைட்டிங்கல் அம்மையார் அவர்கள். அவரே நமது முதல் செவிலியர் ஆவார்

வாழ்க்கை வரலாறு:

இவர் இத்தாலிய நாட்டில் மே – 12–ம் தேதி 1820–ம் ஆண்டு ஃப்ளாரன்ஸ் என்ற இடத்தில் பிறந்தார் இவரின் தந்தை பெயர் வில்லியம் நைட்டிங்கல், தாயார் பெயர் ஃப்ளாரன்ஸ். இவருக்கு உடன் பிறந்த ஒரு சகோதரியும் இருந்தார்

இவர் பழமொழிகளின் படிப்பறிவைப் பெற்றிருந்தார் குறிப்பாக இத்தாலி மற்றும் ஜெர்மன் மொழிகளை நன்றாய் பயின்றவர் இவர் வசதியான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தார்

இவரது பிறந்த நாளே மே–12 உலக செவிலியர் தினமாக கொண்டாடப்படுகிறது.

செவிலியராக உந்துதல்:

இவருக்கு இளம் பருவத்திலிருந்தே மிகவும் சந்தோஷமாகவும் மற்றும் இயற்கை அனுபவத்துடனும் வளர்ந்தவர் நைட்டிங்கல் அம்மையாரின் 16–வது வயது நிறைவில் இவர் நோயாளிகளுக்கு உதவிட அலாதி ஆர்வம் கொண்டார் ஆனால் பெற்றோர்களால் திருமணத்திற்கு வற்புறுத்தப்பட்டார்

அதன் பின் பல எதிர்ப்புகளை மீறி 1844 –ஆம் ஆண்டு ஒரு செவிலிய மாணவியாக லூத்ரன் மருத்துவமனை ஜெர்மனில் சேர்ந்தார் செவிலிய படிப்பை மிகவும் அதிக விருப்பமாகவும் ஆர்வமாகவும் பயின்று வந்தார் நமது நைட்டிங்கல் அம்மையார் அவர்கள்.

செவிலிய சேவை:

இவர் தனது படிப்பினை முடித்து பல நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டார் அப்போது அங்குள்ள நோயாளிகளுக்குச் சிறந்த மருத்துவ சேவையை வழங்கினார்

1853 –ம் ஆண்டு ஒரு மருத்துவமனையில் நமது நைட்டிங்கல் அம்மையார் தனது பணியினை முழு மனதோடும் முழு ஒத்துழைப்போடும் செய்து அம்மருத்துவமனையின் நர்சிங் சூப்ரண்டாக பணியாற்றி வந்தார்

உலக அற்பணிப்பு சேவை:

1853–ம் ஆண்டு கிரிமியண்ட் போர் (Crmdyebt War) என்ற ஒரு பெரிய உலகப்போர் நடந்தது. அப்போது 18000 பேருக்கு மேற்பட்டோர் காயமடைந்து மிகவும் மோசமான

நிலையில் இருந்தனர் அவர்கள் அனைவரும் மிலிட்டரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் அவர்களுக்குச் சேவை புரிய நமது நைட்டிங்கல் அம்மையாருக்கு அழைப்பு வந்தது.

அப்போது அவர்களுடன் 30 செவிலியரைச் சேர்த்துக்கொண்டு போரில் காயமடைந்த படைவீரருக்குச் சேவை செய்ய உடனே புறப்பட்டு சென்றார்.

சிறப்பான செவிலிய சேவை:

நமது நைட்டிங்கல் அம்மையார் அவர்கள் சேவை செய்யும் போதெல்லாம் அவர்கள் கருத்தில் வந்து செல்வது சரியான மருந்து, சுத்தமான முறை, சுகாதார முறை, சரியான நேரத்திற்கு உணவு, சரியான தூக்கம் மற்றும் மனநலம் இவை ஒரு நோயாளிக்கு அவசியம் என்று கருத்தில் கொண்டார் மற்றும் அதை பின்பற்றினார் நமது நைட்டிங்கல் அம்மையார் அவர்கள்.

செவிலியர் பள்ளி துவக்கம்:

நமது நைட்டிங்கல் அம்மையார் அவர்கள் 1855 –ம் ஆண்டு இத்தாலியில் நர்சிங் ஹோம் அமைத்து அதில் அதிக செவிலியரை பயிற்றுவித்தார் அனைத்து பெண்களுக்கும் ஊக்கம் கொடுத்தார்

நர்சிங் பள்ளியில் அனைவருக்கும் சீருடை, சுத்தம், நேரம் தவறாமை, சுகாதாரம், சேவை புரிதலின் நோக்கம் போன்றவற்றை பயிற்றுவித்தார்

நைட்டிங்கல் அம்மையாரின் மறைவு:

நைட்டிங்கல் அம்மையார் தனது 90–ம் வயதில் புருசிலோஸிஸ் என்ற நோயால் இத்தாலியில் மறைந்தார்

இன்றைய நைட்டிங்கல்ஸ்:

1853–ம் ஆண்டு உதித்த ஒரு நைட்டிங்கல் அம்மையாரால் இன்று இவ்வுலகம் முழுவதும் அவரது பணி சிறக்க ஒவ்வொரு செவிலியரும் நைட்டிங்கல் அம்மையாராக மாறினார்கள்.

அதன் புகழ்பெருமை நம்மை அதாவது ஒவ்வொரு சுகாதார பணியாளர்களையும் சேரும்.

நாம் அனைவரும் சிறந்த மக்கள் சேவையில் பணியாற்றிட முனைவோம்.

துணிந்து பிரச்சனைகளை எதிர்க்கொள்வோம்.

சேர்ந்து இந்நாட்டின் வளத்தை வளர்ப்போம்.

முடிவுரை:

"மக்கள் சேவை மகேசன் சேவை என்ற கூற்றுபடி சேவை சேவையாகவே மக்களை சென்றடைய உழைப்போம். சேவை வியாபாரம் ஆக்காமல் தடுப்போம்.

நமது நைட்டிங்கல் அம்மையார் அவர்கள் சேவை செய்யும் போதெல்லாம் அவர்கள் கருத்தில் வந்து செல்வது சரியான மருந்து, சுத்தமான முறை, சுகாதார முறை, சாரயான நேரத்திற்கு உணவு, சரியான தூக்கம் மற்றும் மனநலம் இவை ஒரு நோயாளிக்கு அவசியம் என்று கருத்தில் கொள்ள வேண்டும்,

# கவிதை

வெண்ணிற உடை கொண்ட கோதை
        வெண்மையான மனம் கொண்ட பாவை
கவியில் எழுதாத தாரிகை
        கண்களில் புலப்படும் தேவதை
உடலில் பிணி கண்டால் உறவுகள் கூட அண்டாது
        உற்றாரும் உறவுகளும் ஒரு நிமிடம் கூட நில்லாது
சொந்தமோ பந்தமோ யாரந்த மாது
        நம்மை தொட்டு பணி செய்ய யார் இவளை பணித்தது
முதியவருக்கு உடன் பிறப்பாகின்றாள்
        சேய்க்கு அவளே தாயாகின்றாள்
சங்கோஜம் இன்றி பணிவிடை செய்து சிரிப்பு ஒன்று சிந்துவாள்
        சங்கடத்தை புறம் தள்ளி சமிஞ்சை ஒன்று செய்குவாள்
நம்மை முதல் முதலாய் நீராட்டி நிறம் கண்டவள்
        தாய்க்கு முன் நம்முடைய முகம் கண்டவள்
ஓய்வில்லா சேவை, உருவுள்ள அன்பு
        நலனில் அக்கறை நல்லவையே எண்ணம்
கொண்டவர்கள் செவிலியர்கள்.

# மக்கள் சேவையில் நூறு ஆண்டுகள்

பாருக்குள்ளே நல்ல நாடு நம் பாரத நாடு பாரதத்திலே தலை சிறந்த மாநிலம் தமிழகம் என்றால் மிகையாகாது. உலக அரங்கில் பாராட்டப்படுகின்ற மாநிலம் எல்லா துறைகளிலும் வளா;ச்சி கண்டு தற்போது பொது சுகாதாரச் சேவையில் 100 ஆண்டுகள் நிறைவுற்றதை கொண்டாடும் தருணம்.

நோயாளிகள் மருத்துவர்களைத் தேடிச் சென்ற காலம் மலையேறிவிட்டது. தற்போது இல்லம் தேடி மருத்துவம் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் கிராமப் புறங்களில் அனைவரும் எளிதாகச் சென்று இலவசமாக சிகிச்சை பெறக்கூடிய நிலை வந்துள்ளது

இந்த அபார வளர்ச்சிக்கு ஒரு தனி நபர் அல்ல ஒட்டு மொத்த மருத்துவ துறையின் நபர்களே காரணம் . களப்பணியாளர்கள், செவிலியர்கள் , மருத்துவர்கள் ஆய்வக நுட்புனர்,விஞ்ஞானிகள், மருந்துகள் தயாரிப்பாளர்கள் என எத்தனையோ நபர்களின் ஒட்டு மொத்த உழைப்பால் மட்டுமே இந்த அபார வளர்ச்சி சாத்தியமாயிற்று.

இந்த நூறு ஆண்டுகளில் எத்தனையோ கொடிய நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு தீர்வு காணப்பட்டுளது. பிளேக் பெரியம்மை மஞ்சள்காமாலை, பன்றிக் காய்ச்சல், கக்குவான் இருமல் தொழுநோய் , எபோலா என சமீபக் காலத்தின் கொரோனா வரையிலான வரை மருத்துவத்துறையில் முன்னேற்றம் பாராட்டுக்குரியது. தங்கள் உயிரைத் துச்சமாக மதித்து நேரம் காலம் பார்க்காமல் நோயாளிகளுக்காக உழைத்து மருத்துவர்கள் , செவிலியர்கள் களப்பணியாளர்கள் கடவுளுக்கு சமமானவர்கள்.

கிராமங்களே நமது தேசத்தின் முதுகெலும்பு. ஒவ்வொரு கிராமத்திலும் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும் மிக சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. நீலகிரி மாவட்டத்தில் மிகவும் சிறப்பாக நடைபெறும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அனைவராலும் போற்றப்பட்டது. ஒவ்வொரு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் வெளி நோயாளிகள், உள் நோயாளிகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சேவைகள் 24 மணி நேரமும் வழங்கப்படுகின்றன கூடுதலாக அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், கூடுதல் கட்டட வசதிகள் வாகனங்கள் என் பொது சுகாதார உள்கட்டமைப்பு பெரிதாக வளர்ந்து வசீகர வளர்ச்சி கண்டுள்ளது.

வரும் முன் காப்போம் என்பதே மிகச் சிறந்த வழி. பொது மக்கள் விழிப்புணர்வு சரியான நேரத்தில் சரியான தடுப்பூசிகள் போட்டுக்கொண்டால் நிறைய வியாதிகளிலிருந்து நாம் நம்மை காப்பாற்றிக் கொள்ளலாம மிகவும் முக்கியமானது தாய் சேய் நலம்.

சுகாதாரத் துறையில் எத்தனையோ முன்னேற்றங்கள் தமிழக பொத சுகாதார துறையின் வளர்ச்சியில் பங்கு கொள்ளும் ஒவ்வொரு ஊழியரும் துப்புரவு தொழிலாளி முதல் விஞ்ஞானிகள் வரை அனைவரும் பாராட்டுக்குரியவர்களே அனைவரையும் மனதார வாழ்த்துவோம் நோயில்லாத சமுதாயத்தை உருவாக்குவோம்.

பொது சுகாதாரம்

பொது மக்களின் ஆரோக்கியத்தைத் தீர்மானித்துப் பாதுகாப்பது பற்றிய அறிவியல் என்று பொது சுகாதாரம் வரையறுக்கப்படுகிறது.

பொது சுகாதாரம் பல தரப்பட்ட ஒரு வளரும் துறையாகும் . பொத சுகாதாரத்தின் நன்மைகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

பொது சுகாதார மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை:

பொது சுகாதார துறை 1922–ம் ஆண்டு தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டது.

தாய் சேய் நலச் சேவைகளை வழங்குதல் மற்றும் தொற்று நோய்களின் அபாயங்களிலிந்து மக்களைப் பாதுகாத்து பொதுச் சுகாதாரம் பேணுதல் ஆகியவை இத்துறையின் முக்கிய குறிக்கோள்களாகும்.

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் வழங்கப்படும் அடிப்படை மருத்துவ சேவைகள்:

தாய் சேய் நல சேவைகள் கர்ப்ப கால சேவைகள், ஸ்கேன் பரிசோதனை மற்றும் 24x7 மணி நேர கர்ப்ப காலச் சேவைகள்.

வெளி உள் நோயாளிக்கான சிகிச்சை.

அவசர கால ஊர்தி சேவைகளான 108,104 போன்ற சேவைகள் 24 மணி நேரமும் வழங்கப்படுகிறது.

தொற்றும் மற்றும் தொற்றா நோய்க்கான சிகிச்சை.

30 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் நீரிழிவு மற்றும் இரத்த அழுத்ததிற்கான பரிசோதனை மற்றும் பெண்களுக்கான கருப்பை வாய் புற்றுநோய்,மார்பக புற்றுநோய்க்கான பாரசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம்.

ஏழை எளிய கர்ப்பினி தாய்மார்களுக்கு ரூ.18,000 நிதியுதவி வழங்கப்படுகிறது. மகப்பேறு காலத்தில் கர்ப்பிணித் தாய்மார்களின் உடல் நலம் பேணவும், வருவாய் இழப்பினை ஈடு செய்யவும் ரூ.18,000 வழங்கப்படுகிறது.

கர்ப்பிணி தாய்மார்களுக்கு தேவையான பொருட்கள் மற்றும் மருந்துகள் அடங்கிய பெட்டகமும் ஒவ்வொரு பிரசவத்திற்கு ஒன்று வீதம் இலவசமாக வழங்கப்படுகிறது.

·சுகாதார செவிலியர்கள் கர்ப்பிணி தாய்மார்கள் பற்றிய விவரங்களை PILME இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும்.

· ஓவ்வொருக்கும் ஒரு தாய்மை நல எண் (English) வழங்கப்படும்.

சானிட்டாр நாப்கின் வழங்கும் திட்டம்:

அனைத்து பள்ளிகளிலும் பயிலும் வளரிளம் பெண்கள் மற்றும் பள்ளி செல்லாத வளரிளம் பெண்களுக்கு சானிட்டர் நாப்கின் அங்கன்வாடி மற்றும் பள்ளிகள் வாயிலாக வழங்கப்படுகிறது.

பிரசவித்த தாய்மார்களுக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது.

2 மாதத்திற்கு ஒரு முறை 12 பாக்கெட் எண்ணிக்கையில் தரப்படுகிறது.

வாரந்திர இரும்பு சத்து மாத்திரை வழங்கப்படுகிறது.

**தேசிய குடற்புழு நீக்கம்:**

வருடத்திற்கு இருமுறை (பிப்ரவரி மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் நடைபெறுகிறது பள்ளி (1–19) வயது பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

**ஜவட்டமின் ஏ திரவம் வழங்குதல்:**

வருடத்திற்கு இருமுறை ( செப்டம்பர் மற்றும் மார்ச்) மாதங்களில் 6 மாதம் முதல் 60 மாதம் வரை உள்ள குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

**பிறப்பு மற்றும் இறப்பு பதிவு முறை:**

பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச்சட்டம் 1969 –ன்படி அனைத்து பிறப்பு மற்றும் இறப்புகளை பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

21 நாட்களுக்குள் பதிவு செய்வது கட்டாயமாகும் வளர் இளம் பருவத்திற்கான 10 முதல் 19 வரை வயதினருக்கான ,உடல் மற்றும் மனம் சார்ந்த மனரீதியான ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.

ராஷ்ட்ரீய பால் ஸ்வஸ்த்ய கார்யகரம் (RPSK) அரசு மருத்துவ நிலையங்கள், அங்கன்வாடி மையங்கள் மற்றும் பள்ளிகளில் பயிலும் பிறந்த குழந்தை முதல் 18 வயதுடைய அனைத்து குழந்தைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் பரிசோதிக்கப்படுகின்றனர்.

பிறவி குறைபாடு, சத்து பற்றாக்குறை ஆகியவை கண்டறியப்பட்டு ,அறுவை சிகிச்சை மருந்து சிகிச்சை மூலம் குறைபாடுகளை நீக்குகிறது.

'உடல் நிலையை அறியாத

பொய் நிலை கொண்டுவாழ வேண்டாம்

உடல்நிலை பற்றி விழிப்போடு இரு.

என்பதற்கேற்ப அனைவரும் வாழ கற்றுக்கொள்வோம்.

# எனது அனுபவம்

நான் விருதுநகர் சுகாதாரப் பகுதி மாவட்டத்தில் கண்காணிப்பாளர் ஆகப் பணிபுரிந்து வருகிறேன். 26.12.2004 அன்று தமிழ்நாடு ஆழிப் பேரலை (சுனாமி) நடந்த போது துணை இயக்குநர் மரு.சு.பாலசுப்பிரமணியன் அய்யா அவர்கள் தலைமையில் மருத்துவக் குழு நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு களப் பணிக்காக டிசம்பர் மாத கடைசி நாளிலிருந்து தைத் திருநாள் முதல் நாள் வரை தலை ஞாயிறு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தங்கி அனைவரும் களப்பணி சிறப்பாக செய்தோம்.

இந்த மருத்துவக் குழுவில் மருத்துவ அலுவலர் வட்டார சுகாதார மேற்பார்வையாளர் மருத்துவம் சாரா மேற்பார்வையாளர் மருந்தாளுநர் சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் மருத்துவமனை பணியாளர் இருந்தார்கள் இதில் எனக்கு என்ன பெருமை என்றால் எங்கள் குழுவில் நான் ஒருவன் மட்டுமே அமைச்சுப் பணியாளர்.

என்னுடைய பணி என்பது களப்பணி,

எங்கள் மருத்துவக் குழு காலை 7.00 மணிக்கு கிளம்பி இரவு 7.00 மணிக்கு களப்பணிகளை முடித்து விட்டு திரும்புவார்கள். அங்கு நாங்கள் 15 நாட்கள் பணிபுரிந்தோம். நமது துறை என்பது, வரும் நோய் மற்றும் வருகின்ற நோயையும் தடுத்து மக்களை பாதுகாத்து வருகிறது.

டிசம்பர் மாதம் நடக்க இருக்கும் நமது துறையின் 100 வது ஆண்டு பொன் விழாவில் நானும் பணி செய்தேன் என்பதில் எனக்கு மகிழ்ச்சி. அதனால் தான் நம்முடைய துறை பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து துறை என பெயர் வைத்திருப்பார்கள் என நினைக்கிறேன்.

# நூற்றாண்டின் மகிழ்ச்சி

**பொது சுகாதாரம்**

ஆயிரம் பிறை கண்டோரும்... நம்
பொது சுகாதாரத் துறை கண்டோரே !
பாயிரம் பாடி இதை வாழ்த்துவம் நாமே !
"நூறாண்டு காலம் வாழ்க !
நோய் நொடி இல்லாமல் வளர்க !""
முதலிலேயே முத்தாய்ப்பு வழிகாட்டிப் பாடல்...
வாழ்ந்து காட்டிய துறை – எம்
பொது சுகாதாரத் துறை...

**வரலாறு...**

நாடாண்ட மாமன்னன் பாராள வேண்டி
போராட வந்தவனை வீழ்த்திட்டது – "மலேரியா"
மலேரியாவையே மலையேற்றிய துறை – எம்துறை
எலியேறி வந்து எல்லா மக்களையும்
வலியே இன்றிக் கொன்று குவித்தது "பிளேக்" – அன்று
"பிளேக் மாரியம்மன்" என கோவையில் ஒரு பிளாக்கில்
மட்டுமே பெயரளவில் – இன்று
காலார நடைபயின்று செல்ல
"காலரா" நமை வந்து கொல்ல
பாதையில் மலம் கழித்தல் தவிர்த்து
காலராக் காலனை கால் தெறிக்க ஓடவிட்டது...
நம் பொது சுகாதாரத் துறை...

**தலைமுதல் பாதம்வரை....**

**தலைமுறை வாழும் வரை....**

மூளைக் காய்ச்சல்,
கண் வலி, காசநோய்,
வாய்ப்புண், வாந்தி பேதி,
மார்புச் சளி, மாரடைப்பு,
ஒட்டுக்குடல், ஒவ்வாமை,
இதயநோய், இடுப்புவலி,

சிறுநீர்த்தொற்று, சிறார்நோய்கள்,
நரம்புச் சிலந்தி, நடைதளர்ச்சி,
போதைப் பழக்கம், பாதவெடிப்பு,

தோல்வியாதி, தொழுநோய், – என ஆதிமுதல் அந்தம் வரையான அனைத்து நோய்களை அகற்றும் "தாயினும் சிறந்த துறையை" மக்களைத் தேடி மருத்துவம்"" துறையை கொண்டு செல்லும் மாபெரும் வளர்ச்சியைக் கொண்டாடுவோம்..

கால்நூற்றாண்டாய் இத்துறையில்... காலம் செலுத்தி "இராமருக்கு அணில் பிள்ளையாய்" நானும் இத்துறையில் பணியாற்றும் நற்காலத்தில்.... நூற்றாண்டு காணும் பொற்காலத்தில்... நினைக்கவே நெஞ்சு விம்முகிறது....

"மக்கள் சேவையே மகேசன் சேவையாய் செயலாற்றி மக்களிடம் செல், மக்களோடு மக்களாக பணியாற்று"" என்ற "அண்ணா" வழியில் அயராது உழைப்பேன் என "நூற்றாண்டு உறுதிமொழி கொண்டு இத்துறையில் உழைக்க சபதம் ஏற்பேன்...

வெற்றி!

அழுதிடும் ஏழை, தள்ளாடும் முதுமை, வழிதெறியாப் பேதை, கருசுமக்கும் தாய்மை, உயிர் போகும் தருணம் என அனைத்தும் பார்த்து

"துறை என்ன செய்தது நமக்கு"– என்பதை விட்டு "நாம் என்ன செய்யலாம் துறைக்கு' – என நினைத்து
"காலரா" காலத்தில் கடமையாற்றிய ஆன்றோர் முதல்
"கொரானா" காலத்தில் கடுமையாகப் போராடிய இளையதலைமுறை வரை பொதுசுகாதாரத்தின் துறைசார்ந்த அனைவருக்கும்
ஒரு நூற்றாண்டு கண்ட நம்
"பொது சுகாதாரத்துறை" பல நூற்றாண்டு காண வேண்டும் என்பதே வெற்றி!

# மருத்துவமனை கட்டுரை

## முன்னுரை

இன்றைய உலகில் மக்கள் அனைவராலும் போற்றப்படுகின்ற உன்னதமான பணியாக மருத்துவம் விளங்குகிறது. நமது உடலில் ஏற்படும் பல்வேறு வகையான குறைபாடுகளுக்கு தீர்வு காணும் முறையாக மருத்துவம் காணப்படுகின்றது. சிறுவர்கள் முதல் வயதானவர்கள் வரை மருத்துவத்தின் தேவையின்றி யாருமே இல்லை. ஆரம்ப காலத்தில் பெரும்பாலும் நோய்த்தாக்கம் குறைவாகக் காணப்பட்டது. ஆனால் தற்போது விரைவான வாழ்க்கை சூழ்நிலைகளாலும் முறையற்ற துரித உணவுப் பழக்க வழக்கத்தாலும் சிறு வயதினிலே நோய்த்தாக்கத்திற்கு ஆளாகின்றார்கள். எனவே இன்றைய கால கட்டத்தில் மருத்துவத்திற்கான தேவை அதிகமாக காணப்படுவதோடு மருத்துவம் இல்லை என்றால் மனிதன் இல்லை என்று கூறும் அளவிற்கு இவ்வுலகம் மாற்றமடைந்துள்ளது.

## மருத்துவப்பணியின் சிறப்பு

உயிர்காக்கும் உன்னத பணியாகக் கருதப்படும் மருத்துவப் பணியானது பல்லாயிரக்கணக்கான உயிர்களின் உயிர் வாழ்வதற்கு கூட காரணமாக அமைகின்றது. உடலிலுள்ள நோய்களை கண்டறிவது மட்டுமின்றி நோய்கள் மனதார அண்டாமல் பாதுகாப்பாக இருப்பதற்கும் வழிவகை செய்கின்றது. மருத்துவப்பணியில் ஈடுபட்டவர்கள் சமூகத்தில் உயர்ந்த இடத்தில் மதிக்கப்படுவதால் அவர்கள் கடவுளுக்கு நிகராக போற்றப்படுகின்றனர். கடவுளின் தூதுவர்களாக மருத்துவர்களும், செவிலியர்களும் கருதப்படுகின்றனர்.

## மருத்துவத்தின் தோற்றம்

பண்டைய காலத்தில் தொழில்நுட்ப பயன்பாடும், இரசாயனப் பொருட்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் பொருட்களின் உபயோகம் குறைவாக காணப்பட்டது. இதனால் மனிதர்கள் ஆரோக்கியமாகவும் நீண்ட ஆயுளைப் பெற்றும் வாழ்ந்தார்கள். பெரும்பாலும் நோய்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாகக் காணப்பட்டது. சிறு, சிறு நோய்களுக்கு தீர்வாக மருத்துவ குணமுடைய மூலிகைச் செடிகளை பயன்படுத்தி வந்தனர். ஆனாலும் நூற்றாண்டுகளுக்கு ஒருமுறை பெருந்தொற்று நோய்கள் உருவாகி பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் காவு கொண்டன.

அதனை தடுத்து நிறுத்தும் முகமாக பல்வேறு ஆங்கில மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டன. உதாரணமாக 1872 நுண்ணுயிரியலின் தந்தை என அழைக்கப்படுகின்ற லூயி பாஸ்டர் நோய் எதிர்ப்பு பாக்டீரியாவைக் கண்டறிந்தார். அதன்பின் 1928ல் இங்கிலாந்தைச் சேர்ந்த அலெக்சாண்டர் பிளெமிங் பென்சிலினை கண்டறிந்தார். இவ்வாறு மருத்துவம் சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து இன்றைய நவீன காலத்தில் அபாரமாக வளர்ச்சியடைந்துள்ளது.

## இன்றைய சூழலில் மருத்துவம்

உலகையே உலுக்கி பல்லாயிரக்கணக்கான உயிர்களை காவு கொண்ட கொடிய வைரசான கொரோனா இந்த உலகை ஆட்டி கொண்டிருக்கும் இன்றைய சூழலில் மருத்துவமனையானது மிகப்பெரிய சவாலை எதிர்கொண்டது. பொதுமக்கள் மட்டுமின்றி தமது உயிரை அர்ப்பணித்து போராடி வருகின்ற பல்லாயிரக்கணக்கான மருத்துவர்களும் கொரோனாவின் கோரப்பிடியில் சிக்கியுள்ளனர். இரவு, பகல் பாராது பசி தூக்கம் மறந்து தம் குடும்பங்களையும் பிரிந்து சமூகத்திற்காக சேவையாற்ற வேண்டிய கட்டாயம் மருத்துவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. மிகவும் இக்கட்டான இக்காலக்கட்டத்தில் மருத்துவப்பணி என்ற ஒன்று இல்லை என்றால் மனித இனம் முற்றிலும் அழிந்துவிடும்.

## மருத்துவத்தின் வளர்ச்சி

பண்டைய காலத்தில் இயற்கையோடு இணைந்த மருத்துவ முறைகள் காணப்பட்டன. இன்று அதி நவீன அறிவியலில் உருவான தடுப்பூசிகள், மாத்திரைகள் மட்டுமின்றி தொழில்நுட்ப வளர்ச்சியில் உருவான கருவிகளை பயன்படுத்தி மூளை மற்றும் இதயத்தில் ஏற்படுகின்ற பிரச்சனைகளை கண்டறியவும், இரத்த ஓட்டம் மற்றும் நரம்பியல் பிரச்சினைகள் என மனித உடலில் ஏற்படுகின்ற எந்தவொரு நோயையும், சரிப்படுத்தும் வகையில் மருத்துவமானது வளர்ச்சியடைந்துள்ளது. பல்வேறு அறுவை சிகிச்சை முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு இன்று மருத்துவம் அதன் உச்சகட்ட வளர்ச்சியை அடைந்துள்ளது.

## முடிவுரை

மக்களிற்கு சேவை செய்பவர்களை உயர்வாகக் கருதும் இக்காலகட்டத்தில் தம் உயிரை துக்கமாக மதித்து மக்களுக்காக சேவையாற்றும் மருத்துவர்களின் பணியானது மிகவும் போற்றப்படவேண்டியது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

என்ற பழமொழிக்கேற்ப நோயற்று வாழ்வதே ஒரு மனிதன் பெறும் சிறந்த கொடையாகும். அதற்கு உறுதுணையாக இருக்கும் மருத்துவர் செவிலியர் அனைவரையும் போற்றுவோமாக.

## பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்து துறை
## நூற்றாண்டு சாதனை சிறப்பு விழா (1922 – 2022)

ஓம்

பல்லவி

"சுகாதாரத்துறை மக்களின்  சுக ஆதாரத்துறை"
"சுகாதாரத்துறை மக்களின்  சுக ஆதாரத்துறை"

"ஏழை எளியோர் , மேலோர் கீழோர்
பேதம் பார்க்காத  இந்த  துறை"
"ஊரும் பேரும் நாட்டின் நலமும்
மூச்சாக கொண்டது எங்கள் துறை"
"பணியை  நோக்கி  பிணியை போக்கி
தன்னலம் பார்க்காத தங்கத்துறை"

பல்லவி

"சுகாதாரத்துறை மக்களின்  சுக ஆதாரத்துறை"
"சுகாதாரத்துறை மக்களின்  சுக ஆதாரத்துறை"

சரணம் – 1

"ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தி இரண்டில் தொடங்கியதே!
""கிராமத்திலும், நகரத்திலும் உள்ள தாய்சேய்  நலனை வழங்கியதே !
"ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தி இரண்டில் தொடங்கியதே!
"கிராமத்திலும், நகரத்திலும் உள்ள தாய்சேய்  நலனை வழங்கியதே !
தொற்றுநோய் அபாயம் நீங்க
பொது சுகாதாரத்தை  பேண
நோய்கள் காயங்கள் நீங்க
அதை தடுப்பதும்  தணிப்பதும் தாங்க
"தற்கொலைகள் தடுத்திட புகைப்பதை நிறுத்திட  தடுப்பூசி வழங்கிடுவோங்க !
ஆரோக்கியம் மேம்படுத்தி ஆயுட்காலம் அதிகரிக்க ஒட்டுமொத்த இலக்கு தாங்க.....

பல்லவி

"சுகாதாரத்துறை மக்களின்  சுக ஆதாரத்துறை"
"சுகாதாரத்துறை மக்களின்  சுக ஆதாரத்துறை"

சரணம் – 2

இலவசமாய் சிகிச்சை தர நடமாடும் மருத்துவ குழு உண்டு,
எதிர்பாரா விபத்து என்றால் நூற்றி எட்டு ஆம்புலன்சும் துணையுண்டு,
விபத்து இடம் போனவுடன் முதலுதவி செய்து தேற்றிடுவோம்
அடுத்த நொடி அருகில் உள்ள அரசு ஆஸ்பிட்டலில் சேர்த்திடுவோம்
ப ள்ளி சிறார்க்கு நாங்க கண் பரிசோதனை செய்யுவோங்க
பரிசோதனையோடு சிகிச்சை செஞ்சு பார்வைக்கு வழி தருவோங்க
கர்ப்பிணி தாய்மார்கள் வீட்டிற்கு சென்று பிரசவத்திற்குதவும் JSY
ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டம்
தாய்சேயை வீட்டில் கொண்டு சேர்த்து விடும்.
ஆசுஆக்ஷளு நிதி உதவி திட்டம் பதினெட்டாயிரம் வழங்கிடுமே

பல்லவி

"சுகாதாரத்துறை மக்களின் சுக ஆதாரத்துறை"
"சுகாதாரத்துறை மக்களின் சுக ஆதாரத்துறை"

சரணம் – 3

ஏழையர்க்கும், எளியவர்க்கும் , நடக்க முடியாத முதியவர்க்கும்
வீட்டில் வந்து சிகிச்சை தர உண்டு மக்களை தேடி மருத்துவங்க
டெங்கு ஜுரம் , மலேரியா கொள்ளைநோய்களுக்கு தடுப்பூசி
வழங்குவதும் நலன் காப்பதுமே, தணியாத எங்கள் தாகமுங்க
கொரோனா ஊரடங்கை சொல்லணுமா,
அம்மம்மா, கொஞ்சமா, நஞ்சமா,
உலகமே கொரோனா ஊரடங்கில்,
எத்தனையோ உடல்கள் சவக்கிடங்கில்.......
உறவுகள் கூட பக்கம் வர பயத்தில் கிடந்ததே என்ன சொல்ல !
தன்னுயிரைத் துச்சமென்று மக்களுக்கு பக்கம் நின்ற மருத்துவ குழுக்கள் தானே !
முன்கள பணியாளர்கள், துப்புரவு பணியாளர்கள், செவிலியர்கள், மருந்தாளுநர்கள்,
ஆய்வக நுட்புநர்கள் தானே......
கோவிட் தடுப்பூசி , மக்களை தேடி மருத்துவம்,
வரும்முன் காப்போம் போன்ற
திட்டங்கள் உள்ள துறை தானே

பல்லவி

"சுகாதாரத்துறை மக்களின் சுக ஆதாரத்துறை"
"சுகாதாரத்துறை மக்களின் சுக ஆதாரத்துறை"

நன்றி ! ! !

# கவிதை

நம் நாட்டுக்குள்ளும்
நம் வீட்டுக்குள்ளும்
உயிர் தின்னும்
அந்த பூதத்தை
நுழையவிடாமல்
தடுத்துக் கொண்டிருக்கும்
வெள்ளுடை பூண்ட
எங்கள் எல்லைச் சாமிகளே....
இரவு பகலாய் 24 மணி நேரமும்
தேசத்தின் எல்லா நுழைவாயில்களிலும்
எல்லைப் பாதுகாப்பு படைபோல்
உங்கள் கொள்ளை நோய் தடுப்பு
பாதுகாப்புப் படை
பெற்ற பிள்ளையும் உற்ற உறவுகளும்
ஒதுங்கி நிற்கும் போதெல்லாம்
கவச உடை தரித்து நீங்கள் ஆற்றிய சேவை
உங்கள் கருணைக் கரங்களுக்கு எங்கள்
கனிவான வணக்கங்கள்
தன்னுயிர் பேணா பிற உயிர் காக்கும்
மருத்துவ உலகமோ,
உங்களின் தன்னலமற்றத் தியாகத்தால் தான்
இங்கு சுடர்விடுகின்றன
பல உயிர்களின் தீபங்கள்
கொரோனாவுக்குப் பயந்து கோயில்களுக்கே
பூட்டுப் போடப்பட்டது. ஆனால் நம்
அரசு மருத்துவமனையோ வாசல் கதவுகளை
திறந்து வைத்து வரவேற்று
ஆண்டவன் போல் காத்திருக்கிறது என்றும்
வாழ்க மருத்துவ உலகம்
வளர்க மருத்துவ உலகம்

# சிசேரியன் சிகிச்சையின் காரணம் குறித்த தாய்மார்களின் தெளிவும் அதை குறித்த நம்பிக்கைகளும்

பரமக்குடி சுகாதார மாவட்டம்

## அறிமுகம்:

பரமக்குடி சுகாதார மாவட்டத்தில் மொத்தம் 8038 பிரசவங்கள் (2021–22) ஆம் ஆண்டு நடைபெற்றுள்ளது. அதில் 4 9 % சிசேரியன் சிகிச்சையினால் பிரசவங்கள் நடைபெற்றுள்ளது. உலக சுகாதார நிறுவனத்தின் படி 20% பிரசவங்கள் சிசேரியன் மூலம் பிறப்பது ஏற்புடையதாக கருதப்படுகிறது. எனவே பரமக்குடி சுகாதார மாவட்டத்தில் (2021–2 2 ) – ம் இந்த வருடம் சிசேரியன் பிரசவங்கள் காரணங்கள் அறிய இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

## முறைகள்:

பரமக்குடி சுகாதார மாவட்டத்தில் உள்ள 6 வட்டாரங்களில் போகலூர் வட்டாரமானது Random –மாக தேர்வு செய்யப்பட்டது. இதில் மொத்தம் 251 பிரசவங்கள் நடைபெற்றது. இதில் 149 பிரசவங்கள் இந்த ஆராய்ச்சிக்கு Random– மாக தேர்வு செய்யப்பட்டது. இந்த தாய்மார்களிடம் கேள்வி தாள்கள் மூலம் பதில்கள் பெறப்பட்டது. பதில்களை ஆராய்ந்து கீழ் வரும் முடிவுகள் அறியப்பட்டது.

முடிவுகள்:

1. 89% சுயதொழில் செய்வோராக இருந்தார்கள்.
2. 96% சொந்த வீட்டில் வசிப்பவராக இருந்தார்கள்.
3. 88% தாய்மார்கள் இரண்டு குழந்தைக்கு கீழ் உள்ளவராக இருந்தார்கள்
4. 12% தாய்மார்கள் மூன்று குழந்தைக்கு மேல் உள்ளவராக இருந்தார்கள்.
5. சராசரி வயது 26.3%
6. 46.3% பேர் 19–25 வயதில் இருந்தார்கள்.
7. 90% மேலானவருக்கு தங்களுக்கும் தங்கள் குழந்தைக்கும் ஏற்பட கூடிய சிக்கல்களை சிசேரியன் மூலம் மேற்கொள்ளப்பட்டதாக அறிந்திருந்தார்கள்.
8. 1 7 % தாய்மார்கள் பணிக்குடம் உடைந்ததால் சிசேரியன் செய்ததாக கூறினார்கள்.
9. 7% தாய்மார்கள் கர்ப்பகாலத்தில் சிக்கல்கள் மற்றும் தாய் சேயின் உடல்நிலை சரியில்லாததால் சிசேரியன் செய்ததாக கூறினார்கள்.
10. 4 3 % முதல் குழந்தை சிசேரியன் என்பதால் இரண்டாவதும் சிசேரியன் செய்ததாக கூறினார்கள்.

11. 100% தாய்மார்கள் நம்பிக்கை காரணமாக குழந்தை பிறப்பதற்கு நல்ல நாள், நல்ல நேரம் தேர்வு செய்ய சிசேரியன் செய்யப்படவில்லை என தெரிவித்துள்ளார்கள்.

12. 1% தாய்மார்கள் முதல் குழந்தை குறைபாட்டுடன் பிறந்ததால் இரண்டாவது குழந்தை சிசேரியன் செய்ததாக தெரிவித்துள்ளார்கள்.

## முடிவுரை:

1. அதிகமானோர் முதல் குழந்தையின் காரணமாகவே இரண்டாவது குழந்தையும் சிசேரியன் என்று 50% பேர் கூறினார்கள்.
2. சிசேரியன் சிகிச்சைக்கு பிறகும் சுகப்பிரசவத்திற்கு வாய்ப்புகளையும் வசதிகளையும் மேம்படுத்துவதன் மூலம் சுகப்பிரசவங்கள் அதிகப்படுத்துவதற்கு வாய்ப்பு உள்ளது.
3. தொடர் சிகிச்சை தொடர் கண்காணிப்பின் மூலம் குழந்தைக்கும் தாய்மார்களுக்கும் ஏற்படும் சிக்கல்களை குறைக்க வேண்டும்.

## முக்கிய வார்த்தைகள்:

சிசேரியன்

தாய்மார்கள்

குழந்தைகள்

சுகப்பிரசவங்கள்

# தடுப்பூசி விழிப்புணர்வு

தடுப்பூசிய மறந்துபிட்டு கஞ்சிகழயம் கொண்டுகிட்டு
கர்ப்பிணி பெண்ணொருத்தி களைப்புடனே வந்தாளம்
முத்தான வேர்வையுடன் முகம் சோர்ந்த பெண் அவளாம்
சத்தான உணவின்றி தளர்நடையும் போட்டாளாம்
ஊட்டச்சத்துயின்றி உடல்சோர்வாய் நின்றாளாம்.

கர்ப்பம்ன்னு தெரிந்தவுடன் Td போட்டுங்க அதை
அதற்கு அடுத்தடுத்த மாத்த்தில் இரண்டாம் ஊசி போட்டிருங்க
அந்த ஊசி தடுப்பூசி இரணஜன்னி, தொண்டை அடைப்பானும்
இந்த ஊசியினாலே இரணஜன்னி வராம தடுத்திடனுங்க

முன்னூறு நாளை மட்டும் எண்ணி கொள்ளுங்க
அதன் பின்னாலே தங்க பாப்பா தவழப் போறாங்க
அந்த பாப்பாவிற்கு பிறந்தவுடன் தடுப்பூசி போடுங்க
அதனாலே காசநோய், போலியோவையும் தடுத்திடலாங்க

பெண்டா ரோட்டா ஊசியோடு, போலியோ மருந்தும்
அதை 1 ½ , 2 ½ , 3 ½ மாதத்தில் கொடுக்க வேண்டுங்க
பெண்டா ஊசி 5 வகை நோயை தடுத்திடுங்க
அந்த ஊசி தடுப்பூசி தவறாம போட்டிடுங்க

ஒன்பதாம் மாதத்தில் MR தடுப்பூசி முதல் தவணை போட்டிடுங்க
நோய் வராம தடுத்திடுங்க
முத்தடுப்பு ஊசியுடன் தட்டம்மை ரூபெல்லா
தடுப்பூசி போட்டுடுங்க நோய் வராம தடுத்திடுக
அனைத்து தடுப்பூசியும் மக்களே போட்டு கொள்ளுங்க
நோயின்றி நலமுடன் வாழ பாருங்க.

## பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருத்துவத்துறை "அனைவருக்கும் நல்வாழ்வு"

சுகத்திற்கு ஆதாரம் சுகாதாரம்
நோயற்ற வாழ்வே ! குறைவற்ற செல்வம்
– என்பதற்கு ஏற்ற வகையில்

இத்துறை செயல்பட்டு கொண்டு வருகிறது

99வது நூற்றாண்டு விழாவையொட்டி இத்துறையை பின்பற்றி "DPH–ன் பரிணாம வளர்ச்சி"" என்ற தலைப்பில் கட்டுரையைக் காண்போம் !

1. சிறப்பு மருத்துவமுறைகள்
2. காலரா முதல் கொரோனா வரை

## DPH-ன் பரிணாம வளர்ச்சி

### முன்னுரை

நம் பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருத்துவத்துறை என்கின்ற நல்வாழ்வு துறை 1922 முதல் 2022 வரை நூறு ஆண்டுகள் நிறைவு பெறுவதால், இத்துறையின் மூலம் மக்களுக்காக அளிக்கப்படும் சிறப்பு மருத்துவ முறைகளையும், பல நோய் தொற்றுகளையும், அதனை போக்க மேற்கொண்ட நோய் தடுப்பு முறைகளையும் பின்வருமாறு காண்போம்.

### சிறப்பு மருத்துவ முறைகள்

#### சுற்றுப்புற சுகாதாரம்

நம் அன்றாட வாழ்க்கைக்கு உணவு, உடை, இருப்பிடம் ஆகிய அடிப்படைத் தேவைகளைப் போல சுகாதாரமும் இன்றியமையாதது. நோய் நொடியற்ற ஆரோக்கிய வாழ்வு வாழ நமது சுற்றுப்புறச் சுகாதாரமும் ஒரு காரணமாக அமைகிறது. நாம் சுத்தமாக

இருப்பதுடன் நாம் வாழும் இடம், அதனைச் சுற்றியுள்ள பகுதிகள், காற்று, நீர், உணவு, வீடு, வேலை செய்யுமிடம், வீதி போன்றவற்றை சுத்தமாக இருக்குமாறு அமைத்துக் கொள்வதே சுற்றுப்புறச் சுகாதாரமாகும்.

**பாதிப்பைத் தவிர்க்க :**

அரசு வலியுறுத்தும் முறைகள் – பணியாளர் கடமைகள்

1. தண்ணீரை நன்றாக கொதிக்க வைத்து குடிக்க வேண்டும்.
2. குளோரின் போன்ற மருந்துகளை தண்ணீர் தொட்டியில் கலந்து தூய்மை செய்தல்
3. ஊரில் சாக்கடைகள் இருந்தால் வீட்டின் கழிவுகளின் நீரை மூடிய சாகக்டையில் மூலம் கலக்கும் வகையில் அமைக்கலாம்.
4. சுற்றுப்புற சுகாதாரத்தின் அவசியத்தை பற்றி மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.
5. சுகாதாரக் கழிப்பிடம் அமைத்தல்
6. குப்பை கூளங்கள் மக்கிப்போன இலை, தழைகள் போன்ற கழிவுப் பொருட்களை எருக்குழி அமைத்து மூடிவிடுதல்,
7. ஊரை சுற்றி கொசு மருந்து அடித்தல்
8. கோழையையோ (அ) எச்சிலையோ கண்ட இடங்களில் துப்புவதை தவிர்க்க வலியுறுத்தல்.

இதனால் ஏற்படும் நன்மைகளை பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

சிறப்பு மருத்துவ முறையில் ஆரம்ப சுகாதாரத்திற்கு உள்ள சிறப்பு அம்சங்களை நினைவு கொள்வோம்.

இத்துடன் அல்லாமல் பல நலதிட்டங்கள் நடத்தி வருகிறது. அவற்றில் சில நோய்களை முற்றிலும் தடுத்தல் மற்றும் ஒழிக்கவும் செய்துள்ளது முதலமைச்சரின் முத்தான மருத்துவ காப்பீட்டுத்திட்டம் அடங்கும்.

## DPH - NATIONAL PROGRAMME

- National Control Blindness Programme
- National Control Malaria Programme
- National Control HIV/Aids Programme (NALP)
- Non-Communicable Disease Control Programme
- Pulse Polio Programme

இப்படிக்கு

**B. வாணி,** செவிலியர்
அரசு ஆரம்ப சுகாதார நிலையம்,
ரிஷிவந்தியம்

# II. காலரா முதல் கொரோனா வரை

## a) காலரா

19-ம் நூற்றாண்டில் முதல் உலகத்தொற்று நோய். வயது வித்தியாசம் இன்றி சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரையும் பாதித்து மரணத்திற்கு அழைத்து சென்ற கொடிய தொற்று நோய். பல மில்லியன் மக்களை கொன்று உலகை புரட்டிப் போட்ட தொற்று நோய்.

கடுமையான வயிற்றுப் போக்கு மற்றும் நீரிழப்பை ஏற்படுத்தும் ஒரு பாக்டீரியா தொற்று

### தடுப்புமுறை

பொது சுகாதாரம் வலியுறுத்தியது

- ❖ கொதிக்க வைத்த தண்ணீர்
- ❖ கைகளை சோப்பு போட்டு நன்கு கழுவுதல்
- ❖ உப்பு கரைசல் தண்ணீர்
- ❖ சுத்தமான உணவு முறைகள்
- ❖ சுற்றுப்புறத் தூய்மை

## e) பிளேக்

- ❖ யெர்சினியா பெஸ்டிஸ் என்னும் பாக்டீரியாவால் உருவாகக் கூடியத் தொற்று நோய், எலி மற்றும் சிறு நச்சு உலக உண்ணியால் வர கூடிய இத்தொற்று மனித தோளின் பெரிய ஆய்வு பணிகளை உருவாக்கி Block Dentooz) மரணத்தை ஏற்படுத்தும்.
- ❖ தனிமைபடுத்துதல், நுண்ணுயிர்க் கொல்லி மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தி இந்நோய் பரவுவதை தடுக்கிறது.

## f) HIV / எய்ட்ஸ் மற்றும் காசநோய் (TB)

- ❖ இந்நோய்க்கு "உயிர்க்கொல்லி நோய்" என்று பெயர் (எச்.ஐ.வி)
- ❖ காசநோய் – பாக்டீரியாவில் பரவக்கூடியது.
- ❖ HIV வைரசால் பரவக்கூடிய தொற்றுநோய்
- ❖ HIV வைரஸ் தொற்று உள்ள மனிதனுடன் உடலுறவு கொள்ளுதல்
- ❖ தொற்று உள்ளவரின் இரத்த மாற்றம்

### அரசு மேற்கொண்ட தடுப்பு முறை

- – உலகளாவிய தடுப்பு முறைகள், முகக்கவசம், கைகழுவுதல்
- – விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
- – ஊடகங்கள் மற்றும் அமைப்புகள் மூலம் வலியுறுத்தல்
- – நம்பிக்கை மையம் அமைத்தல்

– தொற்று உள்ள தாய் பிரசவத்தின் போது பிறந்த குழந்தைக்கு பரவாமல் இருக்க வாய்வழி சொட்டு மருந்து (நிவிராப்பின்) கொடுத்தல்.

– PEPI – தடுப்பு முறை (HN)

– RNTLP (TB)

### ப) மலேரியா மற்றும் டெங்கு

கடுமையான குளிரையும், காய்ச்சலையும் ஏற்படுத்துகிற இந்நோய் அனாபிலிக்ஸ் என்ற ஒரு வகை பெண் கொசுவில் மலேரியா பரவுகிறது.

தடுப்பு முறை

❖ தண்ணீர் தேங்கி நிற்கும் குப்பைகள், பள்ளங்கள் ஆகியவற்றை தவிர்த்தல்.

❖ தடுப்பு மாத்திரைகள் (குளோரோகாயன்)

❖ கொசு வலை பயன்படுத்தும் பழக்கத்தை அறிவுறுத்தல்

❖ உடைந்த பானைகள் பழைய டப்பாக்கள் டயர்கள் தொட்டிகள் இவற்றை அப்புறப்படுத்த அறிவுறுத்தல்

❖ கொசுவை போக்க கொசு மருந்து

போன்ற தடுப்ப முறைகளை நமது பொது சுகாதாரம் அறிவுறுத்துகிறது.

### g) கொரோனா

❖ மருத்துவ சகாப்தத்தை சரிக்க முயன்ற சர்வதேசப் பரவலாக உலகை வலம் வந்த இத்தொற்றுநோய் முதன்முதலில் நவம்பர் 31–ல் 2019ல் அறிவிக்கப்பட்டது, இதற்கு (கோவிட்–19) தொற்றுநோய் என்று பெயரிடப்பட்டது.

❖ இரண்டாண்டு காலமாக பல மில்லியன் மனித உயிர்களை சூறையாடியது.

❖ மருத்துவமனைகளைத் தவிர அனைத்து பொது இடங்களும் பொது முடக்கம் – என்ற வரலாறு காணாத அதிசயத்தை இந்நவீன உலகிலும் கொண்டு வந்தது இந்த கொரோனா.

### தடுப்பு வழிமுறைகள்

❖ முகக்கவசம்

❖ தனிமைப்படுத்துதல்

❖ கைகளை கழுவுதல்

❖ பொது இடங்களில் சேர்க்கையை தடுத்தல் (லாக்டவுன்)

❖ தடுப்பூசி (Covisheld, Covaxin)

முடிவுரை

இன்னும் சொல்லில் அடங்கா திட்டங்களையும் அறிவுறுத்தி வரும் நம் பொதுசுகாதாரத்துறையில் நாமும் இணைந்து பொறுப்புடன் செயல்பட்டு நலமான இந்தியாவாக மாற்றுவோம்.

**B. வாணி, செவிலியர்**
அரசு ஆரம்ப சுகாதார நிலையம்,
ரிஷிவந்தியம்

# பொது சுகாதாரத்துறையின் பொக்கிஷங்கள்

நூற்றாண்டை அடியெடுத்து வைக்கும் பொது சுகாதாரத்துறையே
உம் துறையில் நான் பணிசெய்ய தலைவணங்குகிறேன்.
மக்களை காக்கும் மகத்தான துறை நம் பொது சுகாதாரத்துறை !

தமிழக மக்கள் தொகை கட்டுக்குள் இருக்க காரணம் நம்
பொது சுகாதாரத்துறை ஓசியில் வழங்கிய சிசியின் சிறப்பு !

பள்ளி மாணவர்கள் இரு கால்களில் நடக்க காரணம் நம்
பொது சுகாதாரத்துறை வழங்கிய போலிபோவின் மகிமை !

தாயையும் சேயையும் கண் இமை போல் காப்பது நம்
பொது சுகாதாரத்து துறையின் மருத்துவ சேவையின் மகத்தான பங்கு !

மக்களின் நோய்களை வருமுன் தடுப்பது நம்
பொது சுகாதாரத்து துறையின் வருமுன் காப்போம் திட்டம் !

பள்ளி மாணவர்களின் கண்களை பாதுகாப்பது நம்
பொது சுகாதாரத் துறையின் கண் சிகிச்சை முகாம்கள் !

பள்ளி மாணவர்களின் உடல் நலம் காப்பது நம்
பொது சுகாதாரத்துறையின் (சுகஷளுமு) குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டம் !

யானைக்கே பொது சுகாதாரத்துறை கண்டு பயம், ஏனென்றால்
நம்மிடம் உள்ளது யானை காலுக்கே மாத்திரை !

பேதி என்ற பெரு வெள்ளத்தை தடுக்கும் ஒரே சக்தி நம்
பொது சுகாதாரத்துறை களப்ணியாளர்களின் கடின உழைப்பு !

பிணியால் வாடும்போது மக்களுக்கு
பனி போல் நோய் தீர்க்கும் ஆதவன் நம்பொது சுகாதாரத்துறை !

மனம் வருந்தி உடல் வருந்தி வந்தவர்க்கெல்லாம்
குணமறிந்து நலம் பெறச் செய்யும் சஞ்சீவி நம் பொது சுகாதாரத் துறை !

மக்களை நடமாடாமல் இருக்கும் இடத்திலே நோய் கண்டறிந்து,
சிகிச்சை அளிப்பது நம்
பொது சுகாதாரத்துறையின் நடமாடும் மருத்துவக் குழு !

பிரசவம் பார்ப்பதில் பல்லாயிரம் பிறை கண்டது நம்
பொது சுகாதாரத்துறையின் செவிலியர்கள் சேவை !

எண்ணற்ற சேவைகளால் மக்கள் துயர் துடைக்கும் நம்
பொது சுகாதாரத் துறை மென்மேலும் இன்னும் பல்லாண்டு
பல்லாண்டு பல்லாயிரம் ஆண்டு வரை இறைவனை வேண்டும்.

கண்முத்து
(அ. முத்துச்சாமி)
கண் மருத்துவ உதவியாளர்
அரசு சமுதாய சுகாதார நிலையம்,
ஆண்டியப்பனூர்,
திருப்பத்தூர் மாவட்டம்

# கண்முத்துவின் கொரோனா கவிதை

கொரோனாவே உன்னை கண்ணில் காண வழியில்லை
உன்னை அலட்சியமாக கடந்தும் போக முடியவில்லை
கத்தியின்றி, இரத்தமின்றி, சத்தமின்றி மூன்றாம்
உலகப்போர் நடத்திவிட்டாய்
கொரோனாவே நீ என்ன எமனின் பினாமியா
உன்னால் அழிந்த உலக எக்னாமி
கண்டுகளிக்க இந்த உலகிற்கு வந்தவர்களை உண்ட களித்துவிட்டாய்
கண்ணுக்கு தெரியாத உயிரினமே, ஏன் கண்ணுக்கு தெரியும் மனிதனை
அழிக்கிறாய்
கொரோனா என்ற போர்க்களத்தில் பொது சுகாதாரத் துறையின் பங்கு மகத்தானது
பொது சுகாதாரம் என்ற ஒரு துறை இல்லாவிட்டால் மனித இனம் அழிந்துவிடும்.
கொரோனாவே எங்கள் பொது சுகாதாரத் துறையின் இயக்குநர் என்ற ஆலமரமும்
கூடுதல், இணை, துணை இயக்குநர்கள் என்ற விழுதுகளும்,
மருத்துவர்கள் மற்றும் பொது சுகாதாரப் பணியாளர்கள் என்ற வேர்களும்
இருக்கும் வரை உன்னால் இந்த பூமியில் நிலைத்து நிற்க முடியாது
பூமியை விட்டுப் புறப்பட்டு மாற்று கிரகம் நோக்கி
உந்தன் பெரும் பசிக்கு உலகின் பல லட்சம் உயிர்களை
விருந்தாக்கி கிட்ட பின்னும் விரட்டித் தொடர்ந்தால் குறைவில்லை
அன்றாடம் உழைத்துழைத்து அவராது வியர்வை சிந்தும்
ஏழைகளை மனதில் வைத்து கிளம்பிவிடு கொரோனாவே
மோசம் செய்த உன்னால் பாதித்தது இந்திய தேசம்
கொரோனாவே கையெடுத்து கும்பிடுகிறேன் – இது
கடைசியாக இருக்கட்டும் – கருணை செய்வாயாக

கண்முத்து
(அ. முத்துச்சாமி)
கண் மருத்துவ உதவியாளர்
அரசு சமுதாய சுகாதார நிலையம்,
ஆண்டியப்பனூர்,
திருப்பத்தூர் மாவட்டம்

# கண்முத்துவின் கண்தான கவிதை

தர்மம் தலைக்காக்கும் – தக்க
சமயத்தில் உயிர் காக்கும் !
        தானத்தில் சிறந்தது அன்னதானம்
        அதனினும் சிறந்தது கண்தானம் !
மண்ணை தின்னும் கண்ணை – ஏன் நாம்
மனிதற்கு தானம் செய்யக் கூடாது !
        இருக்கும்போது நாம் எதையும் கொடுப்பதில்லை
        இறந்த பிறகாவது நம் கண்ணை கொடுப்போம் !
நாம் வாழ்த்துரை என்னசெய்தோம்
வீழ்ந்த பிறகாவது கிழிகளைக் கொடுப்போம் !
        மரணம் ஓர் உயிரின் இறப்பல்ல
        இரு உயிர்களின் புதிய பிறப்பு !
ஓர் உயிர் உறங்க
ஈருயிர் கண் திறக்கின்றன !
        இறந்த பிறகு கண் தானம் செய்ய
        நம்மில் தர்மசிந்தனை பிறக்கட்டும் !
அன்னதானம் பெற்றவருக்கு ஒருநாள் சந்தோஷம் – ஆனால்
கண்தானம் பெற்றவருக்கு உயிர் உள்ளவரை சந்தோஷம் !
        தகனம் செய்யும் கண்ணை – ஏன்
        தானம் செய்யக் கூடாது !
விண்ணை அடையுமன் இம்மண்ணில்
கண்ணைக் கொடுத்து அழியா புகழ் பெறுவீர் !
        நீர்ன்றி அமையாது உலகு எனினும் – யார்க்கும்
        கண்ணின்று அமையாது நல் வாழ்க்கை !
என்சாண் உடம்புக்கு கண்ணே பிரதானம் !
இருக்கும்போது இரத்த தானம் !
        இறந்த பின் கண் தானம் !

கண்முத்து
(அ. முத்துச்சாமி)
கண் மருத்துவ உதவியாளர்
அரசு சமுதாய சுகாதார நிலையம்,
ஆண்டியப்பனூர்,
திருப்பத்தூர் மாவட்டம்

# கண்முத்துவின் "சுனாமி" சோகம்

சுனாமியே நு என்ற எமனின்
பினாமியா
சுனாமியே உன்னால் அழிந்தது இந்திய
எக்னாமி
சுனாமி நீ என்ன இந்தியர்களின்
எனிமியா
மீன்களை வளர்க்கும் நீ ஏன்
அழிக்கிறாய்
மீனவர்களை
முத்தை கொடுக்கும் நீ ஏன்
பிடுங்கினாய் மீனவர்களின்
சொத்தை
மணற்காடாய் இருந்த கடறக்ரையை
மாற்றினாய்
பிணற்காடாய்
கண்டு களிக்க வந்தவர்களை நீ
கவித்துவிட்டாய்
உண்டு
அலையே நீ ஏன் செய்தாய்
கொலை
பூகம்பமே உன்னால் இந்தியாவில்
உருவானது
சோகம்பம்
மோசம் செய்த உன்னால் பாதித்தது
இந்திய
தேசம்
வேலியே பயிரை மேய்ந்தால் இனி
பூமியில் எங்களுக்கென்ன
சோலி
அஃறினையை வாழவைக்கும் நீ ஏன்
அழிக்கிறாய்
உயிரினையை
இறந்தவர்களுக்கு நாங்கள்
கட்டினோம் சமாதி, நீ கட்டினாய்
இருந்தவர்களுக்கு
விதி என் சொந்த எங்களுக்கு இனி
ஏது
கதி
அமர்க்களமாய் இருந்த மீனவ
குப்பத்தை மாற்றினாய்
போர்க்களமாய்
உப்பு தரும் நீ ஏன் செய்தாய் இந்த
தப்பு
தண்ணீர் ரூபத்தில் தாண்டவமாடிய நீ
எங்களுக்கு கொடுத்தது
கண்ணீர்
உசுருகளை வாழவைக்கும் உனக்கு
எப்படி மனம் வந்தது
உசுரெடுக்க
இயற்கையே நீ ஏன் அழிக்கிறாய்
மனிதனின்
செயற்கையை
கடல் அன்னையே கையெடுத்து
கும்பிடுகிறோம் – இது
கடைசியாக இருக்கட்டும் கருணை
செய்வாயாக

கண்ணீருடன்
கண்முத்து
(அ.முத்துச்சாமி)
கண் மருத்துவ உதவியாளர்,
அரசு சமுதாய சுகாதார நிலையம்,
ஆண்டியப்பனூர்,
திருப்பத்தூர் மாவட்டம்

# கண்முத்துவின் பொன்மொழிகள்

யானையின் பலம் தும்பிக்கையில், மனிதனின் பலம் நம்பிக்கையில்

விடியும் என்ற விண்ணை நம்பும் நாம் முடியும் என்று நம்மை நம்ப வேண்டும்.

சோம்பித் திரிந்தால் சிலந்தி வலை கூட சிறை பிடிக்கும் எழுந்து நிமிர்ந்து நடந்தால் இமயமும் வழிவிடும்.

முயற்சி என்பது முடிந்தவரை அல்ல. அச்செயல் முடியும் வரை.

முடியும் என்றால் முயற்சி செய். முடியாது என்றால் பயிற்சி செய்.

வெற்றி என்பது பெற்றுக்கொள்வதற்கு, தோல்வி என்பது கற்றுக்கொள்வதற்கு,

விழித்து எழுந்தவுடன் கிடைப்பது வெற்றியல்ல, விழுந்து எழுந்தவுடன் கிடைப்பதுhன் வெற்றி.

வெற்றியை விட தோல்விக்கு பலம் அதிகம் ஏன் தெரியுமா?

வெற்றி சிரித்து மகிழ வைக்கும் தோல்வி சிந்தித்து வாழ வைக்கும்.

விழுதல் என்பது வேதனை, விழுந்தவுடன் எழுதல் என்பது சாதனை.

வாழ்க்கையில் நீங்கள் நினைப்பதெல்லாம் நடக்காது. ஆனால் நீங்கள் நினைக்காமல் எதுவும் நடக்காது.

முடியாது என்பது மூடநம்பிக்கை? முடியுமா என்பது அவநம்பிக்கை முடியும் என்பது தன்னம்பிக்கை.

உளிபடாத கற்சிலையும் உழைப்பு இல்லாத கனவும் நனவாவதில்லை.

விக்கலை பார்த்தால் வயிறு நிறையாது. சிக்கலை பார்த்தால் வாழ்க்கை நிறையாது.

ஈரம் இருக்கும் வரை இலைகள் உதிர்வதில்லை. தன்னம்பிக்கை இருக்கும் வரை வாழ்க்கை தோற்பதில்லை.

வாழும்போது யாரும் நம்மை வெறுக்கக் கூடாது. வாழ்ந்த பிறகு யாரும் நம்மை மறக்கக்கூடாது.

வாழ்க்கையில் நீ எந்த இடத்திற்கு போனாலும் வந்த இடத்தை மறக்காதே.

குறைகள் என்பது குறைத்துக்கொள்ள மட்டுமே, மனதில் போட்டு குழப்பிக்கொள்ள அல்ல.

பிரச்சனையை பார்த்து பீல் பன்றவனைவிட, பிரச்சினையை பார்த்து டீல் பன்றவன் வாழ்க்கையில் ஜெயிக்கிறான்.

மலர் என்றால் மணம் வேண்டும், மனிதன் என்றால் நல்ல குணம் வேண்டும்.

விழிகள் இல்லையென்றால் வழிகள் இல்லை, வலிகள் இல்லையென்றால் வாழ்க்கையில்லை.

தடுமாறும்போது தாங்கி பிடிப்பவனும் தடம் மாறும்போது தட்டிக் கேட்பவனும்தான் உண்மையான நண்பன்.

மற்றவர் நம்மை பார்த்து பயப்படும்படி வாழ்வதைவிட, மற்றவர்களுக்கு நாம் பயன்படும்படி வாழவேண்டும்.

துணிச்சல் என்ற திரியை தூண்டிக்கொண்டே இரு, உன் வாழ்க்கை பிரகாசமாக அமையும்.

நல்லெண்ணமே வாழ்க்கையின் மகிழ்ச்சி, நற்செயலே மகிழ்ச்சியின் ஊற்று.

கண்முத்து
(அ. முத்துச்சாமி)
கண் மருத்துவ உதவியாளர்
அரசு சமுதாய சுகாதார நிலையம்,
ஆண்டியப்பனூர்,
திருப்பத்தூர் மாவட்டம்

# கண்முத்துவின் கண்மணிகள்

உண்மை ! உழைப்பு இருப்பின்
உனக்கு உயர்வு உண்டு நிச்சயம்
இக்கணம் தேவை சிக்கனம்
உனக்கு எக்கணமும் வேண்டாம்
சிக்கனம்
பேசுவது போல நட
நீ நடப்பது போல பேசு
பணிந்து போ பிறர்க்கு
ஆனால் குனிந்து போக முயலாதே
பிறர் மனம் புண்படும்படி நடந்தால்
அதற்குள் உன்மனம் புண்பட்டுவிடும்
முடிந்தால் பிறர்க்கு உதவி செய்
இல்லையேல் இன்னல் செய்யாதே
பிறர்க்கு
எப்படி உன் எண்ணமோ அதுபோல்
அப்படியே அமையும் என் வாழ்க்கையும்
கடவுள் நல்லார்க்கு சோதனையை;த
தருவார்
கெட்டார்க்கு வேதனையைக்
கொடுப்பார்.
பிறரிடம் நீ அன்பைச் செலுத்து
ஆனால் அதிகாரத்தை செலுத்தாதே
நீ செல்லும் வழி அடக்கத்துடன் நட
ஆனால் அலட்சியத்துடன் நடக்காதே
நல்லதைச் செய் நல்லதை நினை
நிச்சயம் நல்லதே நடக்கும் உனக்கு
குகையில் வாழலாம் நீ !
ஆனால் பிறர் பகையில் வாழதே.
மனவருந்தி மால்டோவா கொடுப்பதை
விட
மனம் வருந்தி மால்டோனா
கொடுப்பதைவிட
மனமுவந்து மழைநீர் கொடுப்பதே மேல்
கில்லியிலிருந்து புறப்படும் அம்புபோல
திரும்பாது உன் வாயிலிருந்து புறப்படும்
சொல்லும்
புகழ்ந்து பேசு பிறரை
ஆனால் இகழ்ந்து பேசாதே பிறரை
ஏமாற்றாதே பிறரை அதுபோல்
நீயும் ஏமாறாதே பிறரிடம்
விவேகம் தேவை வாழ்க்கைக்கு
ஆனால் வேகம் கூடாது உனக்கு
வாழ்கின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள்
பாடம்
பெற்றவர்கள் செய்த பாவம்
பிள்ளைகளின் தலையில்
கோமாளியாக வாழலாம்நீ
ஆனால் ஏமாளியாக வாழக்கூடாது
உன் மனமது செம்மையானால்
நீ மந்திரம் ஜெபிக்க வேண்டாம்.

கண்முத்து
(அ. முத்துச்சாமி)
கண் மருத்துவ உதவியாளர்
அரசு சமுதாய சுகாதார நிலையம்,
ஆண்டியப்பனூர்,
திருப்பத்தூர் மாவட்டம்

# *புவிபோற்றும் செவிலியர்...*

தாயாய் மகளாய்
உடன் பிறப்பாய்.
தாங்கிப் பிடிக்கும்
*உயர் பிறப்பே*...

நோயில் நாங்கள்
படுத்த போது
கூடவே இருக்கும்
*உயிர்த் துடிப்பே*..

சேயாய் நாங்கள்
ஆகிடுவோம்
*உங்கள் சேவை*
*கரங்கள் தொடும் போது*..

செவிலித் தாயை
மகளாய்ப் பார்க்கின்றோம்
சிகிச்சை முடித்து
வரும் போது..

ஏழை எளிய
மக்களுக்கு
*நர்ஸம்மா தான்*
*டாக்டரம்மா*....

கலெக்டர் கூட
கனிவோடு அழைப்பார்
*உங்களைத்* *தானே*
*ஸிஸ்டரம்மா*...

கொட்டும் உதிரம்
புண் பட்ட சதிரம்
தொட்டுச் சிகிச்சை
செய்திடுவீர்..

அருவருப்பெனவரும்
சிறுவெறுப்பை
அன்புப்
பெருநெருப்பால்
புடம் போட்டிடுவீர்...

தூய காற்று
தூய நீர்
தூய வானம்
தூரிகை தீட்டிய
*வெண் சீருடை
மேகங்கள்*...

வெம்பிய நோயாளிக்கு
நம்பிக்கை வான்மழை
தீர்த்திடும் தாகங்கள...

வானவில் வண்ண
மாத்திரை வழங்கும்
வலி நிவாரண
சோலைகள்...

உயர்வோ தாழ்வோ
ஆணோ பெண்ணோ
சேவை ஒன்றாய்
சமத்துவ சேனைகள்...

கூடவோ குறைவோ
குடும்பம் குழப்பம்
சம்பளம் நொம்பளம்
இம்மியும் காட்டா
இன்முக தேவதைகள்..

மதிப்போம் உணர்வுகள்
இவர்கள் உரிமைகள்
தீரணும் தேவைகள்...

உயிர் வரும் போதும்
விடைபெறும் போதும்
கூடவே இருப்பது
தாதியம்மா...

மருத்துவம்
உணர்த்தும்..
சமத்துவ
சாதியம்மா....

(கவிஞர்.
காசாவயல் குமார்)..
*சு.முத்துகுமாரசாமி*
*மருத்துவ மல்லா*
*மேற்பார்வையாளர்*
சமுதாய சுகாதார நிலையம்..
பச்சூர்...70948 99101
திருப்பத்தூர் மாவட்டம்

# THE GLOBAL IMPACT OF BIOPHILIC DESIGN IN THE WORKPLACE

**DR Abirami T.V**

Biophilic design is a concept used within the building industry to increase occupant connectivity to the natural environment through the use of direct nature, indirect nature, and space and place conditions. Used at both the building and city-scale, it is argued that this idea has health, environmental, and economic benefits for building occupants and urban environments, with few drawbacks. Biophilic design can reduce stress, enhance creativity and clarity of thought, improve our well-being and expedite healing; as the world population continues to urbanize, these qualities are ever more important. Theorists, research scientists, and design practitioners have been working for decades to define aspects of nature that most impact our satisfaction with the built environment. 39% of workers felt most productive at their own desk in a private office. The countries with the greatest preference for a private office were Germany (59%), China (52%), Canada (50%), Sweden (49%), the US (45%), Denmark (44%), France (43%) and the Netherlands (41%). 36% felt most productive at their own desk in an open plan environment. It is clear that biophilic design in the workplace has a strong, measurable impact on key employee outcomes such as well-being, productivity, creativity: Those who work in environments with natural elements, such as greenery and sunlight, report a 15% higher level of well-being than those who work in environments devoid of nature. Those who work in environments with natural elements, such as greenery and sunlight, report a 6% higher level of productivity than those who do not have the same connection to nature within their workspace. Those who work in environments with natural elements, such as greenery and sunlight, report a 15% higher level of creativity than those with no connection to natural elements in the workplace.

# VERBAL AUTOPSY

**Beaulah Gamaliel**

It was an awful average morning to my disbelief..
I clad a black saree to match the grief.
To dissect  a dead woman again and again,
To note down the   causes that failed her in Vain,
Careful not to ignore  her loved one's pain.
With folded hands under the Neem tree shadow,
Her husband narrated the story of sorrow.
I was skillful enough to hide my tender soul,
In a formal, courageous, emphathetic veil.
A tonsured boy of my daughter's age,
Sat near me with a playful face..
In a cry of newborn I caught him strange,
Never seen a child comforting another so wise,
In him I saw a mother in place..
Comforting his gone mother in disguise... !
Queries were over, no more words to fill.,
I closed the papers and stood still.
The little boy looked at me with a Smile,
I wished to give him something worthwhile,
Love, Grace, protection as an entreaty to Almighty,..
I handed over a Red and black pencil Duo
To write away all his worries as I do.. .

# ACHIEVEMENTS OF A HEALTH INSPECTOR

**Dinesh Raja.S**
Health Inspector - GPHC, Endiyur, Block Marakkanam, Villupuram Dist

WORK EXPERIENCE : Joined Public Health Dept. on 04-12-2014, Presently working in Endiyur PHC, Marakkanam Block, Villupuram District. Completed 8 years of service.

MY MISSION : Ensuring Safe drinking water, sanitation, and Basic health care activities .

ACCOMPLISHMENT :

- Best Health Inspector Award By District collector 2018
- Best Health Inspector Award By District collector 2021
- Best performance shield by District collector for Tobacco control programme& Mask Fine 2021
- Best performance shield by Honorable Health Minister 2021

FINE IMPOSED BY ME : Tobacco control Act

- 1, 50,000 Lakhs

Dengue Control

- 1, 70,000 Lakhs

Covid -19 Related Act

- 11, 00,000 Lakhs

I Hope I was able to implement Public Health Act 100 % to

Protect & to control the risk to public health in my area.

ACKNOWLEDGEMENET : My Sincere, Special thanks to Dr. Krishnarajan BMO (Rtd), Dr.Karthikeyan BMO, Marakkanam Block, All DDHS Villupuram for guiding me and for supporting me to render my service to people.

# PROGRAMME OF CONCERN

**DR D.JAGADESH**
BLOCK MEDICAL OFFICER KODAVSAL BLOCK , THIRUVARUR HUD

**SUCCESSFUL EARLY INTERVENTION SURGERIES FOR CHILDREN AND ADOLESCENTS UNDER RBSK PROGRAMME IN KODAVASAL BLOCK - THIRUVARUR HUD:**

The Ministry of Health and Family Welfare Government of India under the National Health Mission have launched the Rashtriya Bal SwasthyaKaryakram (RBSK) in Tamilnadu in the year 2015.

RBSK is a significant health initiative aiming at Early Identification and Early Intervention for children from birth to 18 years to cover 4D's such as defects of birth, deficiencies, diseases of childhood developmental delay including disability.

There is also provision of special care/ treatment to target beneficiaries through referral to District Early Intervention Centre (DEIC) the first referral centre of RBSK.

**THE TARGET GROUP UNDER CHILD AND ADOLESCENT HEALTH SCREENING AND INTERVENTION SERVICES AREA:**

1. Babies born at Public Health Facilities (Birth to 6 Years)
2. Pre-School Children in rural areas and Urban slums ICDS (6 Weeks to 6 Years)
3. Children enrolled in classes 1 to 12$^{th}$ in Government and Government aided Schools (6 to 18 years).

In our Block, RBSK Team visits Schools and ICDS centres and screen the children and adolescents. If any child is identified with the diseases, they are referred to higher hospital for treatment. If the district hospital is not able to take care of the disease, the child is referred to a higher facility, where most of the heart, renal, other serious diseases are cured.

**KODAVASAL BLOCK RBSK TEAM PERFORMANCE DETAILS AS FOLLOWS:**

- Total number of Schools and ICDS Centre in Kodavasal Block - a) Schools – 108 b) ICDS - 138
- Total number of children screened – a) Schools – 11260 b) ICDS - 12680
- Total number of children identified - 1481
- Total number of children needed surgical condition- 43
- Total number of children undergone surgeries- 43
    - Congenial Heart Disease – 21( Apollo Hospital, Chennai)
    - Cleft lip- 2 (Meenatchi Mission Hospital Thanjavur & Madurai)
    - Cleft palate- 5 (Meenatchi Mission Hospital Thanjavur & Madurai)
    - Both – 6 (Meenatchi Mission Hospital Thanjavur & Madurai)
    - Club foot- 3 ( Meenatchi Mission Hospital Thanjavur & Madurai)
    - Congenial cataract- 1 (TVMCH)
    - Congenital deafness-5 ( Sri Ramachandra Medical College & MERF Chennai).
- Total number of children under follow up- 79

Since the day one the RBSK programme has been started in state till now, our Kodavasal Block RBSK Team has achieved 100% coverage in Early Intervention surgeries for the identified Adolescents and Children successfully.

# PREVENTION OF BLINDNESS IN PUBLIC HEALTH

**Mr KALAIARASAN**

Any effort that benefits the health of a community is considered a public health effort. Optometry is a public health profession,As an Ophthalmic Assistant ,I take this occasion to share my “challenge of work in public health”.

Screening

Eye camp's are regularly organized at schools and panchayats levels for all age groups people are screened for Cataract and Glaucoma. During one such event, Mrs. Kandhaiyi, 85 yrs old, from Kullampatti Village, Dharmapuri (Dt) was found to have both eye Hypermature Cataract.

**MOTIVATION FOR SURGERY :**

Patients are given a brief lecture on how they will get benefits under the Government implemented schemes for eye surgery was explained. Along with motivation, patients baseline investigations are done before referring to the higher health sector. As such, Mrs. Kandhaiyi's baseline investigations were done with the help of “MakalaiThediMaruthuvamMugaam (scheme)'' and found to be a case of diabetic. Health workers of MakalaiThediMaruthuvam Scheme, gave her proper medication and her blood sugar level was brought under control before shifting to the Government Dharmapuri Medical College and Hospital -Eye ward. She was then admitted and diagnosed as a case of “Morgagnian Cataract” (both eye hypermature). Surgery was done and she gained vision back. She wanted to thank the “Dr.KalaignarKannoliKappomThittam” for bringing her vision back.

**POST-OP FOLLOW UP** :

After patients are discharged a minimum of 3 house visits are made in 40 days to check the Visual acuity. Instructions on how to use the Medications are explained. This post-Op visit not only benefits the patient but also attracts the other people in trusting the Government services.

**AWARENESS AMONG THE PEOPLE:**

To teach the public about importance of good eye health and the latest innovations in the treatment of eye disorders. Proper education and screening of Diabetic patients are done in preventing vision loss by Diabetic retinopathy. Importance of proper intake of vitamins and iodine are explained to the people in preventing night blindness. Eye donation rallies are conducted in order to motivate

Eye donation. And Inspirational stories are shared to people about visually impaired people accomplishing incredible things .

**SCHOOL SCREENING:**

Identification of the Refractive errors

Eye camps are made often at school levels regularly. Free spectacles are issued according to their refractive error under the scheme of “KannoliKappomThittam”. Yearly twice, vision of every school child is checked, and spectacles are renewed once in a year. Teachers given training to use snellen chart for identification of defective vision among students

**SCREENING OF OTHER EYE DISORDERS :**

Other than identification of the refractive errors, students are also screened for Color Blindness, Congenital Cataract, Squint, Ptosis, Bitot spot, Conjunctivitis and Other eye disorders are also identified and referred to the higher health sectors. Likewise, During an Eye Screening Camp at Tribal village “Pudukottasardu '' near Kottapatti, Dharmapuri. A 7 yr old school student, Ms. Rithika was detected with Right eye Congenital Cataract. Her parents were called and convinced to take the child for surgery. She was admitted in Government Dharmapuri Medical college and Hospital. IOL implantation surgery was done at free of cost under CMCHIS. Now Ms.Rithika's vision in Right eye is 6/6.

Providing Health Education for students

During School eye camps children are educated about good eye health practices including dietary practices to prevent vitamin A deficiencies, facial cleanliness to prevent trachoma, outdoor play for prevention of myopia. .

**A TRIBUTE TO THE 75th INDEPENDENCE DAY**

I am working in Theerthamalai, Dharmapuri district, and it is bounded by dense forest and hills of 3 districts- Kallakurichi, Salem, Thiruvanamalai. So many tribal groups are residing in these hilly landscapes. From these regions Cataract cases are identified either through Eye camps, post-Op follow up visits or they themselves come to the PHC. The Tribal people living in these hilly regions have to walk nearly 15 Kilometers and then take Public transportation to reach the PHC. For patients living in the hills who are assessed for cataract, instructions, guidance and date of surgery are informed through their relatives who come down the hill for work. Patients posted for surgery used to come a night before surgery and will stay in the Temple. In the morning of admission I buy food for them and send them for Surgery. Proper Post-op care, follow up & house visits are done to ensure they are healthy. In the last 3 years, I have conducted a number of eye screening camps in all the interior villages and soon under guidance and surveillance of public health officers Sitheri

and Sittling hills will be announced as Cataract free zones.

Apart from public health activity, patients who lost their work due to diminished vision following cataract, post-Operatively i help them get work in " Social forest scheme " as a daily wager. Motivated a number of dropped out grandchildren, of my tribal patients to continue their education. Help in receiving Old Age Pension to the beneficiaries through Revenue authority.

**MY TRIBUTE :**

As we are on our 76th Independence day Moment, and on this auspicious year, I have picked out 96 Cataract cases from (no-transportation facility) remote villages Tribal community, Lambadi group of people in the month of August 2022 alone. Among 96 cases, 76 of them were taken for surgery at Government Dharmapuri Medical College and Hospital.

76 Cataract cases for 76th Independence year

- Total No. of Cataract patients admitted - 96
- Total No. of IOL Surgery done - 76
- Beneficiaries - Tribals, Irulaers, Lambadis, Remote village people, Hard to reach areas (no availability of transport facility)

**EYE DONATION AWARENESS AND MOTIVATION :**

